தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு - 160

# கஞ்சனம்மானை

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல் நிலையம்
1976

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு — 160

# கஞ்சனம்மானை

பதிப்பாசிரியர்

கி. கோதண்டபாணி, M. A., B. O. L.,

தமிழ்ப் பேராசிரியர்,

அ. வீரையா வாண்டையார் நினைவு திரு. புட்பம் கல்லூரி, பூண்டி.

தஞ்சை சரசுவதி மகால் நிருவாகக் கமிட்டியினருக்காகக்

கௌரவ காரியதரிசி

வித்துவான் அ. வடிவேலன்

அவர்களால் வெளியிடப்பட்டது.

கி. பி. 1976 ]

[ விலை ரூ. 10—00

ஜெமினி அச்சகம், கும்பகோணம்
( போன் : 835 )

# வெளியிடுவோர் உரை

இமய முதற் குமரி வரை மிக நுணுக்கமாகப் பரந்து கிடக்கும் நமது சமயப் பண்பாட்டினை நுட்பமாக விளக்கும் நூல்களுள் தொன்மையும் சிறப்பும் உடையவை இராமாயணம், பாரதம் என்னும் இவ்விரண்டு இதிகாசங்களேயாகும். உடையாலும் பழக்க வழக்கங்களாலும் மொழியாலும் வேறுபாடுடைய பாரத மக்களிடையே இவ்விரு நூல்களும் பொதுவாக நின்று ஓர் அசைக்க முடியாத ஒற்றுமையை இதுகாறும் தந்து வருவதனை யாவரும் அறிவர்.

இவ்விரண்டனுள் முந்தியது பாரதம் என்ப. இதனுள் பல்வேறு வரலாறுகள் கதை வடிவத்தில் அமைந்து பல்வேறு தத்துவங்களை விளக்கி நிற்கின்றன. பாரதம் திருமாலுடைய அவதாரங்களுள் சிறப்புடைய கண்ணன் அவதாரச் சிறப்பையும், அவதார நோக்கத்தையும், விளைவையும் விளக்க எழுந்ததாகும். எனினும் பாண்டவ கௌரவர்களின் வரலாறே விரித்துச் சொல்லப் படுதலின் இதனுள் கண்ணபிரானுடைய வரலாறும் அருள் விளையாடல்களும் தனித்துணர்த்த வாய்ப்பில்லாமை கண்ட பெருமக்கள் கண்ணனுடைய பெருமையைத் தனியே விளக்கப் பாகவத புராணத்தை வரைந்தளித்துள்ளனர். இதனுள் சிறப்பான பகுதி கம்சனை வதைத்த திருவிளையாடலாகும். கண்ணன் அவதாரம் கம்சன் வதைக்கே எனினும் பொருந்தும். எனவே கம்சனுடைய வரலாறே கண்ணபிரானுடைய வரலாறாக அமைகிறது. ஆதலின் சமய உணர்வும், தெய்வப் பற்றும் உடைய சான்றோர்கள் ஆணவ உருவாகிய கம்சனை அழித்துத் தருமத்தைக் காத்தருளிய இவ்வரலாற்றினைப் பெரிதும் புகழ்ந்து போற்றிப் பாடித் துதித்துள்ளனர். இதுபற்றிய எடுத்துக் காட்டுக்களைப் பதிப்பாசிரியர் தம் முன்னுரையில் ஓரளவு கூறியுள்ளார்.

கம்சன் என்னும் வடசொல் தமிழில் கஞ்சன் என வழங்கும். "மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம் கடந்தான்" என இளங்கோவடிகள் இசைப்பார். எனவே கஞ்சன் வரலாற்று

மூலம் கண்ணபிரான் புகழ் வரலாற்றையுணரப் பாரதமும் பாகவதமும் பெருந்துணையாக நிற்கின்றன. ஆயினும் இவ்விரண்டு நூல்களும் நன்கு கற்றோர்க்கே விளங்குவனவாகும். குறைந்த கல்வியறிவுடையோர்க்கும், கற்க வாய்ப்பில்லாதோர்க்கும் அவை பயன் தருவதரிது. ஆதலின் அறிவும் அருளும் சான்ற புலமைச் செல்வர்கள் அவற்றை எளிதாக்கி யாவரும் இன்புறப் பல்வேறு நாட்டுப் புறப்பாடல்களால் அவற்றை அளிப்பாராயினர். அவருள் ஒருவராக இந்நூலை அம்மானைப் பாடல் வடிவத்தில் வழங்கியுள்ளார் இந்நூலாசிரியர். இவ்வாசிரியப் பெருந்தகையின் வரலாறும் பெயரும் இற்றைக்கு அறியமுடியவில்லை. எனினும் இந்நூலால் அவர் பெருமையை ஓரளவு உணர முடிகின்றது. பிற செய்திகளைப் பதிபபாசிரியர் முன்னுரையில் காணலாம்.

இம்மகால் வாயிலாக இதுவரை வேறு சில நாட்டுப்பாடல் நூல்களும், அம்மானை நூல்களும் வெளிவந்துள்ளன. அவ்வரிசையில் இதுவரை வெளிவராத இந்நூலைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குப் பெரிதும் பயன் தரும் என்றெண்ணி இதுபோது வெளியிட்டுள்ளோம்.

இதனை நன்கு ஆராய்ந்து சீரிய முறையில் பதிப்பித்துச் சிறந்ததொரு முன்னுரையும் எழுதித் தந்துள்ள பூண்டி **அ. வீரையா வாண்டையார்** நினைவு திருபுட்பங் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் **திரு. கி. கோதண்டபாணி**, எம். ஏ., பி. ஓ. எல்., அவர்கட்கும், செம்மையாக வெளிவரத்தக்க முறையில் செயலாற்றிய நூலக அலுவலர்களுக்கும், அழகுற அச்சிட்டுக் காலத்தோடு தந்துள்ள குடந்தை, **ஜெமினி அச்சக** உரிமையாளர், மேலாளர் அவர்கட்கும் எங்கள் கனிவு நிறைந்த நன்றியும், பாராட்டும் என்றும் உரியவாம்.

இத்தகைய பணிகளுக்கு ஆக்கமளித்துப் பேணிவரும் தமிழக அரசை நன்றியோடு போற்றி மகிழ்கின்றோம்.

இங்ஙனம்,

தஞ்சாவூர்,
21—9—1976.

**அ. வடிவேலன்,**
கௌரவ காரியதரிசி,
சரசுவதிமகால் நூல்நிலையம்.

# முகவுரை

**அம்மானை :**

"உயர்வற உயர்நலம் உடையவனு"கிய திருவமர் மார்பனின் திருப்புகழினை அம்மானைப் பாடலால் அழகு தமிழில் இயம்பிய நூலே கஞ்சன் அம்மானையாகும். தமிழ்நாட்டில் பண்டுதொட்டு மகளிர் ஆடும் விளையாட்டுக்களில் ஒன்ருக அம்மானை விளங்கி வந்துள்ளது. பழங்காலம் முதல் பயின்றுவரும் இவ்வாடலைப் பெண்கள் அம்மானைக் காய்கள் மூன்றினை வைத்துக்கொண்டு ஆடிவந்தனர். ஒரே சமயத்தில் இரு கரங்களிலும் இரு காய்களும், மேலே ஒரு காயும் இருக்குமாறு ஆடல் இவ்வாடலின் சிறப்பாகும். ஒரு நங்கை தன் கையில் உள்ள அம்மானைக் காயை மேலே வீசி அதே கையால் மேலுள்ள அம்மானைக் காயைப் பிடித்தல் வேண்டும். இவ்வாறு திறமையாக ஆடும்போது காய் தவறி விழுந்துவிட்டால் அவள் முறை கழிந்ததாக எண்ணி, மற்ருெரு மடந்தை ஆடத் தொடங்குவாள். ஒருத்தி ஆடுவதும், பலர் ஒருங்கு சேர்ந்து பந்தயங்கட்டி ஆடுவதும் உண்டு. பெரும்பாலும், மூன்று பெண்கள் சேர்ந்து ஒருவர்பின் ஒருவராக ஆடுவதே மரபாகும். இவ்வாறு அம்மானை ஆடும்போதே பாட்டும் பாடிக் கொண்டு ஆடினர்கள் என அறிகின்ருேம். இப்பாட்டிற்கு "அம்மானைப் பாடல்" என்ற பெயரிட்டு அழைத்தனர். இத்தகைய ஆடற்குப் பயன்பட்ட அம்மானைக் காய்கள் மென்மை யான, கனமற்ற மரக்கட்டைகளால் பல்வேறு வண்ணங்களில் உருண்டை வடிவினதாக ஆக்கப்பட்டிருக்கும். இலக்கியங்களில், முத்து, மணி, பவளம், நீலம், மரகதம் ஆகியவற்ருல் இழைக்கப் பட்ட அம்மானைக் காய்களும், பொன்னுலும், பளிங்கிலுைம் ஆக்கப்பட்ட அம்மானைக் காய்களும் ஆடப்பட்டதாகப் பேசப் படுகின்றன. 'அம்மனை' என்ற பெயரினையும் இதற்கு இட்டு வழங்கியுள்ளனர். சிற்றிலக்கியங்களில் ஒன்ருகிய உலாக்களில் 'அம்மானை' ஆடலைப்பற்றிய செய்திகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

அம்மானை ஆடும்போது மகளிர் பாடும் பாடல் 'அம்மானைவரி' என வழங்கப்பெறும். தொழில் செய்துகொண்டே விளையாடிப் பாடும் நாடோடிப் பாடல்களை 'வரிப்பாடல்' என்று வழங்குவர். அம் முறையிலேயே அம்மானைப் பாடற்கு 'அம்மானை வரி' என்ற பெயர் வந்தது. 'பல்வரிக் கூத்து' என்ற சொல் பாடிக்கொண்டே ஆடும் கூத்தின் வகையினைச் சுட்டிக் கூறுவதாகும். மடவார் ஆடும் ஆடல்கள் பல இப் பல்வரிக் கூத்தில் இடம் பெறுவன வாகும். அம்மானையும் இவற்றுள் ஒன்றாகும். இவ்வாறு நாட்டுப் பாடலாக முகிழ்த்த அம்மானைப் பாடலே 'அம்மானை வரி'யாகும். இத்தகு அமைப்பைப் பின்பற்றியே புலவர்கள் இலக்கியங்களிலும் அம்மானைப் பாடல்களை அமைத்துள்ளனர். இத்தகைய அம்மானை வரிகளில் இன்று கிடைத்துள்ள பழமையான பகுதி சிலப்பதிகார அம்மானை வரியாகும்.

### அம்மானை வரி :

1. "வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த வுரவோன் யாரம்மானை
ஓங்கரணங் காத்த வுரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை"

2. "புறவு நிறைபுக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் யாரம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறைசெய்த காவலன் காணம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை"

3. "கடவரைக ளோரெட்டும் கண்ணிமையா காண
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன் யாரம்மானை
வடவரைமேல் வாள்வேங்கை யொற்றினன் திக்கெட்டும்
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன் காணம்மானை
கொற்றவன் பூம்புகார் பாடேலோ ரம்மானை"

4. "அம்மானை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை
தம்மனையிற் பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானை
அம்மென் புகார்நகரம் பாடேலோ ரம்மானை"

— சிலம்பு, வாழ்த்துக்காதை.

இவ்வாறு, சிலப்பதிகாரத்தின் வாழ்த்துக் காதையுள் பண்டைச் சோழ மன்னர்களாகிய தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியனையும், சிபிச் சக்கரவர்த்தியினையும், கரிகாலனையும் சிறப்பித்துப் பாடி, பின் அவர்கள் முறை திறம்பாது ஆண்ட சோழ நாட்டையும், தலைநகராகிய புகார் நகரையும் போற்றிப் பாடி ஆடியதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறு மூன்று பெண்கள் அம்மானை ஆடும்போது ஒரு பெண் வினவுவதும், மற்றொருத்தி அதற்கு விடையிறுப்பதும், மூன்றாமவள் சோழன் புகார் நகரைப் பாடுவதும் ஆக இச் செய்யுள் அமைந்துள்ளது.

## கலம்பக உறுப்பு அம்மானை :

தமிழ்ப் பிரபந்த வகையுள் ஒன்றாகிய கலம்பகத்தில் அம்மானை என்ற உறுப்பு ஒன்று உண்டு. அது முற்கூறிய முறையில் மூன்று பெண்கள் பாடுவதாக அமைந்துள்ளது. முதற் பெண் ஒரு செய்தியைக் கூற, இரண்டாமவள் ஒரு வினாவைத் தொடுப்பாள். மூன்றாம் மடவாள் அதற்குத் திறமையாக விடையிறுப்பாள். இவ்வாறு விடையிறுக்கும் விடையில் 'சிலேடை நயம்' பெரிதும் பொருந்தியிருக்கும் இவ்வகையில் சில புலவர்கள் பல அம்மானைப் பாடல்களை தனிப் பாடல்கள்போல் பாடியுள்ளனர். இவ்வகையுள் இரட்டையர், பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் முதலியோர் இடம் பெறுகின்றனர். இவ்வாறு ஈற்றடியுள் சிலேடை நயம் அமையப் பாடிய பாடல்களைத் தொகுத்து "மூவர் அம்மானை" என்ற பெயருடன் ஒரு திரட்டு நூல் ஆக்கினர். மூன்று பெண்கள் பாடுவதாக அமைவதால் இந்நூல் 'மூவர் அம்மானை' என்ற பெயர்பெற்றது. சிலம்பில் வரும் அம்மானை வரியும், கலம்பக உறுப்பாக இடம் பெறும் அம்மானைப் பாடல்களும் 'கலித்தாழிசை' என்னும் பாவினத்தைச் சார்ந்தவைகளாக அமைந்துள்ளன. 'அம்மானை' என்று முடிவுபெறும் மூன்று சொற்கள் ஒவ்வொரு பாடலிலும் உள்ளன. இத்தகைய சொல்லை ஒவ்வொரு பெண்ணும் சொல்வாள்.

'அம்மானை' என்ற சொல் தாய் என்னும் பொருளையுடையது. பெண்டிரைப் பொதுவாக 'அம்மா' என்றழைப்பதுபோல 'அம்மானை' என்றழைப்பது இலக்கிய மரபு. பாட்டின் இறுதியில்

பெண்ணை விளிக்கும் விளியாக 'அம்மானை' என்பது அமைந்துள்ளது. இதுவே 'அம்மானாய்' என்று திரிந்து வழங்குகிறது. இவ்வாறு அம்மானை, அம்மானாய் என்ற சொற்கள் பாட்டின் முடிவில் வருவதனால் இப்பாடலும், ஆடலும் அம்மானை என்ற பெயரைப் பெற்றனபோலும். திருவாசகத்தில் உள்ள திருவம்மானை, ஒரே பெண் ஆடும் நிலையில் அமைந்துள்ளது.

எடுத்துக்காட்டாக

"செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்"

— திருவாசகம் - திருவம்மானை 1

இவ்வம்மானைப் பாடல் ஒரே பெண் ஆடுவதாக ஆறு அடிகளை யுடைய தரவு கொச்சகக்கலிப்பாவில் அமைந்துள்ளது. இப் பகுதியுள் அமைந்த இருபது பாடல்களும் இதே நிலையில் அமைந்துள்ளன.

## பிள்ளைத் தமிழ் அம்மானைப் பருவம் :

பெண்பாற் பிள்ளைத் தமிழில் எட்டாம் பருவமாக அமைத்துப் பாடும் அம்மானைப் பருவம் சிறப்புறு பகுதியாக அமைகின்றது. பாட்டுடைத் தலைவியை, தாயரும் செவிலியரும் அம்மானை பாடும் படிச் சொல்லும் முறையில் இப்பருவப் பாடல்கள் அமைந் திருக்கும். ஆசிரிய விருத்தப் பாவகையினை அமைத்து இப் பிள்ளைத் தமிழ்ப் பாக்களைப் புலவர் இயற்றுவர்.

இதலையன்றி கதை தழுவி வரும் நெடும் பாடல்களாக நாடோடிப் பாடல்கள் பல அம்மானை என்ற பெயரில் வழங்கு கின்றன. சோழனாற் சிறைப்பட்டபோது புகழேந்திப் புலவரால் பாடப்பட்ட "அல்லியரசாணி மாலை' அம்மானைப் பாடலைச் சார்ந்த நூலாகும். பவளக்கொடி மாலையும் இத்திறத்தனவே யாகும். இவற்றிற் சில பாட்டுக்களில் 'அம்மானை' என்ற பெயரே அமைந்துள்ளது. கள்ளழகர் அம்மானை, வைகுந்த

அம்மானை என்பனவும் கதை தழுவியமைந்த நெடும் பாடலையுடைய அம்மானை நூலாகும். இத்தகைய பாடல்கள் நாட்டுப் பாடல் இயல்பு யாவும் பொருந்தியிருக்கும். கொச்சைச் சொற்கள், உலக வழக்குச் சொற்கள், யாவர்க்கும் எளிதில் விளங்கும் உவமைகள், வந்த செய்தியே மீட்டும் இடம் பெறுதல், சிலவகைச் சொற்றொடர் எல்லாப் பாடல்களிலும் பயின்றுவருதல் முதலிய வற்றை இத்தகைய அம்மானைப் பாடல்களில் பரக்கக் காணலாம்.

**கஞ்சன் :**

உக்கிரசேனன் மகனாகவும், தேவகியின் தமையனாகவும், கண்ணனின் மாமனாகவும், யதுவம்சத் தோன்றலாகவும் தோன்றியவனே கம்சன் ஆவான். பாகவதம் கம்சன் என்றே இவனை அழைக்கின்றது. இவன் தன் தங்கையாகிய தேவகியின் வயிற்றில் பிறக்கும் எட்டாவது குழந்தையாலே தனக்கு இறப்பு நேருமென அசரீரியாற் கேள்வியுற்றான். தேவகியையும், அவள் கணவன் வசுதேவரையும் சிறையிலிட்டான். பின் அவர்கட்குப் பிறந்த ஏழு குழந்தைகளையும் கொன்றான். எட்டாவது குழந்தை பிறந்தவுடன் திருமால் அருளால் வசுதேவர் அக் குழந்தையைக் கொண்டுபோய் ஆய்ப்பாடியில் உள்ள நந்தகோபன் மனையிலே யசோதை யருகே விட்டு விட்டு யசோதையின் அருகிலே பெண் வடிவுடன் கிடந்த மாயையைக் கொண்டுவந்து தேவகியின் அருகில் விட்டு விட்டார். கம்சன் அந்த மாயையாகிய குழந்தையைக் கொல்லப் புகும்போது அது வானிலே சென்று நின்று ஆயர்ப் பாடியிற் கண்ணன் வளர்வதைக் கூறிச் சென்றது. அவ்வாறு வளரும் கிருஷ்ணனைக் கொல்லக் கஞ்சனாற் பல அசுரர்கள் ஏவப் பெற்றனர். அவர்கள் யாவரும் மாற்றுருவுடன் சென்று கண்ணனால் இறப்பெய்தினர். பின்னர் வடமதுரையாகிய மதுராபுரியில் நிகழ்ந்த இந்திர விழாவிற்குக் கண்ணன் சென்று கம்சனைக் கொன்றான் என்று பாகவதம் விளக்கமாக நமக்கு உரைக்கின்றது. இச் செய்திகள் அனைத்தும் இந்நூலில் விளக்கமாக இடம் பெறுகின்றன. கம்சன் தமிழ் இலக்கியங்களில் கஞ்சன் என்றே வழங்கப்படுகின்றான். திருமால் அன்பிலே தம்மை ஆழ்த்திக்கொண்ட ஆழ்வாராதிகள் அவனைக் 'கஞ்சன்' என்றும் அவனது முற்பிறப்புப் பெயராகிய 'காலநேமி' என்றும் தம் பாசுரங்களில் குறிப்பிடுகின்றனர்.

**சங்க இலக்கியத்துள் கஞ்சன் :**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்ருகிய கலித்தொகையில்

"மல்லரை மறஞ்சாய்த்த மால்போற்றன் கிளைநாப்பண்" – (குறிஞ்சிக்கலி)

எனவும்,

"மல்லரை மறஞ்சாய்த்த மலர்தண்தார் அகலத்தோன்" - (நெய்தற்கலி)

எனவும் வரும் செய்தி கஞ்சனைக் கருதியதாக அமைகிறது. "கஞ்சனேவலால் தன்னைக் கொல்லவந்த மல்லரை மறஞ் சாய்த்த கதை கூறிற்று" என உரை விளக்கம் எழுதியுள்ளமையாலும் அறியலாம். மேலும் கலித்தொகை 103ம் பாடலில்

"மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய் பகுத்திட்டுப் புடைத்தஞான் றின்னன்கொல்
மாயோ னென்றுட்கிற் றென்னெஞ்சு"

என்ற அடிகட்கு நச்சினர்க்கினியர் உரை விளக்கம் செய்யும் போது "கஞ்சன் முதலியோர் வரவிட்ட கழுத்தின் மயிரினை யுடைய குதிரையை வாயைப் பிளந்து போகட்டுக் கையால் அடித்த அஞ்ஞான்றும் கண்ணன் இத்தன்மையன் கொல்லென்று கூறும்படியாக" எனக் கஞ்சனைக் குறித்துள்ளார்.

சிலப்பதிகாரத்தே 'ஆய்ச்சியர் குரவை' என்னும் பகுதியுள் இளங்கோவடிகள்,

"மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனர் வஞ்சம்
கடந்தானை"

என மடந்தாழும் கஞ்சனைச் சுட்டிக் கூறுகின்ருர். அடுத்துக் கடலாடு காதையில்

"கஞ்சன் வஞ்சங் கடத்தற் காக
அஞ்சன வண்ணன் ஆடிய பாடலும்"

என மாதவியாடிய ஆடல் வகையினைச் சுட்டும்போது கஞ்சன் இடம் பெறுகின்ருன்.

**சமய இலக்கியங்களில் கஞ்சன் :**

பெரியாழ்வார் கஞ்சனைச் சுட்டிக் கூறும்போது தன் 'திருமொழி' யில்

1. "இருட்டில் பிறந்துபோய் ஏழைவல்லாயர்
மருட்டைத் தவிர்ப்பித்து வன்கஞ்சன்மாள"

எனவும்,

2. "கஞ்சன் தன்னால் புணர்க்கப்பட்ட கள்ளச்சகடு கலக்கழிய"

எனவும்,

3. "தீயபுத்தி கஞ்சனுன்மேல் சினமுடையன் சோர்வுபார்த்து
மாயந்தன்னால் வலைப்படுக்கில் வாழகில்லேன் வாசுதேவா"

எனவும்,

4. "போய்ப்பாடுடைய நின்தந்தையும் தாழ்த்தான் பொருதிறற்
காப்பாரு மில்லைகடல் வண்ணா" [கஞ்சன்கடியன்

எனவும்,

5. "கஞ்சன் புணர்ப்பினில் வந்தகடிய சகடமுதைத்து
வஞ்சகப் பேய்மகள் துஞ்சவாய்முலை வைத்தபிரானே"

எனவும்,

6. "எருதுகளோடு பொருதியேது முலோபாய் காண்நம்பி
கருதிய தீமைகள்செய்து கஞ்சனைக்கால் கொடுபாய்ந்தாய்"

எனவும்,

7. "கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல் கருநிறச் செம்மயிர்ப்பேயை
வஞ்சிப்பதற்கு விடுத்தான் என்பதோர் வார்த்தையுமுண்டு"

எனவும்,

8. "கும்பக்களிறட்ட கோவே! கொடுங்கஞ்சன் நெஞ்சினிற்கூற்றே"

எனவும்,

9. "கஞ்சனைக் காய்ந்த கழலடி நோவ"

எனவும்,

10. "ஒருவாரணம் பணிகொண்டவன் பொய்கையில் கஞ்சன்தன்
ஒருவாரண முயிருண்டவன் சென்றுறையும் மலை"

எனவும்,

11. "கஞ்சனும் காளியனும் களிறும் மருதும் எருதும்
வஞ்சனையில் மடிய வளர்ந்தமணி வண்ணன்மலை"

எனவும் பல அடைசொற்கள் புணர்த்து அழைக்கின்றார்.

அடுத்து சூடிக்கொடுத்த சுடர்த் தொடியாகிய ஆண்டாள் நாய்ச்சியார் தன் பாடல்களில்

1. " ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தருக்கிலான் ஆகித் தான்தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் **கஞ்சன்** வயிற்றில்
நெருப் பென்ன நின்ற நெடுமாலே" - (திருப்பாவை)

எனவும்,

2. " **கஞ்சன்**வலை வைத்தவன்று காரிருளெல்லில் பிழைத்து
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய்"

எனவும்,

3. " அற்றவன் மருதம் முறிய நடை
கற்றவன் **கஞ்சனை** வஞ்சனையினால்
செற்றவன் "

எனவும்,

4. " வென்றிவேல் விறற் **கஞ்சனும்** வீழமுன்
கொன்றவன்வரில் கூடிற் கூடவே "

எனவும்,

5. " **கஞ்சைக்** காய்ந்த கருவில்லி "

எனவும் கஞ்சனின் இழிசெயல்கள் காட்டப்படுகின்றன அடுத்து குலசேகரர் "பெருமாள் திருமொழி" யுள் "**கஞ்சன்** நாள்கவர் கருமுகி லெந்தாய்" என கஞ்சனைக் குறிப்பிடுகின்றார். திருமழிசைப்பிரான், தன் பாக்களில் கஞ்சனின் பழம்பிறப்புப் பெயராகிய 'காலநேமி' என்ற பெயரினைப் பலவிடங்களிலும் சுட்டிக் காட்டுகின்றார்.

1. " **காலநேமி** காலனே! கணக்கிலாத கீர்த்தியாய் "
- திருச்சந்த விருத்தம் 81

என்வும்,

2. " தண்டுழாய் வடங்கடந்த மாலைமார்ப! **காலநேமிகாலனே**" ,,

எனவும்,

3. " வெஞ்சினத்த வேழவெண் மருப்பொசித்து உருத்தமா
**கஞ்சனைக்** கடிந்து மண்ணளந்து கொண்டகாலனே " ,,

எனவும்,

4. "கடைந்த பாற்கடல் கிடந்து **காலநேமியைக் கடந்து**"

– திருச்சந்த விருத்தம் 31

எனவும்,

5. "கறுத்தெதிர்த்த **காலநேமி** காலனோடு கூடஅன்
றறுத்தவாழி சங்குதண்டு வில்லும்வாளு மேந்தினாய்" ,,

– திருச்சந்த விருத்தம் 31

எனவும் கூறிக் 'காலநேமி' என்ற பண்டைப் பெயரினையும், கஞ்சன் என்ற இப்பிறப்பின் பெயரினையும் ஒருங்கு சுட்டிக் கூறுகின்றார்.

முதலாழ்வார்களில் ஒருவராகிய பூதத்தாழ்வார்

"அடியால்முன் **கஞ்சனைச்** செற்று அமரரேத்தும்
படியான் கொடிமேல்புள் கொண்டான்"

எனக் குறிப்பிடுகிறார்.

அடுத்து வேதம் தமிழ்ச் சொன்ன வித்தகராகிய நம்மாழ்வார் தன் "திருவாய்மொழி" யில்

"சாதுசனத்தை நலியும் **கஞ்சனைச்** சாதிப்பதற்கு
ஆதியஞ் சோதியுருவை அங்குவைத் திங்குப்பிறந்த"

எனக் கூறுகின்றார்.

வேதங்களின் ஆறு அங்கங்களைத் தமிழில் ஆக்கிய பெருமானும், பரகால நாயகியாய் திருமாலைப் பாடிப் பரவிப் பரவசமுற்றவரும் ஆகிய திருமங்கை மன்னன் தன் பாசுரங்களில் பலவிடங்களில் கஞ்சனை எடுத்துக்காட்டிப் பாடியுள்ளார்.

1. "விற்பெரு விழவும் **கஞ்சனும்,** மல்லும் வேழமும் யானும்வீழ
செற்றவன் தன்னை புரமெரிசெய்த சிவனுறு துயர்களைதேவை"

– பெரிய திருமொழி

எனவும்,

2. "கும்பமிகு மதயானை மருப்பொசித்து **கஞ்சன்**குஞ்சி
பிடித்தடித்த பிரான்கோயில்" – பெரிய திருமொழி

எனவும்,

3. "தீமனத்தான் **கஞ்சனது** வஞ்சனையில்திரியும்
ஆருயிரும் செகுத்தான்" [ தேனுகனும்பூதனைதன்

எனவும்,

4. "கஞ்சனுயி ரதுவுண்டிவ் வுலகுண்ட காளை"
எனவும்,

5. "ஒருங்க மல்லரைக் கொன்றுபின் கஞ்சனை
உதைத்தவ னுறைகோயில்"
எனவும்,

6. "கஞ்சனைக் காய்ந்த காளையம்மானைக் கருமுகில் நிறத்தவனை"
எனவும்,

7. "மல்லரையட்டு மானக்கஞ்சனை மலைந்து கொன்று"
எனவும்,

8. "கஞ்சன்விட்ட வெஞ்சினத்த களிறடர்த்த காளைஎன்னும்
வஞ்சமேவி வந்தபேயின் உயிரையுண்ட மாயனென்னும்"
எனவும்,

9. "கஞ்சன் நெஞ்சும் கடுமல்லரும் சகடமும் காலினுல்துஞ்ச"
எனவும்,

10. "கஞ்சனைக் கொன்றன்றுலக முண்டுமிழ்ந்த கற்பகத்தை"
எனவும்,

11. "கல்லார் திரள்தோள் கஞ்சனைக் காய்ந்தான்"
எனவும்,

12. "கஞ்சனைக் காய்ந்தானைக் கண்ணமங்கையுள் நின்றுனை"
எனவும்,

13. "கறுத்துக் கஞ்சனை அஞ்சமுனிந்தாய்! கார்வண்ணு!
கடல்போல் ஒளிவண்ணு!"
எனவும்,

14. "கஞ்சனைத் துஞ்ச வஞ்சித்த வஞ்சனைக்
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே"
எனவும்,

15. "கஞ்சனை யஞ்சமுன் கால்விசைத்த காளையார்"
எனவும்,

16. "கஞ்சன்கடியன் கறவெட்டுநாளில் என்கை வலத்தாதுமில்லை"
எனவும்,

17. "மல்லொடு **கஞ்சனும்** துஞ்சவென்ற மணிவண்ணன்"

எனவும்,

18. "நிதியினைப் பவளத்தூணை நெறிமையால் நினையவல்லார்
கதியினைக் **கஞ்சன்**மாளக் கண்டுமுன் அண்டமாளும்"

எனவும் பல்லிடங்களிலும் வஞ்சனைக் கஞ்சன் கண்ணனால் அழிந்தொழிந்த செய்தியினை பரக்கப் பேசுகின்றார். இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் கண்ணனின் அம்மானாகிய கம்சன், கஞ்சன் என்றே பேசப்படுகின்றான். தீய செயலிற்கும், வஞ்சனை மனத்திற்கும் எடுத்துக்காட்டாகக் கஞ்சன் நம்முன் காட்டப் படுகின்றான்.

## கஞ்சன் அம்மானை :

இந்நூலாசிரியர் பெயர் அறிதற்கியலவில்லை. எனினும் வைணவ சமயத்தைச் சார்ந்த ஒரு புலவரால் இந்நூல் இயற்றப் பட்டிருக்க வேண்டும் என எளிதில் உணர்ந்து கொள்ளலாம். ஆயிரம் ஆயிரம் அமுதப்பாமாலைகளைத் தம்மீது சூட்டிக்கொண்ட சீதரன் மீது இக் கஞ்சனம்மானை என்னும் இச் சிறு பிரபந்தத்தை இயற்றியளித்தல் பாற்கடலில் பாயல் கொள்ளும் பரமனுக்கு ஒரு சிறு குடுவையில் நீர் முகந்து கொடுப்பதற்கு ஒப்பாகும் எனக் கூறும் அவையடக்கச் செய்யுள் இவரது சமயப் பற்றைத் தெள்ளிதின் விளக்குகிறது. நூலின் போக்கையும், மொழி யாக்கத்தினையும், பொருட் செறிவினையும், கவிதை வளத்தையும் நோக்குங்கால் இந்நூல் பன்னிரண்டாம் நூற்றூண்டிற்கு இரண்டொரு நூற்றூண்டு பின்னர்த் தோன்றிய கவிஞரால் யாக்கப்பெற்றிருத்தல் வேண்டுமென எளிதிற் றுணியலாம். இந் நூலாசிரியர், தமிழில் பாகவதம் இயற்றிய செவ்வைச் சூடுவார் வழியில் சென்று இக்குட்டிப் பாகவதத்தை இயற்றினர் என அறியக் கிடக்கிறது. திருவாசகத்தின் பின்னர்த் தோன்றிய 'திருக் கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி' எவ்வாறு குட்டித் திருவாசகம் என்னும் பெயர் பெற்றுச் சிறந்ததோ அவ்வாறே இந் நூலும் அமைந்து குட்டிப்பாகவதப் பெருமையை எய்துகின்றது. பாகவத வரலாறு இந்நூலில் எளிய இனிய நாட்டுப் பாடலாகிய அம்மானைப் பாடல் அமைப்பிலே அழகுற எடுத்துக் கூறப் படுகிறது. கஞ்சனின்பிறப்பு, வளர்ப்பு, தேவகி வசுதேவர்நிலை,

கண்ணன் பிறப்பு, யசோதையால் ஆய்ப்பாடியில் வளர்க்கப்படும் முறை முதலிய நிலைகள் தெள்ளத்தெளியப் படக் காட்சிபோல் அடுத்தடுத்துக் கவிதை யுருவில் வெளிப்படுகிறது. ஆயப்பாடியில் நந்தன் மனையில் யசோதையால், கண்ணினைக் காக்கின்ற இமைபோல் காக்கப்படும் கண்ணனைக் கொல்வதற்காகக் கஞ்சன் பல அசுரர்களை அழைத்துப் பணி கொண்ட முறையும் அவ்வசுரர் அனைவரையும் கண்ணன் கொன்று எமனுலகு அனுப்பிய முறையும் அம்மானைப் பாடலில் அழகுறப் புனையப்பட்டுள்ளது. இந்நூலில் சமயக் காழ்ப்பு இந்நூலாசிரியரால் யாண்டும் உணர்த்தப்பட வில்லை என்பது கொண்டு இவ்வாசிரியரின் சமயப் பொதுமையை உணரலாம். இந்நூலைப் பயில்வார் எய்தும் பயனை இந்நூலின் இறுதியில் இவ்வாசிரியர் கூறும் செய்தி சிலம்பின் ஆசிரியர் இளங்கோவடிகள் தம் நூலின் இறுதியில் நிறைவுரையாயும், அறிவுரையாயும் கூறிய செய்தியினை நமக்கு நினைவுறுத்துகின்றது.

"தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்,
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின், புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
..........................................
..........................................
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லல்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென"

– சிலம்பு – வரந்தருகாதை

என்ற பகுதி கேட்டோர் அடையும் பயனைக் கூறுகின்றது. கஞ்சன் அம்மானை இயற்றிய இந்நூலாசிரியரும் இந்நூலைக் கேட்போர் எய்தும் பயன்களாக இந்நூலின் இறுதியில் கூறுகின்றார்.

"கிளர்ந்த வவதார மாங்கிருஷ்ணவ தாரத்தை
உகந்ததொரு பத்தியின லோர்ந் துணர்ந்துரைப்பார்
அம்மானை தன்னையறிந் திருப்பா ரன்பினுடன்
எம்மாதந் தன்னிலிரு பொழுதும் கேட்டிருப்பார்
சத்தக் கடலுலகில் தாமோதர னருளால்
அத்தமும் புத்திரரும் ஆயுளு முண்டாகி
சீராள ராகிச்சிறந்து மிகவாழ்ந்து பின்னும்
பேராளன் வைகுந்தம் பெற்றிருப்பா ரம்மானை"

எனக் கூறுவதால் இவ்வாசிரியர் திருமாலின் தோற்றமாகிய கண்ணன் பிறப்பில் எவ்வளவு ஆழ்ந்த பற்றுக் கொண்டவர் என்பது புலனாகின்றது. மேலும் இந்நூல் பயில்வார் இம்மை யுலகில் நீண்ட ஆயுளும், அறிவால் நிறைந்த மக்களும் பெற்று சீராளராய் இசையொடு விளங்கி, மறுமையுலகில் வசையிலா வைகுந்தம் எய்துவர் எனவும் கூறுகின்றார். இந்நூல் பயில்வார் இம்மை, மறுமைப் பயன்களை ஒருங் கெய்தி எல்லா நலனும் இனிதே பெறுவர் எனக் கூறுகின்றார். பெரியாழ்வார் எவ்வாறு திருமாலின் கிருஷ்ணாவதாரத்தில் தன் உள்ளத்தை மிகுதியும் ஈடுபடுத்தினாரோ அவர் போலவே இந்நூலாசிரியரும் கண்ணன் பிறப்பில் தன் உள்ளத்தைப் பெரிதும் ஈடுபடுத்தி யுள்ளார் என்பது அறிதற் கிடனாகின்றது.

இக்கஞ்சன் அம்மானை ஓலைப் பிரதிகளுள் சில மிகவும் சீர் கேடான நிலையில் இருந்தன. இதுவரை வெளிவராத நூல் என்பது இந்நூலிற்கு ஒரு சிறப்பு ஆகும். சில வரிகள் கிடைக்கப் பெறவில்லை. சில சொற்கள் சில வரிகளில் கிடைத்தில. சிலவற்றைப் புதிதாக ஆக்கியும், சிலவற்றைப் புள்ளியிட்டுக் காட்டியும் என்னா லியன்றவரை செம்மை செய்துள்ளேன். அனைத்தும் சிறப்பாகச் செப்பம் செய்யப்பட்டது என்று என்னாற் சொல்லுதற் கியலவில்லை. செம்மை செய்ய வியலாத வரிகளையும் அடிகளையும் மூல வோலையில் கண்டாங்கு பதிப்பித்துள்ளோம்.

இந் நூலினைச் செம்மை செய்து வெளியிடும் பணியை எனக்கு சரஸ்வதிமகால் நூலகக் கௌரவச் செயலாளர் அளித்தார்கள். உடனே இவ் வேண்டுகோளை ஏற்று இப்பணியை நிறைவு செய்ய என்னை அநுமதித்த பூண்டி **அ. வீரையா வாண்டையார்** நினைவு ஸ்ரீ புட்பம் கல்லூரி ஆட்சிக்குழுச் செயலர் & தாளாளரும், இலக்கியச் சுவைஞரும், சிந்தனைச் செல்வரும் ஆகிய பெருமைக் குரிய உயர்பெருந்திரு. **கி. துளசி ஐயா வாண்டையார்** அவர் கட்கும், இப்பணியை எனக்கு நல்கிய மதிப்பிற்குரிய புலமைச் செல்வரும், எங்கள் வழி காட்டியாய் விளங்கும் முதுபெரும் புலவரும், ஆன்றவிந்தடங்கிய சான்றோருமாய் விளங்கும் சரஸ்வதி மகால் நூலகக் கௌரவச் செயலாளர் உயர்திரு. **வித்துவான் அ. வடிவேலனார்** அவர்கட்கும் என் தலையாய நன்றி உரித்தாகுக.

இந்நூல் வெளிவர எனக்குப் பல்லாற்றானும் உதவி செய்தும் ஒப்பு நோக்கு முறையில் ஆய்வுரை வழங்கியும் ஊக்குவித்த எங்கள் கல்லூரி முதுகலைப் பேராசிரியர் டாக்டர் **அ. மா. பரிமணம்,** M. A., M. Litt., Phd. அவர்கட்கும், துணைப் பேராசிரியர் திரு. **அ. தட்சணாமூர்த்தி,** M. A., அவர்கட்கும் என் ஆழ்ந்த நன்றி உரித்தாகுக.

இறுதியாக இப்பணியில் என்னை உய்த்த பெருங்கருணைக் கருமுகிலைப் போற்றி வணங்குகின்றேன்.

அன்பன்,

**கி. கோதண்டபாணி,**

பேராசிரியர்,

அ. வீரையா வாண்டையார் நினைவு

ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி.

தஞ்சாவூர்

5—9—1976

# கஞ்சனம்மானை

## காப்புச் செய்யுள்

1 "சீரளந்த செல்வத் திருவரங்கிற் கண்துயிலும்[1]
பாரளந்தார்க்[2] கம்மானை பாடவே — ஆரம்
பணிமதி பொங்கரவம்[3] பாற்சடையோன் பெற்ற
கணபதி யைந்துகரன் காப்பு"

2 "சீர்ப்பாற் கடற்றுயிலுஞ் சீதர[4]னுக்கோர் குடுவை[5]
நீர்ப்பாற் காணிக்கை நீட்டுதல்போல் — வாரிச்
சொன்மாலை[6] சூடுந் துழாய்[7]மாலை யான்றனக்கே
புன்மாலை சூட்டப் புகல்"

## நூல்

சீர்மடந்தை கேள்வன் திருவுந்தி யோன்படைத்த
பார்மடந்தை வாழ்வுதரும் பல்லுயிரெல்லாம் பிழைக்க
தன்மம்[8] பெருகத் தவஞ்செய்வோ ருண்டாக
கன்மம் கருக்க கலியும் புறஞ்சாய
எம்மாதந் தோறும் எழிலி[9]மழை கூர்ந்து
மும்மாரி பெய்ய முடிவேந்தர் தாஞ்சிறக்க
வேதம் விளங்க வியன்மா மிகத்தழைக்க
கோதனங்க[10] ளெல்லாம் குவிந்து மடைப்பால்பெருக
பூவெரியுந் தருவும் புஷ்பங்கள் தான்சொரிய
காவிரி யாறு கரைபுரள வெந்நாளும்

---

1. கண்துயிலும் – கண்ணுறங்கும். 2. பாரளந்தார் – உலகளந்த கண்ணபிரான். 3. பொங்கரவம் – சீற்றமிக்க பாம்பு. 4. சீதரன் – திருமகள்கேள்வன். 5. குடுவை – ஒரு சிறு பாத்திரம். 6. சொன்மாலை – பாமாலை. 7. துழாய் – திருத்துளசி. 8. தன்மம் – தருமம். 9. எழிலி – மேகம். 10. கோதனங்கள் – அரசனுக்குரிய செல்வங்கள், பசுச்செல்வங்கள்,

எவ்வாலயமு மெழில் பூசை யுண்டாக
மூவர் முதலான மும்மூர்த்தியும் விளங்க
செந்தா மரைக்கண் திருமால் பதம்போற்றி
சந்தோஷ மேறித் தழைத்திருப்போர் தாரணியோர்
ஆரணந் தந்தையுந்தன் அம்மானையான் பாடக்
காரணன் தந்த கணபதியே முன்னடவாய்
ஓசை விளக்கை ஒளிநெடு மாலைப்பாட
தேச விளக்கே திவாகரனே முன்னடவாய்
தேவகி பெற்ற செழுமணியை யான்பாட
நாவக[1] முற்றிலகு நாகனே முன்னடவாய்
அரங்கர் பதியி லடித் தாமரைபாட
வரங்க ளருளியெனை மாருதியே அஞ்சலென்றாய்
முந்து தவமுடைய மூவுலகில் கன்னியரும்
வந்து திருப்பொன்னி மாநதி[2]யில் நீராடி
ஆங்காவேரி யணியரங் கத்துள் புறஞ்சூழ்
பூங்கா வனத்தில் புகுந்து விளையாடி
கந்துகள் மொச்சி கழங்காடிச் சீராடி
வந்து கனக மணியூசல்[3] தானாடி
இந்தேனகல் வாணுதலா[4] ரெல்லாரும் கூடியொரு
சந்தன நிழலிற் றானிருந் தாரம்மானை.
விம்மியெழு தனமுடைய மெல்லியர்க ளெல்லோரும்
அம்மானை தானாட அங்கதனிற் கொண்டார்கள்
முத்து நிறைத்தனவும் மும்மணியாய்ச் சேர்த்தனவும்
பற்றி நிரைத்துப் பவளத்தால் செய்தனவும்
சேலை யிறுக்கிச் செழுங்கனகம் தானிறுக்கி
மாலையணி குழலாள் வாங்கினாள் அம்மானை
கொண்ட லனைய[5]குழற் கோதையர்கள் தானாட

---

1. நாவகம் – நாவாகிய இடம். 2. பொன்னிமாநதி – காவிரியாறு.
3. கனக மணியூசல் – பொன்னும் மணியும் இழைத்த ஊஞ்சல்.
4. வாணுதலார் – ஒளி பொருந்திய நெற்றியுடைய மடவார்.
5. கொண்டலனைய – மேகத்தினையொத்த.

வண்டுகளாட மகரக் குழை யாட
திண்கமல[1] மொத்த திருமுகமும் வேர்வாட
கொங்கை களாட கொடிபோ லிடையாட
கண்கள் புடைபரந்து காதளவு மூடாட
செங்கை வளையும் சிலம்பும் கலகலென
கைமாறிக் கைமாறிக் கானமஞ்ஞை[2] யாட்டம்போல்.
அம்மாத ரெல்லாரும் ஆடினர் காணம்மானை.
அய்ந்து கரம்பாடி அங்குச பாசம்பாடி
தந்த முகவன் சதங்கைப் பதம்பாடி
ஆமோ துந்தும் பாலணியுரலிற் கட்டுண்ட
தாமோதரப் பிள்ளையார் தண்டைப் பதம்[3]பாடி
தென்னரங் கம்பாடி திருவேங்கிடம் பாடி
மன்னரெங் களத்திகிரி மாயோனையும் பாடி
அங்கு வளையாடி அனந்த சயனம்[4] பாடி
கொங்குளை சோலைக் குறுங்குடி யுந்தான்பாடி
கண்ண புரம்பாடிக் கண்ணமங் கையும்பாடி
அண்ண திருமுட்டம் ஆதிவிராகம் பாடி
ஏழுவாரி[5] சூழுலகோ ரெண்ணுங் திருக்குடந்தை
ஆழ்வானர் ஆழ்வா ரமுதாரையும் பாடி
போதா விந்தப் புணருங் கருணைவிழி
சீதரன் வாழுங் திருநகரியும் பாடி
இருப்பு லாரத்தையின் வலையா ரின்றலைக்கும்
திருப் புலாணிப் பதிவாழ் சீர்மலையுந் தான்பாடி
செந்திருந் தோய்ந்து செருக்குந் திருதுளப
சுந்திரத் தோளழகர் சோலைமலை[6] யும்பாடி
கட்டுண்ணும் தாம்புக்குக் காதிற் கதிர்கொடுக்கும்
விட்டுணு முத்தி திருவேள் வரையும்தான்பாடி
கூராழிகைப் பெருமாள் கோயிலையுந் தான்பாடி

1. திண்கமலம் – ஒளிபொருந்திய வளமான தாமரை. 2. கானமஞ்ஞை – காட்டுமயில். 3. தண்டைப்பதம் – தண்டை செறிந்த பாதம். 4. அனந்தசயனம் – பாம்பின்மேல் துயிலல். 5. ஏழுவாரி – ஏழு கடல்கள். 6. சோலைமலை – திருமாலிருஞ்சோலை, அழகர்மலை.

திருவாழி யாழ்வார் செறிகெரு டாள்வாரை
அருள்வாழும்பா யனந்தாழ் வாரையும் பாடி
நீடும் பெருமாள் நிறைபதியை முத்தமிழால்
பாடும் பதியமரர் பாதகமலம் பாடி
அம்பஞ்சு மேனி அரிதேவிறும் புயத்தாள்
செம்பஞ்சு சேர்ந்த செழுங் கமலமும்பாடி
அல்லிமலர்க் குழலாழி மேகலை யாள்
பல்லுயிரும் பெற்ருள் பழிப்பொன்று மில்லாதாள்
பாந்தளணை[1] நெடியோன் பாரிற் படிமடந்தை
பூந்தண்பிற் படிமேல் பொன்று புரம்பாடி
பாரெங்கும் போற்றிசெய்ய பாம்பணைமேல் பள்ளிகொள்ளும்
சீரங்க ராயரைச் செப்பலுற்ரு ளம்மானை
எண்ணும் பதியில் எழிலரங்கம் பெற்றவகை
ஒண்ணுதலே[2] கேட்க உரையென்ற னம்மானை
அங்கையி லூடாடும் அம்மானை தான்கேட்க
மங்கை யொருத்தி வரலாறு சொல்லலுற்ருள்
அந்த நெடுமா லகிலம் பதினலும்[3]
தந்தானை உந்தியிலே தந்தான் காணம்மானை
உந்திக் கமல[4]த்து திப்பித்த தந்தைதனை
வந்துதித்த வேதியனை[5] மாயோ னருள்புரிந்து
எட்டிக் காத்தாலே யெவ்வுலகி லெவ்வுயிரும்
கிட்டித் திருக்க சிலவிட்டா ரம்மானை
நித்த முடியமை நீங்காம லட்சிக்க
உற்ற வரந்தாவென் ரேதினர் காணம்மானை
மாதவனு மாங்கோர் மணிப்பேழையி லுதித்து
போதவனுக் கீயந்த (வணப்பும்) பதத்தி லெங்ஙனன்காண்
விடைபெற்ற வேதன் விறும்பதத்தே நெடுநாள்
இடருற்றுப் பூசித் திருந்தனர் காணம்மானை

---

1. பாந்தள் – நச்சரவு, மலைப்பாம்பு. 2. ஒண்ணுதல் – ஒளி பொருந்திய நெற்றி. 3. அகிலம் பதினலும் – பதினன்கு உலகங்களையும். 4. உந்திக்கமலம் – உந்தியில் பூத்த தாமரை. 5. வேதியனை – பிரமனை.

மனுச்சக்கர வர்த்தியெனும் மைந்தனுக்கு வாகுவென்பார்
தனிச்சக்கிரம் செலுத்தித் தாரணியை யாள்கையிலே
பெருந்தவசு பண்ணி பிரமாவைப் போற்றலுற்றான்
அருந்தவனுந் தோன்றி யுனக்கான வரங்களென்ப
இங்குவந் தோங்கோவே நானென் றெனுமுன்பதத்தில்
அங்குவந்து கேட்க அருளென்ன தம்மானை
மன்னு தடையன்றி வந்து வரங்களெனவே
அன்னையகனு மகன்றான் காண் அம்மானை
மனவாசல் கண்டுநிற்க மாமறையோன் சொல்லுமவன்
தனவாசங் காப்போர் தடையென்றா ரம்மானை
பூசை முடித்தபின் பூமகனும் மன்னவன்மேல்
ஆசைமிக வாய் அழையென் றாரம்மானை
புண்டரீகக்[1] கண்ணனைப் பூசித்தேன் காணெனவே
கண்டவனைத் தெண்டனிடக்[2] காட்டென்றார் காட்டினன்காண்
பாரடியில் வீழ்ந்து பணிந்து களிகூர்ந்து
நாராய ணாயநம வென்றுதான் போற்றி
அரும்பெரு புண்டரீகற் றாதியே நீயெனக்கு
தரும்பெறு நாயகனைத் தாரென்றார் தார்வேந்தன்
கண்ணின் மணியானைக் கண்ணனைக் கேட்டானெனவே
எண்ணிய வனுமிடருற் றானம்மானை
செங்கமலக் கண்ணன் திருவாய் மலர்ந்தருளி
அங்கவனுக் கென்னை யருளென் றாரம்மானை
மாதவனை வேந்தன் மணிப்பேழை[3] தன்னுடனே
பூதலத்தில் வேந்தனுக்குப் பூரித்தா ரம்மானை
அப்பதி நீங்கி யவனுமயோத்தி யென்னும்
பொற்பதியில் கொண்டுவந்து புக்கான் காணம்மானை
வைத்தா னயோததியிற்குள் வாகுவென்ப ரம்மானை
அன்று முதலா யவன்பிள்ளை பிள்ளைகள்தான்
என்று மகாபூசை யேற்றினர் காணம்மானை

---

1. புண்டரீகம் - தாமரை. 2. தெண்டனிட - கீழே வீழ்ந்துவணங்க.
3. மணிப்பேழை - அழகிய பெட்டி.

சேயோன் மரபில் தெசதரன் மைந்தனென்பர்
மாயோ னிராமனாய் வந்துதித்தா ரம்மானை
அன்னவன் தான்போய் அரக்கர்குலம் ஒறுத்து[1]
மன்னவனு மயோத்தியிலே வந்துமுடி சூடியபின்
மின்னிலங்கு தோளான் பீஷணனைத் தானழைத்து
தென்னிலங்கை நாடாளச் செல்லென் றாரம்மானை
நின்னடியேன் நின்னடியில் நின்றுமுறை செய்யாதுன்
பொன்னடி விட்டேகப் பொருந்தே னெனவுரைத்தார்
இப்பேழை சேந்தோம் எமைப்பூசை செய்திரென்று
அப்பேழை யீய்ந்து அனுப்பினா ரம்மானை
எவ்விடத்தும் வையா தெழிலரக்கர் கோமானும்[2]
செவ்விய காவேரித் திருநதியில் வைத்தருளி
ஆசுவனம் போயினான் அவ்வளவி லவ்விடத்தே
வீசுநவ தீர்த்தம் வில்லுவ தீர்த்தமுடனே
சந்திர புற்கரணி தற்பொன்னின் மானதியும்
வந்திது பாற்கடலில் வாய்ப்பாய் நமக்கென்று
ஆடல் நெடுமால் வசமாயிக்கண் துயின்றான்
விபூஷணனும் வந்தெடுத்து வேசற் றா[3]ரம்மானை
எடுக்க முடியா திடைவான் முகநோக்கி
திடுக்கந் தவிர்த்து திருவாய் மலர்ந்தருளி
இத்தலமே மன்னா நமக்கினி வைகுந்தம்
மேற்றிலங்கை நோக்கி விழிதுயில்வோம் போதென்றார்
சாலமதிற் கோபுரமும் சற்றா பரணமுடன்
ஆலயமும் பொன்னா லாங்கு மமைத்தருளி
புண்ணியனைப்[4] பூசித்து போற்றி விடைகொண்டு
எண்ணரிய தென்னிலங்கை யேற்றி யரசாண்டிருந்தார்
அங்கவனை யாட்கொண்ட அச்சுதன் காணம்மானை
துங்க மகுடமுடிச் சூதனன் காணம்மானை

---

1. ஒறுத்து - தண்டித்து. 2. அரக்கர்கோமான் - வீடணன்.
3. வேசற்றார் - களைப்புற்றார். 4. புண்ணியனை - திருவரங்கநாதனை.

சீரங்க மேவுஞ் செறிவாசு தேவன்காண்
நாரணன்காண் தெய்வங்கள் நாயகன் காணம்மானை
மாதர்க் கழகு மணவானன் காணம்மானை
வேதர்க்கு மந்த ......... காணம்மானை
ஏற்றமுள்ள வாரியுலகு பதினா லிவனுக்கும்
ஏற்றமுள்ள சீரங்க ராசன்கா ணம்மானை
சீரங்க நாயகியார் சீராடும் சீதரன்காண்
சாரங்கபாணி[1] காண் சக்கரத்தால் மன்னவன்காண்
செந்தாமரை வதனச் செல்வன் காணம்மானை
ஐந்தாயுத முடைய ஆதிகா ணம்மானை
காவேரி பொற்செங் கருட்பாரியான் காணம்மானை
ஆயிரம் வாய்நாகத் தணையினன் காணம்மானை
எவ்வுலகு மாளு மிரணியன்றன் நெஞ்சுதனை
செவ்வுகிரால்[2] கீன்ற[3] நரசிங்கன் காணம்மானை
பொய்த்தழைத்த தென்னிலங்கை போர்வேந்த வங்கிஷத்தை
பைதழைக்க வல்ல இராமன்கா ணம்மானை
செஞ்சொ லசோதைத் திருமகன் காணம்மானை
கஞ்சன் வலிகடந்த கண்ணன் காணம்மானை
பூபாரந்[4] தீர்க்கும் பொருட்டாக வன்றுநந்தனை
கோபாலன் பெற்ற குமாரன் காணம்மானை
செய்ய நெடுமாலை தேவகியார் பெற்றதுவும்
ஆயரிடத்தே அசோதை வளர்ந்ததுவும்
மாமன் வரவிடுத்த வஞ்சினை வென்றதுவும்
சேமமுடன் கஞ்சன் சிதையப் பொருததுவும்
காயா மலர்மேனிக்[5] கண்ணன் கடற்புவியில்
மாயா வரமுடைய மன்னரா யுள்ளவரை
கோப முடனே குலையப் பொருதழித்து

---

1. சாரங்கபாணி – சாரங்கத்தை கையிலேயுடையவன். 2. செவ்வுகிரால் – செவ்விய நகத்தால். 8. கீன்ற – கிழித்தெரிந்த. 4. பூபாரம் – பூமியின் பொறையினை. 5, காயாமலர்மேனி – காயாம்பூ வண்ணனாகிய கண்ணன்.

தேவர் முனிவாதி கந்தவிழத் ததுவும்
வள்ளல் மதிமுத்துவரை மன்னுகை வாழ்ந்ததுவும்
உள்ள வகையே உரையென்ற தம்மானை
அம்மானைக் கேட்டதுவாய் ஆயிழையார்[1] சொன்னதுவாய்
வெம்மானை வாக்கிலியான் விண்ணப்பஞ் செய்யலுற்றேன்
தில்லைப் பதமும் இருக்கவும் தான்முடவன்
ஒல்லைக் கடல்கடக்க உச்சாயஞ் செய்தாற்போல்
சோலைவனம் பெருகும் சூழரங்கத் தம்மானை
பாலைவனப் பிரமன் பாடுகிறே னம்மானை
அங்கையி னும் கல்லாராய்ந்து பார்த்தாலும்
மங்கையரிட்ட மணற் சோறு சோறுமோ
புந்தியில்லா[2] நாயெனப் புகன்றுரைத்த புன்சொல்லை
செந்தமிழ் வாணோர் திருவுளத்திற் காணுதே
வன்பான மேருவுக்கு வாய்த்த வடதிசையில்
பண்பா ரியற்றின பவனமென்னு மத்தலத்தே
கோது முனிவரெலாம் கூடியிருந் தருளி
ஆதி வராகன்[3] ஹரிவங்கிஷக் கதையைச்
செப்பிட வல்லவர்கள் செப்பும் எனமொழிய
ஒப்புடன் மாயன் உதைய முதலாக
தூ........ கஞ்சன் துலைந்த படியாகக்
காசினி யிராசன் வதைகண் டளவுமீருக
பண்பால் நிறைந்த பராசமா முனிவன்
நண்பா யுரைத்தருளும் நாராயணன் கதையை
பாங்குற் றிருந்து பலகாலும்[4] கேட்கவல்லோர்
தீங்கற்று வாழ்ந்து திருமால்பதம் பெறுவார்
மாறுபெற்ற ஙய்த்தொலில் மாணிக்கம் வீற்றிருந்தால்
பொருள்பற்றி வையாமால் போடா பெரியோர்கள்
புன்சொல்லே யானலும் போராழியான்[5] கதையை

1. ஆயிழையார் - ஆராய்ந்த ஆபரணமணிந்த மடவார். 2. புந்தியில்லா - அறிவற்ற. 8. ஆதிவராகன் - ஆதிவராக மூர்த்தியாகிய திருமால். 4. பலகாலும் - பல முறைகள், 5. போராழியான் - பேர்ச்சக்கரமுடைய கண்ணன்.

செஞ்சொல்லே யாகச் செலுத்தும் சகத்திலுளோர்
மன்னு பிறவிகுலம் மகேந்திரன் வங்கிஷத்தில்[1]
உன்னும் பிலனுடையோன் உக்கிரசேன னென்பான்
மாமதுரை என்னும் வளர்நகரில் வீற்றிருந்து
தேமருவு செங்கோல் செலுத்துகின்ற நாளையிலே
மாதையர் தோளான்தன் மாதேவி மாரிலொரு
பேதையாள் பிள்ளையொன்று பெற்றாள் காணம்மானே
வேந்த னழைத் தருள்வேதகிரி தான்வந்து
சேந்த முகிழ்த்த[2]மிது தேர்வேந்தே நல்லதல்ல
உற்ற மகவென் றுணராதே உன்குடிக்கு
குற்ற மறுபிற்றிவனைக் கோவென் றாரம்மானே.
மாதவர் சொல்லை மறுத்தாலும் தோஷம்[3]வரும்
துக்கமிக வெய்திச் சோபக்கண்ணீர் தான்விழியால்
தக்கமதலை தனைக்...... பாத்திரத்தில் விட்டு
உக்கிர சேனன் ஒருபேழையுட் பொதிந்து
மிக்கயிய முனையில் விட்டான்கா ணம்மானே.
அந்த மணிப்பேழை யாற்றில் வரக்கண்டு
வாய்ந்த புகழ்சேரும் மந்தாகினி நகரில்
ஆனை யரசன் அகமுடையா ளாராடப்
போனவள் பேழைதன்னைப் புக்கெடுத்தா ளம்மானே.
தன்மனையில் கொண்டுபோய்த் தார்வேந்தனும் தானும்
மன்மகனே யாக வளர்ந்தான்கா ணம்மானே.
புண்டரீகம் போல் புதுக்கஞ்சப் பாத்திரத்தில்
கண்டமையால் மற்றவனைக் கஞ்சனென்று பேருமிட்டு
சந்திர கோதை[4]யென்பாள் தான்வளர்த்தா ளம்மானே
வெந்திறற் கஞ்சன் விபரிதனா லேதுசெய்வான்
வருந்தி வளர்த்தெடுத்த மாதாவை வஞ்சித்து
புரிந்து சராசந்தன் புரம் புகுந்தானம்மானே

---

1. வங்கிஷத்தில் – வமிசத்தில். 2. முகிழ்த்தம் – நல்லவேளை. 3. தோஷம் – தீங்கு, அமங்கலம். 4. சந்திர கோதை – கஞ்சனை வளர்த்த தாய்.

மன்னுமஞ் சராசந்தன் மைந்தனுக்கு ஆயுதங்கள்
பன்னிப் பயிற்றுவிக்கும் பார்த்து நின்றான்
வாய்த்த புகழ்க்கஞ்சன் வசுதேவ பாதத்தில்
தோத்திரஞ் செய்து தொழுதான்கா ணம்மானே
அந்த வாசுதேவன் ஆர்நீ யெனவினவ
மந்தரகிரி நகரில் மன்னன் மகனென்ன
சேர்ந்தான் றனையு மகாராசன் தன்மைந்தருடன்
எந்தாயுந் தந்தையு மியற்றி வித்தா னம்மானே
சிந்தா செல்லவே சிராசந்தன் தன்மேலே
வந்தான் படைச்சிங்க வாகன னென்பானொருவன்
மாக்கரிச் சிங்க வாகனனை யென்றவர்க்கு
என்மகன் தன்னை மணமீய்வே னெனவுரைத்தான்
சொன்ன சராசந்தன் சூளறை வாறறிந்து
மன்ன வசுதேவன் மகாசிங்கஞ் சோடித்து
திண்டேரில் பூட்டியந்த சிங்கத்தேர் மன்னவனை
கண்டு முனிந்து கடும்பூசல்[1] செய்யலுற்றான்
மங்கப் பொருதவசு தேவரவாள் களாலே
சிங்கப் பரியானைத்[2] தேரழித்தா ரம்மானே
தொழிந் தோட்டமற்ற தேர்பூண்ட சிங்கங்கள்
போரழலாகப் பொருதனர் காணம் மானே
தேசத் தருஞ்சேனைச் சராசந்தன் கண்டுநிற்க
ஆசாரிய னுக்கவன் துணையாய் முன்புகுந்து
கஞ்சனு மங்கோர் கதிர்வேலை[3] விட்டெறிந்து
கோன்சிங்க வாகனனைக் கொன்றான்கா ணம்மானே
மற்றவனைக் கொன்றளவில் மன்னன் மனமகிழ்ந்து
உற்றபதியி லுடன்கொண்டு போய் புகுந்து
முன்னியர் சொன்னமொழி வழுவேன் மற்றுனக்கேன்
கன்னிமார் தன்னைக் கல்யாணஞ் செய்துதர
உன்தந்தை தாய்பேருரை யென்று கேட்டலுமே

1. கடும்பூசல் – கடும்போர். 2. சிங்கப்பரியான் – சிங்கவாகனன். 3. கதிர்வேல் – ஒளிபொருந்திய வேல்.

என் தந்தை மந்தாகிரி மன்னனென் றுரைத்தான்
அங்கவனைக்கூறி அவனும் வந்து தெண்டனிட்டு
இங்கிவனென் மைந்தனே என்றுரைத் தாரம்மானை
கண்டுகேளாய் நீயென்று கஞ்சன்வந்த பேழை[1] தன்னை
கொண்டுவந்து முன்வைத்துக் கும்பிட்டா ரம்மானே
ஊறுபடிய னுள்ள உலதனை வுளப்பட்டு
தேறுபுகழுக் கிரசேனன் மகனென் றறிந்து
கன்னியரை யீய்ந்து கடற்படையுங் கூட்டியுந்தன்
பொன்னி நகராளப் போமென்று ரம்மானை
மனக்களிப்பாய் கஞ்சன் வசுதேவனைத் தொழுது
இனக்கிளைய பெண்க ளிருவருள ரென்றார்கள்
அன்னவனை யிங்குனக்கே ஆகுதி[2]முன் வேட்பிப்பேன்
மன்னவனே யென்னுடனே வாவென்று கொண்டுசென்றான்
வந்து படையுடனே மாமதுரையுட் புகுந்து
தந்தை தனைப்பிடித்துச் சாமளவுங் குற்றிவைத்து
காலில் விலங்குபூட்டிக் கடுஞ்சிறையிலே போட்டு
ஏலிலங்கு கையா னிராச்சியத்தை யாண்டிருந்தான்
மங்கையர்கள் தன்னை வசுதேவனுக் களிக்க
எங்கு முரறைந்து சயாதவரையும் கூட்டி
செல்வ மிகவுடைய நற்சிவன் என்றும்
நல்ல முகூர்த்தமிட்டு நாள்விருந்து செய்தருளி
தேந்தார் ரோகணியார் தேவகியா ரென்பவரை
வேந்தன் வசுதேவன் வேட்டனன்[3] காணம்மானே
செம்பதுமக் கண்ணாரும்[4]சிறி வாசுதேவ னுமாய்
இன்பமுடன் வாழ்ந்திருந்தா ரேந்திழையார் கர்ப்பமுற்றாள்
அன்னாளி லந்த அணியிழையார் தன்னுடனே
மன்னனை கஞ்சன் வசுதேவன் தன்னுடனே
வெங்கானம் போய்மிகுந்து வேட்டை மிகவாடி
வங்கார் மார்பனமரர் மகாசேனை தன்னுடனே

1. பேழை - பெட்டி 2. ஆகுதி - வேள்வித்தீ. 3. வேட்டனன் - திருமணம் கொண்டான். 4. பதுமக்கண்ணார் - தாமரை போன்ற கண்ணினை யுடையர்.

மாளுவ மென்கின்ற மாவியாற்றங் கரையில்
மேளமுடன் வந்து வீற்றிருந்தா ரம்மானை
உற்றமனை நோக்கியந்த ரோகணியுந் தேவகியும்
இற்றகமை மாவிலிரண்டு கனி நிற்கிறதை
தாவென்னக் கஞ்சன் சரத்தாலறுத் தளிக்க
ஆவென்ன வாங்கி அருந்தினர்கா ணம்மானை
அரசு திருநகரில் அன்னவர்கள் போனபின்பு
இரசுக் கிரீபமலை யென்னும் பருவதத்தில்[1]
செரும் பசுதான் தேவரிஷி பார்த்தருளி
தனிரெண்டு கண்ணுல் தடங்கனியார் காணுமல்
பன்னிரண் டாண்டிந்தப் பழமுணர்வாய் வீற்றிருந்தேன்
ஒண்கனியை[2] யுண்டா ளுதரத்[3]தில் சந்ததியால்
வண்கனியை யெய்தறுத்தான் மாள்வாரெனச் சபித்தான்
கஞ்சனும் கேட்டுக் கலங்கித் தனக்கிளைய
வஞ்சியரை வன்சிறையில் வைத்தான்கா ணம்மானே
அன்னுள் சிறையில் அழுந்துகின்ற தேவகியார்
மின்னுர் மகன்பெற்று வெய்துயிற்[4] ருளம்மானை
தன்தங்கை பெற்றெடுத்த சந்ததியைக் கஞ்சனென
வன்தங்கை யாலெடுத் தவன்தூணில் மோதினன்காண்
என்றுமவள் பெற்ற யிருமூன்று பிள்ளைதனை
கொன்றுமிகு பாலவதைக் கொண்டான் காணம்மானை
தீதவன் தங்கையென்னும் தேவகியார் தன்வயிற்றில்
யாதவன் வந்துதித்த வாறுகேளம் மானை
திருபுவன நாதன் திருப்பாற் கடல்நடுவே
எரிகிரண பற்ப மணியெங்கு மிருளகற்ற
இனைசமைத்த ரோகமென்னு மியப்பள்ளிக் கட்டில்மிசை
பன் மெத்தை தான் படுத்து
ஆயிரஞ் சென்னிஅனந்த னென்னும்பாய் விரித்து
மாயிரு ஞாலம்[5] மடங்குந் திருவயிற்றில்

1. பருவதத்தில் – மலையில். 2. ஒண்கனி – ஒளிபொருந்திய பழம்.
3. உதரம் – வயிறு. 4. வெய்துயிற்ருள் – பெருமூச்செறிந்தாள்
5. மாயிருஞாலம் – பெரிய இடமகன்ற உலகம்.

ஆகு வலஞ்சுழியி லணியுதர கோதனமும்
வாகு வலேயமும் மார்பு மழகெரிப்ப
அலங்க லணிதுளவும் ஆரமுஞ் சோதிவிட
மாணிக்கச் சுட்டியும் வாய்த்தமகரக் குழையும்
காணில் கண்கூசும் கவுத்துவ[1] முந்நூலும்
சூரியர்க ளாயிரவர் தோற்றத்தி லெண்மடங்கும்
சீரிய மாமுடியில் செம்மணிகள் சோதிவிட
பாதாம் புயமும் பனுவிரலில் மோதிரமும்
செங்கமல மாதுஞ்[2] செகமாதுஞ்[3] சேர்ந்திருந்து
கொங்கை குலுங்கக் குரங்கூழியஞ் செய்ய
கின்னரக் கிம்புருடர்க் கீதங்கள் பாடல்செய்ய
அன்னநடை யார் அழகாய் நடமாட
மெல்லவருந் தென்றல் வெண்கவரி[4] காலசைப்ப
நல்லசுரர் முனிவர் நாற்றிசையும் போற்றிசெய்ய
வாருதியில்[5] செந்தாமரைக் காபூத்தாற் போல்
காருதவும் மேனியான் கண்துயின்ரு னம்மானே
உளநா வசுரர் உத்தண்டத் தாற்ருமல்
ஆன சுரரும் அயனும் புரந்தரனும்
பொன்னங்கை யாழிப் புருஷோத்த மனிடைக்கே
முன்னங் கோவென்று முறையிட்டா ரம்மானே
துண்ணென்று வானேர்கள் சூழ்ந்து முறையிடவே
கண்ணன் துயில்விழித்துக் கண்டான் காணம்மானே
அச்சுதனே போற்றி அரிகேசவா போற்றி
பச்சைத் துளாய்போற்றி பாரளந்தான் போற்றி
கண்ணனே போற்றியெங்கள் காரணனே காயாம்பூ
வண்ணனே நாரணனே மாதவனே போற்றிஎன்ருர்
என்றவரை அஞ்ச[6]லென்று எங்கோனும் வாய்மலர்ந்து
மண்ணளந்தார் வானேர்க்கு வந்தகுறை சொல்லுமென்ருர்

---

1. கவுத்துவம் – மார்பிலணியும் அணி. 2. செங்கமல மாது – திருமகள். 3. செகமாது – பூமகள். 4. வெண்கவரி – வெண்சாமரம். 5. வாருதியில் – கடலில். 6. அஞ்சல் – அஞ்சாதே.

ஏதென் றருள்புரிய யெத்தேவரும் பணிந்து
தாதொன்று தண்டுளபத் தாமனே[1] கேட்டருளாய்
முன்னையுகந் தனிலும் மூண்டபகை தீர்த்து
அன்னைபிதாவாய் எங்கட் காதி விராகனுமாய்
வாரிக்கடைந் தெமக்கு வானமிர்த[2] மூட்டுவித்தும்
போரிலிரணியனைப் போய்ச் சிங்கமாய் வதைத்து
வாமனரூபமாய் மாவலியைக் காவல் செய்தும்
நாம விராமனு யிராவணனை யிடழித்தும்
பூத்தாமரைக்கண் புனிதர் நீயெம்மை யின்னாள்
காத்தாய் நீயின்னங் கடைபோகக் காத்தருள்வாய்
கஞ்ச னென்னும் தீமைக்கடியநற் பாலனென்றும்
வஞ்ச நாகனென்றும் வாணனென்று மண்டலத்தில்
தீயவர்க ளென்றுஞ் சிரமெடுக்க ஒட்டார்கள்
நீயவரைக் கொன்று நிலைக்கு நிறுத்திலையாய்
என்பமுதங் கொள்வோம் எமக்கும் புகலி[3]ல்லை
உன்பதம் விட்டேகோ மென்றோதிப் பணிந்தார்கள்
வானவரை யஞ்சலென்று மாதவனைப் போற்றிநின்று
தேனவிழ்தார் பூமடந்தை[4] செப்பலுற்று ளெம்மானை
என்பாரந் தீர்ப்பாயோ யெம்முடைய நாயகமோ
உன்பார மல்லா லொழிந்தவர்க்குப் பாரமுண்டோ
மேவிய வானோரும் மெய்யாக மிடுக்குடைய
தேவியுஞ் சொல்வதனை சீராமன் கேட்டருளி
வாரமும் நாமுடையோம் வானவரே பூமகள்தன்
பாரமும் நாம்தீர்ப்போம் பார்த்தோர் முடித்துவிப்போம்
அஞ்சலியென்று அபைய சத்தந்தான் கொடுத்து
கஞ்சமலர்க் கண்ணன் கடவுளரைப் போகவிட்டு
செம்மை யுடைய திருவனந்தனைப்[5] பார்த்து

---

1. தாமனே – முடியுடையோனே. 2. வானமிர்தம் – தேவாமிர்தம். 3. புகல் – பற்றுக்கோடு. 4. பூமடந்தை – நிலமகள். 5. திருவனந்தனை – ஆதிசேடன்.

எம்மையுடைய சந்தியினி லெட்டி லொன்றும்
தம்முன்னே மற்றவரைற் றாரணியில் பாலித்தோம்
எம்முவி னேறைக யிருமென்று போகவிட்டு
உற்றானனந்தன் ரோகிணியா ருந்தியிலே யம்மானை
பெற்றா ளிராத்திரியில் பிள்ளைதனை யம்மானை
பெற்ற குழந்தைதனை பெய்வளை[1]யுங் கண்டிறங்கி
அற்ற வலிக்கஞ்சன் அறிந்தால் வதைப்பனென்று
வெண்சங்கு போலிருக்கு மேனியான் தன்னையொரு
ஒண்சங்கு தன்னிலொழித்து வைத்தா ரம்மானை
சங்கிலிருந் தமையால் சங்கிருஷ்ணு வென்று
அங்கவனைப் போற்றி அதன்பிற்றை நாளிரவில்
புந்தி[2]யுடைய புரோகிதன் கை கொடுத்து
அந்த யிரவிலவன் ஆய்ப்பாடி எல்லையிலே
கொண்டுசென் றானங்கோர் குழந்தை செத்துகொண்டுவர
கண்டுநந்த கோனிடையர் கையிற் கொடுத்திவனை
உள்ளபடி சொல்லி உகந்திவனை நீவளர்த்து
கொள்ளென்று செத்த குழந்தை தனைவாங்கி
பாய்ந்தங் கிராவழியே பராம பதனென்பான்
போந்தங்கு ரோகணி[3]முன் போட்டனர் காணம்மானே
மற்றயலார் பெற்று மரித்த குழந்தையைத்தான்
பெற்றமகன் போல பிடிநடையும் பாவித்து
உற்றாளைக் கண்டவர்கள் உன்தங்கை பிள்ளையொன்று
பெற்றான்கா ணென்று சென்றுபேசினார் கஞ்சனுக்கு
ஓதுமொழி கேட்டு திப்பதற்கு முன்புகுந்து
தீதுபயிலக் கஞ்சன் சிறுமதலையை யெடுத்து
அஞ்சினது மோரா துணுக்கென்ன தூரனேடே
வெஞ்சினத்தால் மோதியதை விட்டெறிந் தானம்மானே
அங்கவன் தானிருக்க ஆய்ப்பாடி நன்னகரில்
சங்கிருஷ்ணக் கொடுபோய்த் தந்தை நந்தகோபனென்பான்
அன்னை யசோதை கையிலாவி பெற்றானுன்மதலை

1. பெய்வளை - வளையலணிந்த தேவகி. 2. புந்தி - அறிவு.
3. ரோகணி - தேவகி.

என்ன கொடுத்தான் யிரக்கமுடன் பாலூட்டி
அன்பாய் வளர்க்க அவன்வளர்ந் தானம்மானே
மின்பரவுக் காக்கை வேந்தனினி யேதுசெய்வான்
ஆழ்வானு மம்புயத்து ஆயிழையை யப்போது
வாழ்வான் கோனந்தன் மாமகளாய் பிறந்து
நற்பின்னை யென்றுனக்கு நாமமு மாயங்கிறென்று
கற்பின் மிகுந்தருளுங் காசினியான் பார்த்து
ஓங்குவிதர்ப்ப னெங்கள் உருப்பினியர்க் கென்றுரைத்து
பாங்கில் பகவதியைப் பார்த்து மனமகிழ்ந்து
ஆனந்த கோபன்ன சோதை மகளேகென்று
மன்னர் சேனுபதியை மாசிமகளு கென்று
மற்றுள்ள பேர்களையும் மண்ணுலகில் போய்ப்பிறந்து
உற்ற படைக்கு உதவுமென விடுத்து
அங்கவரைப் போற்றி அரிகேச வன்[1]ருனும்
செங்கமல தேவகிதன் சீர்வயிற்றிற் சேர்ந்திருந்தான்
மூவுலகு காத்தளிக்கு மூர்த்தி வசுதேவனுட
தேவி திருவயிற்றில் சேந்திருந்தா னம்மானே
கெற்பிற்ற வனனே கிளிமொழியாள் தேவகியும்
சற்புத்திரன்[2] றனக்குத்தாகப் பெரிதாகி
முன்னுமியான் பெற்றெடுத்த மூவிரண்டு பிள்ளைகளை
அன்னவரைக் கொன்ற அதுபோலா காமல்
காவல்மனை யன்றுகஞ்ச னிடைக்கே சென்று
ஆவலுடனே அவனைத் தொழுது நின்ருள்
செங்கண்ணல் பார்த்துச் சிறையிலும்நீ போதுவதேன்
இங்கென்ருன் கஞ்சன் யினையவளு மென்சொலுவாள்
மற்றடியே னுந்திதனில் வந்துசெனிப்புற் றிருந்த
சிற்றடியைப் பற்றிச் சிநேகமறிந்த பின்பு
மல்லென்று தோளாய் மதலைப் பருவத்தில்[3]
கொல்லென் றவன்காலில் கும்பிட்டுப் பூண்டுகொண்டார்
பூண்டுகொண்ட மாதைப் பிறவடியாலே யடித்து

1. அரிகேசவன் – திருமால். 2. சற்புத்திரன் – திருமகன். 3. மதலைப் பருவத்தில் – இளமைப் பருவத்தில்.

மீண்டுவந்தா லுங்கள் தன்னைவெட்டி பிளப்பேனென்று
தோற்றுங் குழவிதனைச் சூதுபோய் தாந்தனையு
காற்று மியங்காமல் காருமென்று ரம்மானே
சிற்றரு மூங்கை[1]களும் தீராச் செவிடுகளும்
மந்தருங் கையறுப் பூண்ட பாவிகளும்
உள்காவல் காக்க ஊரற்று பிறத்தியெங்கும்
வேதகா திடுமிகளும் வெண்பூதமும் பேயும்
பார்க்கப் பயங்காட்டும் பப்பாரச் சிங்களரும்
வாக்கொற்ற கிங்கிலியர் மல்லரும் ஞானிகளும்
எலியருஞ் சிறையிலே கென்று னேந்திழையை
காவிவிழி[2] பணிப்பக் கைதலைமேல் வைத்தருளி
கண்ணிக்குள் மான்போலக்[3] கதறிக் கருத்தறிந்து
தண்ணிக்குள் ளெட்டுத் தவிக்கும் பெடையன்னம்[4]போல்
சோதிற்றென்று பட்ட தோகை மயில்போல
ஆபற் றுணையாரும் அண்ணுபால் பெற்றவரம்
காவலுங் கட்டுங் கடவாக் கடுஞ்சிறையும்
அப்போ தெய்வமே யென்றேவகி அலமந்து
பண்டிருந்த வன்சிறையில் பற்றி ரெட்டிச்சூதானும்
கொண்டிருந்து நெஞ்சங் குழைந்து சொல்வாள்தேவகியும்
கன்னிப் பருவத்தே கைபார்த்த சோதிரிஷி
பிள்ளை பெறுவை மன்னுமெழு புவிக்கும்
காவலனாய் வாழ்வான் கடவுளரு மற்றவன்காண்
எம்மிலான் சொன்னதெலா மாசாதென விருந்தாள்
காவலர் தன்னைக் கஞ்சன் அழைத்துவிட்டு
மாயில வானை வசுதேவன் தன்னையிப்போ
எண்டிசைக் குள்ளோரும் இந்திரனும் நான்முகனும்[5]
அண்டுகைக் கொண்ணு தயருஞ்சாலை தன்னில்
வைத்துப் பதத்தில் வலுவிலங்கு ஞலாறு

1. மூங்கை - ஊமை. 2. காவிவிழி - நீலோற்பலத்தையொத்த கண். 3. கண்ணிக்குள் மான்போல் - வலையிலகப்பட்ட மான்போல். 4. பெடையன்னம் - பெட்டை அன்னப்பறவை. 5. நான்முகன் - பிரமன்.

தைத்துக் கதவெழுந் தாள்பூட்டி வையுமென்றார்
அன்னவரு மங்கவரை அப்படியே காவல்செய்து
இன்னவகை யென் றிருக்கின்ற வேளையிலே
ஆதியுங் களிக்கு மாதி விறுமாவும்
சோதியுட னித்திரா தேவிதனை யழைத்து
ஒள்ளிய தேவகிதன் உந்தியிலே வீற்றிருந்த
வள்ளால் பிறபவிக்க வந்தனுள் முகிழ்த்தும்
பேரா யிரமுடைய பேராளன்[1] தான்பிறந்து
சீராய்ப் பாடியிலே சேமப்பதி யளவும்
கஞ்சன் கரியையுங் காக்கின்ற பேர்களையும்
துஞ்ச லெழாதே துயிலுக்கும் போமென்றார்
அந்தியில் முன்கஞ்சனையும் ஆய்ப்பாடி ஆட்களையும்
உந்தியிலே சென்று மயக்கு வித்தாளம்மானே
தூங்கினுள் தூங்கியில கங்கண் தூங்கையிலே
தேங்கு மலர்க்குழலாள் தேவகியங் கேதுசொல்வாள்
சோதிமலர் விழியுந் தோளுமிடந் துடித்து[2]
பாதியிரவு பகல்போ லிருள கன்று
உண்ணு திளையாறி உள்ளங்களி கூர்ந்து
பண்ணார் மொழியார் பரிவுற் றிருக்கையிலே
பூமழை பெய்து புதுவிசும்பில் வானோர்கள்
தூபமொழியாரும் தாமும் சோபனங்கள்[3] கூறிவர
வைகாசி யென்னும் வருஷமும் பாற்காணும்
மெய்யகச் சிங்கத்தில் மேவுமார் பக்கமும்
ஒன்பது கோளும் உறவுசெய்த எல்லையினில்
இன்பசுகந் தவசு வென்னும் முகிற்றப்வர
அந்தரத்தில் வானோர் அரிவையர் பல்லாண்டிசைப்ப
துந்துமிகளா[4] ர்ப்பத் துறவோர் மனமகிழ

1. பேராளன் - பெருமையுடைய கண்ணன். 2. விழியுந் தோளுமிடந் துடித்து - பெண்களுக்குத் தோளும் விழியும் இடது பக்கம் துடித்தால் நலமே உண்டாகும். 3. சோபனம் - நல்வாழ்த்து. 4. துந்துமிகள் - பலவகை வாத்தியங்கள்.

சத்த விருஷிகளும் தாமரையில் வேதாவும்
சுத்த முனிவர்களும் சூழ்ந்து சுவற்றிசொல்ல
கஞ்சனுக்கு நீதியில்லாக் கத்திப ரெல்லார்க்கும்
மினஞ்சொல் லசோதைக்கு மிடப்பக்கந் தான்துடிக்க
சீரான செல்வனந் திருவெண் ணையிலே
பேராளன் வந்து பிறந்தான்கா ணம்மானே.
உள்ளந் தெளிந்து உலகெலாம் உண்டுமிந்த
பிள்ளைதனைத் தேவகியும் பெற்றாள் காணம்மானே
தந்தை தளை[1]யவிழவன் கதவுதாள் துறப்ப
சிந்தை மகிழ்ந்துதாய் சீர்மேனி பூரிப்ப
கஞ்சன் வலிகுலையக் காசினி மானப்பாராள்
பஞ்சவர்க[2] ளீடேறப் பாரதப்போர் தான்முடியச்
சீராயர் வாழ்ந்தருள தேவர்சிறை நீங்கப்
பேரா யிரத்தான்[3] பிறந்தான் காணம்மானே
பெற்ற களைபோய்ப் பிரிசங் கரைபுரள
பற்றி யெடுத்துகந்து பார்த்தாள் திருமகனை
தாட்டிய தோள்நான்கும் சங்கு வளையுங்கரமும்
காட்டி மறைந்தான் பின்கண்டாளிரண்டு தரம்
கண்ணும் முகமுங் கரங்களும் காலிரண்டும்
தெண்ணின் றனுள்பூத்த செந்தாமரைப் போலே
மாசொன்று மில்லா மரகத ஞாயிறுபோல்
ஆசொன்று மில்லா அபயங்கள் தன்னுடனே
கண்டு மகனைக் களிகூர்ந் திருக்கையிலே
தண்டுவினைக் கஞ்சன் தனைநினைந்தா னம்மானை
அப்பிள்ளைக் கெல்லாம் அசந்துவரங் கேட்டிருந்தேன்
இப்பிள்ளை பெற்றவரம் யேழுலகும் பெற்றவர்போல்
வாமந் துடித்து மனப்பிரிசந் தான்பெற்றி
மையிருளகன்ற யெவ்வகை யோறு னறியேன்

---

1. தளை – சிறைக்காப்பு. 2. பஞ்சவர்கள் – பஞ்சபாண்டவர்கள் (பாண்டுவின் மைந்தர்கள்) 3. பேராயிரத்தான் – ஆயிரம் பேர்களையுடைய திருமால்.

எங்கோனும் காவல் பானும் விரிவறியேன்
பொங்கோதம் போலே பிறமெங்கும் தான்காவல்
களித்து விளையாடும் காயாம்பு மேனியனை
ஆதரித்து வரவிடஒரு உற்றதுணையுங் காணேன்
தேவுலகு மிவ்வுலகும் சேடன்தன் பேருலகும்
மூவுலகு மாகிய முகிழ்த்தத்தில் தோற்றியநீ
பாதகன் பின்பிறந்த பாவி[1]வயிற் றன்றியொரு
பேதை[2] வயிற்றில் பிறந்திலையே யென்றுசொல்லி
கான்சிறையில் நொந்து கலங்கினள் தேவகியும்
வான்சிறையில் பட்ட வசுதேவர்க் கவ்வளவில்
கால்விலங்கு விட்டுக் கதவெழுந்தான் திறந்து
பால்விலங்கு செஞ்சொல்லோர் பல்லாண் டொலிமிகுந்து
தீபங்க ளன்றிச் செறியு மிருளகன்று
தூப[3] மெழுந்து சொரிபூமழை மிகுத்த
இந்திரற்கு மெய்தாத யின்பமுண்டாய் நிற்கையிலே
அந்தரத்தில் வயவசுதங்கு நின்றங் கேதுசொல்வாள்
கம்பமதக் களிற்றுய் காசினியை உண்டுமிழ்ந்த
செம்பவள வாயாரை தேவகியார் பெற்றிருந்தாள்
கொற்றவனே அந்தக் கொடி யொன்றிபரமுன்
சிற்றடியை எங்கணும் சேமஞ்செய் யோமென்ருன்
மாராயங் கேட்ட வசுதேவன் தானிருந்த
காராக்கிரகம்[4] விட்டுக் காதலியைச் சென்றுகண்டு
மைந்தன்தனை எடுத்து மாரோடுந் தோளோடும்
முந்திய கண்ணோடு முகத்தோடு மோர்ந்துகொண்டு
பாகமுடன் கார்மேனிப் பங்கயப் பூங்கண்ணனை
நேசமுடன் பார்த்து நிமைக் கொட்டாதே[5]யிருந்தான்
பஞ்சவனக் கிளிபோல பார்த்து மனமகிழ்ந்து
கொஞ்சி முகம்பார்க்கும் குழந்தையைக் கண்டிரங்கி

---

1. பாதகன் பின்பிறந்தபாவி – கஞ்சனின் பின்பிறந்த தேவகி.
2. பேதை – அறியாமையுடைய பெண். 3. தூபம் – மணப்புகை.
4. காராக்கிரகம் – சிறை. 5. நிமை கொட்டாது – இமை கொட்டாது.

மங்கையைப் பார்த்து வசுதேவனெனச் சொல்வான்
செங்கை தனிலிருந்த செங்கமலக் கண்ணனை
பார்த்த பொழுதே பகலொத்த திவ்வுறவு
கார்த்த மனிதர்கண்டு கஞ்சனுக்குச் சொல்வதுமுன்
வண்ணங் கரிய மரகதத்தில் மேனியனை
ஒண்ணுதலே நாமந்தா மொளிக்கு மிடஞ்சொல்லென்றார்
வண்டிருந்த தாமரைக் கண் வாழ்வைக்
கண்டிருந்து நெஞ்சங்[1] கனன்று[2] கருகாமல்
இக்கஞ்ச னோடே எனைப்பிறக்கக் கற்பித்த
அக்கஞ்ச னோடே யாகும் பழியென்று
தேவகியு மந்தகோன் திருமுன்னே மூர்ச்சித்து
வீழ்வதுபோல் மண்ணில் விழுந்தழுதா ளம்மானே
கொங்கை பீரோடக் குழலும் புழுதிபட
மங்கை கிடப்ப வசுதேவன் நெஞ்சழன்று
மன்றேன் குழலியிலும் மாமதலை யாவியினும்
இன்றேன் பிராணன் இலஞ்சியமோ மற்றென்று
கையில் குழந்தைதனைக் காசினியில் வைத்தருளி
மெய்யில் களைத்து விழுந்தான் வசுதேவன்
வாயு பகவானும் வந்தவரைத் தான்றேற்றி
காற்றரசன் சொல்லுவான் கஞ்சனுக்குக் காலனிவன்
மாதவங்கள் செய்தமையால் மாதவனைப் பெற்றெடுத்தீர்
போதவங்கள் செய்தமையால் பொங்கார மதிர்ந்திடுவீர்
ஆய்ப்பாடி தன்னில் யசோதை மகன்பெற்றாள்
கோபாலகன் றன்னை கொற்றவனே நீகொடுபோய்
அங்கவள் முன்போட்டு அணியிழையாள் தான்பெற்ற
மங்கைதனை யிங்குவைத்து வான்சிறையில் போயிரென்று
போனனவனும் புயல் வண்ணனை[3] நோக்கி
மானார் விழியார்[4] மகிழ்ந்தருளிக் கைகொடுக்க

---

1. கனன்று - கோபித்து. 2. நெஞ்சழன்று - மனம் வருந்தி. 3. புயல் வண்ணன் - மேகவண்ணனாகிய கண்ணன். 4. மானார் விழியார் - மான்போன்ற விழியினையுடைய மடவார்.

செல்லரிய வீதிகளுந் தேர்வீதியுங் கடந்து
மல்லருறையு மடவாசல் தான் வந்தான்
மங்குலே சூழ்ந்து வருந்தி நூறுயிரவர்
கிங்கிலியர் சாத்துங் கிளர்கதவைச் சென்றுகண்டு
நின்றே கலிக்குஞ்சி உதைத்தா னுதைத்தலுமே
அக்கதவு நீங்கி அடிப்பறித்த தம்மானே
கபாடந்[1] திறக்கத் தன்காலால் உதைக்கவல்ல
குமரன் தனைக்கொண்டு கோமதுரை விட்டகன்று
வல்லிருளில் வஞ்சுரத்தில் மாயோன்றனை யேந்தி
சொல்லானிய முனையைக் கண்டுதிகைத்து நின்றான்
கண்டங்கிய முனையும் கண்ணனென்று தானறிந்து
மண்டுநீர் வற்றி வழிக் கொடுத்த தம்மானே
ஆறுங் கடந்து அவர்போற வேளையதே
சீறுநதி மாகாளி சீயநதி உள்ளறிந்து
நன்காணிக்கை யாக நாவல்கனி யளித்து
பொன்கால் வணங்கிப் புகழ்ந்து நின்றாளம்மானை
வேண்டி யமுது செய்து[2] வித்தகனு மவ்விரதம்
ஆண்டுதோறும் நின்போலாமென் றருள் புரிந்து
மாத்திரை தன்னில் வசுதேவன் மைந்தனொடும்
போய்த் திருவாய்ப்பாடி புக்கனர் காணம்மானை
தானந்த வல்லிருளில் தன்கைக் குழந்தையொடும்
கோனந்த கோன்மனையில் கொண்டு புக்கானம்மானே
ஆருந்துயில் அசோதையார் பெண் பெற்று
சீருந்தி நொந்து தியக்கமுற்ற வேளையதே
தாயவனை முன்கிடத்திச் சுந்தரியைக் கைக்கொண்டு
ஆயமனைத் தேவர்க் கடைக்கல மென்றேதொழுது
பொழுது விடிவதுமுன் பொன்னகரியுட் புகுந்து
ஏந்து குழந்தைதனை இல்லாட்டிக்[3] கைகொடுத்து
உள்ளபடி சொல்லி உரைத்தவனைத் தான்தேற்றி

---

1. கபாடம் – கதவு. 2. அமுது செய்து – உணவருந்தி.
3. இல்லாட்டி – மனையரசி.

வள்ளல் வசுதேவன் வன்சிறையில் போயிருந்தான்
அப்போ அவன்தன்னை ஆய்ப்பாடி தன்னில்வைத்து
எப்போ வருவானெனப் பார்த்திருப்பவர் போல்
விழிதுயிலும் பேர்களெல்லாம் மெய்யுறக்கந் தானீங்கி
போது விடிந்து[1] புறப்பட்டான் வெய்யோனும்
உளக்காவல் பேருணர்ந்து உன்தங்கை தேவகியார்
புடகாதம் வேளையதே பெண்பெற்றா ளென்றுசொன்னார்
என்றுவந்து சொல்ல யெரிவேடர் பட்டர்போல்
சென்றுகண்டு கஞ்சனந்தச் சிற்றடியைத் தானெடுத்தான்
திண்டோள் மார்பும் திகைத்து மனமிளைத்து
ஒண்டொடியைத் தானெடுக்க வொண்ணாதே யிளைந்தான்
ஆனையைப் பற்றாயிரத்தின் சத்துவத்தான்
தானை[2]யைக் கண்டு தந்தையுந்தான் சிரித்து
ஏற்றங்கனங் குலைந்து யெத்தனையும் நொய்தானாள்
சீற்றமுட னெடுத்துச் சென்று வலுத்தானோடே
பொன்னடியைப் பற்றிப் புடைத்தவனைப் பொற்கொடியும்
தன்னடியாலே வுதைத்துத் தானந்திரத்தில்[3] நின்று
அக்கஞ்சனையும் பார்த்து அந்தரியு[4] மேதுசொல்வான்
புக்கஞ்சனே வண்ணன் போயாயர் பாடியில் வளர்ந்தான்
உன்னுயிரை உண்ண வுகந்திருந்தா னெங்கோமான்
என்னுயிரை உண்ண எளிதோ உனக்கென்று
ஆகாசம் நோக்கி அளித்துக்கை போனபின்பு
ஏகாசனத்தே யிடருற்று வீற்றிருந்து
நெஞ்சங் கனன்று நினையா தெல்லாம்நினைந்து
கஞ்சன் மனது கலங்கினன் காணம்மானை
அன்னவன் தானிருப்ப ஆய்ப்பாடி யென்னுகின்ற
பொன்னகரி வண்மை புகலக்கே ளம்மானை
அண்ணல் நந்தகோனுக் கசோதை தானு

---

1. போது விடிந்து – பொழுது விடிந்து. 2. தானை – சேனை. 3. அந்தரம் - ஆகாயம். 4. அந்தரி – வானத்தில் உள்ள பெண்.

கண்ணனைப் பெற்றாளென்று கண்டு
களிப்பெய்தினர்காணம்மானே
கூத்தாடுவார் கொடுப்பார் கொள்வார் மனமிடுவார்
ஏற்றும் பனிநீரும்[1] எண்ணெயும் தானிரைப்பார்
தோற்றித் திரிந்து துரத்திப் பிடித்திடுவார்
சுண்ணப் பொடி[2]யிரைப்பார் சோபனங்கள் கூறிடுவார்
வண்ணக் கனதனமும் வண்டோளும் பூரிப்பார்
வாழை நடுவோர் வான்கமுகு தானடுவோர்
தாழை மடலும் சரோருகமும் தூக்கிடுவார்
நற் பூவணத்தால் நடைகா வண[3]மிடுவார்
பொற் பூரண கும்பம் பூம்பாளை பூரிப்பார்
குலதே வதைகளுக்குங் குளுத்திபண்ணிக் கும்பிடுவார்
பலதேவர் கணங்களுக்கும் பால்பொங்கல் பூரிப்பார்[4]
வாய்ப்பாடி நந்தனொரு மைந்தனைப் பெற்றமையால்
ஆலந்தரு கண்ணசோதைப் பிராட்டி யுந்தான்
பாலன்பிறந்து தினம்பத்துக் கழித்த பின்பு
பொற்றாலி பூட்டிப் புதுவயிரத் தண்டையிட்டு
நிற்றார்கைகாப்பிட்டு நெற்றிக்குப் பொட்டுமிட்டு
சோதி மரகதம்போல் தோன்றும் திருமேனி
ஆதிக் கருணைவிழிக் கஞ்சனக் காப்புமிட்டு
சீரிட்ட சொல்லாள் ஸ்ரீகிருஷ்ணா யென்று
பேரிட் டழைத்துப் பிரியமுற்றா ரம்மானை
அஞ்சன மேனியனை அன்னாள் அசோதையென்பாள்
மஞ்சன மாட்டி[5] மணிக்கொங்கை பாலூட்டி
நாரார்ந்த தொட்டிலிலே நம்பிதனை வளர்த்தி
தாரடந்த பூங்குழலாள் தாலாட்டிச் சொல்வதனை
ஒண்டலத்து[6] வேந்தர் முனிவர்களும் தேவர்களும்
கண்டகற்று நெஞ்சங் களிகூர்ந்து கட்டுரைப்பார்

1. பனிநீர் – குளிர் நீர். 2. சுண்ணப்பொடி – வண்ணமுடைய மணப்பொடி. 3. காவணம் – பந்தல். 4. பூரிப்பார் – செய்வார். 5. மஞ்சனமாட்டி – நீராட்டி. 6. ஒண்டலத்து – ஒளிமிக்க பூவுலகில்.

நால்வேதமும் பொழிந்து நம்மையு மாளுடையோன்
பால்வேலை மாளிகையும் பாம்பணையும் விட்டுவந்து
சேற்று முலகுண்டு தெவிட்டாத பொன்னுந்தி
முற்று மசோதை முலைப்பாலிலே தெகிட்டி
அஞ்சனக் கண்பிசைந்து ஆட்டினர் தொட்டிலிலே
பஞ்சணை மெத்தைதனில் பள்ளிகொள்கைப் பாருமென்று
பூமழை பெய்தார் போயினர்கா ணம்மானை
தாமனுமாய்ப் பாடியிலே வந்தனளன்று முதல்
மாதமும் மாரி மறவாமலே பொழியும்
ஆனிரையும் வேண்டளவும் பால் சுரக்கும்
தாழ்வற் றிடர்அற்று நம்மிக லாரற்று[1]
வாழ்வுற்றுச் சிந்தை மகிழ்ந்திருந்தா ரம்மானை
அக்கண் ணசோதை அணிமுலையில் பாலதனை
சங்கில் கறந்து தலத்திடை வைத்தருளி
பச்சைத் திருமேனிப் பங்கயப் பூங்கண்ணனை
அச்சமுற வுருக்கி அங்கையால் தானெடுத்து
காலிடை வைத்துக் கதுப்பிலத் தெரித்தருளி
பாலடை வாயில் வைத்துப் பாலளித்தாளம்மானே
செய்ய மகன்[2] பிறந்து திங்களிரண் டானபின்பு
அய்யமுது ஊட்டி அணிமுத்தமே கொடுபோய்
மஞ்சன மாட்டி மகன்வாயில் தன்விரலை
நஞ்செனக் கண்மடவார் நாவழிக்க நீட்டிடவே
உந்தியி னுள்ளே உலகமு மாழ்கடலும்
சந்திரருஞ் சூரியருந் தாரகையுந் தானியங்க
கண்டு இமைப்புற்றுக் கண்விழித்துப் பார்ப்பளவில்
மீண்டு விரலுக்கு வெளியற்ற தம்மானை
அய்ய மிகவாய் அயிர்ப்புற் றசோதையுந்தான்
செய்ய மகவுக்குத் திருமுலையில் பாலூட்டி
காது பெருக்கிக் கனகக் குணுக்கு[3] மிட்டு

1. இகலார் - பகைவர்கள். 2. செய்யமகன் - சிவந்த மகன்,
8. கனகக் குணுக்கும் - பொன்னலான கடுக்கன்,

போது கணைக்காலில் பொற்சதங்கை பூரித்து
தண்டை செறிந்த தமனியத்தின்[1] காப்புமிட்டு
வெண்டையம் பூட்டி வெள்ளியரை ஞாண்[2] பூட்டி
வீரான செந்துகிலும் வெண்முத்து மாலைகளும்
மாருடிக் கட்டி வளர்த்தாள் காணம்மானே
மும்மாதந் தன்னில் முழுங்கூட்டித் தன்மகனை
கைமலர்க் கொண்டு காலைநிற் பளவில்
அந்தப் பதமிரண்டும் ஆதித்தன் மண்டலத்தே[3]
உந்தி யொதுங்கி உதைத்துவிளை யாடினன்காண்
அய்யமுது வாற்றி அணியாடையில் கிடத்தி
வையம் வளர வளர்ந்தான் காணம்மானே
நாலாறு மாத்தையிலே நம்பிதனை நீராட்டி
சேலான கண்[4] கொண்டு செல்வர்தனைப் பார்ப்பளவில்
செந்தாமரை யுந்திருவுந் திரு மார்பும்
சந்தாப மன்றினிலே தான் கண்டாளம்மானை
காட்டிக் கறந்த கறுமணக்கப் பாலமிழ்தம்
மூட்டித் திருநுதலில் ஒள்ளிய நாமமிட்டுச்
சூட்டிக் கலனணிந்து சுண்ணப்பொடி திமிர்ந்து
கட்டிய தொட்டியிலே கண்துயிலப் பொட்டுவைத்தாள்
கொண்ட[5] லனையவனைக் கோபாலன் மங்கையர்கள்
மண்டி யெடுப்பார் மணிமுலையில் சேர்த்திடுவார்
மோந்து கொள்வார் முத்தங்கொண் டுளமகிழ்வார்
வாய்ந்த குதலை மழலைச்சொல் கேட்டிடுவார்
அச்சம் விளைப்பார் அதட்டுவா ரஞ்சலென்பார்
நித்தமிது தொழிலாய் நீங்கார் காணம்மானை
காரஞ்சு மேனி[6] கமலக்கண்ணன் பிறந்து
ஓரஞ்சு மாதம் உதித்தது காணம்மானை

---

1. தமனியம் – பொன். 2. அரைஞாண் – இடுப்புக் கயிறு. 3. ஆதித்தன் மண்டலத்து – சூரிய மண்டலத்தே. 4. சேலான கண் – கெண்டைமீன்போன்ற கண் 5. கொண்டல்–மேகம். 6. காரஞ்சுமேனி – மேகம் அஞ்சும் உடல்.

அஞ்சனக் கண்ணனும் ஆய்ப்பாடி யிலிருக்க
கஞ்சன் நிலைமைதனைக் கட்டுரைப் போரம்[1] மானை
மாறுடைய கஞ்சன் வரவிட்ட ஒற்றர்கள்
ஆறடவி[2] தான்கடந்து ஆய்ப்பாடி போய்புகுந்து
திக்கெங்குந் தேடித் தெருத்தெருவெல்லாந் தேடி
மிக்கங்கே உண்டான வீடுகளுந் தான்தேடி
வந்த நந்தகோனுடைய வாசலிலே நிற்பளவில்
இந்தெனும் வாணுதலாள் ஏந்திவந்தாள் பாலகனை
கண்டாள் விழிகளிப்பக் கஞ்சமலர்க்[3] கண்ணனை
வண்டார் மற்றேவகிதன் மைந்தனென வறிந்து
பொய்யுற வாடிப் புனிதனை ஊக்கத் தவத்து
அய்யுற வென்றே அகன்றனர் காணம்மானை
காற்று போலோடி வந்து கஞ்சனுக்குக் கட்டுரைப்பார்
வேற்றுப் பகையில்லாத வேந்தனே கேட்டருளாய்
சென்றுகண்டோம் பாடியிலே[4] தேவகிதன் புத்திரனை
குன்று கண்ட தோள்மதலைக் கோலந்தனைக் கேட்கில்
விண்ணவா யெழுந்தகரு மேகமே ஒத்திடுங்காண்
கண்வாய் முகங் கரங் கால் கஞ்சமல ரொத்திடுங்காண்
செங்கண் ணெடுமால் திருவிளையாட் டொத்திடுங்காண்
வெங்கண் மதகளிற்ருய் வேறல்லவென் றுரைத்தார்
சொல்லிய பயன் விளைத்த தூதரையுந் தான்போக்கி
சல்லிய கஞ்சன் சலித்திருந் தானம்மானை
அனனவனை நோக்கி யமத்தியனு மேதுரைப்பான்
உன்னுமுல கேழும் உம்பரும்[5] வந்தாலும்
வெல்லு மிடுக்குடைய வேந்தே மனம்சிலிப்பு
சொல்லுமென அவனும் சொல்லலுற் ருரம்மானை
என்தங்கை பிள்ளையொன்று யெம்மையெல்லாம் கைகடந்து
நந்தனிடை ஊரன்என தூதர்கண்டு வந்தான்

---

1. கட்டுரைப்போர் – கூறுவார்கள். 2. ஆறடவி – ஆறும், காடும். 3. கஞ்ச மலர் – தாமரை மலர். 4. பாடி – பாசறை 5. உம்பரும் – தேவரும்.

இந்திரனை முனனாளி யானாய்ப் பாடியிலே
சிந்துரத்[1] தோடும் சிதையப் பிடித்தருளி
பங்கப் படுத்தையிலே பங்கயத்தோன் தான்கண்டு
வெங்களிற் றோடும் விடுவிற் றெனைப்பார்த்து
இவ்வார மன்றியினி யொருனாளிங்கு வந்தால்
சாவா யெனவே சபித்தான் சதுர்மறையோன்[2]
பார்ப்பான் சபித்ததினால் பாடியில்நான் போகறியேன்
கோபாலகன் றன்னை கொல்லவழி சொல்லுமென்றான்
உற்றமனை நோக்கி யுரத்தியனா மேதுசொல்வான்
கொற்றவனே கேளாய் கொடியபேய் பெண்ணொருத்தி
வேதனையுங் கொல்வாள் இளமுலையிற் பாலூட்டி
பூதனை யென்பவளைப் போகவிடாய் என்றுசொன்னான்
இப்போ தழையுமெனக் கஞ்சன் ஏவலுமே
அப்போதவளை அழைத்து வந்தா ரம்மானே
பூதனையும் வந்தவளைப் போற்றி யுகந்துநின்று
ஏதெனையிங் கழைத்தாய் யெங்கோவே என்றுரைத்தாள்
ஆடைகொடுத்து அழகுபணி[3] தான் கொடுத்து
வேடை கெடவே வெறிமதுவை மூட்டிவிட்டு
மாபாலனாக[4] வேந்தன் மாற்றான் வளர்கின்றான்
கோபாலர் பாடியில்போய்க் கொண்டுதர நீயவனை
என்னத்தான் கோபித்தெரி விழித்து யென்சொலுவான்
அன்னற் றானல்ல அயிராணி கேள்வ னல்ல
காலனே யல்ல கதிராழி[5] மாயனல்ல
எங்களைக் கொல்லப் பணித்தா யெனவெகுண்டாள்
எண்ணியவ ரல்ல இடைநந்த கோமகனும்
கண்ணிய பூங்குழலே காலனுக்குக் காலனொப்பான்
கொங்கையில் பாலூட்டி கொன்றுதர வேணுமென்று
பொங்கிய நல்லிருளில் போகவிட்டா ரம்மானை

1. சிந்துரம் - யானை. 2. சதுர்மறையோன் - நான்கு வேதங்களை யுடைய பிரமன். 3. அழகுபணி - அழகிய ஆடை ஆபரணங்கள். 4. மாபாலனாக - இளஞ்சிறுவனாக 5. கதிராழி - ஒளிமிக்க சக்கராயுதம்

முன்னை யுருதனிலும் மும்மடங்கு வேசமுமாய்
மன்னை [1] வணங்கி வழிகொண்டா ளம்மானே
வாரியி லற்றென்றில் கருநஞ்சு போல்கொடிய
மூரி விஷத்தை [2] முலையிலே தானடைத்து
காயாமலர் மேனிக் கண்ணனைக் கொல்லவென்று
போயாயர்ப்பாடி யிலே புக்காள் காணம்மானே
மானிடப் பெண்போல வடிவையுந் தான்கொண்டு
இந்தநந்த கோனுடைய வாசல்குறுகினள் காணம்மானை
பொங்கு மிருள்வழியே பூதனையாள் வருவதனை
செங்கமலக் கண்ணன் திருவுளத்திலே யறிந்து
தாத தந்தைதாய் நித்திரையுந் தானறிந்து
தூங்கு விளக்குஞ் சுடரும் திரியணைத்து
கை வாசல் கபாடமுந் தான்திறந்து
அய்யுற வென்றே யவள்வரவு பார்த்திருந்தார்
போய்தட்டு நெஞ்சுடைய பூதனையும் போய்ப்புகுந்து
கைதட்டிக் கைமலத்திக் [3] கற்பகமே வாருமென்ருள்
பண்டைப் பழக்கம்போல் பாலனெழப் பாய்ந்து
தண்டைப் பதத்தாலே தனங்குறங் கைத்தான்முறுக்கி
செஞ்சதங்கை தன்னை நரம்பிற் ருன்பாய்ச்சி
வஞ்சமுலையை வலக்கையால் தான் மடித்து
மற்றக் கரத்தால் மறுமுலையைத் தான்பிசைந்து
கொற்றக் கண்ணுலே குறுவிழியைத் தான்பார்த்து
பச்சை நிறத்தான் பசாசுமகள் [4] தன்னுடைய
நச்சு முலையதனை நாவினிலே யழுத்தி
தலைகொண்டு தோள்நெருக்கித் தானந்த பேய்முலையை
உலகுண்ட வாயின [5] லுண்டான் காணம்மானே
இனிநரம்பு தோலும் எலும்பு மிருக்கையிலே
உன்னு முயிரினையும் உண்டான் காணம்மானை

---

1. மன்னை - அரசனை. 2. மூரிவிஷம் – மிகுதியான நஞ்சு.
3. கைமலத்தி – கையை விரித்து. 4. பசாசு மகள் – பேய் மகள்.
5. உலகுண்டவாயினன் - உலகை உண்ட வாயினையுடைய கண்ணன்.

பெண்வடிவு மன்றியிலே பேய்வடிவு கைகூட்டி
உண்மையழிந்து உணர் வழிந்து பூதனையும்
சிந்தை கலங்கித் தெளிவுவந் தங்கென் சொல்வாள்
எந்த யுகங்களிலும் யான் பெரியோ னென்பவரை
மண்டோதரன் தனையும் வான்பூதமாய் திரியும்
குண்டோதரன் தனையும் கொன்றேன் விஷமுலையால்
மாபாவி கஞ்சனுடை வார்த்தை தனக்காக
கோபாலன்[1] மைந்தனென்னும் கூற்றுவன்[2] கைப்
பட்டழிந்தேன்
யீதென் விதிவசமோ ஏதென்று பாலகன்றன்
வாயில் முலைபறிக்க மாட்டாள் வசமழிந்தாள்
பொய்முலையை விட்டுப் பிரானும் தவழ்ந்துசென்று
தாய்முலையை வாயில் வைத்துத் தான்துயின்றானம்மானை
வம்பே கடலுடைந்து மானம் வெடித்ததென
வெண்பேய் அறிவிழந்து வீழ்ந்ததுகா ணம்மானே
பூதனை வாய்பிளந்து போகின்ற வானலை
வேதனும்[3] வானோரும் விண்ணில் நின்றுகண்டருளி
தாயாய் முலைகொடுத்துத் தாமனல் மாய்ந்ததென்று
பேயான துக்குப் பெரும்பதவி யீந்தனர்காண்
அவ்வாறு கண்டங் கசோதை துயிலெழவே
செவ்வாய் மதலை சிறுகுரலால் விம்மலுற்றான்
அண்ணலழக்[4] கண்டங் கசோதை கண்விழித்துத்
துண்ணென் றெழுந்து சுற்றெங்கும் பார்ப்பளவில்
வாசல் புறத்தே மலைபோல் கிடக்கின்ற
பேயைத் தெரிசித்துப் பேச்சடங்கி மூச்சடங்கி
அங்கோ ரிருப்பாழி அண்ணல்கையில் பாவித்து
தங்கோன் தனையெழுப்பித் தானுரைத்தா ரம்மானை
ஆவென் றலரி அசோதையும் நந்தனுமாய்
கோவென்ற சத்தத்தில் கோபால ரோடிவந்து

1. கோபாலன் – இடையன். 2. கூற்றுவன் – இயமன்.
3. வேதனும் – பிரமனும் 4. அண்ணல் – பெருமை மிக்கோன்

ஈண்டவே[1] வந்தங் கெழில்நந்தன் வாசல்புக்கும்
மாண்டபேய் தன்னை மலைபோலக் கண்டார்கள்
கண்ட விழியைக் கரங்களால் தான்புதைத்து
மண்டி விழுந்து வனம்புகுந்தா ரம்மானை
போது விடிந்து பொழுது யுதித்தபின்பு
தீதுபயில் பேயும் செற்றபடி யுள்ளறிந்து
நந்த னழைக்க நல்லார்கள் வந்துகண்டு
சிந்தை மயக்கம்[2] தெளிந்துநின்றா ரம்மானை
அண்டியிடைப் பேயான வெல்லாம் அப்புத்தியுடலை
துண்டித்துக் கூர்மழுவால் சூலவண்டில் மேல்போட்டு
தனதான விழுக்காடு தான்சுமந்து போய்ப்போட்டு
வந்தார் முழுகு மனைகளிலே யம்மானை
அங்கண் ணுடைய அசோதையுந் தன்மனையை
எங்கு மெழுகுவித்து எத்திசையும் தூபமிட்டு[3]
நம்பி கிருஷ்ணனை நன்மஞ்சன மாட்டி
அம்புயக்[4] கண்ணனுக்கு ஆலாத்தி தானெடுத்து
வேலிடைக் கண்ணினாள் வெண்பாலில் நெய்கலந்து
பாலடை கொண்டு பரிந்தமுதந் தானூட்டி
இன்ப மகனோ டிருந்தா ளசோதையென்பாள்
துன்பமனக் கஞ்சன் தோற்ற கேளம்மானை
சோதனைக் கஞ்சனுட தூதரைக் கடிந்தோடி
பூதனையாள் பாடுதன்னை போயுரைத்தா ரம்மானை
ஆலமெனும்[5] நஞ்சு அமுதாய்ச் செரித்தமையால்
மேலிவனை யாராலும் வெல்லவொண்ணா தென்றுசொல்லி
கன்றிச் சலித்திருந்த கஞ்சனைத் தான்கண்டு
வென்றிச் சகடன் விளம்பலுற் றானம்மானை
எந்த யுகங்களிலும் யான்பெரியோ னென்பவரை
சிந்தை பொருது சிதைய மிடுக்குடையான்

1. ஈண்ட – குழும. 2. சிந்தைமயக்கம் – மனமயக்கம். 3. தூபமிட்டு – மணப்புகையிட்டு. 4. அம்புயம் – தாமரை. 5. ஆலம் – ஆலகால நஞ்சு.

யானு மிருக்கையிலே யேங்கவே நீயுமிங்கு
தானுமனம் சலிக்கத் தக்கதோ வென்றுரைத்தான்
வெள்ளெயிற்றான் சொல்ல விற்கஞ்ச னேதுரைப்பான்
கள்ளவிழி விழித்துக் குழந்தைபோல் வடிவாய்
என்னுடைய மாற்றான்[1] எழிலாயர்ப் பாடியிலே
மன்னுடைய மைந்தன் மகனாய் வளருகின்றான்
கொற்றவனே நீயவனைக் கொன்று தருவாயாகில்
உற்றவுதவி யுனையல்லா லில்லை யென்றான்
மன்றாடிப் பாலகனோ மாறாச் செனக்கென்று
சென்றான் சகடுருவாய் தீதான வல்லசுரன்
பண்டு நான் கொண்டா பட்டநினைந்தன்னை
உண்டு தான் தேவிட்டுயருநின் போசனென
கோபாலர் மெய்யில் கொழுப்பெல்லா முண்டிடுவை
நீபாலனாகிய நாள் நீங்கிப்போய் அப்போது
அந்தநாள் தன்னில் அசோதை திருமகனும்
தந்தைதாய் காணத் தவழ்ந்து விளையாடல்செய்து
சப்பாணி கொட்டியுஞ்[2] சாஞ்சாடல் தான்பயின்று
ஒப்பாரி காட்டியும் ஒண்டோளை வீசித்தும்
முத்தம் கொடுத்தும் விழியால் மிரட்டுவித்தும்
அந்தமங்கை காட்டியும் அம்புலியை[3] வாவென்றும்
சங்கை யுடனே தவழ்ந்து திருமகளை
மங்கை யசோதை மகிழ்ந்தெடுத்தங் கேதுசொல்வாள்
எல்லா மறிவ னிவனறியா தொன்றுமில்லை
நல்லார்க்கு நல்லான் நலிந்தார்தனைச் செயிப்பன்
என்மகனே யென்று எடுத்தணைத்து மோந்துகொண்டு
தன்மகனை வாழ்த்தித் தலத்திடையே வைப்பளவில்
செங்கமலக் கண்ணன் தெருவில் தவழ்ந்துசென்று
அங்கம் புழுதிபட அம்மணலைத் தான்குவித்து
மற்றுந்தன் தந்தையரை வாட்டியும் வாட்டுண்டும்

1. மாற்றான் – பகைவன். 2. சப்பாணி கொட்டி – கைதட்டி ஆடல்.
3. அம்புலி – நிலவு.

சுற்றும்விழி பார்த்தும் தோகையரை[1] கண்ணிட்டும்
ஒத்த மதலையரை ஓணகாற்று வீடுசெய்தும்
வித்தகனும்[2] தானும் விளையாடி யேதுசெய்தான்
கோதனன் பெற்ற குரிசில்தனை மேல்விழுந்து
காதினைப் பற்றிக் கடித்தறுத்தா ரம்மானை
அப்பிள்ளை தாய்போய் யசோதைக்கு சொல்பளவில்
வெப்பிள்ள மாகமிலா னுடிக்கத் தான்கண்டு
அஞ்சி வெருவி யலமந்து நீர்ப்பெய்து
கொஞ்சி யழுது குறுகுறென் றுன்விழித்தான்
பந்தி யசோதைப் பயமுறுத்திப் போனபின்பு
குந்தித் தவழ்ந்து கிஷ்ணனு மேதுசெய்தான்
வாதிக்க வல்லசுரர் வாராரென வறிந்து
வீதிக்கே யெய்தி விளையாடல் செய்யலுற்றான்
அன்னவன் தானிருந்த அவ்வூர்தனை நோக்கி
மின்னு மியற்றரக்கன் மிக்க சகடுருவாய்[3]
நேருருண்டு வந்தான் நிணபோ சனனுடனே
காரிருள் மெய்யோன் கடைக்கண்ணால் கண்டிருந்தான்
நாம்தேடி வந்தபொருள் நன்கே நேர்ந்ததென்று
தேனந் தோடலங்கல் ஸ்ரீகிருஷ்ண னிருந்தான்
வட்டார மெல்லாம் வளைந்து சேறுமளைந்து[4]
விட்டான் சகடுதனில் வெண்சகடை யம்மானை
தாக்கினர் நெஞ்சுதனில் தாமனும்[5] தன்பதத்தில்
தூக்கினன் வல்லசுரன் தோக்கெழுந் தாரம்மானை
உதைத்தான் சிறுவன் உதைத்தலுமே உள்ளுயிர்போய்
பதைத்தா ரசுரர் பருமலைகள் போல்கிடந்தார்
தாமன் சகடுதைக்க தன்விசும்பில் வானோர்கள்
பூமழை பெய்து புகழ்ந்து கண்டா ரம்மானை
பெம்மான்[6] தவழ்ந்துசென்று பிள்ளையோ டங்கிருந்து

---

1. தோகையரை – பெண்களை. 2. வித்தகன் – பெரியோன். 3. சகடுஉருவாய் – சக்கரத்தின் வடிவெடுத்து. 4. சேறுமளைந்து – சேருடி. 5. தாமன் – மாலையணிந்த திருமால். 6. பெம்மான் – பெருமை மிக்கவன்.

வெம்மா மண்குவித்து விளையாடி வீற்றிருந்தான்
நின்ற சகடன் நினைபோ சனனுடனே
மாண்டு கிடப்பதனை மன்றாடிப் பெண்கள் கண்டு
சென்றங் கசோதை திருமுன்னே சொல்லளவில்
மன்றுங் குழலாள் வயரெறித் தங்கோடிச்சென்று
பாலன்தனை யெடுத்துப் பட்டவனைத் தான்பார்த்து
வாள்விழி துப்பவள வாய்ச்சியரைப் பார்த்துரைப்பாள்
பேழ்ந்த வாய்[1] பேய்க்குப் பிழைத்தோமே யென்றிருந்தேன்
சூழ்ந்தசுரர் தாமும் துடங்கித் துடித்தனராய்
எவ்வகை உய்வோம் என்மனையில் கொண்டுசென்று
செவ்வகையான் செழும்பவள வாயனுக்கு
காப்பணி வித்து கனபலியுந்தான் சுற்றி
வேப்பிலை கொண்டு மிகுபுகையுந் தான்காட்டி
காடுகளுக்கு கனதுணங்கை நா நெறிந்து
நீடுமகன் தன்னை நீங்காமல் வைத்திருந்தாள்
மேனியிருஞ் செங்குஞ்சி[2] வெள்ளெயிற்றார் பட்டதனை
கோனிறையின் பின்போன கோபாலர் வந்துகண்டு
தம்மில் தலையசைத்து தம்விரலை மூக்கில்வைத்து[3]
நம்மில் தவமுடைய நந்தனே யென்றுரைத்து
கோளுநதி நந்தன்மகன் கொல்லக் கடவனென்று
நாளும்சுமக்க நமக்குக் கடன் என்று
கொட்டு மழுவும் கொடுவாளுங் கொண்டுசென்று
வெட்டிச் சுமத்தலுற்று வேசற்றார்[4] கோபாலர்
வாட்டமறச் சுமந்து வண்டிலிவிட் டெல்லைவிட்டு
போட்டுமெழுகி மனைபுக்கார் காணம் மானை
அண்ணல் விடுத்த சகடன்பட்டா னென்றுசென்று
சொன்னார்கள் கஞ்சனுக்குச் சோகமுற் றாரம்மானை
மத்தனுடனே மகாமத்த னென் றிருவர்
மெத்தவுரை சொல்லி வேந்தனை வந்துகண்டு

1. பேழ்ந்தவாய் – பிளர்தவாய். 2. செங்குஞ்சி – செம்மயிர்.
3. தம்விரலை மூக்கில்வைத்து – மூக்கில் சுட்டுவிரல் சேர்த்து அதிசயித்தல்.
4. வேசற்றார் – துன்புற்றார்.

மன்னவர்க்கு மன்னவனே வாட்டமுனக் கேதெனவே
சொன்னவர்க்குக் கஞ்சனேது சொல்லினன்கா ணம்மானை
உம்பர்கோன் மேலே உமையவ னென்றிருந்தேன்
எம்பரித கஞ்சன் இடைநந்த கோன்மகனை
வென்று இன்று தாருமென மிக்கவருஞ் சம்மதித்து
நன்றென்று சொல்லி நடந்தார்கா ணம்மானை
ஆயர் பாடியில்போய் யசோதை மனையருகே
வாயில்பா[1] லிரண்டு மருதுநிற்கக் கண்டார்கள்
அம்மருதைக் கிண்டி அலைகடலில் போகெறிந்து
பொய்மருதாய்[2] தாங்கள் புகுந்து நின்றாரம்மானை
அங்கேயவர்கள் நிற்க அன்னையசோதை பெற்ற
எங்கோன் கிருஷ்ணன் காண்பேது செய்தானம்மானை
பாரெல்லாம் கண்டு பசிதீர உந்திக்கு
வாருலவுங் கொங்கையில்பால் வார்க்கும்பால் போதாமல்
சாடியில் பாலும் தயிர்த்திளையும் குடித்து
நீடிய வெண்ணைகளும் நெய்களையும் தான்விழுங்கி
அம்மனையி லுள்ளதுவும் அவ்வூரி லாய்ச்சியர்கள்
தம்மனையி லுள்ளதுவும் தவழ்ந்துபோய் தான்விழுங்கி
பங்கயக் கையால்[3] பவளவாயைத் துடைத்து
செங்கமலக் கண்ணாரைத் தீமை பலசெய்தும்
சந்திறைப் பிள்ளைகளைச் சண்டையிட்டுத் தான்தகைந்து
அந்திச் சிறுகாலம் அதுதொழிலாய்க் கைக்கொண்டான்
எங்கெங்கும் போன யிடைச்சியர்க ளெல்லாரும்
தங்கள்மனை புகுந்தும் தாமவரைக் கோபித்தும்
உற்ற பால்காணார் உறியில்வெண்ணெய் நெய்காணார்
சற்றுமந்தத் தயிருதனைச் சாடிகளில் தான்காணார்
வந்தாரிங் காரெனவே மக்களையுந் தான்முனிய
இந்துசிலை மொழியா ரெல்லாரு மென்மொழியாய்
நீருவருது முன்னீங்க ளங்குப் போனதற்பின்

---

1. வாயில் – வீட்டின் முன் பகுதி. 2. பொய்மருது – பொய்யாகிய மருதமரம். 3. பங்கயக்கை – தாமரை போலும் கை.

ஆரும் புகுந்ததில்லை அன்னியரும் வந்தறியார்
சங்கை யசோதை தனையன்மகன் வந்துவந்து
எங்கேயும் பாங்கழித்து யேகினுரென்று சொன்னர்
என்ன வெகுண்டங் கிடைச்சிய ரெல்லாங்கூடி
அன்ன நடையாள் அசோதை யிடைக்கே[1] சென்று
நங்கா யுன்மைந்தனுல் நாங்கள்குடி போனோம்
எங்கள் தயிர்பால் நெய்யிருக்க வொட்டானென்று
சொன்னவரை யெல்லா மசோதை துடந்துவைது
என்னகத்தில்[2] வெண்ணெய் தயிரில்லாமல் வந்தானே
வில்லாள் நுதலாரும் விடுகளிற் றூன்போனர்
எல்லாக் களவுக்கு மென்மகனே நண்பனென்று
பண்ணேறு சொல்லாள்[3] பருத்திவிதை வேப்பிலையும்
கண்ணேறு[4] சுற்றிக் கனவிலேதான் போட்டு
மைந்தன் தனை வைத்திருந்தார் மண்ணுடி பெண்கேள்க்கு
தந்தன் மனையில் தலத்திற் கடைக்கயிறும்
மற்றும் படைத்தும் மருளிந்த நேந்துகொண்டு
பண்ணுர்மொழி மடவார் பால்தயிரும் நெய்தனையும்
கண்ணு லொருவர்களுங் காணு தொளித்துவைத்து
தங்கள் மடந்தையரைத் தம்மனைக்கே காவல்வைத்து
பொங்கு மிருள்வழி ......... பாலெடுக்க
போவது தன்னைப் புருஷோத்தம[5] னறிந்து
மேவிய தொட்டிலிலும் மெள்ள வெழுந்திருந்து
சதங்கையுங் கிண்கிணியும் சத்தப் படுத்தாமல்
நலங்கிளர் தந்தைதாய் நாடாமல் தான்தவழ்ந்து
அன்னநகரில் ஆயர்மனை தோறும் போய்ப்புகுந்து
கன்னியரை யெல்லாம் கடும்போகம் தான்விளைத்து
பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீருக
ஆதரவாகி அவரவர்க்குத் தக்க வனுய்

---

1. அசோதை யிடைக்கே – அசோதையின் வீடு. 2. என்னகம் – எனது வீடு. 3. பண்ணேறு சொல்லாள் – பண்ணைப் பழித்த சொல்லினையுடையாள். 4. கண்ணேறு – கண்திருஷ்டி படுமென. 5. புருஷோத்தமன் – ஆடவர்களில் சிறந்தவன் (திருமால்)

பந்துகழுங் கம்மானை பாவையுந் தான்பதித்து
எந்தன் வரவுரையாய் யென்றவரை பானைகொண்டு
அங்கவரை யுள்ளாக்கி ஆய்ச்சியர்கள் பேணிவைத்த
பொங்குதயிர் பால் புதுவெண்ணெ யத்தனையும்
சேரக் குடித்துத் திரும்பிப்போய் தன்மனையில்
பாரித்த தொட்டிலிலே பள்ளிகொண் டாரம்மானை
போமாத ரெல்லாம் புகுந்துதங்கள் பொன்மனைக்கே
தாமாக வைத்த தயிர்வெண்ணெய் காணாமல்
அன்று போலின்று அசோதைமகன் வந்தானோ
என்று தங்கள் கன்னியரை ஏடிற்றுக்கேட் டளவில்
வண்ணங்கள் வேறுபட்டு மங்கையர்க ளெல்லோரும்
கண்ணனை யின்றவனைக் கண்டிலோ மென்றுசொன்னார்
அற்றைநாள் போனபின்னா ளாய்ச்சியர்க ளெல்லோரும்
சுற்றெங்கும் ஒப்பமிட்டுச் சோதித் தொளிந்திருந்தார்
அன்றுபோல் மெள்ள அரிகேச[1] வன்றானும்
சென்றவர்கள் வீடுதனில் செந்நெய் பால்தயிர்வெண்ணெய்
வாரிவிழுங்கியவர் மங்கையரைப் புல்கையிலே[2]
காரிகையார் அன்னைமார் கண்டு வெளிப்பட்டளவில்
அங்கவன்தான் கணங்கண்டு அச்சுதனு மவ்வுரிப்போய்
தங்கள் மனையில்தன் தந்தையாய்த்தான் தவழ்ந்தான்
எத்தெருவி லுள்ள யிடைச்சியர் களெல்லோரும்
தத்தம் புதல்விகளைத் தன்கண்ணாற் றான்பார்த்து
துள்ளி யெழுதனமுந் தோளும் புளகமெழக்[3]
கன்னியர்கள் நின்றதனைக் கண்டு கனல்விழித்து
காய்ச்சிய பால்வெண்ணெய் களவுகொடுக் கலுற்று
ஆய்ச்சியர்க ளெல்லாம் யசோதை யிடைக்கேசென்று
மீண்டுதயிர்பால் வெண்ணெ யெலாம் உன்மகனே
கொண்டூ ரெல்லாம் கொள்ளை கொண்டதும்போதாமல்
குதலைமொழிக் கன்னியரைக் கற்பழிக்க எண்ணியுந்தான்

---

1. அரிகேசன் – கண்ணன். 2. புல்கையிலே – அணைக்கையில்.
3. புளகமெழ – மெய்சிலிர்க்க.

புதல்வனை யிவ்வூர்க்குப் பொலியெருதாய்[1] விட்டாயோ
என்றவர் சொல்ல எழில்மகனைக் கைக்கொண்டு
நின்றவசோதை நெடிதுரைப் பாள் அம்மானை
நடைக்கற் றறியாத நாயகனை இப்போது
உடைகற்ற கன்னியரோ உடைந்தனரென் றோதுகிறீர்
மங்கையரே நீங்களெல்லாம் மக்களைப் பெற்றிலரோ
சங்கதமோ யென்றளவில் தாமன் தவழ்ந்துசென்று
தங்கள்மனையில் தரித்துரலில் நின்று கொண்டு
தூங்கு முரியைத் துறந்துவைத்துச் சுற்றி யுள்ளோர்
கண்ணையெல்லாம் பார்த்துக் கமலப்பூங் கையாலே
வெண்ணை யெல்லாம் வாரி விழுங்கினர் காணம்மானை
அவ்வாறு தன்னை யசோதையுங் கண்டுகொண்டு
செவ்வாய் மதலைதன்னை சிக்கெனத் தானபிடித்து
கன்று தும்பாலே[2] கனஉரலில் கட்டிவைத்து
மன்றத் தசோதை மணித்தாம்பு[3] தானெடுத்து
பூமாலையுஞ் சேரப் பொடிகின்ற மற்றகேசம்
தாமரை நூலில் தரிப்பட்டு நின்றாற்போல்
பயலை விழிவிழித்து பயந்து கண்ணீர்ப்பிசைந்து
செய்து மறந்து சிறுநீரும் பெய்துகொண்டு
பாந்தி யொதுங்கும் பவளவாய்ப் பிள்ளைதனை
ஏந்துகையில் தும்பாலே[4] ஏதுசொல்லி மோதுகின்றாள்
கொண்டில் புகுதேன் கோதையரைப் புல்கேனென
மிண்டுகள்[5] பேசேனென வெண்ணெய் திருடேனென
சிற்றில் சிதையேனென தீமைபல செய்யேனென
மற்றில் புகுதேனென வாசல்விட்டுப் போகேனென
என்றவள் மோத யில்லையென்று கண்ணனழ
சென்றின்று வானோர் தெரிசித்தங் கோதுரைப்பார்
வையம் பதினாலும் வாழும் பொருட்டாக
அய்ய னொதுங்கி அழுகின்றார் பாருமென்று

1. பொலிஎருது – பொலிகாளை. 2. கன்றுதும்பால் – கன்று கட்டும் கயறு. 3. மணித்தாம்பு – அழகிய கயறு. 4. தும்பு – கயறு. 5. மிண்டுகள் – கடியமொழி.

............ மதுபா லசோதைதான் மோதுகையில்
............ மோதானென்று தாமனுக்குப் பேருமிட்டு
மாயன்கட் டுண்டதனை வாரும்நாம் காணவென்று
போயவன் சேந்த புரிகுழலார் நிற்பளவில்
காவிற்குந் தாய்க்கும் குழந்தை யுருவாயிருப்பன்
பாவித்துக் கன்னியரைப் பண்டித்துக் கண்ணிடுவன்
கன்னியர்க ளெல்லோரும் காவலனுக்காய் பரிந்து
மன்னி யசோதைதனை மன்றாடும் வேளையிலே
பேருரலி னூடே புழைக்கடையில்[1] தான்தவழ்ந்து
ஆருரமர மருதா[2] யங்கு நின்ற வல்லசுரர்
திக்கெங்குங் கப்புவிட்டுச் சென்றளவுந் தான்வளர்ந்து
தக்கம் விளைக்கச் சமைந்துநின்றா ரம்மானை
அந்த உரலோ டணிமருது வேர்பறிய
தவழ்ந்து தாமோதரனும் தள்ளிநடை கொண்டு
இட்டன னங்கா ............ ............
பருபதம்[3] போல்நின்ற பனைமருதங் கோரிரண்டும்
அற்பநடைக் காற்றாம லடிபறிந்த தம்மானை
நித்த நடைபழக நீள்மருதா யங்குநின்ற
மத்தன் மகாமத்தன்[4] மாண்டனன்கா ணம்மானை
கஞ்சன் வரவிடவும் கண்ணன் செலவிடவும்
துஞ்சி யசுரர் துடங்கினர்கா ணம்மானை
நாள் மருதுசாய நடைகற்ற தன்மகனை
வாள்பொருத கண்ணாளும் வந்தெடுத்துக் கைக்கொண்டு
பட்டவரைக்[5] கண்டு பயமுற்றுக் கொண்டுசென்று
கட்டுமவிழ்த் தெறிந்து கண்மணியே யென்றெடுத்து
மஞ்சன மாட்டி மணிக்கலங்கள் தான்பூட்டி
அஞ்சனந் தீட்டி அமுதூட்டி வைத்திருந்தாள்
மாமருது சாய்ந்து வல்லசுரராய்க் கிடக்க
நோமருவுங் கோபாலர் கூடிவந்து கண்டருளி

---

1. புழக்கடை – வாயில். 2. மருதாய் - மருத மரமாய். 3. பருபதம் – பெரியமலை. 4. மத்தன், மகாமத்தன் – கண்ணனைக் கொல்லவந்த இரு அசுரர்கள். 5. பட்டவரை – இறந்து பட்டவர்கள்,

அந்தவகை கேட்டு வன்பேயும் வன்சகடும்
தந்தை மகிழ்ந்ததுவும் செல்வனே யென்றறிந்து
பெற்ற வசோதை பேராட்டி தனைத்தொழுது
கொற்றவனே யெங்கள் குலதெய்வ மென்றுசொல்லி
அப்பிணங்கள் தன்னிலிது அய்யிரட்டி போதுமென
இப்பிணமும் ஓர்வகையால் எல்லோருமாய்ச் சுமந்து
போட்டு முழுகி மனைபுக்கினர் காணம்மானை
கேட்ட விசேஷம் கெடுகஞ்ச னுள்ளறிந்து
தக்கன் மனஞ்சலித்துத் தள்ளாடு வேளையற்றே
புக்கா னவனருகே புட்கரனென் பானொருவன்
பாரைப் பிளப்போம் பணியை[1] மணி பறிப்போம்
காரைப் பிளப்போம்[2] கடலைக் குடித்திடுவோம்
போர் வேந்தே கூற்றனைய புட்கரனீங்கிருக்க
தேர்வேந்தே நீதான் திகைத்திருக்கத் தேவையென்ன
மெய்யாயர் பாடியிலே மிக்கநந்த கோன்மனைக்கே
போய்ப் பாலகிருஷ்ணனைப் பொன்றுவித்துத்[3] தந்தருளாய்
என்றனன் கஞ்சனிசைந் தருளிப் புட்கரனும்
கன்றனன் புள்ளுருவாய்க்[4] கடிதேதான் அம்மானை
வெந்திற மேற்று விரைகின்ற புட்கரனை
சந்தமதான வந்துயநதி தாகனென்ப ணம்மானை
கோபாலர் தன்னையெல்லாம் கொல்லப் பணிபெற்றே
லோபா தோனன் உடன்கொண்டு போய்ப்புகுந்தான்
போய்ப்பாடி யெல்லையிலே புட்கரனும் போமளவில்
ஆய்ப்பாடி வாழும் அசோதையுந் தன்மகனை
குஞ்சி முடித்துக் குணுகிட்டு மையுமிட்டு
கிஞ்சுக வாயனுக்குக் கிண்கிணியுந் தான்கட்டி
சின்ன மருங்கி[5]னுக்குச் சிற்றுடை தானுடுத்தி
அன்ன மருந்துவித்து அங்கையில்[6] கோல்கொடுத்து

1. பணியை – நாகப் பாம்பினை. 2. காரைப் பிளப்போம் – மேகத்தினைப் பிளந்து அழிப்போம். 3. பொன்றுவித்து – கொன்று. 4. புள்ளுருவாய் – பறவையினுருவாய். 5. மருங்கு – இடை. 6. அங்கையில் – உள்ளங்கையில்.

சென்று சிறுவருடன் சேர்ந்து சிறுகாட்டில்
கன்றுகள் மேய்த்துவரக் கற்பித்தா ளம்மானை
சங்காத்திமார்கள் கண்ணுந் தன்கண்ணுந் தானொட்டி
செங்காந்தள் கையானும் சென்றான்கா ணம்மானை
வான்புக்கான் தன்மேல் வருவதனைக் கண்டிருந்து
கான்பிறக்கக் கன்றினையும் கந்தரையும் தூரவிட்டு
தூற்றிப்பழம் பறித்துத் தூயோனும் தோன்றிநின்றான்
காற்றில் கடுகிவந்து கவ்வினான் புட்கரனும்
மாவென்று மாயன் மலைபோல் வளர்ந்திடவே
ஆவென்றான் புட்கரனும் அப்படியே யம்மானை
வளர்ந்தா னிருகரத்தால் வன்பிள்ளை வாயலகைப்[1]
பிளந்தா னிமையோர்கள் பெய்தார்கள் புஷ்பமழை
பிளவா யலகைப் பிடித்தாக்கை போல்கிழித்து
வௌவாயேமற திரதன் மேல்விட்டெறிந்தா ரம்மானை
மாண்டங் கிருவோரும் மாமலைகள் போற்கிடந்தார்
ஆண்டங் கசோதையுடன் ஆயர்களு மேதுசொல்வார்
உன்மகனை வந்து ஒருபுள்ளுத்தான் விழுங்கி
நின்மகனு மற்றை நெகிழ்ந்துகொண்டா
ரென்றுசொன்னார்
சொல்லத் தரியாள் துணுக்கென்றான் செண்டுகண்டு
செல்ல மகட்குத் தீங்கில்லை யென்றறிந்து
காயும் பழமும்கலந்து பறித்த போல்
ஆயமக்க ளெல்லோரும் அந்தியிலும்[2] சந்தியிலும்
காட்டில் திரிந்து கரைச்சலற வானார்கள்
வீட்டில் புழக்கடையில் வீதியில் ஊரருகில்
நம்மை யசுரர் நடமாட ஒட்டார்கள்
எம்மையனே நாமினித்தா னென்செய்வோ மென்றுசொல்லி
கோமனை[3] யூட்டிக் குளிப்பாட்டி வைத்திருந்தாள்
ஆமா இடையர் அசுரரை வந்து கண்டு

1. அலகை – வாயினை. 2. அந்தியிலும், சந்தியிலும் – மாலையிலும், காலையிலும். 3. கோமகனை – தலைவனாகிய கண்ணனை

உம்மைக் கொன்றானுக்கும் உங்களுக்குஞ் சீராட்டு
எம்மில் பிணம்சுமந்து வேசற்றோம் நாங்களென்று
ஏன்று நாளெல்லா மிரவுபகல் ஓயாமல்
மூன்றுநாளாய் சுமந்து முழுகிவந்தா ரம்மானை
மற்ற விசேஷம துரைக்கில் போய்பிறக்க
கேட்ட வாசுதேவன் குமாரனுக்குத் தானிரங்கி
தேவகியுந் தானும் செழுமலர் கண்ணீர்சோர
ஆவி தளர்ந்து அயர்ந்து கிடக்கையிலே
தேற்றிப் பிறசேனன் செத்ததுய ரேதென்றான்
ஊற்றுகண்[1] மன்னவனும் உள்ளபடி சொல்லுமென
அன்னக் குழந்தைதனை அத்தலத்தில் வைத்ததெய்வம்
இன்னம் சிலகாலம் ஈடேற்ற தப்பாது
ஓதும் வசுதேவன் ரோகணியுந் தேவகியுந்
சாதுர்யத் தோடும் சலித்திருந்தா ரம்மானை
இப்பால கிருஷ்ணனும் இருணனு மேதுசெய்தான்
ஒப்பார்க் கன்றுகளை யொட்டிப்போய் கானகத்தே
கற்றாயர் பிள்ளைகளும் கன்றுகளும் வேறுபட
உற்றா ரிருவோரும் உண்மையுட னோர்தலத்தே
மிண்டிக்[2] கருமுகிலும் வெண்முகிலும் போல்மேவி
அண்டியிருந்து அறிவு வந்து கண்கலங்கி
தம்மில் தெளிந்து தமையனும் தம்பியுமாய்
நம்முச் சாயங்கள் நடத்துவோ மென்றுசொல்லி
கன்றுகளின் வாயிலே காப்போலை யைக்கட்டி
துன்றுகண்ணி னெக்கத் துரத்தியதைப் பாயவித்து
கஞ்சமலர்க் கண்ணனும் கற்றாயர் பிள்ளைகளும்
அஞ்சப் பயந்து அவரவர்க்கு கன்றுதைத்தும்
எல்லை தனக்கேசங் கிருஷ்ணனு மேதுசெய்தான்
கல்லைத் தனமடித்துக் கற்றாயர் பிள்ளைகளை
வாட்டித் தன்கண்ணைவிட்டு மற்றவர்தன் கன்றுகளை
ஓட்டிப் பசுக்களிலே ஊட்டவிட்டா ரம்மானை

1. ஊற்றுக்கண் – கண்ணீர் சொரிகின்ற. 2. மிண்டி – பொருந்தி.

சீலமைந்தர்[1] கண்டு சிவுக்கென்னத் தான்சென்று
ஆலமந்த சோதைக் கழுதுதொழுது சொல்வார்
மின்னேநின் வெண்பிள்ளையும் கரும் பிள்ளையுமாய்
என்னேர முங்கருவி யெங்களை நாடவொட்டார்
தங்கள்கண்ணை நீக்கிவைத்து தாமெம்மை
மிண்டுபண்ணி[2]
எங்களைத் தான்வெருட்டி யெர்பசுவி லூட்டுவிப்பார்
என்றது கேட்டவளும் சிமிட் டோடிற்று
சென்றுளது கண்டு தேவபிரான் ஏதுசெய்தான்
கையினால் வாய்புதைத்துக் கால்கொட்டி கண்பிசைந்து
அய்ய னொதுங்கி யழுதான்கா ணம்மானை
ஓச்சிய[3] வேலுக் கொதுங்காத மேனி அய்யன்
ஆச்சிக்[4] கையில்கோல் கண்டழுதான்கா ணம்மானை
அங்கையில் கோல்போட் டவரை யெடுத்தணைத்து
மங்கை யசோதை மனைபுகுந்தா ளம்மானை
சங்கு நிறத்தனையும் தாமனையும் கண்டவர்கள்
பொங்கிய கஞ்சனுடன் போயுரைத்தா ரம்மானை
சருவரியாய்ப் பாடியிலே தன்தங்கை மார்மைந்தர்
இருள் வருமென்று யிடருற் றிருக்கையிலே
பீடார்[5] கிருததுவனும் விறலம் பனுமிருவர்
வாடா மிடுக்குடனே மன்னவனை வந்துகண்டார்
கண்டுநின்ற தானவரைக் கஞ்சன் மிகப்புகழ்ந்து
பண்டு தானீங்கள் செய்த பராக்கிரமமில்லையில்லை
பண்டு பழியுடையார் பாலகா ரோரிருவர்
மண்டு மிடையா மனைக்கே வளருகிறார்
ஆய்ப்பாடியில் போயவரைநீர் கொன்று தந்தால்
ஒப்பா லெனக்கு வுயிர்தந்த தொக்குமென்று
பேசிவிடுப்பப் பிறலம்பக் கிறுத் துவனும்
ஆசில் மதுரை அகன்று சென்றாரம்மானை

1. சீலமைந்தர் – ஒழுக்கமுடைய இடைக்குல மைந்தர். 2. மிண்டுபண்ணி – குறும்புசெய்து. 3. ஓச்சிய – வீசிய. 4. ஆச்சி – இடைக்குலத் தலைவியாகிய யசோதை. 5. பீடார் – பெருமை பொருந்திய,

சென்று யாய்ப்பாடியிலே சேந்த பனங்காட்டில்
குண்ணும விருணனைக் கொல்ல வினையடைந்து
மற்றக் கேசமாக பிறலம்பன் வந்துநிற்க
கிறுத்துவனு மோர்வழியே கிருஷ்ணனைக் கொல்லவென்று
காட்டினிடையே கழுதையா யங்கு நின்றான்
வீட்டினிடை யிருந்த விர்த்தகனு மேதுசெய்தான்
வண்டு குழலில் மலர்மாலையுந் துளவும்
கொண்டு முடித்தருளி குங்குமத்தின் சேருடி
தெண்டுமங் கிறிசும்தெறி வில்லுங் கைக்கொண்டு
அண்டு மினைஞரெல்லாம் அங்குமிங்கும் சூழ்ந்துவர
செம்பவள வாயில் செழுங்குழலைத் தான்வைத்து
அம்புயக் கண்ணனு மணிநுதலு[1] மேலேற்றி
காதில் புனைந்த கனக் குண்டலமாட
ஊதித் தெருவே உலாவினன்[2] காணம்மானை
மாயன் வரக்கண்டு மந்திற லம்பையென்பாள்
ஆயர் மனைவியரும் அங்கங்கே ஓடிவந்து
கங்கள் கொடுமருட்டுங் காவாலி போமளவும்
உங்களுங்கள் கன்னியரை ஒளித்துவையு மென்றுசொன்னார்
சாடி யுரைப்பளவில் தங்கள் தங்கள்கன்னியரை
ஓடியாங்கில் லொளித்து வைத்தா ரம்மானை
ஆகாசஞ் சென்று அவரையெல்லாம் தான்புணர்ந்து
ஏகாசம் செயலிற்று ரெம்மாமி..... கிளென்று
கன்னியர்கள் நெஞ்சுங் கலையுங்[3] கவர்ந்துகொண்டு
பின்னையும் மைந்தருடன் பேராளன் போனபின்பு
வீரகோதனன் மகள் விலோதரி யென்பாளொருத்தி
ஆரமுலையி லணையா தவ
தாமத் தடம்புயத்து தாமனுக்கு மாலாகி[4]
காமக் கடலைக் கடக்க வைக்கக் காணமல்
அங்கி[5] யெழுப்பிமிக அஞ்ஞானக் கண்ணாலே

1. அணிநுதல் - அழகிய நெற்றி. 2. ஊதித்தெருவே உலாவினன் - குழலூதிக்கொண்டே சென்றான். 3. கலை – ஆடை. 4. மாலாகி – மயக்கம் உடையவளாகி. 5. அங்கி – நெருப்பு.

மங்கையுட லுடனே வைகுண்டஞ் சேர்ந்திருந்தாள்
ஓங்கு தாமோதரனும் ஊரைவிட்டுப் போனபின்பு
அங்கணைமாரும் அறைதிறந்து பார்ப்பளவில்
வண்டுழாய் வீசமலர்க் குங்கும மணக்க
கண்டு வெகுண்டுதங்கள் கன்னியரைக் கேட்பளவில்
பூணா ராரப் புகுந்து வினோதரியைக்
காணும லன்னைக்[1] கலங்கித் தவித்தழுதான்
மாதுக் கழுவாள் மந்திரலம்பை யென்பாள்
ஏதுக் கழுகிறாய் எப்போது முன்மகட்கு
சுற்றித் திரிந்து தோணா யசோதைமகன்
எற்றிப் போயெங்கணு மொளித்துவைப்பா னென்றுசொன்னாள்
மற்றாயர் தேவியர்கள் மன்னாட்ட மாகையிலே
சிற்றாய[2] ரோடே திரளப்பசுவை ஓட்டிவிற்று
நீலமலர் மேனி நேமிப் படையானும்
சாலவனம் புகுந்து சங்குவண்ணன் தன்னுடனே
பேரானையான் பிறலம்பன் பெண்ணென்று
காரானை மேனியனும் காலிகளை[3] முன்னோட்டி
காட்டினிடை வந்தான் கண்டான் கிருத்துபத்தை
வட்டவருதும் மனதில் நினைந்து கொண்டு
அட்ட வசுக்களதனை அங்கே யழைத்தருளி
கட்டெறும் பாக்கி கழுதைமேலேவினன் காண்
அங்கது மூக்கிலாண்டும் அண்ணாக்கி லோரிரண்டும்
செங்கை யடியில் செவியினி லீரிரண்டும்
புக்குக் கடிக்கப் பொறிகலங்கி மேலுதிரம்[4]
கக்கிக் கதறி கழுதைபட்ட தம்மானை
ஓரெட் டெறும்பும் உடலில் கடித்திடவே
பாரக் கிருத்துபனும் பட்டான்கா ணம்மானை
சண்ட மதக்களிற்றை சங்குவண்ணன் தானடித்து
மண்டை சுழற்றி மலையோடு தான்மோதி

1. அன்னை – யசோதை. 2. சிற்றாயர் – சிறிய இடையர்கள்.
3. காலிகளை – கன்றுகளையுடைய பசுக்கள். 4. உதிரம் – இரத்தம்.

போட்டா ரமரர் பொழிந்தார்கள் புட்பமழை
காட்டாயர் கேட்க கனசங் கிருஷ்ணனை
ஆனையாய் வந்த பிறலம்பனைக் கொன்றமையால்
மானமுடைய வலதேவனே யென் றுரைத்தார்
உம்பர்[1] கண்டபின்பு உற்றுளா யோரிடையர்
அம்பொன் னணியும் அசோதை யிடைக்கேசென்று
கங்குல்[2] வண்ணனங்கோர் கழுதைதனைக் கொல்ல
அங்குவளை வண்ணனொரு ஆனைகொன்று னென்றுசொன்னர்
சாற்றத் தரியாமல் தானுந்தன் கேள்வனுமாய்[3]
ஏற்ற குமார ரிருவரையும் போயெடுத்து
மேயும் பசுக்களையும் மீளவே தானோட்டி
போயு மனைக்கே புகுந்திருந்தா ரம்மானை
மாபாலர் கையால் வதையுண்ட தானவனை[4]
கோபால ரெல்லோரும் கூடிவந்தங் கேதுசொல்வார்
ஒருவராய்க் கொல்ல உடைந்தோம் பிணம்சுமந்து
இருவராய்க் கொன்று லினியெமக்கு ஞேக்காது
பெண்டுகள் வாரும் பிணம்சுமக்க வென்றுசொல்லி
மிண்டிச் சுமக்கலுற்று வீட்டில்வந்தா ரம்மானை
வாகாந்த கண்ணனுடன் மற்றுந் தன்னண்ணனுமாய்
ஏகாந்த மாக[5] யிருந்தங் கிவை நினைந்தார்
இங்கிருக்க வொண்ணு தியாமிங் கிருக்கமட்டும்
அங்கிருக்க வொட்டான் அசுரரைக் கஞ்சனென்பான்
மிண்டுபுகழ் சேர் விருந்தா வனந்தனிலே
கொண்டு பலருங் குடியேற்ற வேணுமென்றான்
மன்றாடி மார்கள்[6] வருவாரோ நம்பிறகே
இன்றலக் குடியெடுத் தாயென்றான் பலதேவன்
எல்லோரும் போக இடுவேன் வகையென்று
பொல்லா நரியும் புலியுஞ் செந்நாய்களுமாய்
காட்டுடன் வீடு கனகுடியா யுள்ளவரை

1. உம்பர் – தேவர். 2 கங்குல் – இருள். 3. கேள்வன் – கணவன். 4. தானவன் – அசுரன். 5. ஏகாந்தமாக – தனியாக 6. மன்றாடிமார்கள் – இடைக்குல மக்கள்.

ஆட்டுடன் மாடு அழிவுசெய்தா ரம்மானை
பண்ணாளும் பாலகரும் பாற்பசுவும் சேதமவர்
முன்னான் கோனங்கள் முறையிட்டார் நந்தனுக்கு
அவ்வுரை கேட்டு அணிநந்த னேதுசொல்வான்
வெவ்விய கஞ்சன் வினைகொண்டான் நாடோறும்
பேயும் நிசாசரும்[1] பிடெழுந்த ஊரைவிட்டு
போயொரு ஊர்தனிலே புக்கிருந்தா லன்னரென்றார்
மைந்தனே தானாக மாதவனைப் பெற்றெடுத்த
நந்தனே[2] யெங்கள்குல நாயகமே கேட்டருளாய்
உங்கள் மனநினைவி லுத்தேச மன்னியிலே
எங்களுக்கு வேறுமொரு யிச்சையுண்டோ வென்றுசொன்னார்
கூறுமவருடனே கோநந்தன் ஏது சொல்வான்
ஆறு மரனா மடவியு முள்ளமையால்
பொருந்தா வுமேயும் புனலுமன்னிற் றாகவுண்டு
விருந்தா வனத்தினிலே மேவும் குடியென்றார்
பூபாலர் போலப் பொலிந்து நூறாயிரவர்
கோபால ரெல்லாருங் குடியெடுத்தா ரம்மானை
கோதனமு மேதிகளும் கொச்சைகளுங் கன்றுகளும்
மாதனமுந் தானியமு மைந்தர்களும் மாதர்களும்
மண்டு பதனைகளும் மற்றுமங் கழிகோலும்
கொண்டு இடையர் குடிபுகுந்தா ரம்மானை
காடுபல வெட்டி கட்டையுந்தான் களைந்து
மேடுபல குழியும் விரவிநிலந் திருத்தி
தேர்வீதி யோடுந் தேர்களுந் தான்வகுத்து
நீர்வாரி போக்கி நிறைமனையுந் தான்வகுத்து
ஆர லெடுத்து அகங்களும் தானெடுத்து
சாரவென மிகுத்த தாழ்வாரந் தாமிறக்கி
மச்சுமளி யாங்கும் வான்கிணறுந் தான்வகுத்து
மெச்சவே பொன்மேய்ந்து வெள்ளிப்பிரி கட்டி
ஆலயங்கள் தானும் அறச்சாலை தான்கண்டு

1. நிசாசரர் – நிசியில் உலவும் அரக்கர். 2. நந்தன் – ஆயர்குலத் தலைவனாகிய நந்தகோபன்.

சோலையும் வாவி[1] களும் சுற்றெங்குந் தான்கண்டு
மிக்க கோபாலர் விருந்தா வனந்தனிலே
தக்க அமரர்[2] தலம்போலே சோடித்து
நாடற் கரிதான நந்தனையும் மக்களையும்
கூடக் கொண்டங்கே குடிபுகுந்தா ரம்மானை
எத்தே வதைகளையும் இன்பமுடன் னுசரித்து
மற்றை யலங்கரித்து மருளியை நேர்ந்துகொண்டு
கோவும் குழக்கன்றும்[3] கொண்டங்குத் தான்மேய்த்து
தேவும் திருவும் செறிந்திருந்தா ரம்மானை
அவ்வாறு கேட்டு அடிக்கஞ்சன் செய்யுங்கை
எவ்வாறென் றென்று இடருற் றிருக்கையிலே
துட்டரில் துட்டன் சுகந்தன் விகந்தனென்பான்
இட்டமுடனே* ஏதுபணி யென்று நின்றான்
அத்தகை யோரை அசோதையிடைக் கேயிருந்த
வித்தகரைக்[4] கொல்ல விடைகொடுத்தா ரம்மானை
ஆலமெனப்[5] பொங்கியவர் ஆய்ப்பாடியில் புகுந்து
கோலவிழா வுங்குழாக் கன்றுந் தானென
வண்டுவரை மாயன்[6] வரவுபார்த்தே யிருந்தார்
கண்டு திருவுளத்தில் கண்ணனு மேதுசெய்தான்
மன்னு மாடெல்லாம் வயிறிரம்பத் தான்மேய்ந்து
துன்னு பூமேவுஞ் சுனைதனிலே நீராட்டி
ஆங்கதன் கன்றுகளாய் ஆய்ந்துபசுக்க ளெல்லாம்
ஓங்கு நெடுமா லூட்டினன் காணம்மானை
பாலூட்டிப் பின்னைப் பசுக்கள்மேல் தன்கரத்தில்
கோலூட்டி மேய்த்துவந்த கோலக் குமாரருடன்
வென்றிவரு மைந்தா விளாங்காய் நிறைந்துநிற்க
கண்டு கரங்கூப்பிக் கன்றுக்குக் காட்டிடவே

1. வாவி – குளங்கள். 2. அமரர் – தேவர். 3. குழக்கன்றும் – இளமை பொருந்திய கன்றுகளும். 4. வித்தகர் – பெரியோர். 5. ஆலமென – நச்சு. 6. வண்டுவரை மாயன் – வளம்பொருந்திய துவாரகையின் தலைவனாகிய கண்ணன்.

* 'ஏது' என்ற சொல் சேர்க்கப்பட்டது.

பாற்றுக் கருவிப் பயகளைக் கையமர்த்தி
வேற்றுக் கன்றென்று கண்டுமிக்கதனைக் கால்வாரி
கன்றைச் சுழற்றி களவினன்[1] மேலெறிந்து
ஒன்றைக் கொண்டொன்று போய் ஊர்வீழ்ந்ததம்மானை
கையா லெறிந்தளவில் கன்றுகனி மேல்விழவே[2]
மெய்யா யலறி விழுந்தபடி கண்டவர்கள்
அங்கோடி நந்த னசோதைக்குச் சொல்பளவில்
இங்கோடி வந்திங் கிருவரையுந் தானெடுத்து
அவ்வூர் குடியிருக்க அஞ்சி அசுரர்க்காய்
இவ்வூர் குடிவந்தோம் இங்குமவர் வந்தனரால்
எங்கே ஒளிப்போ* மென்றேங்கி நிற்கையிலே
கொங்கை தாய்மார்களும் கோன்களும் வந்துகண்டு
உம்மக்க ளுக்கும் உமக்குமொரு நெறியுண்டோ
** எம்மால் பிணஞ்சுமந்து வேரும் நாங்களொன்று
ஆயரும் ஆய்ச்சியரும் அஞ்சாறு நாளாக
போயவர் தான்சுமந்து போட்டுவந்தா ரம்மானை
அன்புற்ற பாலர்களும் ஆய்பபாடி ஆயர்களும்
இன்புற்று வாழ்ந்தங் கிருக்கின்ற நாளையிலே
கோந்தி நிறைந்து குழற்கன்னி மார்களெல்லாம்
பந்து குழவனமும் பாவையுங் கொண்டாடி
வாரை பொருத வனமுலையா ரெல்லாரும்
சேரச் சுனையாடச்[3] சென்றார்கா ணம்மானை
போயவ ரெல்லோரும் பூஞ்சோலையுட் புகுந்து
செய்யக் களபமகிழ் செண்பகமு சூழநிற்க
வண்டரவஞ்[4] செய்யுமலர்க் கமலப் பொய்கைதனை
கண்டரவஞ் செய்துவந்து கன்னியர்க ளெல்லோரும்
வாய்ந்த பணியு மணிமே கலைதனையும்

1. களவினன் - வஞ்சகத் தன்மையன். 2. கன்று கனி மேல்விழ - கன்று கனியாய் இருந்த அரக்கன்மீது மோத. 3. சுனையாட - மலையில் உள்ள அருவியில் நீராட. 4. வண்டரவம் செய்யும் - வண்டுகள் ஒலிக்கும்.

* பாடத்தில் சீர் இல்லை. சேர்க்கப்பட்டுளது.

** சொல் இல்லை. 'எம்மால்' சேர்க்கப்பட்டது.

காந்த னையகாற்றால் களைந்து வைத்து
கூந்தல் நனையக் குளித்துவிளை யாடலுற்றார்
கோதையர் களெல்லாம குளத்தில் குளிப்பதனை
ஆதிபுருஷன் அறிந் தங்கே தான்சென்று
ஆரு மறியா தவர்கள்கலை யத்தனையும்
வாரி யொருபின்னை மரத்திலே தானேறி
பற்றி யவர்மருளப் பார்த்துப் புருவத்தால்
எற்றி முகுறுண்டா யிருந்தார் காணம்மானை
சாபநுதல்[1] நிமிரத் தாமரைக் கண்களினால்
காவலனைத் தானபார்த்து கன்னியர்க ளேதுசொல்வார்
உத்தமனே யுன்றனக்கே உள்ளஞ்சி நாங்கள்வந்தோம்
இத்தகைமை தன்னைநீ யெப்படிக் கண்டாயோ
என்னே கலை[2] கொண் டெமைப்பங்கங் கொண்டமட்டும்
ஓதநீர் கேளீர் ஒருத்திதனை யின்றெனக்கு
காதலியாய் தந்து கலைவாங்கிக் கொள்ளுமென்றார்
ஒண்ணுத லாரெல்லாம் ஒருத்திதனை நோக்கி
கண்ணனைச் சேர்ந்து கலைவாங்கித் தந்தருள்வாய்
உற்ற பணிகேட் டுனக்கேவல் செய்திருப்போம்
பொற்றொடியே யென்னப் புரிகுழலு[3] மென்னசொல்வாள்
எங்கோன் கருத்தி யான்பெற்றால் வேண்டேனே
மங்கையரே என்ன மறுத்தொருத்தி யென்சொல்வாள்
முற்று நகையினா ளும்முந்நூற்று முப்பதின்மர்
ஒற்றப் பகவன் ஒருவனுக்குத் தானஞ்சி
பந்தம் கொடாதே பலகலைகள் நான்தருவேன்
கொந்து குழலீர் குளியுமெனக் குளித்தார்
காவிக்கண்ணார்[4] குளிக்கக் காவலனு மக்கலையை
வாவிக் கரையிலொரு வன்னிமரத் தில்வைத்து
ஓடையிடை மடவார் ஒவ்வொருவர்க் கொவ்வொருவன்

1. சாபநுதல் – வில்போன்ற நெற்றி. 2. கலை – ஆடை.
3. புரிகுழல் – முப்புரியாய் பின்னிய கூந்தல். 4. காவிக்கண்ணார் – நீலோற்பவம் போன்ற கண்ணினையுடையார்.

ஆடவனைப் புக்குவிளை யாடினன்கா ணம்மானை
நீராடச் செய்தருளி நேரிழையார் தங்களுட
வாராடுங் கொங்கைதனை மார்பால் திளைப்பித்து
மேகலையு[1] மீந்து விடுத்தான் விறல்நெடுமால்
பாகலையு மஞ்சேனஞ் சொல்லார் பன்னீர்குடைந்தாடி
உற்ற னுமனொற்ற துடனே பலித்ததென
மற்றும் நெடுமலை வாழுறிதிய வாழுர்போமளவில்
அன்னைமா ரெல்லாம் அசோதை யிடைக்கேசென்று
பன்னீர் மடமாதர் பன்னீர் குளிக்கையிலே
மங்கையர்கள் கூறை[2]யெல்லாம் வாரிப்போ யுன்மதலை
பங்கங் கொளவிடப் பார்த்திருந்தாய் நீயென்று
கொட்டு முலையார் கொடுமைகள் சொல்லயிலே
வீட்டிலிருந்து வெளிப்பட்டார் வித்தகனும்
தன்னைக் கலாய்க்கின்ற[3] தாயரையும் மாமியையும்
கன்னித் தெரிவையர்கள் கண்டு கலன்தீர்ந்து
மன்ன *னவர்கொண்ட வார்த்தையெல்லாம் பொய்யாக்கி
அன்னையரும் தானும் அகம்புகுந்தா ரம்மானை
பூத்தாமரைக் கண் புருஷோத் தமன்தானும்
தீர்த்தமு மாடித் திருவமுது செய்தருளி[4]
போடையங் கட்டி புழுகாரம் பூச்சுகத்து
ஆடை யுடுத்தி அழகாபரண மிட்டு
மாதொன்று செய்யும் மரகத ஞாயிறுபோல்
தாதொன்று செய்யும்நீர் தாமரை பூத்தாற்போல்
கல்லென்று சென்னிக் கதிரவன் நண்ணிலங்கை
கொல்லொன்று கொண்டு குழலும் பிடித்தருளி
கற்றயர் தம்முடனே காலிகளைத் தானோட்டி
உற்றான் தெருவே ஒளிநெடுமா லம்மானை
செங்கையில் வாங்கியதை செலவாயில் வைத்தருளி

---

1. மேகலை – இடையணி. 2. கூறை – ஆடை. 3. கலாய்க்கின்ற – கலகம் செய்கின்ற. 4. திருவமுது செய்தருளி – உணவு உண்டு.

* சீர் இல்லை. 'அவர்' என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது.

துங்க விரல்கள் வார்த்தை யுற்றியது
கண்ணுந் திருநுதலும் கண்டோரு மேலேற்ற[1]
மன்னு மலையு மரங்களுங் கேட்டிருக்க
தாயாருங் கன்றுகளும் தாமே செவிகொடுத்து
ஓயான் றிருக்குழந்தை யூதிச்சென்று ரம்மானை
ஆனிடையர்[2] பிள்ளைகளும் அண்ணலுமாய்ப் பொய்கையிலே
கானிடை மாவிருக்ஷங்[3] கண்டங் கேதுசொல்வான்
மற்றசொல் கேளாய் பூபாலனே ஓராது
இத்திசையி லேகாதே யென்றார் காணம்மானை
அண்டிய பாதாளத் தப்புறத்தும் ஆழமிக
உண்டு பதினறு யோசனைச் சுற்றுமுண்டு
ஒன்பது யோசனையி னுச்சமுந் தானுமுண்டு
மின்பயிலுந் தோளாய் விஷநீர்த் தடாகத்தில்[4]
அங்குறையு நாகத்துக் கஞ்சுதலை நஞ்சொன்று
பங்குபிரா தபனை கசை யிரண்டுண்டு
மூக்கால் புகையுமிட்டு மூரிக்கொடு விஷமே
நாக்கால் உமிழும் நயனமது[5] உண்டு
கொடுமையும் கூற்றுருக்கும் கோபமே செய்வதெல்லாம்
கடுமையும் காற்றிருக்கும் காளியனே மற்றதன்பேர்
அவ்வா றுறைவன அவிடமன்றி மற்றுமுள்ள
எவ்வாறு போகென்று ஏகினர் மாமுனியும்
கண்ணனுங் கண்சிவந்து காளியன் மேற்போக
துண்ணென் றெழக்கண்டு சூழ்ந்துநின்ற மற்றுயர்
நீடும் பாட்டை[6]யிலே நீர்போனல் நாங்களெல்லாம்
விடுவோமோ வென்று விலகித் துவளயிலே
எச்சு நீர்வேட்டு எழில்பசுவுங் கன்றுகளும்
நச்சுநீர்ப் பொய்கைதனை நாடியதே யம்மானை
காளியன் கைகடக்க கண்டுநின்ற கோபாலர்

---

1. கண்டோரு மேலேற்ற - கண்டோர் வியப்பால் கண்ணை அகல விரித்து நோக்க. 2. ஆனிடையர் - பசுக்களை மேய்க்கும் இடையர். 3. மா விருக்ஷம் - பெரிய மரம். 4. விஷநீர்த் தடாகத்தில் - நச்சுப் பொய்கையில். 5. நயனம் - கண். 6. பாட்டை - பாதை.

மாலியல் பாதத்தில் வந்தித் துரைத்தார்கள்
ஆவினஞ் சேர அருங்கயத்தில் மாளாமல்
மேவியொரு நொடியில் மீளுவிப்பே னென்றுசொல்லி
அன்றுபசு மேய்த்த ஆயரெல்லாம் அங்குநிற்க
சென்று பசுவைத் திரும்பவிட் டங்கேதுசெய்தான்
காதிற் கடு[1] விளைக்கும் காளியானைத் தேடி
சோதிச் சுவாவியெங்கும் சுற்றிக் கரையில்வந்து
வான் கடம்பின்[2] மேலேறி வாய்விட்டலைக்கொட்டி
கோன் கடம்பில்நின்று குதித்தான் குளந்துளும்ப
பாதம் பாதாளமுற்றும் பாம்பின் தலைமிதிப்ப
மாதவமாய் வன்மலைபோல் வளர்ந்து நின்றான்
தேங்கு கடலில் செல்வமள்ள வந்திழிந்த
ஓங்கு கருமுகிலை யொத்தான் காணம்மானை
வண்ண விழிகள் வடவை[3] போல் நின்றெரிய
கண்ணன் தனைப்பிடித்துக் காளியனு மேதுசெய்தான்
தேவர் கோன்றானும் திரிமூர்த்தி கள்தானும்
யாவரும் என்னிடத்தே எய்தப் பயப்படுவார்
நீரூர் தடாகத்தில் நின்விதியால் நின்றவுன்னை
பேரூரிலி[4] யானெறியப் பேசென்றா னம்மானை
ஆய்ப்பாடி யாளும் அசோதையு நந்தனுமாய்
உயப்போ யெல்லாமாகில் உயிர்தந்தா லல்லாது
இப்போதை விட்டகல ஏகினன் காணம்மானை
உன்னைப் பெரிதாக உன்னுடனே யான்பொருதால்
அன்னான் தனக்கிறங்கி ஆய்ப்பாடியில் புகுந்து
மின்னாழி மாயன் விழநீர்த் தடாகத்தில்
புக்கதனைச் சொன்னா ரசோதைச் செவியில்சுருக்கென்ன
நச்சுத் தடாகத்தை நம்பிப் புகுந்ததனை
அச்சத்தால் நந்தன் யசோதையுந் தான்கேட்டு
கையால் வயிறலைத்துக்[5] கண்சுழன்று காலெரிந்து

---

1. கடு – நஞ்சு. 2. வான்கடம்பு – பெரிய கடப்பமரம். 3. வடவை – வடவா முகாக்கினி. 4. பேரூரிலி – பேரும், ஊரும் இல்லாத கண்ணன். 5. வயிறலைத்து – வயிற்றில் அடித்துக்கொண்டு.

மெய்யா லுயிற்று விழுந்தழுதா ரம்மானை
ஆயரு மாய்ச்சியரு மங்கவர்க்* கொண்டோரும்
தூய வசோதைத் துணையடியிலே[1] விழுந்து
கஞ்சத் தடமலர் கண்ணணிப் போல்வந்திலனாய்
நஞ்சுத் தடாகத்தே நாமும்போய் வீழ்வதென்று
எண்ணி யசோதையு மெல்லாரு மொப்பமிட்டு
கண்ணருங் கன்னியரும் காட்டகத்தே செல்பளவில்
போதவு மாவிளைத்த பொன்னாழி யானுடைய
பையும் விரித்துப் பலமுகம்போல் நஞ்சுமிழ்ந்து
செய்யும் போரத்தனையும் செய்து சினமிகுந்து
வாவெண் டாந்து மலைமுழைபோல் வாயயர்ந்து
ஆவென்று கவ்வினான் அயினாங்கு பல்லுமுற
காளியான் செய்த கடும்பூசலைக் கண்டு
மீளியும்[2] கண்சிவந்து வேசற்றுடன் கலந்து
சருவிச் சருவியும் சண்டையிட்டால் சண்டையிட்டும்
ஒருவர்க் கொருவர் உற்றால் நெருக்குண்டும்
குற்றினால் குற்றியும் கோளிழைத்தால் கோளிழைத்தும்
வெங்கூற்ற ரெண்டெண்ணி வேலையும் ரெண்டுற்றதென்ன
பொங்கு மலையிரண்டும் போந்து பொருததென்ன
நாவளைக்கிலற் றீயவளைத்தும் நஞ்சுமிழக்கி லமிழ்தமிட்டு
வால்வளைக்கில் கால்வளைத்து மழையிறக்கில் தீயிறைத்து
கலந்து கரியோனுங் காளியனும் அம்மடுவில்
சலந்திரியாய் நின்று தலைப்பட்ட பூசல்தனில்
பாதமிரண்டும் படியாய்ச் சுமந்து நின்ற
கோளரவில் சுற்றுண்ட கோமானு மேதுசெய்தான்
வாளரவில் செஞ்சை வலக்கையால் தான்பற்றி
கண்டத்தில்[3] நின்று கதிர்வாலள வுருவ
விண்டத்துச் சுற்றெல்லாம் விட்டது காணம்மானை

---

* சொல்லில்லை.

1. துணையடியில் – இரண்டு பாதங்களில். 2. மீளி – ஆண்மை மிக்கவன் (கண்ணன்) 3. கண்டத்தில் – கழுத்தில்.

உற்ற தினவாலே ஒருகையால் தானுருவி
மற்றொரு கையினால் வாங்கியதை வாயில்வைத்து
வாவியில் புள்ளுமவன் செய்வ துமகிழ
ஓவிய கூத்தினையும் உம்பரெல்லாம் கண்டுவர
பாடினான் வாயில்வைத்துப் பைங்குழலின் [1] இன்னிசையை
ஆடினான் மாயன் அரவின்பட மொதுங்க
காதுபட நெரியக் காளியன் சென்னியிலே
ஆதிபுருஷன் [2] கூத்தாடி னன்கா ணம்மானை
கோபமுற்றுக் கோமானும் கூத்தாடிப் பையதிர்ந்து
சோகமுற்றுக் காளியனும் துஞ்சிக் கலங்குவதை
கண்டக வனதேவி கன்னிபற்றை நாவுரைப்பாள்
அண்டங்க [3] ளுண்டுமிழ்ந்த அய்யவன் மாதவனை
வள்ளலை மாயவனை வானோர்கள் நாயகனை
உள்ளறியாதே உயுத்தம் பலவிளைத்தாய்
தோராதே உன்னுயிரைத் தோத்திரஞ்செய்
யென்றுசொன்னாள்
காரானை மேனியனைக் காளியனு முள்ளறிந்து
போதமனம் நடுங்கிப் போற்றிப் புகழ்ந்தேத்தி
பாதம் பணிந்து பலமுகமாய்த் தான்துதித்து
என்னு லறியாத யான்செய்த குற்றமெல்லாம்
பொன்னு ழியானே பிராயே னடிபணிந்தான்
அய்யனுங் காளியனை யஞ்சலஞ்ச லென்றுசொல்லி
பைய அவனும் படம்விட்டுத் தான்குதித்து
பொய்கைக் கரையேறிப் பூங்கடம்பின் கீழிருந்து
கைகட்டி முன்னின்ற காளியனைப் பார்த்துரைப்பான்
ஆயரு மாய்ச்சியரும் அங்குவர யிங்கிருந்தால்
நீயும்நின் இல்லாளும் நின்கிளைஞ ராளேரும் [4]
நன்னீர்த் தடத்திருக்கும் நஞ்சினையுங் கைக்கொண்டு
உன்னூர் புகுதென்ன உளமகிழ்ந்தங் கேதுசொல்வான்

1. பைங்குழல் – பசுமையான வேய்ங்குழல். 2. ஆதிபுருஷன் – ஆதிமூலமான திருமால். 3. அண்டங்கள் – உலகங்கள். 4. கிளைஞர் – சுற்றத்தார்.

நீமுனிய வேண்டாம் நெடியோனே யித்தடத்தில்[1]
மாமுனிவன் சாபத்தால் வாரான மகாகருடன்
இவ்வாற்றினை விட்டு ஏகினால் யென்னை யிப்போ
செவ்வால் கருடன்றான் தின்றிடுவா னென்றுசொன்னான்
உண்டான உன்முடியி லூற்ற திருமுடியை
கண்டா லணுகான் கருடனென்றா ரம்மானை
செய்கை பொறு யென்னத் தெண்டனிட்டுக் காளியனும்
பொய்கை கரைவிட்டுப் போயினன் காணம்மானை
காரிட்ட மெய்யனுக்கு காளிகா மர்த்தனென்று
பேரிட்டுத் தேவர்களும் பெய்தார்கள் புஷ்பமழை
காளியனைப் போகவிட்டுக் காளிய மர்த்தனென்பான்
தூளி[2] யுஞ் சேறும் துவலைப்பட்ட மேனியுடன்
தன் தாயு மூருஞ் சனமுந் தனைத்தேடி
வந்தான் தனக்கெதிரே வந்தார் காணம்மானை
கண்ணாறு பாயக் கரங்கள் தலைமேல் வைத்து
பண்ணார் மொழியாரும் பாலர்களும் ஆயர்களும்
நன்னகரி லுள்ளோரும் நந்த வசோதையரும்
பன்னகனை யென்னப் பரமனை வந்து கண்டு
செங்கமலத் தாளும் சிகமுடியுந் தோணாமல்
தங்கள் கரத்தால் தழுவினர் காணம்மானை
செம்மலர்த் திருக்கரத்தால் தீங்கில்லை யென்றறிந்து
தம்மனை தன்னில் தமரோடும் போய்ப்புகுந்து
நல்லானைப் போற்றி நடுக்கமுந் தான்தவிர்ந்து
எல்லோரு மின்புற் றிருந்தார்கா ணம்மானை
அத்தனையில் கஞ்சனவை யெல்லாம் தான்கேட்டு
எத்தனையும் துக்கித் திருந்தான் காணம்மானை
துன்பம் நினைந்து கஞ்சன் துக்கித்திருக்கையிலே[3]
ஒன்ப தசுரர் ஒருமித்து வந்துகண்டு
கால் கையுடைய கனவரைப்[4] போல் நின்றவரை

1. இத்தடத்தில் – இந்தக் குளத்தில். 2. தூளி – புழுதி, நீறு. 3. துக்கித் திருக்கையில் – சோகமுற்றிருக்கும் போது. 4. கனவரை – பெரிய மலை,

வேல் கையுடைய விறல்கஞ்சன் பார்த்துரைப்பான்
இன்று தானீங்கள் இடைநந்த கோன்மகனை
கொன்று தான்தாருமென்ன கொற்றறசுரர் சம்மதித்து
நன்றென்று சொல்லி நடந்தார் காணம்மானை
வாய்ப்பாடி நல்லசுரர்வந்து கூத்தாடிகளாய்
ஆய்ப்பாடி அண்டையிலே ஆலடியி லங்கிருந்தார்
அவ்வா றறிந்து அசோதை திருமகனும்
செவ்வாய் முகத்துத் திருக்குறிப்புக் கண்டருளி
காலிதனை மேயவிட்டுக் கையில் தடியூன்றி
ஆலி னிழலில் அவனும் வந்தானம்மானை
கூத்தரும் பார்த்திவனைக் கூத்தறுத்தங் கேதுசொல்வான்
பார்த்தெம்மைக் கூத்துநீ பால்பசுக்கள் ஈகுதியோ
அல்லது நாங்காண ஆடநீ கொள்ளுதியோ
சொல்லா யெனவினவத் தூயவனு மேதுசொல்வான்
கூவிப் பசுமேய்ப்பேன் கொடுக்கப் பசுவுமில்லை
ஆவிற்றுக் கூத்துனுடுகி ரென்பாரு மென்று
குஞ்சி முடித்துக் குதம்பையும்[1] காதிலிட்டு
அஞ்சன[2] மிட்டு அரக்காம்பல்[3] மாலையிட்டு
குங்கு மத்தாலே கொழுந்துபவ மையிட்டு
செங்களபச் சேருடி[4] சேலையுந் தா *னுடுத்தி
வண்டனங்கள் தான்பாட மந்திகளே கைகொட்ட
அண்டியவர் கண்காண ஆடினன் காணம்மானை
மால்வகைத் தாளமற மற்றவர்கள் கண்காண
நால்வகைக் கூத்தும் நடித்தான் காணம்மானை
பாங்கி லசுரரெல்லாம் பண்டை யுருக் கைகூட்டி
ஓங்கலென[5] வலறி உள்ளளவுந் தான்விழுந்தார்
ஆடி அசுரர்தனை அச்சுதன் கொன்றதனை
ஓடி ஒருமாது ஊரிலே தான்சொல்ல

---

1. குதம்பை – காதணி. 2. அஞ்சனம் – கருமையுடைய மை. 3. அரக்காம்பல் – செவ்வாம்பல். 4. செங்களபச் சேருடி – செஞ்சந்தனக் குழம்பைப் பூசி. 5. ஓங்கல் – மலை.

* இவ்வெழுத்துக்கள் மூல ஏட்டில் இல்லை.

நந்த வசோதையர்கள் நாயகனைக் கைக்கொண்டார்
அந்த நகரிலுள்ளோர் ஆண்பெண்ணாய் வந்துகண்டு
கொன்றான் நெடுமால் கொலையுண்டார் வல்லசுரர்
நன்றாய் பிணம் சுமந்து நாமே கழுத்தொடிந்தோம்
என்று நெடுநாளாய் எல்லோருமாய்ச் சுமந்து
சென்று முழுகிமனைசேர்ந்தார் காணம்மானை
துன்பங் களைந்து தொறுப்பாடி ஆயரெல்லாம்
இன்பம் செருக்கி யிருக்கின்ற நாளையிலே
வண்மை யுடைய வசாத மரந்தனிலே
உண்மை யிடையரெல்லா முச்சாயத் தேதுசெய்தார்
திக்குள்ள தேவருக்குந் தேவேந்திரன் றனக்கும்
தக்க விழாவெடுக்க சம்மதித்தா ரம்மானை
மன்னு தாமோதரனும் மற்றவரைத் தான்தடுத்து
தன்னு மாடாடு[1] துயரற்றுப் பல்குதற்கு
மாற்றங்[2] கேளுங்கோள் வனதே வதைகளையும்
ஆற்றங் கரையில் அணங்கையு[3] மாசரித்து
குமாரகிரி யென்னும் குன்றடியில் பொங்கலிட்டுத்
தமராகப்[4] பாலும் தயிர்க்குடமும் நெய்க்குடமும்
கண்டு கதலிக் கரும்பின்நீர் பால்வகையும்
கொண்டு மலைபோல குவித்துநாம் பார்த்திருந்தால்
சண்ட வடிவுகொண்டு சற்புத்திர தெய்வம்
உண்டதனை யெல்லாம் உறைந்தங்கு வீற்றிருந்தால்
அண்டரும்[5] வாரார் அசுரர்களும் தான்வாரா
பெண்டுகளும் நீரும் பிணஞ்சுமக்கத் தேவையில்லை
என்றான் எழில்வண்ணன் எல்லோருங் கேட்டிருந்தார்
சென்று ரிடையர் சிறப்பெடுத்தா ரம்மானை
பார்ப்போ னகமும் பருப்பும் பொறிகறியும்
நீர்ப்போல் பாற்குடமும் நெய்யும் தயிர்க்குடமும்

---

1. மாடாடு – மாடும், ஆடும் (உம்மைத் தொகை) 2. மாற்றம் – மறுமொழி. 3. அணங்கு – பற்றி வருத்தும் தெய்வம். 4. தமராக – உறவினராக. 5. அண்டர் – தேவர்.

அப்பக் குடமும் அலசந்தியு மவலும்
எப்பத்தி லுள்ள இளநீரும் வான்கரும்பும்
நல்ல வருக்கை[1] நவிரையு மாங்கனியும்
வெல்லமும் பாயசமும் வேண்டு மிடாச்சோறும்
மட்டு மிலக்கு மறவண்டி லின்மேற்பொதிந்து
கொட்டி முழக்கி குமாரகிரி யணைந்து
அந்த மலைக்கீழ் அழகாகப் பந்தலிட்டு
தந்தன் பசுக்கறந்து தன்பாலில் பொங்கலிட்டு
பொங்க லமுதும் பொறிக்கறியும் போனகமும்[2]
எங்கெங்கு வந்தபொருள் எல்லோருந் தான்படைத்து
மாற்றுக் கண்ணொப்பாக மண்ணாடி[3] மக்களெல்லாம்
சோற்றுக் குண்ணாகச் சொரிந்துவைத்துப் பார்த்திருந்தார்
மெய்த் தேவதையாக விண்டுவே நீயுரைத்த
அத்தே வதையை அமுதுசெய்யச்[4] சொல்லுமென்றார்
இங்கு முருக்காட்டி யித்தனையே ரோடுநின்றான்
அங்குமொரு வான்பூத மாகியவர் கண்காண
பற்றாமல் தானாகப் பாருண்ட சீர்வயிற்றில்
துற்றான் திருநெடுமால் சோற்றுமலை யத்தனையும்
பூதமா யங்கிருந்து போனகம் பண்ணயிலே
பேதமா யிங்கிருந்த பேராளன் தானுரைப்பான்
இத்தெய்வம் போலே இதற்குமுன் நீர்கொண்டாடும்
அத்தெய்வம் முன்னாடுமோ ஆயரே யென்றுரைத்தார்
கண்டறியோ மென்று கனகப் பிரியமுற்று
கொண்டல் நிறத்தான் குரைகழற்கீழ்[5] தான்பணிந்து
சிந்தாகுலந் தீரத் தேவதையை உபசரித்து
வந்தாய ரெல்லாம் மனைபுகுந்த ரம்மானை
போய்ப்பாடி புக்கபின்பு பொன்னகரித் தேவரெல்லாம்
ஆய்ப்பாடி ஆயர்பா லாவியுண்ண[6] வந்தார்கள்

1. வருக்கை – பலா. 2. போனகம் – உணவு. 3. மண்ணாடி – இடையர். 4. அமுது செய்ய – உணவருந்த. 5. குரை கழற்கீழ் – ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய திருவடி. 6. ஆவியுண்ண – உயிரைப்பறிக்க.

ஊட்டம் போறாமல் ஊரோசித்துப் போமவரை
கூட்டிப்போய் நாரதனைக் கோமானைக் காண்பித்து
உள்ளதனையும் உமக்கே விழா வெடுப்பார்
வள்ளலே நந்தன்மகன் வார்த்தை தனைக்கேட்டு
பூதத்தை ஆசரித்துப் போறா ரிடையரென்று
பேதித்து இந்திரன்முன் பேசினான் நாரதனும்
இந்திரனு மங்கே எரிவிழித்தங் கேதுசொல்வான்
அந்தரத்தில்[1] மேகமெல்லாம் அங்கே அழைப்பித்து
சினமாறி யன்றியிலே சிக்கென்று நீங்களெல்லாம்
கனமாறி யரக்கன் வருஷந் தன்னாலே
நந்தனையு மக்களையும் தம்மை யவமதித்த
அந்த இடையரையும் ஆயப்பாடி யூர்தனையும்
சொக்க ரைத்துச்சில விருட்டியாற் பொழிந்து
வாரிக்குள்ளே யொழுக்கி வாருமென்றா ரம்மானை
மெத்த உருமெறிந்து[2] மேகங்க ளத்தனையும்
சத்தக் கடலில் சலத்தையெல்லா மோந்துகொண்டு
சோப மிகுத்துக் சூர்கடல்போல் கோபித்து
சாப மிகுத்துச் சடசடென்னத் தானிழற்றி
அம்புயக் கண்ணனுடன் ஆய்ப்பாடி எல்லையெல்லாம்
தும்பிக்கை போலே துளிகொண்ட தம்மானை
நாயகனை இப்போது நாரதன் வந்துகண்டு
ஆயர்விழாவில் அமுது செய்தா னென்றுசொல்லி
இந்திரன் கோபித்து இவ்வூரில் மேலேவ
வந்தது வாநகமென மாமேக முனைமலே
வல்லவை செய்யென்று மாயவனை வற்புறுத்தி
நல்லபதம்[3] தொழுது நாரதனும் போனபின்பு
தங்கள் பசுக்களெல்லாம் தாமே துரந்துகொண்டு
பொங்கு மனைக்கோ புகுந்திருந் தாரம்மானை
காலிகளைச் சேர்ந்து கன்றினங்கள் பின்தொடர

1. அந்தரம் – ஆகாயம். 2. உருமெறிந்து – இடி இடித்து. 3. நல்லபதம் – நல்ல திருவடியினை.

வாலிய[1] வேற்றினங்கள்[2] வாலெடுத்துப் பாய்ந்தோட
சூரியனுந் தோன்றாமல் சூழ்ந்தங் கிருள்செறிந்து
மாரி பெழிந்தருள மண்ணுடி மக்களெல்லாம்
சேரத் திரண்டுசென்று சீராமற் கோலமென்றார்
ஆரத் திருமாலும் அசலென்று கையமத்தி
ஆபத் தணைய வொட்டோம் ஆடுமாடுங்குடியும்
கோபர்த்தனத் தடியில் கொண்டுபோ மென்றுசொன்னார்
கச்சை புனைந்து கனகப்பணி[3] புனைந்து
பச்சைத் துழாயும் பலமாலையும் புனைந்து
குன்றா வெழில்படைத்த கோபர்த்தனத் தடியில்
சென்றான் திறத்தோடுஞ் செங்கண் மாலம்மானை
எடுத்தார் மலையை இடையநரல்லாங் கொண்டாட
கொடுத்தான் வலக்கைக் குடைக்காம்பு தானாக
வெய்கொண்ட தென்றும் விசும்பில் நின்றதுபோல்
கைகொண்டு குன்றைக் கவிகை[4]யால் தான்பிடித்து
ஏதெனவு மெண்ணா திடையரும் எல்லவரும்
கோதனமும் தாமும் குடியிருந்தா ரம்மானை
ஏரிக்கரை யழிய எத்தலமும் நீரறச்சாய்
வாரிவரும் போல மழைவெள்ளம் மீண்டலுமே
ஓரோசனை படர்ந்து ஓரோசனை யுயர்ந்த
வாரோசனையான் வானெறிந்து மாமலை மேல்
ஏறினான் மாயன் எடுத்தகுடைக் காம்புடனே
கூறினார் பல்லாண்டு[5] கோபாலர் மங்கையர்கள்
ஒருமலை மேலேறி ஒருமலையைத் தானெடுத்து
இருமலைபோற் றோளினான் ஏந்திநின்றா னம்மானை
சேர்ந்தாய ரெல்லாம் தெருவகுத்து வீடுகட்டி
வாய்ந்த தொழுவிட்டு வாழ்பதிபோல் வீற்றிருந்தார்
வாய்ந்த புகழ்புனையும் மாதவனைக் கைதொழுது
மேச்சலு மில்லை விறகுமில்லை என்றுரைத்தார்

---

1. வாலிய – வெண்மையான. 2. ஏற்றினங்கள் – காளைகள் கூட்டம்.
3. கனகப்பணி – பொன்னாபரணங்கள். 4. கவிகை – குடை.
5. பல்லாண்டு – பல்லாண்டு கூறி வாழ்த்தினர்.

உற்றெடுத் தகுணனை உடற்பிம்பு தானாக
மற்றெடுத்த தோளால் மறித்தெடுத்துப் பிடிப்பளவில்
கற்றினமு[1] மேய்ந்து கனல்விறகு முண்டாகி
உற்றின மாயரும் முகந்திருந்தா ரம்மானை
குன்றில் மழைதடுப்பன் கோபாலனோ வென்று
நன்றான மேகமெல்லாம் நாயகன்மேல் கோபித்து
மண்ணில் நுரைமிதப்ப மாகடல்போலே பெருகி
துண்ணென மின்னித் துணுக்கென்னத் தானிடித்து
காற்றால் சுழித்தடித்துக் காரிருளால் கால்விழுந்து
ஆற்றார்க ளாரும்மன்ன அந்தகாரம்[2] பரப்பிக்
கொழுந்தாரை[3] விட்டுக் குமுகுமென மேகமெல்லாம்
பொழிந் தாரை புட்குலனும் மேகம்வந்து
நம்மை மறந்து நின்ற நந்தன் மகனிடையன்
தம்மை மலையாலே தாங்கவொண்ணா வாறாக
வலமாரியாய்ப் பொழிந்து மாயாமல் மற்றவன்மேல்
கலமாரி யரக் கடாவுமென்று சொல்லலுமே
கல்லெல்லா மொண்டு கவணகொண்டு வீசுவர்போல்
செல்லெலாம்[4] கூடிச் சிதறினர்கா ணம்மானை
வில்லை வளைத்து வியனுருவி நாணேற்றி
கல்லை மிகுத்த கடுங்கணைகள்[5] தானாக
கோவர்த்தனமே குறியாக மேக மெல்லாம்
ஏவத் தனிமேக மேந்தி நின்றானம்மானை
ஏழு நாளாக யிரவுபக லோயாமல்
வாழுமா மேக வருஷத் திளைப்பளவில்
நாணிமிகு கோச நாதனென்று மோர்மேகம்
வீணிலே மாயர் தேவேந்தன்பால் வாருமென்ற
இம்மேக வண்ணனை விட்டிந் திரனாரேற்று
அம்மேக மெல்லாம் அணைந்தது காணம்மானை

1. கற்றினம் - கன்றுக் கூட்டங்கள். 2. அந்தகாரம் - இருள். 3. கொழுந்தாரை - மிகுதியான மழை. 4. செல்லெலாம் - மேகங்கள் எல்லாம். 5. கடுங்கணைகள் - கொடிய அம்புகள்.

விட்டு வெளிவாங்கி மேகமெல்லாம் போனபின்பு
மட்டு மலர்தூவி வானவரும் வந்துகண்டு
கோவர்த்தன மெடுத்துக் கோதனத்தைக்[1] காத்தமையால்
கோவர்த்த னென்றுங் கோவிந்தன் தாமென்று
பேரிட்டுக் கைதொழுது பேர்ந்தா ரிமையோரும்
காரிட்ட மெய்யனுங் கைக்குடையை வைத்தருளி
அத்தாயர் தம்மையெல்லாம் அப்பதியே போகவிட்டு
மத்தாரை மீதில் மணியாறை மீதிருந்தார்
மின்பனியால் மேகங்கள் விண்ணரசன் தான்தொழுது
உன்பணியால் யாங்கள் சென்று உன்சத்துவத்தால்
துன்னி யிரவுபகல் தோன்ருமல் ஏழுதினம்
கன்றிக் கனமழையுங் கல்மழையுமாய்ப் பொழிந்தோம்
கோவர்த்தன கிரியைக் கொண்டொருவன் காத்துநின்ருன்
ஏவத்தாலே நாணியாங்களு மீண்டு வந்தோம்
இந்திரனே அந்த யிடைநந்த கோனுடைய
மைந்தனும் யார்க்கும் மடங்கானென வுரைத்தார்
காரணங்கள் சொல்பளவில் கண்ணாயிரத் தானும்[2]
பாரீ ரெந்தன் பராக்கிரம மென்றுசொல்லி
சோடு[3] புனைந்து சுரசேனை தற்சூழக்
கோடு மூர்ச்சதிரக் கோதண்டங்[4] கைக்கொண்டு
ஆயுதங்கள் சேமித்து அயிராவத[5] மேறி
பாயும் பரியும் பலபசுவின் முன்போக
நீடிய கோபமுடன் நீர்வண்ணன்[6] தன்மேலே
பாடியை[7] நோக்கிப் படையெடுத்தா னம்மானை
எங்கோன்மேல் செல்லுகின்ற இந்திரனை இப்பொழுதே
பொங்கோடை[8] யானையுடன் பொன்றுவிப்போ[9] னென்றுசொல்லி

---

1. கோதனம் – பசுச்செல்வம். 2. கண்ணாயிரத்தான் – ஆயிரங் கண்களையுடைய இந்திரன். 3. சோடு – காலணி; சுரசேனை – தேவர் படை. 4. கோதண்டம் – வில். 5. அயிராவதம் – இந்திரன் வெள்ளானை. 6. நீர்வண்ணன் – கண்ணன். 7. பாடி – பட்டி வீடு. 8. ஓடை – முகபடாம் (யானையது அணி). 9. பொன்றுவிப்பேன் – கொல்வேன்.

உக்கிர வான்கருடன் ஓடிவர அந்நேரம்
சக்கரமுஞ் சங்குந் தனிவாளும் தண்டமுமாய்
மாயன்மேல் செல்கின்ற வாசவனைக்[1] கொல்வதற்கு
காவேரி போலக் கண்ணனுருவந் தானம்மானை
பஞ்சா யுதமும் பறவைக் கரசனுமாய்[2]
நஞ்சான தென்ன நடந்துவரக் கண்டு
எட்டிப் போயிந்திரனை வேதா[3]வுந்தான் முனிந்து
பதறிப் படையெடுத்து பாவிநீ கெட்டொழிந்தபய்
ஆயர்பதியி லெம்மை யாளுடையான் வீற்றிருந்தான்
நீயவனை யெண்ணுமல் நிந்தித்தா யென்றுசொல்லி
காய்ந்தார் கருடனுடன் கண்ணன் பஞ்சாயுதம்
சேர்ந்தாருனை யிப்போ தெண்டிக்கக் காரணம்
அண்டமுறப்[4] பணிந்து அவ்வவரை யாசரித்து
தெண்டங் கொடுத்து திரும்பிப்போ மென்றுசொன்னார்
கையில் விரலொன்றுங் காதிலிட்ட குண்டலமும்
செய்ய[5] முடியும் செருக்களத்தில் ஓடையமும்
அந்தணர் கோன்சொல்ல அறுத்தறுத்து முன்போட்டு
வந்தவழி நோக்கி வாசவனும் போய்ப்பிழைத்தான்
ஆற்றும் கருடனுடன் அய்யன் பஞ்சாயுதமும்
சீற்றம் தெளிந்து திரும்பினன்கா ணம்மானை
எண்ணப் படையுடனே யிந்திரனை மீளுவித்து
கண்ணற் கமலக் கடவுளும் போனபின்பு
கோபர்த்தன மெடுத்த கோமானு[6] மாயருமாய்
ஆபத் தணையாம லாய்ப்பாடி யிருந்தார்
காராழி மேனிக் கறியாமல் செய்ததெல்லாம்
வாராழி சூழ்மதுரை மன்னனுக்குச் சொன்னார்கள்
கூற்றரைக் கொன்றதுவும் கோலவிளா வுண்டதுவும்

1. வாசவன் - இந்திரன். 2. பறவைக்கரசன் - கருடன். 3. வேதா - பிரமன். 4. அண்டமுற - பூமியில் படிந்து. 5. செய்ய - சிவந்த. 6. கோமான் - தலைவனாகிய கண்ணன்.

ஏற்ற மலையை எடுத்துமழை காத்ததுவும்
பேருல கெங்கும் .........றத்தை தானாக
சீருலவு கஞ்சன் திகைத்தங் கிருக்கையிலே
சேந்து குருந்தனுடன் தேனுகன்னே பானிருவர்
ஏந்து மனமுடைய கஞ்சனை வந்துகண்டு
தங்கள் மனமிடுக்கும் சத்துவமும் தான்சொல்லி
எங்களை யங்கவ மேலேவ வெண்ணாரம்மானை
கஞ்சனுங் கேட்டுக் கனக்கப் பிரியமுற்று
அஞ்சன வண்ணர்க்[1] கடையாளமுஞ் சொல்லி
ஏவினானேவ யிருவரும் போய்ப் பாடியிலே
மேவினார் பின்னை விளைந்தது கேளம்மானை
சோதித் தொறுபாடித் தொல்பதியில் வாழுகின்ற
மாதர்க்கணி வசந்தம்[2] வந்ததுகா ணம்மானை
கானமலர்க் கூந்தல் கன்னியர்க ளெல்லோரும்
ஆனகுரவைப் பாட்டாடிப் பின்னேது செய்தார்
நாங்காம தேவதைக்கு நற்பூசை பண்ணுகைக்கும்
ஆங்காலம் வந்ததென்று ஆனமுர சறைந்து
நன்னகரி சேரமற்று நாள்வரைந்து காப்பணிந்து[3]
பொன்னகருக் கப்புறத்தே பூங்கோயில் கண்டருளி
தந்தம் தமக்கே சருவாபரண மிட்டு
பந்துகில வீக்கிப் பரிசனமெல்லாங் கொண்டு
அன்ன நடையார் அணியிழையார் போகையிலே
முன்னந் தடுத்து முகுளாதரி யுரைப்பாள்
வார[4] ணியுங் கொங்கைமீற மற்றெம்மைப் பூந்தடத்தில்
கோரணி கொண்டவன்றன் கோவில் கடக்கமட்டும்
பேசாதே வாருமென்ற பெய்வளையைத் தான்குடுத்து
தாசாரு மென்மருங்கில் சுந்தரியே ஏழுரைப்பாள்
எப்பழி பெற்றாலும் எம்மையவன் மேவுவனாய்

---

1. அஞ்சன வண்ணர் – கருநிறமுடைய கண்ணன். 2. வசந்தன் – மன்மதன். 3. காப்பணிந்து – விழா வயர்வதற்குமுன் காப்பு அணிதல் மரபு. 4. வார் – கச்சு.

மைபயிலுங் கண்ணீர் மகாப்பிரசாத மென்னும்
பாயசமும் பாலும் பருப்பும் பொறிக்கறியும்
நெய்யும் விளக்கும் நிறைகுடமும் கொண்டுசென்று
கந்தமலர்க் குழலாள் காமன்கோட் டம்[1] புகுந்து
பந்து கழங்கம்மானை பாவையுமே பயின்று
மல்லிகை பிச்சி மணமலர்தான் சொரிந்து
மெல்லியர் களெல்லாம் விளையாடும் வேளையத்தே
கோலமாதர்க் குக்குரவைப்[2] பாட்டாடு கின்ற
வால[3] மடவாரை மாயன் புணர்வதற்கு
நற்கூடப் பிள்ளைகளும் நங்கையரும் காணாமல்
பொற்கூடக் கோவில் புகுந்திருந் தாரம்மானை
காமனை ஒசிக்கக் கந்துமதி யென்பாள்
போய் மதனன்[4] கோயிலில்லை புக்கிருந்தா ளம்மானை
அங்கவள் தன்னை அசோதைத் திருமகனும்
பொங்கப் புணர்ந்து புறம்விடுத்தா ரம்மானை
வந்தவள் தன்னை மடந்தையர்கள் தான்பார்த்து
இந்த அவயங்கள் ஏம்பலித்து வந்தீர்நீர்
மின்னுழி மெல்லியலீர் வேறிதற்கு ஐயமில்லை
பொன்னுழி மாயன் புணர்ந்தானென வறிந்து
ஒருவர் கோபிக்க ஒப்பல்ல வென்றுசொல்லி
இவ்விருவராக யியங்கினர் காண் அம்மானை
வண்ண மடவார் மதனை யடிதொழுது
நண்ணி யிருவருக்கும் நடுவே யிருள்படைத்து
இருவற் கிருவராய் இன்பமுறப் புணர்ந்து
பொருவற்ற கோவில்விட்டுப் போகவிட்டா ரம்மானை
கொங்கை புளகமெழக்[5] கோல்விழி[6] பூசலிட
மங்கை யிருவர் வரக்கண்டு மாதுநல்லார்

1. காமன் கோட்டம் – மன்மதன் கோவில், காமவேள் கோட்டம் எனப்படும். 2. குரவை – முல்லைநிலப் பெண்டிர் பலர் சேர்ந்து திருமாலை வழிபட்டு ஆடும் ஓர்வகைக் கூத்து. 3. வால – இளமை வாய்ந்த. . மதனன் – மன்மதன். 5. புளகமெழ – மெய்மயிர் சிலிர்த்தல். . கோல்விழி – அஞ்சனக் கோலால் தீட்டப்பட்ட கருவிழி.

வெற்றி மதராசன்[1] மெய்யதால் வந்ததல்ல
மற்றிதுவும் நம்முடைய மாயன் மயக்கென்று
ஆனவினோ தரியு மாவிந்து சோதையையும்
வானமகளி[2] ரென்ன மதன்கோவிலுள் விடுத்தார்
மேதையுறக் கொண்டு வெண்கோவில் போதுகின்ற
கோதையரைக் கண்டு குந்தனு தேனுகனும்
அக்கன்னி மாரை அலைகடலில் போகெறிந்து
பொய்க்கன்னி மாராயம் புகுந்தார் காணம்மானை
தனங்கள் புளகமெழத் தார்குழல்கள் பின்தாழ
அனங்க[3] னருகே யவர்வந்தா ரம்மானை
மாய மடவராய் வல்லசுரர் வாரதனை
ஆயர்பெருமா னறிந்துகொண் டங்கேது சொல்வான்
நத்தியே யாம்விரும்பும் நன்னுதலீர் இப்போது
உற்றிங் கிருவோ ரொருக்காலே வந்துபுக்கீர்
ஒருவீர் ஒருவீராய் உற்றணைந்து மேவுவீரோ
இருவோரு மேவுவீரோ யேதுங்கள் எண்ணமென்றான்
ஒருவரைப் புல்க[4] ஒருவர் தரியோமென்று
இருவரு மாகவந்து இன்றிவனை மேல்விழுந்து
மோகம் விளைப்பார்போல் முன்னேயும் பின்னேயும்
ஆகந்[5] தழுவியவ ரார்ப்பரித்தா ரம்மானை
முன்பாங் குருந்தனுக்கும் பின்பான தேனுனக்கும்
வன்பான காலனாய்[6] மாயவனு மேதுசெய்தான்
கைகொண் டுறவிலக்கிக் காட்டி நெறித்தலுமே
பொய்க்கொண்ட வேஷமெல்லாம் போய்ப்பழய வேஷமுமாய்
உள்ளுதிரங் கக்கி ஒளிவளையாய் நின்றவர்கள்
வெள்ளையறுத் தோரை விழுந்தோர் காணம்மானை
கால்சாய்ந் தசுரர் கருமலைபோல் வீழ்ந்ததனை
பால்சாய்ந்த சொல்மடவார் பார்த்து வெருண்டோடிவந்து

---

1. மதராசன் – மன்மதன். 2. வானமகளிர் – தேவமகளிர். 3. அனங்கன் – அங்கமில்லாதவன் (உருவற்ற மன்மதன்) 4. புல்க – ஆரத்தழுவ. 5. ஆகம் – மார்பு. 6. காலன் – இயமன்.

அம்மாத ரெல்லாம் அசோதையுட னேதுசொல்வார்
எம்மாமி கேட்டருளீர் இற்றைநா ளிங்குநின்று
நாங்களெல்லாம் காதலித்து நன்னோன்பு[1] நோற்பதற்கு
பூக்கணையான்[2] கோயிலிலே போயினோ மங்கிருவர்
பெண்ணுருவாய்ப் புக்கார் பிணங்கண்டோம் தாமரைபோல்
கண்ணுருவாய் நிற்பதுவுங் கண்டோம்கா ணென்றுசொன்னார்
அய்யகோ வென்று அசோதையும் நந்தனுமாய்
கையால் வயிறலைத்துக்[3] காவலனை வந்துகண்டு
ஆய்ப்பாடி தன்னிலுள்ள ஆயரு மாய்ச்சியரும்
வாய்ப்பாறி ஓடிவந்து மாண்டவரைப் பார்த்துரைப்பார்
ஊர்த்தெரு வீதியிலும் ஊர்தனிலுஞ் சாகாமல்
பிறத்தியிலே செத்துப் பெருக்க முளைந்தீர்கள்
மீண்டு பிணஞ்சுமந்து வேசற்றுப்[4] போகாமல்
பெண்டுகளும் நாமும் பிழைத்தோமே யென்றுசொல்லி
வந்துமனை புகுந்தார் மாதவனோ டெல்லோரும்
அந்தவினோ தரியுமாவிந் தயோதை யையும்
அன்னைமார் காணாதமுதங் கசோதை யுடன்
சொன்னமொழி கேட்டுத் தூயவனு மேதுசெய்தான்
வேலை[5] யிலே கைநீட்டி மிக்க மடந்தையரை
கோலமுடன் காட்டிக் கொடுத்தார் காணம்மானை
சென்று குருந்தனுடன் தேனுகனு மற்றவனால்
பொன்றினர்[6] கஞ்சனுடன் போயுரைத்தா ரம்மானை
வஞ்ச மனத்தசுரர் மாண்டாரெனக் கேட்டு
கஞ்சன் சலித்துக் கலங்கி யிருக்கையிலே
நல்ல பிரமாவை நாடித் தவசுபண்ணி
வல்லசுர ரெல்லாம் வரம்பெற்று மீளையிலே
மூவுலகும்[7] வெல்லவல்லான் முன்னை யுகந்தனிலே

---

1. நன்னோன்பு – மன்மதனை எண்ணிச் செய்யும் விரதம். 2. பூங்கணையான் – மலரம்புகளையுடைய மன்மதன். 3. வயிறலைத்து – வயிற்றில் அடித்துக்கொண்டு. 4. வேசற்று – துன்புற்று. 5. வேலை – கடல். 6. பொன்றினர் – இறந்து பட்டனர். 7. மூவுலகு – சுவர்க்கம், மத்திமம், பாதளம் என்னும் மூன்று உலகங்கள்.

மாபலவானான சற்ற வாலியென்பா னோரசுரன்
கஞ்சத் தயனைக்[1] கலங்கப் பிடித்தடித்து
வஞ்சித்து வேண்டுமவர் வந்தாரென வுரைக்க
மெய்யும் நடுநடுங்கி வேதாவு[2] மோடிச்சென்று
வைகுந்தத்தே புகுந்து மாலுக் கபயமென்றார்
அந்தணர் கோனும் அபயங் கொடுத்தருளி
வந்தநீ ஏனென்று மாயன்தான் முனிந்து
வாழுந் திகிரி[3]யினால் வல்லசுரன் தன்னுடலம்
ஏழு கூறாக எறிந்தார் காணம்மானை
ஆழி[4] யெறிய அறுப்புண்ட துணியும்
ஏழு சுரராக யெழுந்திருந்தா ரம்மானை
கண்டங் கெழுவரையும் காசினியில் போயிரென்று
தண்டுளப மாயன் சாபத்தால் வந்தவர்கள்
கார்வரை[5]யைத் தின்டுங் கடல்வற்ற நீர்குடித்தும்
போர்வேட்டுப் போர்வேட்டுப் புயங்கள் தினவுதின்றும்
மிண்டு மிடுக்குடைய வெள்ளெயிற் றூரோரெழுவர்
கண்டு பணிந்துநின்று கஞ்சனைப் பார்த்தேதுசொல்வார்
காற்றும் கருங்கடலும் கனவரையு மெண்டிசையும்
கூற்று[6] மியங்காதோ கொற்றவனே யெங்களுக்கு
உம்மை யமைதித்த ஒன்னார்[7]க ளுண்டாகில்
எம்மை யவர்மேலே ஏவென்றா ரம்மானை
எல்லாச் சமத்துக்களும் என்னோடே சொல்விடுவீர்
வல்லான மைந்தனுக்கு மாட்டாமல் சேர்த்திடுவீர்
என்றவன் சொல்ல எயிறுதனை மடித்து
மென்று கனல்விழித்து வேந்தனைப் பார்த்துரைப்பான்
சற்றுவ மற்றவர்கள் சாவதுக்கு ஐயமில்லை
வெற்பொத்த தோளாய் விடைதாரென அவனும்
பொற்பித்துப் பூசித்துப் போகவிட்டா ரம்மானை

---

1. கஞ்சத்தயன் – தாமரை மலரில் உள்ள பிரமன். 2. வேதா – வேதங்களின் தலைவனான பிரமன். 3. திகிரி – சக்கராயுதம். 4. ஆழி – சக்கரம். 5. கார்வரை – கரியமலை. 6. கூற்றும் – இயமனும், 7. ஒன்னார் – பகைவர்.

சென்று தொறுப்பாடி சேர்ந்த எழுவோரும்
என்று தருவா யெனத்திரியும் வேளையிலே
கோதனன் தந்தக் குலவிக்காம்பி ளுணையென்று
மாதினுக்கு நாளை மணமென்று தானுரைத்து
எங்கு முரசறைந்து யெவ்வூர்க்கு மோலைவிட்டு
மங்கு[1] லெனவே மணக்கா வணங்[2] களிடம்
பூவாடை கட்டிப் பொலிவுடனே பந்தலிலே
கோபாலரைக்[3] கூட்டி கோதனனு மேதுசொல்வான்
மங்கை பிறந்தநாள் மங்கையுடனே பிறந்த
சிங்க வலியும் சினமு மிகவுடைய
ஏழெரு தான ரிஷபங்களைத்[4] தழுவி
வாழவெறி வாற்சென் மகள்புகுவா ளென்றுசொல்லி
கொம்புமுனை திருத்தி குஞ்சிக்குச் குச்சணிந்து
செம்பொற் றுடைகயிறும் செம்மணியுந் தான்பூட்டி
வால இடையருடன் மைந்தரும் கண்டுநிற்க
கோல விடை[5] ஏழினையும் கொண்டுவந்து கோதனன்தான்
மானை[6] மணம்புண்ர வல்லார் தழுவுமென்று
ஆன தொழுவி லடைத்துவைத் தாரம்மானை
இடையர் குமாரரெல்லாம் யிவ்வார்த்தை யைக்கேட்டு
தொடையல்[7] புனைந்து சுகந்தவகை யும்பூசி
பின்னைக்குச் செய்த பெரியமணப் பந்தலிலே
என்னைப் பாருன்னைப்பா ரென்றுவந்து நின்றார்கள்
அஞ்சனச் செங்கண சோதை திருமகனும்
மஞ்சன மாட்டி[8] வகைமாலை யுஞ்சூட்டி
போனகஞ் செய்து புழுகுடனே[9] சாந்தணிந்து
ஆனபணி யாலழ காபரண மிட்டு
குங்குமச் சேருடி கொழுந்துபட நாமமிட்டு

1. மங்குல் – மேகம். 2. மணக்காவணம் – மணப்பந்தல். 3. கோபாலர் – இடையர். 4. ரிஷபங்கள் – காளைகள். 5. கோலவிடை – அழகான காளைகள். 6. மானை – மான் போன்ற பெண்ணை. 7. தொனடயல் – மாலை. 8. மஞ்சனமாட்டி – நீராட்டி, 9. புழுகு – மூான்மதம் என்னும் மணப்பொருள்.

பொங்கிய கேயூரம் பொற்றோளில் பூரித்து
வாகுபுரி பூண்டு மகரக்குழை புனைந்து
கோதை[1] புறந்தாழ சொர்ணச் சிமிறணிந்து
முன்கையில் கங்கணமும் முத்துவட மாலையணிந்து
பொன்கச்சை கட்டிப் பூவாடை மேல்சிமிட்டி
அல்லிக் கயறும் அரைவடமுந் தான்கட்டி
நல்ல உடைவாள் நலமாய் வலத்தணிந்து
தண்டைக் கழல்புனைந்து சமமாளி கைமிதித்து
செண்டுங் கிரிசுந் தெறிவில்லுங் கைக்கொண்டு
தொங்கல்[2] நிழல்கீழே தோழன்மார் தற்சூழ
மங்கலப் பந்தலிலே வந்தான் காணம்மானை
அவ்வளவி லிந்த அசுரர்க ளேதுசெய்தார்
வெவ்விய வேழெருதும் வேளையிலே போகெறிந்து
அந்த எருதி னடையாள மார்படியே
இந்த அசுரர்கள்தான் யேழெருதாய்[3] அங்குநின்றான்
காச்சிருக ......... காதலைத்து வாலெடுத்து
மூக்கினால் தீயுமிழ்ந்த முன்னின்ற யேற்றை[4] தனை
தன்னே தென்றென்றித் தனம்பெரியக் கோதனனும்
அன்ன தொழு[5] வி லடைத்துவைத் தாரம்மானை
மங்கல மார்ப்ப மணிமுரசு நின்றார்ப்ப
அங்க முருக்கேற ......ரை குழாமுத
பொன்மணி மாலைகளும் பட்டுந் தான்தொடுத்த
நன்மணிப் பந்தலிலே நாரிமார்[6] தற்சூழ
கூந்தல் முடித்துக்[7] குவளைத் தொடைபுனைந்து
வாய்ந்த பணிகள் வகைவகையாய்த் தானணிந்து
வானில் சிறந்த மலர்விழிக்கு மையெழுதி
தோளில் கரும்பெழுதித் தொய்யில் தனமெழுதித்
தோடு கடையம் சுடர்மணி முத்தாரம்

---

1. கோதை – கூந்தல். 2. தொங்கல் – மாலை. 3. ஏழெருதாய் – ஏழு காளைகளாய். 4. ஏற்றை – காளையை. 5. தொழு – மாடுகட்டும் இடம். 6. நாரிமார் – பெண்டிர். 7. பணி – ஆபரணம்.

நீடு வயிரம் நிறைமணிகள் நின்றிலங்கும்
கச்சு முனிந்து கனதனங்க ளாலிக்க
செச்சை புனைந்து செழுந்தாளத் தொங்கலிட்டு
மின்னு மருங்கினுக்கு மேகலையே பற்றாக
அன்ன நடந்ததென்ன அம்புய மங்கை[1] என்ன
ஆயர் வளஞ்சூழ அணிமாலைக் கைப்பிடித்து
தூயமொழிக்கப் பிழையுந் தோணினன் காணம்மானை
தங்கிளைஞர் சூழ்ந்த தமனியப் பந்தலிலே
பொன்கிளைஞர் பூண்முலையாள் போந்தனள் காணம்மானை
தோளை யிறுமாந்து தோன்றி யெதிர்நின்ற
காளையர்கள் தம்மைக் கடைக்கண்ணால் பாராமல்
தன்னைக் கொளவிருந்த தங்களையும் பாராமல்
பொன்னரிய மாலைதன்னைப் பொற்கையால் முன்னீட்டி
நந்தன் மகனையே நாடிவந்தா ளம்மானை
அந்தவகை கண்டளவில் அவள்தந்தைக் கோதனனும்[2]
அரிதாய் எளிதாய் எண்ணாரெனு மிப்பொழுது
எருதேழும் வென்றுவந்து என்மகளைக் கொள்ளுமென்றார்
ஆங்கவர் சொல்லுதலும் ஆயர் குமாரரெல்லாம்
நாங்கள் வளர்த்ததென்றும் நம்பசுக்க ளீன்றதென்றும்
பற்றாமல் சொல்லிப் பதறிப்பதறி வந்து
சற்றே யெருத்தைத் தழுவினர் காணம்மானை
அண்டா[3] யெருத்தின்மே லார்ப்பரித்துப் போய்வீழக்
கண்டார்கள் பின்னவரைக் கண்டிலார் தேவர்களும்
கொம்புக்குப் பற்றாமல் கோலச்சிறு குளம்பில்
வெம்பித் துவையுண்டு மெய்யழிந்தா ரம்மானை
தானே எருத்தைத் தழுவவென்று புக்கவர்கள்
உன்னு முயிரும் ஒருவிடத்தில் காணாமல்
நங்கோ தனன்வளர்த்த நல்லெருதீ தல்லவென்பார்

---

1. அம்புய மங்கை – தாமரையில் உறையும் இலக்குமி.
2. கோதனன் – ஆயர் தலைவன், ஏறு தழுவியவர்கட்கே எம்மகள் உரியள் என அறிவித்தவன் 3. அண்டா – அடக்கமுடியாத.

வெங்காலனீ[1] தென்பார் வெவ்வடவைக்[2] காணுமென்பார்
மாயனே இவ்வெருதை மட்டுப் படுத்தாமல்
ஆயரே நம்மையெல்லாம் அற்பத்தில் கொல்லுமென்று
எங்கெங்கு மோடும் இடையரைக் கையமர்த்திச்
செங்கண் நெடுமாலைத் தெண்டனிட்டுக்[3] கோதனனும்
அச்சுதனே யெங்க ளசோதைத் திருமகனே
நச்சுவிழிப் பின்னை நாயகமே கேட்டருளாய்
அவளுனக் காவ லவனுனக்கு நீயாவை
இவள் பொருட்டாக வெருதேழையும் தழுவி
கோட்டுமுலை மாமயிலைக் கூடென்றான் கோதனனும்
கேட்டு மனமகிழ்ந்து கேசவனு மேதுசெய்தான்
குஞ்சியுற முடித்துக் குப்பாசந்தான் பிணைந்து
கஞ்சுகக்[4] காயலக் கவசமுந் தான் பிணைந்து
காரேற்று மேனியான்[5] கைதட்டித் தோள்தட்டி
போரேற்றுக்[6] கூடம் புகப் பாய்ந்தா னம்மானை
எருதுருவாய் நின்ற எழுவருங் கண்டிவனை
நிருபரே நாந்தாம் நினைத்தபடி யானதென்று
ஏழெருது முமாயிங் கொருவ னென்றுசொல்லி
சூழ வளைந்துகொண்டு சுற்றெங்கும் வட்டமிட்டு
வாலெடுத்து வால்நிமிர்ந்து வன்கண் சிவப்பெறிந்து
காலெடுத்துக் காதலை கனலெரிபோல் மூச்செறிந்து
கொம்பாலே ஓங்கிக் குறிக்கொண்டங் கேழெருதும்
எம்பிரான்[7] மேலே எழப்பாய்ந்த தம்மானை
ஏற்றிய பல்லியங்கள்[8] ளெங்கு மிடிமுழங்க
சேற்றி லுடன்சேனை திரைகடல்போ லார்ப்பரிக்க
வானவர்கள் கண்டுமொய்ப்ப மாயோ னெழப்பாய்ந்து
தானவர்க[9] ளோடே கலைப்பெய்தா ரம்மானை

1. வெங்காலன் – கொடிய இயமன். 2. வெவ்வடவை – கொடிய வடவாமுகாக்கினி. 3. தண்டனிட்டு – வணங்கி. 4. கஞ்சுகம் – மெய்ப்பை. 5. காரேற்று மேனியான் – கருநிறமுறு கண்ணன். 6. போரேறு – போர்செய்யும் காளை. 7. எம்பிரான் – எமது தலைவனாகிய கண்ணன். 8. பல்லியங்கள் – பலவகைப்பட்ட இசைக் கருவிகள். 9. தானவர் – தேவர்கள்.

ஏழுபருபதம்[1] போல் ஏழெருதும் தான்வளைந்து
ஏழு கடலுமுள் நடுங்கி லேழ்கடல் போலே முழங்கி
நந்தன் மகனை நடுப்படுத்திச் சுற்றெங்கும்
வந்து வளைந்து மணிவண்ணன்[2] மேனிதனில்
நாலேழு காலாலும் நன்றுயுற மோதி
வாலேழுங் கொண்டு வெரிந்தங் குறப்பிணித்து
கூரேழு கொம்பாலும் எம்மா னி[3] லக்காக
ஓரே ழெருதுமுறப் பாய்ந்த தம்மானை
சக்கரக் கையன்றான் சமர்த்தினால் தப்புவித்து
உக்கிரத்தால் மற்றதன் ஓர்மூலையி லொதுங்கி
அண்ட விழி[4]களுக்கும் அச்சுதனே தானானன்
ஒண்டொடியார் கண்களுக்கும் ரூபமத[5]னானான்
ஆயர் விழிகளுக்கும் அசோதை மகன்தானானன்
மாய எருதுகட்கும் வல்லெருதங் கேழானன்
ஓரெருதுக் கோரெருது மல்லொன் றென்று
போரேற்றுக் கொண்டு பொருதுதுகா ணம்மானை
துள்ளி யெதிபாயத் தானுமெதிர் பாய்ந்து
துள்ளி யெழப்பாயில் துள்ளியெழப் பாய்ந்து
கோடு கொடு சாடில் கோடுகொடு சாடிற்றும்
மாடுகள் தன்னுடனே மாயன்பொரும் போரை
கண்டங் கமரர்களுங் கையால் விழிபுதைத்தார்
மண்ணு மலையும் மரங்களுந் தூளொழுந்து
ஆற்றெழுந்த தூளி லவனி[6]யிருள் படைத்து
கூற்று[7] நடுக்கமுற்றுக் கோளரவு மச்சமுண்டாய்
சூதாக வந்த தொருபுகழால் மாயனுக்கு
ஏதாகப் போகுதென்று ஏங்கி யிடிப்பித்து
நந்த னசோதையரும் நம்பி யிருஷணனும்
அந்த நகரிலுள்ள ஆயரும் நிற்பளவில்

1. ஏழு பருபதம் – ஏழு மலைகள். 2. மணிவண்ணன் – மணிபோன்ற நீல்நிற வண்ணன். 3. எம்மான் – எமது தலைவன் (கண்ணன்) 4. அண்டவிழிகள் – உலகக் கண்கள். 5 ரூபமதன் – சிறந்த உருவினையுடைய மன்மதன். 6. அவனி – உலகம். 7. கூற்று – இயமன்.

அஞ்சன மேனிஅரி யெருதுக் காற்றமல்
கஞ்ச னெருதேழும் கால்தளர்ந்த தம்மானை
மாக[1] மிமையோரு மண்ணோருங் கண்டுநிற்க
ஏக வுருவாய் எருதேழையும் வளைத்துப்
புக்குத் தழுவிப் புயத்தோ டிறுக்குதலும்
கக்கிக் குருதிமிக்க கண்களும் தான்பிதுங்கி
பொய்கொண்ட வேற்றுருவம் போக்கி யசுரரெனும்
மெய்கொண் டலறிவிழுந் தார்கா ணம்மானை
ஒருசற்று மாயலறி யோரேழு மாமலைபோல்
வருசற்ற வாலியென்பான் மாண்டான் காணம்மானை
எருதெழிச்சி யான ஏழெருதும் பட்டுவிழ[2]
பொருதழற்று மாயன் புறப்படற்றான் கண்டு
தந்தையும் தாயும் தமையனு மாயருமாய்
வந்துதழுவி மணக் காவணம் புகுந்தார்[3]
மான நெடுமாலும் மஞ்சன நீராட்டி
ஆனபணி[4]யா லலங்கரித்து வந்து நின்றார்
சொல்ல வறியாத் துடியிடையார்[5] தங்களிலும்
நல்ல தவஞ்செய்த நப்பின்னை யவ்வளவில்
போத வனப்பெய்திப் பொன்போல் நடந்துவந்து
மாதவனுக் கிட்டாள் மணிமாலை யம்மானை
வேதன்[6] முகிழ்த்தமிட்டு மெல்லியர்கள் வாழ்த்தெடுப்ப
காதலியைக் கைப்பிடித்து கண்ண னிருந்ததற்பின்
அவ்வூரி லுள்ளவரும் ஆயரும் ஆய்ச்சியரும்
கைய வினைப்பேரும் கல்யாணம் வந்தவரும்
கூடித்திரண்டு சென்று கோதனன்தான் வளர்த்த
கேடுற்ற மாடுகளால் கெட்டொழிந்தோ மெனவே
சேனைத் திரளுடனே சென்றங் குரிமையிட்டு
ஆனைப் பிணத்தை எறும்பு குறைப்பதுபோல்

---

1. மாகம் – ஆகாயம். 2. பட்டுவிழ – இறந்துவிழ. 3. மணக்காவணம் – திருமணப்பந்தல் காவின் வண்ணம் போலிருப்பதால் காவணம் ஆயிற்று. 4. பணி – அணிகள். 5. துடியிடையார் – உடுக்கை யொத்த இடையுடையார். 6. வேதன் – பிரமன்.

கொட்டால் தறிகையால் கொடாலியால் தறித்து
பட்ட பிணத்தைப் பலநாளுமாய்ச் சுமந்து
ஊர்ப்புறம் போட்டு உடனே முழுகிவந்து
சீர்பெற மாயனுடன் சேர்ந்திருந்தா ரம்மானை
மாதவன்[1] கையாலே வல்லசுரர் மாண்டதனை
தூதுவர்கள் கஞ்சனுக்குச் சொன்னார் காணம்மானை
சொன்னசொல் கேட்டுத் துணுக்கென்னச் சோகமுற்று
அன்னவன் மூர்ச்சித்து அயர்ந்து கிடக்கையிலே
தில்தவர்க் கலகசிறி நாரத னென்னும்
கலகப் பிரியன்காண் கஞ்சனை வந்துகண்டு
தேவர் திரையளப்ப தேவேந்திரன் சேவிப்ப
மூவுலகு மாளு முடிவேந்தே கேட்டருளாய்
எவ்வெளிய இடை நந்த கோன்மகனை
தேவகி மைந்தனென்று செப்புவார் சொல்கேட்டு
அங்கவன் மேலே அசுரரைத் தான்போக்கி
மங்கக் கூடாதே வசஞ்சொல்லக் கேட்டருளாய்
அத்தலத் திலுள்ள அதிபிர்மா வானாலும்
சுத்தவினை வல்லான் சூனியத்தால்[2] வென்றிடுவன்
அவ்வூர் இடையர்க்குள் ஆளோலைப் போகவிட்டால்
இவ்வூரில் கட்டிவந்து இக்கணமே தந்திடுவர்
பற்றுப் பயல்தன்னைப் பாராட்டி மாயாதே
உற்றாளா யிப்பொழுதே ஓடவிடாயென்று சொன்னான்
வெம்மா முனிமொழியை மெய்யென்று கஞ்சனுந்தான்
அம்மாயன் றன்னை அழைப்பிக்க வேண்டலுமே
தந்தளவாயாகி[3] நின்ற சந்திரதாத னென்பான்
வந்துகரங் கூப்பி மன்னவனைப் பார்த்துரைப்பான்
நன்கொன் றறியாத நாரதன் சொல்கேட்டு
மன்கொன்ற பேராழி மாயவனை இங்கழைத்து
எரிதிரியைக் கவ்வி எலிதா னிருக்கின்ற

---

1. மாதவன் – கண்ணனின் வேறு பெயர் 2 சூனியத்தால் – மந்திரச் சூழ்ச்சியால், 3. தளவாய் – படைத்தலைவன்,

துரிசினுக்குள்ளே வைத்து துஞ்சிப் போ[1]லாகாதே
பாலப்பிரா யத்தில் பன்னாளும் நீவிடுத்த
ஆலமுலைப் பேயோ டசுரரையும் வென்றிலனோ
காளிதா னென்னும் கடும்பாம்பை வென்றிலனோ
நீளிய குன்றெடுத்து நின்றமழைக் காற்றிலனோ
வானோர் பணிந்தேத்தும் வைகுந்த நாயகனை
ஆயன்[2] மைந்தனென்று அற்பமா யெண்ணாதே
பிழைக்கவகை கேட்கில் பேராளன் தன்னையிங்கே
அழைக்கவும் வேண்டாம் அவன்வழியும் போகாதே
என்றான் தியன்றான் என்றலுமே கஞ்சனென்பான்
நன்றான நாரதனும் நானு மறிவில்லாமல்
இங்குனைக் கேட்டோமே என்றே யெரிவிழித்து[3]
அங்கவனை வாளாலற வெறிந்தா ரம்மானை
காரியமுஞ் சொன்னவனைக் கைவாளால் கூறுசெய்து[4]
நாரதமுனியை நன்குரைத்துப் போக விட்டு
கொற்றவிறல் கஞ்சன் கூரன்தனை யழைத்து
இற்றைப் பொழுதில் யெழிலாய்ப்பாடி யில்போய்
நாயகனை யுள்ளிட்டு நந்தனுடை மக்களையும்
ஆயரையு மிங்கே யழைத்துவா வென்றுசொன்னார்
வேந்த னுரைப்ப விடைகொண்ட கூரனுந்தான்
போந்து தொறுப்பாடி புக்கான் காணம்மானை
அன்னானை வந்துகண்டு ஆயரெல்லாம் கைதொழுது
மன்னா எம்முரற்கு வருங்கருமம் சொல்லுமென்றார்
திமைத்த புகழ்க் கண்ணனையும் தந்தையுமுங்களையும்
அழைத்து வரச்சொன்னார் அரசரென்றா ரம்மானை
இற்றைநா ளிங்கிருந்து எங்களையும் கைக்கொண்டு
பிற்றைநாள் போகப் பிரசாத மென்றுசொல்லி
வீடாரங் கட்டி மிகவே உலுப்பைகட்டி

---

1. துஞ்சிறைப்போல் – இறந்தார்போல. 2. ஆயன் – இடையன். 3. எரிவிழித்து – தீப்போல் சினவிழி விழித்து 4. கூறுசெய்து – வாளால் வெட்டித் துணித்து.

கூடாய ரெல்லாம் கூரன்தனை யிருத்தி
வேறறிந்து நம்மில் விசாரித்து மேல்வினையும்
வாறறிந்து[1] கஞ்சன் வரச்சொன்னான் காரியத்தால்
செங்கமல ………… த் தெரிசிக்கக் காரணமாய்
அங்கதுக்குத் தக்க தறிந்துரையு மென்றுசொன்னார்
மூத்த மனுஷர் சொல்ல மூத்த யிளைஞரெல்லாம்
வேற்று மனந்தளர்ந்து வெய்துயிர்த்[2] தங்கேதுசொல்வார்
இங்கியா மெல்லோரு மிப்பொழுதே தான்போகில்
அங்கவன் செய்த தனுபவிப்ப தல்லாது
நாட்டுக்குப் பாட்டுரைக்கும் நாயகனை நாங் கொடுபோய்
காட்டிக் கொடுக்கக் கணக்கல்ல[3] வென்றுரைத்தார்
அங்கவர் சொல்ல அயல்நின்றோ ரேதுசொல்வார்
எங்கோனும்[4] போகவொட்டோம் யாமுமங்கு வாரதில்லை
நந்தன் குமாரனுடன் நம்மை யழைக்கவென்னும்
வந்தவனைக் கொன்றினிமேல் வாரவலையும் பொருது
ஆவதெல்லா மாக்கி அதிநந்தமாக வந்தால்
சாவதுதான் நன்றென்று சாற்றினர் காணம்மானை
ஊரிடையர் சொல்ல உடன்படாதே யிருந்த
வீரதனென்று வீசார்வா னேது சொல்வான்
பல்லாயர் தானும் பலரும் யிடையிருத்தி
எல்லோருங் கேளுங்கோள் யானுமொரு வார்த்தைசொல்ல
இழிவுற்ற போது யிராசாக்கினை[5] மறந்து
அழிவுற் றுயரென்று அம்புவியோர் சொல்லாரோ
தமருற்ற வேலோரும் தாமரையாள் கோமானும்
அமருக்கோ[6] …………ங்கள் கைப்பிடித்து
மிக்கங் கூரனொடு மிக்க அனைவோரும்
சிக்கென்று அந்தத் திருநகர்க்கே சென்றபின்பு
கஞ்சன் படைவலியும் கார்மேனியான் வலியும்

1. வினையும் வாறறிந்து - வினையும் தன்மை உணர்ந்து. 2. வெய்துயிர்த்து - பெருமூச்சு விட்டு. 3. கணக்கல்ல - ஏற்றதல்ல. 4. எங்கோன் - எமது தலைவனாகிய கண்ணன். 5. இராசாக்கினை - அரச கட்டளை. 6. தமர் - உறவினர்.

விஞ்ச வறிந்துபின்னை வீரனுக்குத் தீங்குவந்தால்
அப்போ அறிந்திடுங் கோளாயரே நீங்களெல்லாம்
இப்போதே அச்சமுற்று ஏன்தான் தளம்புகிறீர்[1]
வையம் பதினலு மாறுகொண்டு[2] வந்தாலும்
ஐயன் தனக்கு அழிவில்லை காணுமென்று
வீரதன் சொல்ல இடையரெல்லா முளமகிழ்ந்து
ஆரமணிக் கொங்கை யசோதை யிடைக்கேசென்று
முன்னேயுறப் பணிந்து முண்டகக்[3] கண்ணனையும்
அன்னே யெமையும் அழைக்கிருன் கஞ்சனென்பான்
கேட்டா ளசோதை கிளர்ந்துபின்னை வார்த்தைசொல்ல
மாட்டா ளயர்ந்து வசமழிந்தா ளம்[4] மானை
வாற்றி எடுத்தணைத்து எல்லோரும் கண்கலங்கி
தேற்றினர் தேற்றத் தெளிவுவந்தங் கென்சொல்வாள்
என்மகனைக் கஞ்சன்பால் யேவென்ற சொல்கேட்டு
புன்மையென் ஞவி[5] யின்னம் போனதில்லை யென்றுசொல்லி
காரியைப் பறித்துக் கையால் வயிறலைத்தும்
நீரோடு வேல்கண்ணள் நின்றவரைப் பார்த்துரைப்பாள்
நிலமெழுகி உண்டு நெடுநாள் தவசுபண்ணி
பலவிரத ஞேக்கிஒரு பாலகனைப் பெற்றெடுத்தேன்
அன்றளவை தொட்டு அவன்விடுத்த வஞ்சனைகள்[6]
இன்றளவுந் தப்பியிருந்த திரு மகனை
கண்டுபழி விளைப்பான் கஞ்சன்பால் போகவிடேன்
கொண்டுபோய்க் காட்டி கொடுமென்னை யென்றலுமே
என்மகனைக் கஞ்சன்பால் ஏகவிட்டே னென்றவளை
மின்மலர்க் கண்ணீர் துடைத்து வீரதனேதுசொல்வான்
உன்மகனல் கஞ்சன் உலகினுள் வந்ததுகாண்
அக்கஞ்சனைப் போலே ஆயிரம்பேர் வந்தாலும்
இக்கஞ்சக் கண்ணன்[7] இமைப்பளவில் கொன்றிடுவன்

---

1. தளம்புகிறீர் – வருந்துகிறீர். 2. மாறுகொண்டு – பகைகொண்டு. 3. முண்டகம் – தாமரை. 4. வசமழிந்தாள் – தன்னிலை மாறினள். 5. ஆவி – உயிர். 6. அவன் விடுத்த வஞ்சனைகள் – அவன் செய்த நச்சுச் செயல்கள். 7. கஞ்சக்கண்ணன் – தாமரைபோன்ற கண்ணினையுடையான்.

மைமருவு கண்ணாய் இகல்கடந்த[1] கஞ்சனையும்
அம்மருளத் தானும் அரசாள்வா னுள்புதல்வன்
சோதிரிஷியும் மொழிந்தான் சூளுறைந்த தேனுமென்று
ஆதரவாய்ச் சொல்ல அசோதையுந் தான்பொருந்தி
அம்புயக் கண்ணார்க்[2] கழகுப்பணி[3] பூட்டி
நம்பியுடனே வருவே னுமென்று சம்மதித்தாள்
தாய்தடுப்ப அஞ்சி சலித்திருந்தான் தான்பிறகு
வாய்திறந்து சொல்ல மனப்புயங்கள் பூரித்து
அன்னையும் தன்னுடைய அன்னையுந் தந்தேவி
பின்னையுங் கூட்டிப் பிறகுவரக் கற்பித்து
தானும் சமைந்து தலைவாசல் தன்னில்வந்தான்
கோனும் வரவிடுத்த அக்கூரனு மவ்வளவில்
தேரிலேறி வந்து திருமுன்னே தேரிறங்கி
காரேறு மேனியான்[4] காலிலுற்றுப் பணிந்து
எங்குலத் திலுள்ள இறைவனே கேட்டருளாய்
உன்னை மங்குவிப்பதாக ஓடிவரச்சொன்னான் கஞ்சனென்பான்
வண்டேறுந் தாரா யவாவென்றான் முன்னையிங்கு
கண்டிடுவ னென்றுசொல்லி கட்டுரைப்பேன் கஞ்சனுக்கு
என்றங்கு நின்ற எழுவான்றனைத் தடுத்து
நன்றென்று கூரனுடன் நம்பிநகை கற்றுரைப்பான்
யான தண்டிப் போகயிருந்த தனையென்மாமன்
தானதண்டி யாள்விடுத்தால் தாழ்ப்பேனோ வாராமல்
விஞ்சுங் கூரனே மிக்கோரும் கண்டுநிற்க
கஞ்சன் றனையும் கடற்படையும்[5] கொல்லுகிறேன்
என்றான் நெடுமால் கூரனு மேந்தல்தனை
தன்றானைத் தேரேற்றித் தான்சா ரதியாக[6]
தொங்கல்[7] நிகரற்றத் துடிக ளிடிமுழங்க
பொங்கிய சேனை புடையெங்குஞ் சூழ்ந்துவர

---

1. இகல் கடந்த - பகை வென்ற. 2. அம்புயக் கண்ணார் - தாமரைக் கண்ணுடைய கண்ணன். 3 அழகுப் பணி - அழகிய ஆடை அணிகள். 4. காரேறுமேனியான் - கரிய மேகநிற வண்ணன். 5. கடற்படை - கடல்போன்ற படை. 6. சாரதியாக - தேரோட்டியாக. 7. தொங்கல் - மாலை.

மங்கலம் வாழ்த்தெடுப்ப வந்தான் பெருந்தெருவே
அங்கவரைக் கண்டழுது ஆயரு மாய்ச்சியரும்
வன்பேத மில்லா வாசன் வரவிடுத்து
வன்பூதனை யாலும் வல்லசுர ராலுமியாம்
மங்காமல் காத்து மலையால் மழைக்காத்தும்
எங்கேநாம்நாம் போவோம் யாமாங் குடியிருப்போம்
கோதனமும் வேண்டாம் குடியிரோ மென்றுசொல்லி
மாதவன்[1] பின்னே வழிக் கொண்டா ரம்மானை
ஆயரு மாய்ச்சியரும் அங்கவரைப் பின்தொடர
மாயன் விளையாடு மைத்துனமைக் கன்னியரும்
ஆடவனும் நம்மோ டறியாப் பருவமுதல்
கூடிவிளை யாடும் கோமானுடன் போனல்
அங்கவனுக் கொன்றுவந்தா லவ்விடத்தே மாண்டிடுவோம்
தீங்கிலை யாகில் திரும்புவோ மென்றுசொல்லி
ஆரம் விழிசிதறி அவ்வூரி லாய்ச்சியரும்
சேர அவன்ஏகச்[2] சென்ருர் காணம்மானை
தன்னமரி யோன்றன்னைச் சுற்றித் தொடர்ந்துவரும்
கன்னிமார் தன்னில் கமலப் பத்திராட்சியென்பாள்
தேரிற் புகப்பாய்ந்து சீராமன் ருள்பணிந்து
காரிற் குழல்[3] சரியக் கண்புதைய நின்றுரைப்பாள்
அருமாதவ ருன்னை அசோதை வயிற்றுதித்த
ஒருமாதம் பற்றியுன்னை யுளவாறே யறிந்து
செய்யும் தொழில்களும் தின்பனவு முண்பனவும்
மெய்யும் உயிரும் விசாரமும் மற்றுள்ளதுவும்
என் வசமாக்கிப் புணையே பணிந்திருக்கும்
என் வசமாக்கி இணக்கிப் பேர்வீடு[4] தந்து
போகில் போவல்லாது போகவிட்டே னென்பதுமே
ஆகிலப் போவென்று அவனை யுடலுடனே
மண்தின்ருர் கொண்டுநிற்க வானேர் புடைசூழ

1. மாதவன் – கண்ணன். 2. ஏக – போக. 3. காரிற்குழல் – மேகம் போன்ற கூந்தல். 4. பேர்வீடு – சிறந்த மோட்ச உலகு.

எண்ணின்ற வைகுந்தம்[1] ஏற்றிவித்தா ரம்மானை
அங்கவை செய்து அகூரனுடன் சேனையுடன்
பொங்கு மதுரைப்புறங் காஞ்சன மென்னும்
ஆற்றங்கரை யணுகி அங்குவண்ணார்தந் துறையில்
தோற்ற முள்ளப்பட்டுந் தூசுகளும் கொள்ளைகொண்டு
ஆமா றலங்கரித்து அங்குநின்று போகையிலே
பூமாலைக்காரன் புனிதனை வந்து கண்டு
சுட்டியும் சுட்டுந் துடையலுந் தூக்கமுற
பட்டமும், பொட்டும் பலவும் கொடுத்துகந்து
அண்ணலை[2] நன்றாய் அலங்கரித்துக் கைதொழுதான்
கண்ணனு மற்றவர்க்குக் காட்சி கொடுத்தருளி
சேந்து மதுமதுரைத் தெருவே வருகையிலே
சாந்து சவாதுநல்ல வச்சிரநீர்க் கற்பூரம்
கோந்து மிருகம் தங்குங்குடிக் கத்தூரி
கந்தப் பாணிக[3] நீர் கஞ்சனுக்குத்தான் கொடுத்து
ஒப்பித் தடிதொழுது உள்ளபடி சொல்லிநின்றான்
கற்பித்த கூனிமிர்த்துக்[4] கன்னிவடி வாக்கிப்பின்
கஞ்சனைக் கொன்று கடிதழைத்துக் கொள்ளுகிறோம்
அஞ்சனக் கண்ணு யகத்தி லிருமென்று சொல்லி
மேவினார் மேலே விறல்கஞ்சன் சேனையுடன்
ஏவினா னப்போ யிரண்டுநிகர் காரை
சொல் விழாவமுனைச் சுந்தர னென்பானிருவர்
வில்விழாக் கொண்டு மிகுமுழக்கிச் சூழ்ந்துகொண்டு
ஆயருடைந் தோட அஞ்சலென்று கையமர்த்தி
மாயனெதிர் மலைந்து மண்டுயுத்தம் பண்ணினர்காண்
பங்கயக் கண்ணன் பலர்க்கும் பலராகிச்
செங்கையே ஆயுதமாய்[5] சேனையையும் கொண்டுழக்கி
முந்தரமாய் வந்த முரணியனைத்தான் தூக்கி
சுந்தரன்மேல் மோதித் தொலைத்தா னிருவரையும்

---

1. வைகுந்தம் – வீடு பேறு. 2. அண்ணல் – பெருமையுடையோன். 3. கந்தப்பாணி – வாசனை கலந்த நீர். 4. கூனிமிர்த்து – கூனலை நிமிர்த்தி. 5. செங்கையே யாயுதமாய் – முட்டிப் போர் செய்தல்.

வந்தவரைக் கொன்று வருகின்ற மாயவனை
அந்த யிடையர் அணிமஞ்சன மாட்டி[1]
பொன்மணி யாபரணம் பூட்டி யலங்கரித்து
மின்மணிமாட வியன் மதுரை தன்னிலுள்ளோர்
நீடியக் கோடி நெடுந்தெருவி லுள்ளவரும்
கோடி யிரட்டிக் குறுந்தெருவி லுள்ளவரும்
நந்த னிடை[2] வளர்ந்த தேவகி மகனை
அந்தம் பெறக் கஞ்சனழைப்பிக்க வந்தனனும்
வாரும்நாங் காணவென்று மைந்தரும் மங்கையரும்
சாரு நிறத்தானைக் கண்டுகந்தங் கென்சொல்வார்
காமனில்லாக் குடையன் கண்ணன் திருமேனி
தாமரை பூத்ததினிமேகங் காணு மென்பார்
இங்கிவன் பேரழகுக் கேற்றவடி வில்லையோ
சங்கு கலையும் தருவதுபோல் சேர்ந்திடுவார்
மங்கைய துரைக்க மற்றுள்ளோ ரெல்லோரும்
பங்கயக் கண்ணனைப்[3] பார்த்து மிகஉருகி
கயல்மறுகங் கண்ணீர்பனித்த கஞ்சனெனக் கூற்றிருக்கும்[4]
இயம் புறந்தனிலே ஏன்வந்தான் பாவியென்பார்
சங்கிருந்த கஞ்சத் தடக்கையான்[5] பாருமென்பார்
இங்கிருந்த கஞ்சற் கியமனிவன் காணுமென்பார்
எண்ணரும் சொல்ல இலங்குமணித்[6] தேரேறி
சென்றான் வெறுந்தெருவே செங்கண் மாலம்மானை
வஞ்சனையில் வில்வீழ வல்லசுரர் மாண்டதனை
கஞ்சனுங் கேட்டு கலங்கி யிருக்கையிலே
கொந்துகண்ட பைந்தார்[7] குலவேந்தன் றன்னையப்போ
வந்துகண்டான் கேசனென்னும் வல்லசுர னம்மானை
மந்தார வெற்பை வளைத்து முறித்திடவே

1. மஞ்சனமாட்டி – நீராட்டி. 2. நந்தனிடை – நந்தகோன் வீட்டில்
3. பங்கயக் கண்ணன் – தாமரை போலும் கண்ணுடைய கண்ணன்.
4. கூற்றிருக்கும் – இயமன் இருக்கும். 5. தடக்கை – அகன்ற கை.
6. இலங்குமணி – ஒளிர்கின்ற மணிகள். 7. பைந்தார் – பசுமையான மாலை.

சந்திர சூரியரைத் தாக்கவோ சொல்லென்று
வல்லாண்மை[1] சொல்லிநின்ற மன்னவனைப் பார்த்திவனும்
எல்லா மினிது இடைநந்தகோன் மகனை
நம்மூர் புகுந்தான் நலிந்தவரைக் கொல்லுவையாய்
எம்முரு மாயாமல் இருக்கலா மென்றுசொன்னார்
கன்றதில் படியடிப்பேன் கன்றுகொள் ளாயென்றுசொல்லி
குன்றதில் கொடியவெகு கோசனனைத் தானழைத்து
வல்லவகை யதனால் மாயவனைக் கொல்வதற்கு
நல்ல பரியாக[2] நான்வடிவு கொள்ளுகிறேன்
கிளர்ந்த பரியைக் கிருஷ்ணன்முன் கொண்டுசென்றால்
இளந்தலை யென்றுசொல்லி யென்மேலே யேறிடுவன்
மற்றவனை நான் வல்ல மாயத்தாலே கொடுபோய்
கொற்றவன்முன் காட்டிக் கொடுப்போ மெனச்சொல்லி
வாகுமலை யனைய வல்லசுரன் கேசனனென்பான்
மேக வண்ண[3]மான மிதுதுரங்க[4] மாகிநின்றார்
அலக்கணினை மயிற்பு அச்சமற்றுக் குற்றமற்று
இலக்கண முண்டான் ராசபரி[5]யாகி நின்றார்
கம்பிற் கடிவாளம் கச்சைசல்லி பொற்கவசம்
செம்பொற் கலனைமணி சிக்கென்னத் தான்பூட்டி
இரவி புரவியிலும் இந்திரன் மாக்களிலும்
தரவிய ரூபமுடன் சஞ்சிவிற்றுக் கொஞ்சிவர
தம்பிரா னை தனிநெடுமால் தன்னெதிரே
நம்பிரான் றன்னை நடத்திவித் தானம்மானை
சிகர மணியணியுந் தேரிலும் நின்றிரங்கி
நகரி சனங்[6]காண நடந்துவரும் நாயகனை
பரனுடைய[7] சோதிப் பணியணிந்துப் பூச்சூடி
கால்நடையே வந்தால் கவனமில்லை யென்றுசொல்லி
பரிமாவி[8] லேறுமென்று பண்ணுவான் கைதொழுது

1. வல்லாண்மை – மிக்க ஆற்றல். 2. பரியாக – குதிரையாக. 3. மேக வண்ணம் – மேகத்தின் நிறம். 4. துரங்கம் – குதிரை. 5. ராசபரி – அரச இலக்கணமுடைய குதிரை. 6. நகரிசனம் – நகர மக்கள். 7. பரனுடைய – கடவுளுடைய. 8. பரிமாவில் – குதிரையில்.

அரிமாயவனு மவனை முக னோக்கி
கடியகுதிரை தன்னைக் கண்டால் பயப்படுவோம்
இடையமக்கள் நாங்களிதை யேற்றிடு வோமோ
மெள்ள யெடுத்துவைத்து வீழாமல் கைப்பிடித்து
துள்ளாம லோடாமல் தொடர்ந்து நடத்துவையால்
இக்குதிரை மேலே யிருக்கலா மென்றுசொன்னார்
அக்குதிரை மேலே அவனெடுத்து வைக்கவென்று
எடுத்தா னெடுக்க வொண்ணு திடையொடிந்துகீழ்விழுந்து
துடித்தா னசுரன் துஞ்சினா[1] னம்மானை
வெருகோசனன் சாக வெருண்டு பரிதானோடே
புகுகேசனைப் பிடித்துப் பூண்முதுகி லேற்றி
நாலாறு சாரிகளும் நால்வகையுந் தானடித்து
காலாற வெட்டான் கசம்பறியத் தானடித்து
ஆசனம் பற்றாமல் அதுக்கினா னவ்வளவில்
கேச[2]னுயிர் போய்க் கிடந்தான்கா ணம்மானை
சீராமன் தன்னைத் திருமஞ்சன மாட்டி
ஊராய ரெல்லோரும் ஒப்பனை செய்பளவில்
பாடிப்[3] பயிலும் பரியு மடிந்ததனை
ஓடிப்போய்க் கஞ்சனுட னோதினன்கா ணம்மானை
கவலை பெரிதுடைய கஞ்சனு மற்றிவனை
குவலயா பீடத்[4]தால் கொல்லிவிடப் போவென்றுசொல்லி
தாழ்த்த மிடுக்க சாதிபல னென்பானை
அழைத்தருளிக் கஞ்சனவனுக் கெடுத் துரைப்பான்
இந்திரனை வென்றம் இமையோரை ஈடுசெய்தும்
அந்திரமே வந்திழந்த ஆனையென்னுங் கூற்றுவனை
கொண்டுபோ யாயரையும் கோநந்தன்[5] மைந்தனையும்
மீண்டு போர்செய்து மிதிப்பித்து வாருமென்று
ஆதித்தர்[6] தோன்றிய அண்ட மிரண்டினையும்

---

1. துஞ்சினான் – இறந்துபட்டான் (மங்கலச்சொல்) 2. கேசன் – பரியாய் உருவம் எடுத்த அசுரன். 3. பாடி – பாசறை; போர்வீடு. 4. குவலயாபீடம் – யானையின் பெயர். 5. கோநந்தன் – இடையர் குலத்தில் தோன்றிய நந்தகோபன். 2. ஆதித்தர் – சூரியர்.

ஆதி பிரமன் மனமயிற் பத்தியினால்
வலக்கையில் ஆண்டிற்றில் வந்துற்ற மற்றகேச
குலக்கயங்கள்[1] தயங்க குத்திக் கொலைசெய்து
நூறாயிரங் களிற்றி னாற்ற மிடுக்குடைய
ஆறால்வருஞ் சீற்றத்தா லவ்விலங்கில் நிற்பதனை
கம்பத்தின் சோவைவிட்டுக் காலில் விலங்குவிட்டு
வெற்பொத்த[2] கூற்றை விலங்குவிட்ட வாறதுபோல்
தம்முழ மன்று முழமதாமே யொருமுழமாய்
ஏழரைச் சுற்று மெழிலுயற்றி யொன்பதுமாய்
நீழவரைக் கப்புவிட்டு நெற்றியில் மேலந்தமுமாய்
மெற்றாரை மும்மதமும்[3] வேலையிலே மேகமிடும்
நிற்றாரைப் போலே நெடிய துதிக்கையுமாய்
கூறுடைய கொட்டுக் குவலயா பீடமென்றும்
பேறுடையானை தன்னைப் பித்தேற்று மவளாய்
கஞ்சா மதமத்தைக் கற்றாழைக் கள்ளுடனே
அஞ்சா மதமிட்டு யமுதுக் கவளமிட்டுத்
தென்னை யிளங்குருத்தும் தினைச்செந்நெல் வேய்க்குருத்தும்
கன்னல் கட்டோ[4]டுங் கடிக்கரும்புந் தானருந்தி
பொன்னணி யோடைப் புரசமணிப் பூட்டி
அன்னதுக்குத் தக்க அணியா லலங்கரித்து
மெய்க்குக் கவசமிட்டு மிக்காயுதஞ் சுமத்தி
கைக்கு முசலம் வைத்துக் கத்தியுங்கோடம்வைத்து
வேகமுடைய வெகுகளிற்றைப் போர் பயிற்றி
தாகமுடைய கேசாதி பலனென் பான்
அண்டிய பேரரக்கர் ஆயிரம்பேர் சூழ்ந்துவர
கொண்டு சென்றான் வீதியிலே குஞ்சரத்தை[5] யம்மானை
கால்கடுகி வால்நிமிர்ந்து கண்கள் சிவப்பெறிந்து
பாகர் சிலரைப் பலதிக்கும் பிய்த்தெறிந்து

---

1. கயங்கள் – யானைகள். 2. வெற்பு – மலை. 3. மும்மதம் – கன்னமதம், கபோலமதம், பீஜமதம் ஆகிய மும்மதமுடைய யானை, 4. கன்னல்கட்டு – கரும்புக்கட்டு. 5. குஞ்சரம் – யானை.

செந்தூளி யாடி திசையெங்கும் கைநீட்டி
வெந்தீ வருவதுபோல் வீதியிலே கண்டவர்கள்
வெண்பிறையைக் கவ்வியொரு மேகம் வருகுதென்பார்
கண்புதைய மிங்கோர் கருமலை போகுதென்பார்
நீலக்கட லெழுந்து நேரே வருகுதென்பார்
சோலைக்குலங்க ளெல்லாம் துறந்து நடந்ததென்பார்
கோபாலர்க் காவலனைக் கொல்லுவிக்கக் கஞ்சன்விட்ட
மாபாவி யானை வருகுதென உள்ளறிந்து
ஓடிக் கதவணைப்பார்[1] உப்பரிகை[2] யேறிடுவார்
ஆடிப் பதறுவா ரருகுவர அஞ்சிடுவார்
மஞ்சைப் பிளந்தும் வருங்காற்றாய் குணணிடித்தும்
இஞ்சிக்[3] கதவுமனை யெல்லாம் யெடுத்தெறிந்து
கோறப் பாகரைப் பிளந்து கூறும்பெருந்தொட்டில்
ஆய்ப்பாடி மன்னன்முன்னே யானைவந்த தம்மானை
கண்டாய ரெல்லாங் கலங்காமல் கையமர்த்தி
பண்டானை வென்ற பலதேவனை யழைத்து
சவ்வானை யானை யெளிதல்ல எண்டிசையில்
அவ்வானை யோடே அயிராபதத் தினையும்
வென்று விசையும் விடுத்தந்தக் கஞ்சனையும்
சொன்னதற்பின் யாவரையும் கூட்டிவா வென்றுசொல்லி
ஆயற் கவனை யணிகாவலாய் நிறுத்தி
போயக் களிற்றுடனே போர்மலைந்தா ரம்மானை
தீயக் களிற்றால் வந்த சிகரத்தின்மத்தகத்தை
ஆயக் களிறு காலால்அழுந்த உதைத்தருளி
கும்பத்தில் தட்டிக் குலையிலடி வயிற்றில்
செம்பொற் பதத்[4]தாலே சிக்கென்ன தான்மோதி
சுற்றித் திரிந்தும் துதிக்கையில் பட்டகன்றும்
பற்றிப் பொருதும் பணைமருப்பின்[5] மீதிருந்தும்
மேலிற் றிரிந்தும் வெளியெங்குந்தான் துவைத்தும்

---

1. கதவணைப்பார் – கதவை மூடுவார்கள். 2. உப்பரிகை – மேல் மாடம். 3. இஞ்சி – மதில். 4. பதம் – பாதம், அடி. 5. பணை மருப்பு – பருத்த தந்தம்.

சூலித்தடித்து மகப்படா தொட்டெடுத் தும்
பாய்ந்து போர்கண்டு பாகனும் கோபமுற்று
காய்ந்து களிற்றை கணப்பினுற் காலோச்சி
அங்குசத்[1] தால் தாக்கி அசலம்[2] போலேதிரியும்
வெங்களிற்றை யுட்சுருக்கி வெரிவெளிர்போல் சுத்தவிட்டு
எவ்வாகு மென் றேர்ந்தில னவ்வளவில்
அவ்வானைக் கையி லகப்பட்டா னம்மானை
சீர்பாத மேலா திருமவுலி[3] கீழாக
ஆபாத யானை அவனை வளைத்தெடுத்து
கார்மேனி யானைக்[4] கண் மருப்பின் மொச்சிபற்றி
தேர்வீதி யெங்குந் திரிந்தது காணம்மானை
விஞ்சிய கோபுரத்து மேடையிலும் நின்றவர்கள்
குஞ்சரக் கொடியிடையேர் கோமானைக் கண்டிறங்கி
நெஞ்சங் குழைவார் நெடுங்கண்ணீர் சோர்ந்திடுவார்
தஞ்சந் தரியார் சருவேசுர ரென்பார்
வேரா[5] நடுங்குவார் வேதாவை நொந்திடுவார்
போரானைக் கையில் பிழைத்த வாரென்றிடுவார்
கொம்பில்பட்டா னென்பார் குற்றுயி ரின்னமென்பார்
நம்பிப்பட்டா னென்று நகரிசனம் சொல்பளவில்
பாற்கடல் போலவெண்ணை பயிலும் பணைமருப்பி
மோக்கிழுந்த கொற்றவனு மேதுசெய்வா னம்மானை
வழுவி மதகரியை வஞ்சித்துக் கோட்டி[6] லுந்தான்
நழுவி விழுந்து நகைபுரிந்து நாயகனும்
கருமேக மீன்றதொரு கன்று போலங்குநின்று
பொருவேக யானையுடன் போர்தொடங்கி யேதுசெய்தான்
கைநீட்டிக் கைநீட்டும் கால்நீட்டிக் கால்நீட்டும்
மெய்நீட்டி மெய்குறுகி வெந்தினிற் போயொதுங்கி
மாயப்போர் செய்தியென மாவுத்தன்[7] கண்ணழன்று

---

1. அங்குசம் – யானையை அடக்கும் தோட்டி. 2. அசலம் – மலை. 3. திருமவுலி – தலைப்பகுதி. 4. கார்மேனியானை – கருநிறமுடைய கண்ணனை. 5. வேரா – வியர்த்து. 6. கோடு – கொம்பு; தந்தம். 7. மாவுத்தன் – யானைப்பாகன்.

காயக் கரியைக் கடுங்கோப முண்டாக்கி
எத்தனைக் கோடி யானைத் தொழிலுண்டு
அத்தனையும் கொண்டு அட்டுவிற் றனம்மானை
அவ்வகைக் கெல்லாம் வையவையாற் றப்புவித்து
செவ்வையில் நின்று திருநெடுமா லேதுசெய்தான்
கொம்பைக் கையால்பற்றிக் கும்பத்தி னேடறைந்து
தும்பிக்கை தன்னை துணித்து நிலத்தறைந்து
ஈரிரண்டு காலினையும் ஏற்றின னவ்வளவில்
காரு[1]ருண்ட தென்னக் கரியுருண்ட தம்மானை
நிலையற்று நீச்சாக நீண்ட குருதி[2]யெங்கும்
மலையிக் கைதிறந்து வல்லருவி வாரதுபோல்
அங்குற் றெழுங்குருதி அங்கங்கே ஆறாகி
துங்கப் பணைமருப்பின் சுற்றெங்கு முத்துதிர
தலையொடிந்து காலொடிந்து தந்தங்கள் தானொடிந்து
மலையொடிந்து வீழ்ந்ததுபோல் மாண்டதுகா ணம்மானை
குவலயா பீடத்தைக் கொன்று கொழுங்குருதி
திவலையில்[3] மூழ்கிச் சிவந்துநின்றான் சீராமன்
............போலவடந்து மக்கள்............னை
பாகனைப் பேசாமல் பற்றி வளைந்துகொண்டு
முடித்த மயிர்பிடித்து மோதி நிலத்துடனே
பிடித்திரு கூறாய் பிளந்தெறிந் தாரம்மானை
அவ்வாறு கண்டு அறிவாகி வுற்றரசர்
செவ்வாய் மணியைத்திரு மஞ்சன மாட்டி[4]
ஆபரணம் பூட்டி அமுதுசெய்யப்[5] பணிவித்து
சாபமுற வளைத்து தாமும்அமுதுணப் போந்தார்
அரிவெட்டி பட்டதுபோல் அச்சுதன் வாரதுவும்
கரிவேட்டை யாடியதுங் கண்டுநின்றார் கற்றீர்பர்
போந்து அடிமையுடன் பொன்னாசனத் திருந்தார்
காந்து மன[6]சுடைய கஞ்சனுட னேதுசொல்வார்

---

1. கார் - மேகம். 2. குருதி - இரத்தம். 3. திவலையில் - அலையில். 4. திருமஞ்சனமாட்டி - நீராட்டி. 5. அமுது செய்ய - உணவருந்த. 6. காந்துமனம் - சீற்றம் மிக்க உள்ளம்,

வல்லசுர னென்றும் மலைவெல்லந் தின்றசிங்கம்
வெல்கரி[1] யைக் கண்டால் விடுமோ விழுங்காமல்
கரியையும் பாகனையும் கட்டழித்து மீளாதே
எரி[2] யையும் போல்விழித்து இங்கேயும் போதுநின்றான்
செயிர்த்தங்[3] கவனுடனே சேனையுடன் சென்றிருந்து
உயிர்த்துச்[4] செயவல்ல துனக்குற்ற செய்யென்றுசொன்னார்
மற்றது சொன்ன மகிபனைக் கஞ்சனென்பான்
கொற்றவுடை வாளால் கூறுசெய்த வேளையத்தே
சொல்லரிய பேர் துவக்குண்ட மேருவினில்
வல்லுரத்[5] தால் குற்றி வழிகண்ட முட்டிகனும்
அங்கது மண்டி அகிலமெல்லாங் கொள்ளைகொண்டு
தாங்கி வலிநிறுத்தும் சண்டவலி சாணூரனும்
வெல்யுத்தம் செய்து மிகுமலைபோல் தோள்புடைத்து
மல்யுத்தம் விட்டெழுந்து வந்தார் காணம்மானை
ஏவினான் கஞ்சன் எழில்வண்ணன் மேலவரை
மேவினார் போயவனும் வீதியிலே வாரவனை
உரவோனே[6] யெம்மில் ஒருவனுடன் யிவ்விடம்நீ
தரவேணும் மல்யுத்தம் தந்தானெனுந் தோள்புடைத்து
மண்ணாடி மைந்தரோ மாடாடு மேய்ப்பதல்லால்
ஒண்ணாக மல்யுத்தம் ஓர்பிறப்புங் கண்டறியோம்
நற்படியோ டெங்களைநீர் நாடிவந்தீ ரிப்போது
மற்போர் வேணுமெனில் வாருமென்று மாதவனும்
வன்கச்சை கட்டி மணிவளையுந் தோள்வளையும்
ஒண்கைக் கணிந்து உறுப்பெங்கும் வெண்ணெயிட்டு[7]
நேத்திரத்துச் சென்னிக்கு நீள்குருளை தான்கட்டி
சாத்திரத்தி லுள்ளபடி தானுமுற வணிந்து
மலிப்போருக் கானவகை யெல்லாந் தான்புனைந்து
கலிப்போர் புயங்கள் கலிக்கப்[8] புடைத்தார்த்து

---

1. வெல்கரி – வெல்லும் யானை. 2. எரி – நெருப்பு.
3. செயிர்த்து – கோபித்து. 4. உயிர்த்து – பெருமூச்செறிந்து.
5. வல்லுரம் – வன்மையான மார்பு. 6. உரவோன் – ஆற்றல்மிக்கோன்,
7. வெண்ணெயிட்டு – நெய் பூசி, 8. கலிக்க – பூரிக்க,

தாழ்விற் றளஞ்செய்து தாடைதனை யங்கமுற்று
வாழுங் குறங்[1]கொதுங்கி வல்லுறுப்புத்தான் குமைத்து
சேமமுறுவல் செய்து திரு......... மேலேற்றி
கைமுறுவல் மெய்முறுவல் கண்கள் சிவப்பெறிய
மன்னின்றார் கண்களிப்ப துடைவெல்லாம் செலுத்தி
முன்னின்ற மாதவனை முட்டிகனும் பார்த்துரைப்பான்
அல்லி யிடையர் மகனல்லக்கா நீயறிவாய்
மல்லர்[2] மகனேகாண மல்லர்க்கு முன்போதாது
சாத்திரங்கள் கற்றாலும் சற்று முனைப்போலே
சூத்திரம் கற்றாரைத் தொல்லுலகில் கண்டறியோம்
என்றாலு மிப்போ சிங்கங் கைப்பட்ட
கன்றானைப்[3] போலெனது கைப்பட்டா யென்றுசொல்லி
மோதினன் முட்டிகனும் முண்டகத்தாள்[4] கோமானை
காதினன் மற்றவனைக் கார்மேனிக் கற்பகனும்
மலையிரண் டென்ன வடவை யிரண்டென்ன
அலை[5]யிரண் டென்ன அரியே றி[6]ரண்டன்ன
தாக்கினன் வானத் தலைவர் தலைபணிப்ப
ஆக்கினன் மற்போ ரடைவடைவே யம்மானை
சிரத்தா லுறப்பாய்ந்து திண்டோளா லீடுசெய்து
கரத்தால் பணித்தும் சுழற்றியும் காலவளைத்துத்
தாங்கிப் பலபோருந் தம்மில் சரிபோராய்
வாங்கிப் போய்நின்று மறுகாலு மேதுசெய்தார்
தங்கவுரு விடிபோல் தோள்தட்டி ஆர்ப்பரித்து
தங்கள் மனமிடுக்காய் ........... ரைம்மானை
மலையிரண்டுங் கோனெனவு ......... .. யொன்றின்
தலையிரண்டு தானெனவும் தம்மிலுறத் தழுவி
ஒருவர் விழுந்தும் ஒருவரதின் மேற்புரண்டும
ஒருவர் தளர்ந்தும் ஒருவர் மனந்தெளிந்தும்
ஒருவ ரெடுத்தெறிய ஒருவர் புடைபுரண்டும்

---

1. குறங்கு - தொடை. 2. மல்லர் - மற்போர் செய்பவர். 3. கன்றானை - இளம் யானை. 4. முண்டகத்தாள் - தாமரைபோன்ற பாதம். 5. அலை - கடல். 6. அரியேறு - சிங்கம்,

ஒருவர் கையில்குத்தை ஒருவர்கையில் தான்பிடித்து
வாக்கா விடியெழுப்பி[1] மார்பாலகக் கனலெழுப்பி
மூக்கால் புகையெழுப்பி முட்டியுத்தம்[2] செய்கையிலே
கட்டி யெடுத்துக் கரியோனைக் கீழாக்கி
முட்டிகன் மேலிருந்து மூரித்தோள்[3] தட்டயிலே
மாற்றான் முகம்நோக்கி மாதவனு மேதுசொல்வான்
தோற்றார்கள் தொழிலைத் தொழிலிட்டான் செய்திடுவேன்
நீயென்னை வெற்றிகொண்டு நீங்குதியோ வென்றுசொன்னான்
மாயவன் மேலிருந்த வல்லசுரன் ஏதுசொல்வான்
கூடுமிப் போர்காணக் கொலைக்களத்தி லுன்னையிப்போ
ஏடுவிப்பே னல்லாமல் விடுவேனோ யென்றுசொன்னான்
வீரனுந் தான்சொல்லி மேலிருந்த முட்டிகனை
போரிற் புரண்டெழுந்து பின்கழன்று முன்சமைந்து
முட்டிகனைச் சேந்தான் முனிந்து சாணூரனென்பானை
வட்டி முதுகைக் கரங்களாலே நெரித்தான்
இருமலை தாக்க யிடைநின்ற மாமலைபோல்
மறுமலர் தண்டுளப[4] மாயனு மேதுசெய்தான்
முன்னான் முகற்கு[5] முன்போல முன்னிற்கும்
பின்னான சாணூரனைப் பேராமற் போர்மலையும்
ஒருவரோடு நின்றான் ஒருவர் பொருதார்போல்
இருவரோடு மற்போர் யியற்றினர் காணம்மானை
திறம்பா[6] தெதிர்நின்று செங்கமலக் கண்ணினனும்
புறம்போன வரைப் புயங்களால்[7] மோதுவித்தும்
கையை யொடித்து மகன்மொழியைத் தான்பெற்றும்
மெய்யையுற நெறித்தும் வெம்போர் விளைக்கையிலே
தூளிசுடர் மறைத்த சூழ்மதுக்கள் தூளெழவோ
காளிகலிந் தெழவே கண்டார் வெருண்டகன்றார்
அந்நேரந் தன்னில் அசோதை திருமகனும்

---

1. வாக்காவிடியெழுப்பி - இடிபோன்று கடுங்குரலெழுப்பி.
2. முட்டியுத்தம் – கைப்போர். 3. மூரித்தோள் – பூரிக்கும் தோள்.
4. தண்டுளபம் – குளிர்ந்த துழாய்மாலை. 5. நான்முகன் – பிரமா.
6. திறம்பாது – புறமுதுகிட்டு ஓடாது. 7. வரைப்புயங்கள் – மலை போன்ற புயங்கள்.

முன்னே பொருகின்ற முட்டிகனை யேதுசெய்தான்
வீணைகப் பாசமெனும் கட்டாற் பூட்டுதலும்
பூணைக முன்னெருங்கி பொங்குதிரங் கண்பிதுங்கி
மாமலை வீழ்வதுபோல் மண்மேலுற விழுந்தார்
தாமனு மவ்வளவில் சாணூரனைத்தான் பிடித்து
கையில் கைகோத்துக் கடுந்தரையில் மோதுதலும்
குப்பிக் கவிழ்ந்துடலம் கொப்பளித்தா னம்மானை
கல்லென்ற திண்டோள் கரியமால் கையாலே
மல்லரிரு வோரும் மாண்டனர் காணம்மானை
அங்கவரைக் கொன்று அழியாத கோபமுடன்
செங்குருதி யாடித் திருமேனி தூள்மூடி
வெந்திறல் வேந்தருடன் வீதியிலே வாரவனை
சுந்தரச் சோபையுடன்[1] சொர்க்கந் திளமுகியும்
கற்புடைய மாதர் கமலாட்சியும் பணிந்து
பொற்புன லாடுவித்துப் போனக[2]மும் பண்ணுவித்து
ஆம்பணி கொண்டு அலங்கரித்துத் தெண்டனிட்டான்
காம்பணி தோளாரைக் கண்ணனும் கண்டுகந்து
இன்றுமுத லெனக்கே யேந்திழையா யிங்கிருந்து
பொன்றுதவும் வைகுந்தம் போய்ப்புகுவ ரென்றுசொல்லி
கச்சைத் தலையாடக் காதிலிட்ட குண்டலமும்
செச்சைத் துடையும் திருப்புயமுஞ் சீராட
தும்பி[3] புடை பாடத் தோகைநல்லாள் கொண்டாட
நம்பி[4] தெருவே நடந்துவரத் தான்கண்டு
போந்து மிருவினைய பூஷனுந் தானொருவன்
காந்து மன[5] துடைய கஞ்சனுற் றுரைப்பார்
ஆதிக் கடவுளோர் அன்னளா யின்றளவும்
வாதிக்க வொண்ணாத மல்லரையும் கொன்றுழக்கி
ஆறாத கோபமுடன் அந்நாளுனை நாடி

---

1. சுந்தரச் சோபையுடன்-அழகான தோற்றத்துடன். 2. போனகம்-உணவு. 3. தும்பி - வண்டுகள். 4. நம்பி - ஆடவர்களிற் சிறந்த கண்ணன். 5. காந்துமனம் - வெதும்பும் உள்ளம், அழுக்காறு.

வாரானெனக் கேட்டு வனக்கஞ்ச னேதுரைப்பான்
இங்கே பசாரிக்க யேவினு னல்லாது
அங்கவரைக் கொண்டோ அரசாண்டேன் மூவுலகும்
என்றவன் சொல்லி யிருக்கின்ற வேளையத்தே
துன்னு மிடுக்குடைய சுந்தோப சுந்தரென்பார்
சந்திர சூரியர்கள் தோற்றிலரோ யெங்களுக்கு
பன்னு ளியற்று மெங்கள் பற்றுக்கி யிம்பொழுது
மன்னு வுலகில்[1] மனிதரோ மாருச்சு
காவலன்பின் மற்றவனைக் கட்டிக் கொடுவாரேும்
ஏவும்……… மேலெம்மை யேவினன் காணம்மானை
மேற் பூணணிந்து[2] மிருகச்சை[3] தான்கட்டி
கற்பூரப் பொற்புளகக் காப்பாடையும் புனைந்து
பார்த்திபனேவ மந்திரத்தை நகை விதிர்த்து
போய்த் திருமாலைப் புரவளைத்தா னம்மானை
எங்கள் தொழிலன்றி யாமறியாக் காரியத்தை
அங்கம் பொருகைக் கழக கீறிர மாகில்
வாரும் போர்வென்று மாயவனும் சம்மதித்து
காரும் பொன்மேனியான் கச்சைகட்டி முற்றிவிட்டு
தண்டை வளையில் தடமுளகை மீதணிந்து
கண்டல முள்ளாக்குப் பாசந்தான் புனைந்து
சுடர்வயிரத் தாரை சுரிகை[4] தனை யுருவி
திடமொடு கைக்கொண்டு திருமுதுகு தானளித்து
செய்ய கருத்திறுகத் திருப்புருவ மேலேற
மாலடி கொட்டி வலதுகை கால்முன்னாக
நாலடி கட்டி நடந்தெதிரே தாக்கலுமே
சூழ்ந்து கரியோனைச்[5] சுந்தோப சுந்தரனும்
கூர்ந்து பலவகையால் குத்தினர்கா ணம்மானை
தொட்டு நடந்தும் சுரிகையால் குத்துகளை
தட்டியும் மெய்நெரித்துந் தாழ்ந்துமிழப் பாய்ந்தும்

---

1. மன்னுவுலகு – நிலையில்லாத உலகம். 2. பூண் – ஆபரணம். 3. கச்சை – வீரர்கள் இடையில் இறுக்கிக்கட்டும் வார். 4. சுரிகை – உடைவாள். 5. கரியோனை – கருநிறமுடைய கண்ணனை.

சங்குக் கரத்தானும் தண்டிவந்த தானவரும்[1]
அங்கத் தொழிலினடை வெல்லாங் குத்துதலும்
தப்பாச்ச லொன்ருலே தாமன் சுரிகையினல்
துடைப்பாச்ச சுந்தோன் துஞ்சிவிழுந்து பின்பு[2]
உற்றதனை மீள ஒருகால் புறம்வீச
மற்றவனும் வீழ்ந்தான் மலைபோலே யம்மானை
துய்ய சுரிகையினல் சுந்தோப சந்தனையும்
செய்ய[3] திருமால் சிறுபொழுதில் கொன்றயர்ந்து
கோலால வாசுகியின் கோள்வாயிலே பிறந்த
ஆலால மென்ன அன்ன வரக்கண்டு
மாகும் போலோடி மகீபதனென் பானெருவன்
கூறுதன்போல் கஞ்சனுக்குச் சொன்னன் காணம்மானை
சொன்னவனைக் கோபித்துச் சொற்கஞ்ச னேதுசெய்தான்
முன்னமி யான்விடுக்க முனரு பலனு .....ம
சொல்லரிய பேய்முதலாச் சுந்தர னீருக
மல்லசுரன்[4] எண்ணிறந்தார் மாண்டா ரிவனலே
இங்கே பசாளித் தினிதுரக வார்த்தைசொல்லி
அங்கே விடுத்தா லவன்கையால் மாண்டிடுவார்
மற்ருயன் தன்னை வதைப்பேணி யானேய
பற்ருரை[5] யேவிப் படக்கொடுக்கத் தேவையில்லை
மண்ணுடர் வந்தெனக்கு வாசல்முறை செய்ததுவும்
விண்ணுடர்[6] வந்து மிகுகப்பம் கட்டுவதும்
அத்தி[7] யெழு பத்தாருயிரத்தை வெல்ல வல்ல
சத்திகொடு வல்லாது தந்தா ரொருவருண்டோ.
ஏழுவயது முதல் எண்ணவெண்ணு தின்னளவோ
வாகு பிலத்தை மறிக்கவல்லா ருண்டாச்சே
இன்றிவனைக் கொன்று யானுலகை யாளும்வகை
கன்று முடியரசர் கண்டிருங்கோ ளென்றுசொல்லி

---

1. தானவர்–அசுரா. 2. துஞ்சிவிழுந்தபின்–இறந்தபின் (மங்கலச் சொல்) 3. செய்ய – சிலந்த. 4. மல்லசுரன் – மல்யுத்தம் செய்தலில் வல்ல அசுரன். 5. பற்ருர் – பகைவர். 6. விண்ணுடர் – தேவர்கள் 7. அத்தி – யானை.

மினகச் செறிசிங்க விரர்சனங் குதித்து
பொன்கச்சை கட்டிப் புக்கருவாள் பூரித்து
வங்கப் பருதியும் வார்சிலைக் கலாபமும்
நற்றுங்கக் கலாபமுடன் தோள்வளையும் தோளணிந்து
மவுலி[1] புனைந்து வகைமாலை தான் புனைந்து
சவலிக் கடுக்கனுடன் சன்னவீரம் புனைந்து
மருவ மிருள கல்லோனோர் திறையளித்து
சருவா பரணத்[2] தால் தன்னுடம் பெல்லாமறைத்து
விரக......... ............ ............ யந்தானனிந்து
மார்புக் கிசைந்தகன வச்சிராங்கித் தோணிந்து
வெற்றிப் படையரசர் வேல்வேந்தர் மண்டலிகர்
சுற்றிவர வீரத் துவசம்[3] விசும்[4] பளக்க
வெங்கவரிக்[5] காலசைப்ப மிக்ககுடை நிழற்றச்
சங்கப் படாகம் தலமதில் ஆர்ப்பரிக்க
அம்புமுனை திருத்தி ஆயுதமெல்லா மெடுத்து
செம்பொன் சிலையைச்[6] சிறுநாணொலி யெறிந்து
மாசோன னற்றுலே மயனுல ............ற்ற
யோசனை மூன்றுயர்ந்த உப்பரிகை மேலேறி
எண்ணப்படாச் சேனை யெத்தனையுன் டத்தனையும்
வண்ணக் கரியநிற மாதவன்மேலே யேவி
தரணியில் மன்னவனும் தானும் பொன்மேடையிலே
இரணிய வெற்பில்[7] எழுகின்ற சூரியன்போல்
வீறன செம்பொன் விளங்குசிங் காதனமேல்
ஏருகக் கஞ்சன் இருந்தான்கா ணம்மானை
பொன்செய்த மாளிகைமேல் பொற்கோலம் கண்டுநின்ற
கஞ்சனைக் கண்டு கடுநரகி லுள்ளவர்கள்
சாலமனந் தளர்ந்து தம்மிலே யேதுசொல்வார்

---

1. மவுலி - சென்னி. 2. சருவாபரணம் - மிக்க ஆடை, அணிகள். 3. வீரத்துவசம் - விரச் சின்னமாகிய கொடி. 4. விசும்பு - ஆகாயம். 5. வெங்கவரி - வெண்மையான மான் மயிர்க்கற்றை. 6. செம்பொன் சிலை - செம்பொன்னலான வில். 7. இரணியவெற்பு - பொன்மயமான மலை.

ஏலன்பழி கொண்ட பாவிபழி காரன்
உற்ற திருவு முடன்பிறந்த பெண்டுகளும்
பெற்ற பிதா[1]வும் பெருஞ்சிறையிலே கிடக்க
தாரணியை யாளுந் தறு கண்மை[2] போதாமல்
ஆரணியத்தே யிருக்கும் ஆயரிடத்தே வளர்ந்த
அச்சுதனைக்[3] கொல்ல அழைப்பித்தான் காணுமென்று
கச்சுவிழி நீர்சொரிய நாரணனைப் பார்த்துரைப்பார்
கஞ்சனே யென்னுங் கடும்பாவி தான்செய்த
வஞ்சனையும் மன்னன் வரலாறு கேளுமென்று
ஓதுவார் மற்றிவனை உக்கிரசேனன் பெற்று
சூதுமன துடைய துட்டனென உள்ளறிந்து
ஓர்கஞ்சப் பாத்திரத்தி[4] லுடக்கிடத்திப் போட்டமையால்
பேர்கஞ்ச னென்றவனைப் பேரிட்டழைத் தார்கள்
ஏகவயதி லியவுதனைப் பிளந்தான்
ஆகம் நிரம்புதன் முன்சிங்க வாகனனை
சங்காரஞ் செய்து பின்னுஞ் சந்திரசூரியர்போற்
பொங்காமற் கொன்றவர்க்குப் போர்வேந்தன் வாழ்கின்ற
னற்சுரர் வங்கிஷத் திலங்கு அசுமானதனையும்
கொன்று சமாலியையுங் கொன்றகுலந் தனக்கு
தானரசு செய்தான் சதுப்புவியுந் தானுன
வானவனே[5] டிந்திரனை மாறுதலிலே கொண்டார்
எழுபத் தாயிரம் யானை மிடுக்குடையான்
பழுத்தத் தன்தங்கை பாலா லனைவரையும்
மாயவதை[6] செய்தான் மற்றோர் குழந்தைபிழைத்து
ஆயர்வளர்த்தார் அவன்தனையும் கொல்ல வெண்ணி
அங்கே வினைபடர்ந்தான் அங்கும் பிழைத்ததுகண்
டிங்கே யழைத்தா ரிடர்செய்யக்[7] காணுமென்பார்
தேவகி மைந்தன் செயஞ்செய்து தான்பிழைத்தால்

1. பெற்றபிதா – வசுதேவன். 2. தறுகண்மை – ஆற்றலுடைமை.
3. அச்சுதன் – கண்ணன். 4. கஞ்சப் பாத்திரம் – வெண்கலப் பாத்திரம்.
5. வானவன் – தேவர்கள். 6. மாயவதை – மாயமாகக் கொலை.
7. இடர்செய்ய – துன்பம் செய்ய.

பாவக மன்றிப் பலதேவர் கண்களுக்கும்
திக்கார் கடவுளர்க்கும் சீர்செய்வோ மென்றிசைவார்
துக்கார் மகன்தனக்குத் தூங்கித்தலை நேர்ந்துகொள்வார்
எங்கெங்கு முள்ளோரு மிவ்வா றிருக்கையிலே
அங்கதனை வென்ற அய்யனு[1]க்குத் தான்துணையாய்
தந்த வசுதேவன் தம்பிதற் றாசனுடன்
அந்த மாபிலுள்ளோர் ஆருங் கூரனுடன்
தங்கள் கடற்படையும் தாங்களும் வந்துகண்டு
பொங்க முழுக்காட்டிப்[2] போனகமுஞ் செய்வித்து
தாமாமணி சுகந்த மதானைபல பூஷணத்தால்
ஆமா ரலங்கரித்து ஆயுதங்களும் கொடுத்து
தங்கள் பெரும்படையும் தாமும் துணையாகத்
துங்க நெடுமாலைச்[3] சூழ்ந்துவந் தாரம்மானை
கூற்றுவன் போல்வெட்டக் கொளகை போல்வாரவனும்
ஏற்று வந்த கஞ்சனெனவுங் கடற்சேனை
நோக்கினார் கண்ணும் நுழையாமற் றுன்னிவந்து
தாக்கினார் தேவர் தலைபணிப்ப அம்மானை
ஆனையுந் தேரு பரியுங் காலாளும்
சேனையுமாகத் திருமாலைச் சூழ்ந்து கொண்டு
கார்மலையைச்[4] சூழ்ந்த கருங்கடல் போலார்ப்பரித்து
போர்மலையைக் கண்டு புயல்வண்ண னேதுசெய்தான்
எவ்வகையாய் வந்த யானைபலதேர் காலாள்
அவ்வவருக் கவ்வவராய் ஐமுக்கால்[5] நாழிகையில்
கொன்றான் திருநெடுமால் கூற்றுவனுந் தேகியான்
சென்றாறு யோடினதே செங்குருதி யம்மானை
சேனையைக் கொன்றும் சினஞ்சற்றும் மாறாமல்
ஆனையைக் கொன்ற அங்கோளரி[6] போலே

1. அய்யன் – தலைவன். 2. முழுக்காட்டி – நீராட்டி. 3. நெடுமால் – நாராயணன். 4. கார்மலை – கரியமலை. 5. ஐமுக்கால் நாழிகையுள் – ஐந்தேமுக்கால் நாழிகைக்குள். 6. அங்கோளரி – அழகிய சிங்கம்.

கஞ்சன்[1]மேல் செல்கின்ற கஞ்சன் றனிமைகண்டு
செஞ்சொற் கருடனுடன் சேட னருணனென்பான்
பாற்கரனைப் போற்றிப் பணிந்து புகழ்ந்துரைப்பான்
பொற்கருங் கஞ்சன்றான் பொன்மேடையில் நிற்ப
காலாளாய் செல்கின்ற கண்ணனுக்கு நோன்துணை[2]யாய்
மேலாளாய் தோள்கொடுப்பேன் வெய்யோனே போவென்றான்
தேர்ப்பாகன் தன்னைத் திவாகரன் றானேவ
ஆயப்பாடி வேந்தே அருணனும் வந்துகண்டு
திண்டோளி லேற்றிச் சிகரத்தில் நின்றவர்முன்
கொண்டாடி வந்து குறுகினன் காணம்மானை
அக்கமலக் கண்ணற் கூரலு மப்பொழுதே
தக்கபடைக் கலமுஞ் சஞ்சுவமுந் தான்கொடுத்தான்
தாரிட்ட கோதைத் தலைக்கிராணம் புனைந்து
வீரப்பட்டம் கட்டுவித்து விரற்பிடியு மணிந்து
நற்கவசம் பூண்ட விண்ணுழிகை யழைத்து
வற்கப் பலகை மகாதுரகம் புனைந்து
கச்சை யணிந்து கதிர்வாள் கைத்தணிந்து[3]
செச்சையே கேயூர மிற்றான் புனைந்து
கிக்கென வில்லைச் சிறுநா ணொலியெறிந்து
யோசனை மூன்றுயர்ந்த உப்பரிகை மேல்நின்ற
நீசன் நிலையறுதி நீளருணன் தோள்மீதே
போந்திரு மேருவினைப் போர்வேட்டு தென்றேற்று
மந்திர மாமலைபோல் வந்துவலி நெடுமால்
தந்திரு மாமன்மேல் ......... காணம்மானை
தன்மருகன் போர்வேட்டுத்[4] தன்மேல் வரக்கண்டு
பொன்முறுவல் தோன்றப் புகர்வாள் தனைவிடுத்து

---

1. கஞ்சன் - கண்ணனின் மாமனாகிய கஞ்சன். மற்றொரு கஞ்சன் தாமரை மலர்போன்ற கண்ணன். 2. நோன் துணை - வலிய துணைவனாய். 3. கதிர்வாள் கைத்தணிந்து - ஒளி பொருந்திய வாளைக் கையில் பிடித்து. 4. போர்வேட்டு - போரினை விரும்பி.

மின்னுநெறி யெறிந்து மிகைசொன்ன கஞ்சனுடன்
பொன்னாழி[1] மாயன் புகலலுற்ற னம்மானை
இன்னஞ் சிலநா ளிங்கே யினிதிருந்து
அன்ன வசுரர்தனை அங்கெனை மேலேவந்தே
அங்கின்று யென்னை அறியா தழைப்பித்தாய்
குங்குன னுயிரை யிழக்கவென மொழிந்தான்
கஞ்சனுங் கேட்டுக் கதித்துக் கொதித்துரைப்பான்
முன்சென்ற பேரரென்று மோசப்போர் செய்யாதே
வல்லையா யவரென்றான் மாயோனைத் தீயோனும்
தொல்லையா மண்டபத்தில் தானென்னைத் தான்பறித்து
சுற்றி யெறிந்தான் சுடராழி மாயன்மேல்
மற்றவனுந் தானை வாளிகளால்[2] கூறுசெய்தான்
வணங்கி யெடுத்து மகேந்திர அத்திரத்தை[3]
குணங்கொடிய கஞ்சன் குறித்தெறிந் தானம்மானை
எங்கு மெரிகாண இமையோருந் துண்ணென்ற
பொங்கு மடவையென்னப் போதுங் கடுங்கணையை[4]
மூன்று கூறாக முகுந்தனு மோர்கணத்தில்
என்றுகோ லொன்றினா லெய்தறுத்தா னம்மானை
முன்னாளசுரர் முடி துணித்த வாளியொன்று
அந்நாயகனு மழைப்பித்து மந்திரித்து
கஞ்சன் மேலெய்தான் கடுங்கணையு மாங்கவனை
தஞ்சமே செய்ததன்றி தடையற்றதில்லை யம்மானே
அருணன் புயத்துமேல் அப்பொழுது கஞ்சனென்பான்
வருண னிடைபெற்ற வாரணத்தைத் தான்தொடுத்தான்
மின்னியிடி முழங்கி மிகவிருண்டு சோனைசெய்து
தன்னில் வருவதனைத் தூயோனுங் கண்டருளி
ஆய்ந்த அசனி[5]யில் வந்தன் னாளசுரர்களை
காய்ந்த புகர்மழுவைக்[6] கஞ்சன்மேல் விட்டெறிந்தான்
அன்னது வாரணத்தை பற்றித் தூளாக்கி

---

1. பொன்னாழி – பொற்சக்கரம். 2. வாளிகள் – அம்புகள். 3. அத்திரம் – பாணம். 4. கடுங்கணை – கொடிய அம்பு. 5. அசனி – இடி. 6. மழுவை – மழுவாயுதம்.

மன்னன்மேல் தையாமல் வாய்மடிந்த தம்மானை
பஞ்ச பத்திரமென்னும் பருபதத்[1] திலே நெடுநாள்
கஞ்சன் தபசுபண்ணிக் கண்ணுதலோன்[2] பால்பெற்ற
பாசுபத அத்திரத்தைப் பாம்பணையோன் மேல்தொடுத்தான்
வீசுகனை லுமிழ்ந்து விண்ணடுங்கச் சூழ்ந்துசென்று
சுற்றி வளைந்து துளைத்தோ ளருணனுடன்
நெற்றியிற் பட்டுருவி நீங்கினன் காணம்மானை
ஊற்றின நெற்றியுடன் உத்தமனைக் கைதொழுது
ஆருதசீற்றத் தருண னழன்று ரைப்பான்
உன்னைக் கொலவிடுத்தான் உன்னைப் பயந்தார்கள்[3]
தன்னைச் சிறைவைத்தான் தன்பொறுமை கண்டிருந்தும்
உற்றனம் பாற்று உரவோனைக் கைதாங்கி
பற்றுதவனைப் பணைட்டுவதே னென் றுரைத்தான்
வற்புறுத்தக் கேட்டாளன்று மாயோ னருணரிட
பொற்புயத்தில் நின்ற புலிபோ லெழுப்பாய்ந்து
ஆயுதமெல்லாம் ......... கஞ்சனுட .........
மாயன் தலைப்பெய்தான் மற்றவனும் போர்மலைந்தான்
கையால் பிறகறித்துங் காலா லுடல்வளைத்தும்
மெய்யால் நோக்குவித்தும் வெம்போர் விளைக்கையிலே
மானைநீங்கி நின்று மற்றவன்றன் மார்கிழிய
கோமா னொருவேலைக் கொண்டெறிந்தா னம்மானை
மால்தொட் டெறிய மணிமார் பிற்கிழிந்து
வேல்பட்டுக் கஞ்சன் விழுந்தான் காணம்மானை
வெஞ்சின வேல்பட்டு மிகத்தளர்ந்து முன்விழுந்த
கஞ்சனைப் பார்த்து கமலக்கண்ணு னேதுரைப்பார்
வற்றுப் படைக்கலமும்[4] வரந்தர முன்களித்து

---

1. பருபதம் - பெருமலை. 2. கண்ணுதலோன் - நெற்றிக் கண்ணுடைய சிவபிரான். 3. பயந்தார்கள் - பெற்றவர்கள். 4. வற்றுப் படைக்கலம் - குறையாத போர்க் கருவிகள்.

உற்ற குருவுமாய் உங்களவர்க்கு நாயகமாய்[1]
எந்தையை[2] வல்விலங்கிட் டெந்தனக்கு முன்பிறந்த
மைந்தர றுவர் தம்மை வாணா ளழிவுசெய்து
தந்தையு மங்கையையும் தட்டிச் சிறையில்வைத்து
உந்தன் கொடுமை உனைச்சூழ்ந்த தென்றுசொன்னார்
கண்ண னுரைக்கக் கஞ்சகனு மேதுசொல்வான்
என்றங் கடந்துநின்ற எந்தையைக் கேட்டருளாய்
மாயனளவாய் மதலையாய் நீபிறந்து
பேரிடை[3] வளர்ந்து ஆய்ச்சியரைச் சோவுசெய்து
வாலியக் காட்டில் மணித்தும்பிற் கண்ணுங்கட்டி
காலியன் மேய்ந்ததுவும் கட்டிக் கறந்ததுவும்
ஊழிவினை காணுனக்கு மெனக் கேட்டு
ஆழிநெடு மாலும் ஆலாலம்[4] போலழன்று
குஞ்சி[5]யைப் பற்றிக் கொடியோன் வரையனைய
நெஞ்சி லோர்காலால் நேயா னுதைத்தலுமே
தலைபோக்கி முன்கிடப்பத் தாண்டிப்போ யப்புறத்தே
மலைபோல் கிடந்ததுவே வல்லுடல மம்மானை
அஞ்சன மேனியருள் மாதவன் கையால்
கஞ்சனும் பட்டுக் கவிழ்ந்தானை காணம்மானை
கருணை முகில்[6] தானும் கஞ்சனைக் கொன்றபின்பு
அருணன் தனையுகந்து ஆதித்தன் பாற்போக்கி
காலாக்கினி போலக் கனமாளிகை திறம்ப
மேலான தேவர் விசும்பில் நின்றுகண்டருளி
கஞ்சனைக் கொன்று கடவுளரே நம்முடைய
நெஞ்சிற் பயங்கெடுத்தான் நீலவண்ணன் என்றுசொல்லி
அற்புதனைப் போற்றி ஆசுவணங் கூறி
புற்பமழை பொழிந்து புத்தேளிர்[7] போனபின்பு

1. நாயகமாய் – தலைவனாய். 2. எந்தை – என் தந்தை. (மரூஉச் சொல்) 3. பேரிடை – இடையரிடத்தே. 4. ஆலாலம் – ஆலகால நஞ்சு. 5. குஞ்சி – ஆடவரின் சிகை. 6. கருணைமுகில் – அருள் மேகமாகிய கண்ணன். 7. புத்தேளிர் – தேவர்கள்.

பொறையில்லா வனக்கஞ்சன் போன்றின்மை தான்கேட்டு
சிறையி லிருந்த வசுதேவனும் தேவகியும்
சத்திய சாத்தகி[1]யும் தங்கை சுபத்திரையும்
மிக்கசுரர் சேனை விட்டுணுவின் வீரர்களும்
கன்றால் விளாவெறிந்த கண்ணனைக் காண்பதுவாய்
சென்றார்கள் செல்ல ஸ்ரீகிருஷ்ணன் ஆழ்வாரும்
வெஞ்சந் தவிர்ந்து வியன்றந்தைக் கால்தனிலே
நெஞ்சங் குளிரமிகு நேசமுறத் தொழுதான்
தாளில் தொழுதவனை தந்தை வசுதேவன்
தோளிற் றழுவித் துணைக்கண்கள் நீர்துளிப்ப
அய்யனை மெய்யா லடரவனைத் தனைத்து
மையல் தெளிந்தபின் மக்களைத் தானழைத்துன்
தம்பி யிவரிருவர் சத்தியன் சாத்தகிதன்
தும்பி யனையாய் சுபத்திரையுன் தங்கையெனச்
செப்ப வருகிருந்த தேவகியைத் தான்காட்டி
அப்பா வுனையீன்ற அன்னையிவ ளென்றுசொல்லி
செங்கண்மால் நேசமுடன் தேவகியைத் தான்தொழுதான்
கொங்கை பால்பாயக் குலவியகண் ணீர்சொரிய
பெற்ற போதன்றிப் பிறகொருநாள் கண்டறியாள்
உற்ற மகனை[2] உகந்துகந்து[3] தானணைத்தாள்
தன்பொன் மகனைத் தழுவிச் சலிப்பற்று
இன்பம் பெருகி யிருக்கின்ற தேவகிதான்
மலைபோ லொருபுறத்தே வல்லுதிரத் தாரை[4]விட
தலைபோய் கிடந்த தமையனைக் கண்டுருகி
கண்ணுலருவி விழக் கஞ்சன்மேல் போய்விழுந்து
அண்ணுவே கோவென் றலறினள் காணம்மானை
கொற்றவன்[5] செய்த கொடுமையெல்லாந் தான்மறந்து

---

1. சாத்தகி - கண்ணனின் இளையான். 2. உற்ற மகன் – பொருந்திய மகன். (பிறந்தபின் உற்ற மகன்) 3. உகந்து உகந்து – விரும்பி விரும்பி. (மிக விரும்பி) 4. வல்லுதிரத்தாரை – கொடிய இரத்தப் பெருக்கு, 5. கொற்றவன் – கஞ்சன்,

பொற்றொடியாள்[1] பெரிதும் புலம்பினள் காணம்மானை
தங்கேள்வன் மாடே சராசந்தன் பெற்றெடுத்த
பொங்குணர்ந்த சுந்தரியும் போயுதைய சுந்தரியும்
காதல வனைன கஞ்சனடித் தலத்தில்
போத வழுது புலம்பின ளம்மானை
ஆழி யுலகி லரசருக்கு மண்டருக்கும்[2]
வாழி மகேந்திரற்கும் மற்றெமக்கும் நாயகமே
ஒன்னார்[3] சிரிக்க உனக்கிளையாள் பிள்ளைகளை
பன்னாளுங் கொன்று பழிபூண்ட பார்த்திபனே
மின்னா[4]ரடி வருட மெல்லணையிற் பள்ளிகொள்ளும்
பொன்னான மேனி புழுதிபடக் கிடந்தாய்
கஞ்சனே யுங்கைமார் காதலரை நாளுலப்பும்
வஞ்சனை யெல்லா மறந்துவிட்டுப் போனாயோ
மலையேறு[5] தோளாய் மருகனால் மாண்டொழிந்து
தலைவே றுடல்வேறாய் தான்கிடந்தா யென்றழுதான்
பாங்கில்லா மன்னர் பலபேரும் பயங்கழிக்க
யாங்கள் கனல்கழிக்க யேகினா னென்றழுதான்
தன்னனை மாரும் தனக்கிளைய பிள்ளைகளும்
மன்னன் மனைவியரு மற்றுள்ள சுற்றமுமாய்
தன்மாமன் மேல்விழுந்து சால வழக்கண்டு[6]
பொன்மான யேந்தவரும் புக்கழுதா ரம்மானை
முன்னே யழுதவரில் மும்மடங்[7]காய் தானழுது
தன்னை யவர் தேற்றத்தானும் தேரேறிநின்று
மிக்கசிறை யில் விலங்கோ டழுந்துகின்ற
உக்கிர சேனனைக்கொண் டோடிநீர் வாருமென்றார்
தூதரை யேவினான் தூதரும்போய் மற்றவனை

1. பொற்றொடியாள் – பொன் வளையலணிந்த தேவகி. 2. அண்டருக்கும் – தேவருக்கும். 3. ஒன்னார் – பகைவர். 4. மின்னார் – மின்னல் போன்ற ஒளியுறு மடவார். 5. மலையேறு தோளாய் – மலைபோன்ற தோளினையுடையாய். 6. சால வழக்கண்டு – மிகுதியாக அழுதலைக்கண்டு. 7. மும்மடங்கு – மூன்று மடங்கு.

பாத விலங்குவிட்டுப் பாடு முரைத்தருளி
கோளுற்ற வேலான் கொண்டு வந்தாரம்மானை
தாளில் பணிந்துநின்று தாமனு மேதுரைப்பான்
உன்னுடைய மைந்தனென்று முதல்வேந்த மைந்தனையும்
என்னுடையார்க் கிவ்வண்ண னென்ப துவும்
முன்னியான் கேட்டிலேன் முட்டுயுத்தம் செய்துவிட்டேன்
பின்னியான் கேட்டேன் பெரியோ னிலையறியேன்
தன்குற் றத்தாலே துறைப்பட்டா[1] னுன்புதல்வன்
நன்கொற்ற மன்னவரும் நானும்பணி கேட்க
இங்குற்ற நீர்தாம் இராச்சியத்தை யாண்டிருஎன்றான்
அப்போ மனமகிழ்ந்து அய்யனைத்தான் தழுவிச்
செப்பமுட னுக்கிரசேன னெடுத் துரைப்பான்
வெம்மைச் சிறையில் விலங்கோ டழுந்துகின்ற
எம்மைச் சிறைவிடுத்து யிவ்வுலகந் தந்தமையால்
நீயே யெனக்கு நிறைமகனும் வேதாவும்[2]
தாயே நீர்தானே தராதலத்[3]தை யாண்டிருந்து
ஏல வகையும் பலபழியுங் கொண்டமையால்
கால மிதுவே கரியோனே கஞ்சனுக்கு
ஆக்கி யருளசுரர்க்கு அய்யனே நீயழிக்க
பாக்கியமும் பெற்றான் பதம்பெற்றான் காணுமென்று
உத்திரஞ்[4] சொல்லிநின்று உக்கிர சேனனுக்கு
புத்திர வாஞ்சை[5] பொறுக்கு தில்லையம்மானை
கோவென் றலறி குலமகன் மேலிற்புரண்டு
ஆவென் றழுது அநேகமாய் தான்புலம்பி
மற்றுள்ளோர் தான்தேற்ற மன்னனுந் தேறிநின்று
கொற்ற மகனைக் குளிப்பாட்டிக் கோதாட்டி
கோடி[6] யுடுத்திக் கொழும்பூண்கள் தான்பூட்டி

---

1. துறைப்பட்டான் – இறந்து பட்டான். 2. வேதா – பிரமன். 3. தராதலம் – பூமியாகிய இடம். (தரை + தலம்) 4. உத்திரம் – மறுமொழி, விடை. 5. புத்திர வாஞ்சை – மகப்பற்று. 6. கோடி – புத்தாடை.

நீடு சுகந்தம்[1] நிகரித்து மாலையிட்டு
பன்மணி யாலமைந்த பல்லக்கின் மேல்வைத்த
மின்மணிப் பூண்மடவார் வெண்சாமரை யிரட்ட
சங்கப் படகமெழத் தார்வேந்தர் சூழ்ந்துவர
துங்க முடியரசர் சூழ்ந்துவரக் கொண்டுசென்று
ஏற்ற முடைய யமுனையாற் றங்கரையில்
நாற்ற முடைய நறுங்களபக் கட்டையிலே
கற்பூரம் பெய்து கனமெத்தையில் கிடத்தி
சொற்புருவ மறையோர் சொன்ன முறைமையினால்
சாலஎரி[2] எழுப்பி சங்குக் காரமுஞ்செய்து
காலம் வெளிப்பட்ட கஞ்சன்றனை யடக்கி
ஏயவா றெல்லாம் யமுனையிலே தான்முழுகி
மாயவ ரோடு மனைபுகுந்தா ரம்மானை
வஞ்சனை செய்து மறஞ்செய் தறஞ்செய்யாக்
கஞ்சனை வென்று கதி[3]யும் கொடுத்தருளி
தென்னரங்கில் கண்வளரும் சீரங்கனை[4] யன்றிப்
பின்னையொரு தெய்வத்தைப் பேசுகிலே னம்மானை

கஞ்சன்வதைச் சமாச்சாரம் முற்ற முடிந்தது

முற்றும்

1. சுகந்தம் – மணப்பொடி. 2. எரி – நெருப்பு. 3. கதி – உய்தி, வீடுபேறு. 4. சீரங்கனை – திருவரங்கநாதனை.

# இரண்டாம் காண்டம்

அன்னஞ் சரப்பொன்னி அரங்கன் திருவிளையாட்டின்
நஞ்சிலவற்றை நானியம்பக் கேளம் மானே
மிக்கதன் பின்னுள் விறல்நெடுமா லேதுசெய்தான்
உக்கிர சேனனொடும் உற்ற தமரோடும்
பூணிக்கக் கஞ்சன் புகுந்து கொலுவிருக்கும்
மாமணி மாமிரத மண்டபத்தில் வந்திருந்து
தக்கதாய் தந்தைதனைத் துக்கம் தீர்த்தருளி
உக்கிர சேனனை உலகாள வைத்தபின்பு
ஆனைப் போளடுகைமுன் அண்ணனுடன் வைத்துவந்த
தானைக் கோபாலர்[1] தனை யழைத்து வாருமென்றார்
பூபாலர்[2] சென்று புருஷோத்தம னருகே
கோபாலர் தம்மையெல்லாங் கூட்டிவந்து விட்டருளி
ஆய்ப்பாடி பெற்றெடுத்த மாதா யிருக்கையிலே
ஆய்ப்பாடித் தாய்தமக்கே அன்பா யெதிர்சென்று
வாகாய் தழுவி வயிற்றில் முகம்வைத்து
ஏகாசனத்தே இருத்தி முகந் திருத்தி
செல்வத் திருப்புதல்வன் சீராடக் கண்டிருந்து
அல்லல் பெரிதா யசோதைப் பிராட்டியுந்தான்
செய்யக் கண்ணீரோடத் தேம்பிமுகங் கறுக்கும்
அய்யனும் கண்கலங்கி ஆனதுய ரேதென்றான்
நெஞ்சங் கலங்கி நிறைமலர் கண்ணீர்சொரிய
அஞ்சன வண்ணற் கசோதை யெடுத்துரைப்பாள்
பொன்மகனே நீயிங்கு புக்கதன் பின்னேஒருத்தி
என்மகனே றென்றாளென் றெல்லோருஞ் சொல்லுகிறார்
ஆடும் கடவுளறி மாலயங்கள்[3] தான் கண்டும்

1. கோபாலர் – இடையர்கள், ஆயர்கள். 2. பூபாலர் – பூவுலகினை ஆளும் மன்னர்கள். 3. மாலயங்கள் – வஞ்சனைச் செயல்கள்.

நாளுங் குளங்கள்கண்டும் நன்னோன்பு[1] தான்கண்டும்
ஆதித்த வாரம்[2] அமாவாசை யாசரித்தும்
மாதீர்த்த மாடி வருத்தி வரங்கிடந்தும்
உள்ளங் கடிந்தும் ஒருசந்தி[3] யுண்டிருந்தும்
தானங்கள் செய்தும் தவங்கள் பலசெய்தும்
பெற்றேன் பலரறியப் பத்துமாதமுஞ் சுமந்து
பெற்றே னுனைப்பெற்றும் பேரிட் டுகந்திருந்தும்
அந்நாளே போய் அசுரரையு மெண்ணியெண்ணி
நின்னால் வயிறெறிந்து நித்திரையு மூணு[4] மற்றேன்
பாதகக்கஞ்ச னிப்போ பட்டா[5]னெனக் கேட்டு
மேதை மிகுத்து மிகப்பிரிய மாயிருந்தேன்
நானு மிருக்கையிலே நாயகனே மற்றொருத்தி
தானு முனைத்தழுவித் தன்மகனே யென்றாளாம்
கஞ்சன் கழிந்தும் கழியாதென் னாவியென்னும்
நெஞ்சங் கனன்று[6] நினைக்கின் றசோதைதனை
மிக்கமனப் பிரியம் மேல்மேல் கரைபுரள
சிக்கென்றான் தழுவி தேவகியு மேதுசொல்வாள்
முன்பெற் றிழந்தேன் காணமூவிரண்டு பிள்ளைகளை
பின்பெற்ற பிள்ளையுந் தன்பிள்ளைதனைப் போலவென்று
ஒப்பாரி சொன்னோம் உன்மகனே தப்பாது
செப்பார் முலையாய்த் தெளியென்று தேவகிதான்
வேலிற் சிறந்த விழியாள் அசோதைதனை
காலில் பணிந்து கலகலென்னக் கொண்டிருந்தாள்
காரனை மேனிக் கருணாகரன் தானும்
ஈரன்னை மார்க்கு மிடையே யிருந்தருளி
ஆவலுடைய அசோதை திரு மடியில்
தேவகியைப் பார்த்துச் சிரித்திருந் தாரம்மானை
தாயா ரிருவரையும் சந்தோஷ மாக்குவித்தும்

1. நன்னோன்பு – நல்லவிரதங்கள். 2. ஆதித்தவாரம் – ஞாயிற்றுக்கிழமை. 3. ஒருசந்தி – ஒருவேளை. 4. ஊண் – உணவு. 5. பட்டான் – இறந்துவிட்டான். 6. நெஞ்சங்கனன்று – மனம்வருந்தி.

நாயகனுன் தந்தை நந்தகோபன் றனக்கு
மன்னர்க்கு முன்னம் மணியாசன மியற்றி
அன்னை பிதாவை அதில்வைத்தா ரம்மானை
மாதவனைச் சேர்ந்த மண்ணுடி மார்[1] தனக்கும்
கோன்றனக்கு மஞ்செல்வம் குறையின்றியே கொடுத்து
படுகஞ்சன் பொக்கிஷத்தில் பண்டார[2] முள்ளதெல்லாம்
கொடுவந்து தன்முன் குவிக்கப் பணித்தருளி
ஆயர் குமர ரவரவர்க்குத் தக்கவகை
தூய பணியுந்[3] துகிலும் கொடுத்தருளி
தேரும் கரியும் திரள்பரியும் சீவதமும்
ஊரு மளித்துநம் ஊரேபோ மென்றுசொன்னர்
என்னத் தரியா ரிடையருமைந்தர்களும்
அண்ணப் பணியெல்லா மடியிடையிற் றுன்சேர்த்து
மண்ணு லகுமல்ல மகிழ்ந்தும்பர்[4] வாழுகின்ற
விண்ணுலகு தந்தாலும் வேந்தாக வைத்தாலும்
பிறவியைமூடும் நின்பதம்விட் டோரடியும் போகோம்
என்றோதி நின்றார் எல்லோரும் அம்மானை
கோபாலர் நிற்கக் குமரர்களு மேதுசொல்வார்
நீபோலனு யிந்நாள் நீங்காமல் நீங்கியிப்போ
ஆர்க்குப் பணிசெய்வோம் மங்காசா பட்டாரென்
னூர்க்குப் போயென் செய்குவோ மேதென்றுநின்றார்
பேச்சி முலையுண்ட பேராள னவ்[5] வளவில்
ஆச்சியரை யெல்லா மழைப்பித் தவரவர்க்கு
தக்கபணி வகையும் தாரசத் திரவியமும்
மெய்க்கக் கொடுத்து மிகவும் பரிவுரைத்து
என்று மெனக்கன்பாகி யெப்போதும் வாழ்ந்திருங்கோள்
ஒன்றுக்கு மஞ்சாதே யெம்மூரே போமென்றுரைத்தார்கள்
மற்ற யிடைச்சியரும் மாயோன் பாற்பெற்றதனை

1. மண்ணுடிமார் — ஆயர்கள். 2. பண்டாரம் — நிதியம். 3. தூயபணி — தூய ஆபரணம். 4. உம்பர் — தேவர்கள். 5. பேராளன் — கண்ணன்.

கொற்றவன் முன்னே குவித்துப் பணிந்துரைப்பார்
வெண்ணைபால் கேட்டிடினும் மின்னணியைக் கேட்டிடினும்
கண்ணனே நாங்கள் கல்வரை நாட்டிடுவோம்
ஏரைப்புனைந்த நீயிங்கிருக்க நாங்க ளெங்கே
ஆரைப் புகழ்ந் திருப்போம்[1] ஆரை யுகந்திருப்போம்
சேமமுயிர்[2] போலினிய தூயோனை உன்னைவிட்டு
ஏமமுயிர் போனாலும் யாம்போகோ மென்றுரைத்தார்
இன்னிலையே சொல்லி இடைச்சியர் நின்றபின்னர்
கன்னியரைப் பார்த்து கடல்வண்ண னேதுசொல்வான்
இத்தனை நாளுமியான் வந்து போறதுக்கு
மைத்துணமை கோணுமட நல்லீர் நீங்களினி
அன்புற் றணைவுற் றனைவோரு நம்மூரில்
இன்புற்று வாழ்ந்திருங்கோ ளெப்போது மென்றுசொல்லி
கோவை யிதழார்[3] குறிப்புகள் தானறிய
அவ்வவர்க் கொத்த அழகாபரண முடன்
பாவையும் அம்மானைப் பந்தும் பலகலையும்
பூவையும் பாவித்துப் போமென்றார் வெகுண்டார்
மெத்த முகங்கருகி வேந்தன் கொடுத்தபொருள்
அத்தனையும் அவர்மேல் பட வெறிந்து
அங்கண்ணன் தன்னை அரிவையர்க ளெல்லோரும்
செங்கண்ணால் பார்த்துச் செறிந்து சினந்துரைப்பார்
உன்னாலே கன்னியரா யுற்றிருந்த வோராமல்
நின்னாவு துணியாது நீங்கியே அங்கிருந்தால்
சிற்றி லழிப்பவரார் தீமைபல செய்பவரார்
பற்றித் தொடர்ந்தெம்மை எந்நாளுந் தோய்பவரார்
நீராடும் போது நிறைகலைகள்[4] கொள்பவரார்
தார்புயச் சகடுதைக்க தக்க வல்லாரார்
எத்தனையு மெங்கட் கிறையவனா யேவல்செய்தாய்
வித்தகனே[5] யிப்போ மிகவரி தாயினையோ

1. ஆரை யுகந்திருப்போம் – யாரை விரும்பி வாழ்வோம். 2. சேமமுயிர் – பாதுகாவலான உயிர். 3. கோவையிதழார் – கொவ்வைக் கனிபோன்ற இதழுடைய மடவார். 4. நிறைகலைகள் – சிறப்புற்ற ஆடைகள். 5. வித்தகன் – பெரியோன்.

கஞ்சனைக் கொன்றிங்கே கஸ்தூரிப னானபின்பு
செஞ்சொ லசோதை திருமகனு மற்றிலையோ
என்றென்று சொல்லி இணைவிழிக ளாறோட
தின்றேறுங் கொங்கைக் கொடியிடையோ ரெல்லோரும்
பூணார மார்பாநீ போமென்று சொல்லுவீராய்
வாணா ளெமக்கு மருந்தோ வெனமொழிந்து
அக்கன்னி மார்களனை வோரு ஓர்துணிபாய்
சிக்கென் றதுகண்டு திருமாலு மேதுசொல்வார்
உங்கள் மனதறிந்தேன் உங்கள்தனைப் பிரிந்து
வெங்கண் ணரசாள வெண்ணுவனோ மின்னனையீர்
எம்மோ டினிதுநீர் எப்போ தையும்போலே
உம்மோ டினிதிருப்போம் உறவென்று தானுரைப்போம்
அந்த மடவார்க்கு அணிமணிகள் தானளித்து
நந்தன் வசுதேவர்க்கு நன்கோயில்[1] தானளித்து
ஆர்கோல மேனி யசோதைக்கும் தேவகிக்கும்
ஓர்கோயில் செய்து ஒழிந்தவர்க்கும் கோயில்செய்து
ஆனை தனக்கும் அதுநடுவே கோவில்செய்து
சேனை தனக்கும் தெருவிட்டு வீடருளி
தந்தையரு மன்னையருந் தானுந் தமையனுமாய்
மற்றந்த உறவினரு மாய்ப்பாடி நல்லுறவும்
எல்லாரும் சூழ யெழில் மதுரை நன்னகரில்
மல்லார் புயல்நெடுமால் வாழ்ந்திருந்தா ரம்மானை
துன்புற்ற கஞ்சனது வஞ்சனையெல்லா மறந்து
இன்புற்று வாழ்ந்தங் கிருந்தனர் காணம்மானை
கொண்ட லனை[2] யானும் கோமதுரை யாண்டிருக்க
அண்ட ருலகத் தடவுகே ளம்மானை
அருக்கன்[3] கிரண மணையாத மண்டலம்போல்
இருட்டல் முடியாவரும் அச்ச முண்டாய்
அசுரர்கள் மண்ட அமரரு மாதவரும்
வீசுவங் கமல வேதர்க்[4]குப் போயுரைத்தார்
அங்கவர் கேட்டு அவருக் கெடுத்துரைப்பார்

---

1. நன்கோயில் – நல்ல மாளிகை. 2. கொண்டல் – மேகம்.
3. அருக்கன் – சூரியன். 4. கமலவேதர் – தாமரை மலரில் உறையும் பிரமா.

செங்கண் நெடுமால் திருப்பாற்கடல் நீங்கியிப்போ
கஞ்சனு மாள்வதர்க்கும் பூபாரந் தீர்ப்பதற்கும்
நீர்க்கஞ்சக் கண்ணன் நிலவேந்தாய் வீற்றிருந்தாய்
ஓங்கு முனிவோரும் உம்பரும்[1] போய்ப்புகுந்து
ஆங்கவனைக் கண்டு அபிஷேகமுஞ் சூடி
உற்றவா றோதி உயர்நாமமு முரைத்தால்
மற்றவன் றன்னருளால் வாழுலா மென்றுரைத்தார்
முண்டகன் சொல்ல முனிவர்களுந் தேவர்களும்
மண்டி மதுரையிலே மாயவனை வந்துகண்டு
தேனுலவு பூந்தாராய் அத்தேசத்துக் கேபோந்து
வானுலகந் தன்னை மறந்தனை யென்றறிந்து
வல்லசுரராய் மிகுத்து வானுலகத்தே[2] வந்து
நல்லசுரரை நடுக்கங்கள் செய்தனர் காண்
பத்தரே யான பழையடியோம் வாழ்வான்
நித்தனே பொன்னுலகு நின்காவலாம் போது
ஆயரிடும் பேரு மச்சோவு மன்றியிலே
மாயனே நின்திருப்பேர் வாசுதேவ னென்றூர்கள்
நின்ற துண்மை வினவ நின்னைப் பயந்தாரும்
கன்னியர் பதிகள் காசிபன்தன் சாபத்தால்
வேந்தர் குலத்துதித்தார் வேறல்ல வென்றுணர்த்தி
பூந்த மணிவா புவனே சுரனென்று
வேதன ரிற்றமிகு பிறப்பா சேனமை
ஆதி முடியை யபிஷேகம் செய்தளவில்
எங்கோன் கனன்று பறையறைந் தேழுலகும்
அங்கோத வண்ணனுட ஆசக காந்தன்
தண்டுதனில் வாழும் சாரங்க[3] மும்முடனுய்
மண்டு கருடன்வர வசுதேவன் கண்டான்
மாலா யுதங்கள் தனில்வானசங்க மொன்றொழிய
காலா யுதங்கள்வர நாராயணன் கண்டருளி
அண்டர்களைக் காக்க ஆழி[4] தனை ஏவி

1. உம்பர் – தேவர். 2. வானுலகம் – தேவருலகம். 3. சாரங்கம் – வில். 4. ஆழி – சக்கரம்.

கண்டமும் வாழும் தவத்தோர் காணஏவி
நீதமான தில்லாச் சிறு கருடாழ்வாரும்
பாதாளர் லோகம் பலமுதங் கானேறு
திண்ணமுடனே திரிபுவனம் தானகற்ற
எண்ணி யிருந்தா னெழில் நெடுமாலம்மானை
எம்மானைப் போற்றி ரிஷிகளுந் தேவர்களுந்
தம்மா முடிகவிழ்த்து தாமனுக்[1] கேதுசொல்வார்
மண்ணுள்வார் வாழும் மதுரைத் திருநகர்க்கே
விண்ணுளும் நாயகனே வீற்றிங்கே நீயிருந்தால்
உன்பாதங் கண்ட உலகத்தா ராரெனும்
இன்பத முற்றும் பெறுவதற் கையமில்லை
மண்ணுட்டிலுள்ள மாண்டவர் வந்தடைந்தால்
விண்ணுட் டிடமுண்டோ வேந்தே யெனத்தொழுது
தேர் பெலனை ராசந்தன முன்னியாய்
மார் பயிலும் தோளா மதுரைப்பதிவிட்டு
தேங்கு கடலில் திருநகர் செய்தருளி
அங்கிரு நீரென் றகன்றாரருந் தவத்தோர்
மாதவரும் தேவர்களும் வானகத்தே போனதற்பின்
சீதரனை[2] சிறுவாசு தேவ னென்பான்
தந்தையும் தாயும் தமையனும் தம்பியரும்
சிந்தை மகிழ்ந்திருந்து செங்கோல் செலுத்தயிலே
புகலும் படைக்கலமும் பொற்றொழிலும் நான்மறையும்
சகலரும் வல்லவியாஞ் சாந்திபெறு காசியபன்
வந்து புகுந்து மணிவண்ணனைக்கண்டு
உந்து புண்ணியு முலாவு மணித்தேரும்
மாற்றலரை வெல்லும் வகைகளும் விற்றொழிலும்
ஏற்றபடையு மியற்றுவர் என்று சொன்னன்
சொன்ன மறையோரனைத் தூயோன் மிகப்புகழ்ந்து
அன்ன வகையே யருளாயெனக் கென்றான்

---

1. தாமன் - மாலையணிந்த கண்ணன். 2. சீதரன் - திருமகள் கேள்வனுகிய திருமால்.

மாயவனுக்கும் வன்தமை யன்வண் ணனுக்கும்
சாயகி சாத்தகிக்கும் சாந்தம்பொலி காசியபன்
கத்தும் கடல்[1] புவியில் கத்திரிபா மைந்தருக்கும்
ஒத்த சடங்கும் உபநயமும்[2] தானடத்தி
மானத் தேறும் வழக்கேழு மற்றுனதும்
பஞ்சா யுதத்தின் படைவழக் குள்ளவையும்
கஞ்சானன் றனக்குக் கற்பித்தா னம்மானை
பொருபடை தனக்குப் போதித்த வேதியனை
குருதட்சணை கேட்டுக் கொள்ளென்றான் கொற்றவனும்
மன்ன னுரைக்க மறையோனு மேதுசொன்னான்
என்ன தரினு மெனக்கொன்றுஞ் சிந்தையில்லை
புக்கரனைப் போற்றிப் புடையதனில் நிற்பதனால்
பாற்கர னென்றுரைக்கப் பட்டா னொருவசுரன்
உற்றநான் பெற்றதொரு ஒண்ணையர் பிள்ளையைப்
பற்றி விழுங்கிப் படுகடலி லுட்கிடந்தான்
கோவிந்தா நீயவனைக் கொன்றென் குலமகனை
ஆவி[3] யுடனே அருளென் றானம் மானை
கண்ணன்தகன் சம்மதித்துக் கார்க்கடலை அண்டிநின்று
வண்ணச் சிலை[4]யை வளைப்பித்து நாணெறிந்து
மீண்டு மருங்கடலை வெய்யோனும் பார்த்துரைப்பான்
பண்டு மொரு நாளென்பான் வளங்கண் டறியை
நின் பாலலைந்த நிசாசரனைக்[5] காட்டுதியோ
என் பாணத்தாலே எரியுதியோ என்றுநின்றார்
சற்றுங் கலங்கி சமுத்திரா தேவதையும்
முற்றும் பலபொருளும் முகிழ்த்துக் கண்டருளி
வெய்யபோ விஷ்ணுவைப் போற்றினளே
அய்யனே யெத்தனையு மஞ்சேனே னுனக்கு
அண்டிநீர் தேடும் அசுரன் கிடந்தமட்டும்

1. கத்தும்கடல் – ஒலிக்கும் கடல் சூழ்ந்த. 2. உபநயமும் – இரு பிறப்பாளர்க்குரிய பிரமோபதேசம். 3. ஆவி – உயிர். 4. வண்ணச் சிலை – அழகிய வில். 5. நிசாசரன் – அரக்கன், நிசியில் உலவுபவர்கள்.

மீண்டுநீர் வாங்கி வெளிதருவே னென்றுசொல்லி
இருபத்து மூன்று யோசனை யுள்வாங்கி
பொருவற்ற[1] மாக்கடலும் போனது காணம்மானை
காட்டிக் கொடுத்துக் கருங்கடல் போனபின்பு
தாட்டிய மாமலைபோல் தானவன்[2] தான்கிடப்ப
கண்டு நெடியோன் கணையொன்றுறக் கொன்று
தண்டிக்க வெய்தான் துணிபட்டான் பாற்கரனும்
பாற்கரன் கூறுபடப் பாற்கரன் மேனியிலும்
மிக்க நூறாயிரமாய் வெண்சங்கு தற்சூழ
வெண்கதிர் வீச மிகுபாஞ்ச சன்னியமாய்[3]
சங்கு வெளிப்பட்டுத் தானின்ற தம்மானை
ஆயர் புவியி லவதாரம் செய்தவர்க்கு
மாயன் வருநாள் வடவிருக்ஷந் தன்னில்வைத்து
சங்குதனை யமுதச் சந்திர[4]னொன்றே விழுங்கி
பொங்குங் கடற்கிடந்த போரசுரன் தன்னுடம்பில்
நின்று வெளிப்பட்டு நீண்டோனுடைக் கரத்தில்
சென்று துள்ளிப் பாய்ந்ததுவே சென்னியழும்மானை
மைந்த னுயிர்வேண்டி மாயோனுங் கூற்றுவன்மேல்
தென்திசையை நோக்கிச் சிறுநாணொலி[5] யெறிந்தான்
தூணொலி கேட்டவுடன் தோன்றிய கேசரிதான்[6]
நாணொலி கேட்டு நமனும்[7] நடுநடுங்கி
யிந்நா ணொலியை யியக்குவன் நானென்றறிந்து
விண்ணு ணொலிக்கு விசும்பெல்லா[8] மொப்பென்று
மாணிக்கம் முற்று வைடூரியம் வைரம்
காணிக்கை யிட்டு யிமன் கண்ணனைக்கண்டுநின்று.
மேன்மே லடிபணிந்து வேண்டும் நயஞ்சொல்லி
என்மேலே கோப மேதென்று ரம்மானை

---

1. பொருவற்ற – ஒப்புமையில்லாத. 2. தானவன் – அசுரன். 3. பாஞ்ச சன்னியம் – சங்கு. 4. அமுதச்சந்திரன் – அமுத கிரணங்களையுடைய சந்திரன். 5. சிறுநாணொலி – சிறிய நாணைத்தெறித்து உண்டாக்கும் ஒலி. 6. கேசரி – சிங்கம்; நரசிம்மம். 7. நமன் – இயமன். 8. விசும்பு – ஆகாயம்.

அந்தகன் றன்னை அருளாளன் ஏதுரைப்பான்
இந்த மறையோ னெழில்மகன் தன்னைமுன்னாள்
பராசுரன் தான்விழுங்கப் பட்டானுயிர் தன்னை
மிக்க வுயிருடனே மீளத்தர வேணுமென்றான்
சாற்றும் புகழ்மறையோன் தன்மகனை யப்பொழுதே
கூற்றுவனைக் காட்டிக் கொடுத்தான் காணம்மானை
இன்சொற் கொண்டே போற்று மெம்மடியாளன்வரை
அஞ்சக் கொல்லாதே யந்தகா[1] வென்றருளி
காலன் றனக்குக் கரியோன்[2] விடைகொடுத்து
கோலமுடனே குருதட் சணை யாக
மைந்தனை யீந்து மறையோனைப் போகவிட்டு
அந்த மதுரை அணைந்திருந்தா ரம்மானை
ராச வளநகரில் எங்கோ நிற்கையிலே
சராசந்தன் தன்னிலைமை செப்பக் கேளம்மானை
தன்மருகன் கஞ்சன் தகர்ந்தா னெனக்கேட்டு
விம்மல் பொருமலுடன் வெய்துயிர்த்து நெஞ்சகன்று
கஞ்சனைக் கொன்றவனைக் கட்டழிப் பே[3]னென்றுசொல்லி
நஞ்செனக் கோபித்து நாலுதிக்கு மோலைவிட்டு
ஆரளந் தாலு மளவுபடாச் சேனையுடன்
பாரளந் தான்[4]மேலே படையெடுத் தானம்மானை
தன்படை யுள்ளவருந் தனைச்சேர்ந்த மன்னவரும்
வன்படையுங் கூட்டி வழிக்கொண்டா ரம்மானை
ஆறு மலையு மடவி[5]யுந் தான்கடந்து
நாறுமலர் சேதிநாட்டி நாட்டினையும் பின்னாக்கி
தேவகிரி யேறிச் சென்றழித்துத் தேர்வேந்தன்
மேவிய சேனை விசயத்தை கொள்ளைகொண்டு
செஞ்சமுத் திரத்தில் சென்றிருந்தா ரம்மானை
தீயசொல் சேந்தன் சேனையுடன் வந்தவனை

1. அந்தகா – குருடனாகிய யமனே. 2. கரியோன் – கண்ணன். 3. கட்டொழிப்பேன் – முற்றிலும் அழிப்பேன். 4. பாரளந்தான் – உலகளந்த நெடுமால். 5. அடவி – காடு.

மாயவனுங் கேட்டு வலியபல தேவனையும்
உக்கிர சேனனையும் உங்கள்படை யோடும்போய்
புக்கவ னேடே போகென்று போகவிட்டார்
மாய னுரைக்க மகிழ்ந்தங் கிருவோரும்
பாயும் பரியுங் கரியும் படைத்தேரும்
சேரத் திரட்டச் சிராசந்தன் தன்மேலே
சாரத் தடம்புயத்[1] தார் தாக்கினு ரம்மானை
இரண்டு படையு மிகலிப்[2] பொருமளவில்
புரண்டரசர் சேரப் பொருவீரர்[3] மாண்டொழிந்தார்
ஒருவர்க் கொருவர் உடையாமல்[4] வெல்லாமல்
இருபத் தொருநாள் யிடைவிடா தேபொருதார்
மற்றது கண்டு மகத நாடாளுகின்ற
கொற்றவர்க்கு நேரே குருநீதியு மேதுசொல்வான்
காயும் படையுங் கடவுளுங் கொள்படையும்
தீயமாவும்[5] சிறிதென் றிகழ்வார் களோ
உன்பங்கா யுள்ளயுரவோ[6] ரெல்லா மழைத்து
வன்பாகத்[7] தாக்கினால் மாட்டானுனக் கென்றான்
ஓதுமொழி கேட் டுடனே சராசந்தன்
தூதரைத் தான்விடுத்தான் தூதரு மப்பொழுதே
அன்னவன் பங்கி வரசர்க்குப் போயுரைக்க
துன்னும் படையுடனே சூழ்ந்துவந்து கண்டார்கள்
கண்டவரசர்களில் காலைய வண்ண னென்பான்
சண்டை வலிசேர சராசந்த னேடுரைப்பான்
ஈசனும் மாலும்[8] எரியும் பொருகூற்றும்
பேசி லெனக்கெதிரோ பேரரசர் கோமானே
கஞ்சன் கழிந்தான் கனமுனிவன் சாபத்தால்
இங்கிவனைக் கொல்வேன் யானேயென விழுந்தான்

---

1. தடம்புயம் – விசாலமான தோள். 2. இகலி – மாறுபட்டு. 3. பொருவீரர் – போர்செய்யும் வீரர்கள். 4. உடையாமல் – தோற்காமல், புறமுதுகிடாமல். 5. தீயமாவும் – கொடிய மிருகம். 6. உரவோர் – ஆற்றல்மிக்கோர். 7. வன்பாக – ஆற்றலுடன், 8. ஈசனும், மாலும் – சிவனும், திருமாலும்.

மற்றவன் சொன்னதும் மன்னன் திரண்டதுவும்
உற்ற விசேஷமெல்லாம் உற்றூர் சொலக்கேட்டு
ஒத்த தமையனையும் உக்கிர சேனனையும்
சத்திய சாத்தகியும் தர்கஅக் கூரனையும்
வீரசேனன் றனையு மிகுவிசய போகியையும்
ஆதி புருஷன்[1] அருளினன் மற்றவர்க்கு
ஓதிய மற்றவனுக் ருக்கிரசேனன் சொல்வான்
தமைச் சேர்ந்தமன்னவரும் தாமுந்தனைக் கொண்டால்
எமைச் சேர்ந்த மன்னவரையாமுந் துணையழைத்து
கூட்ட முடனிருந்தால் கொள்வரோ நம்மையென்று
பாட்டன் மொழியப் பலதேவ னேதுசொல்வான்
மலையப் போர்மன்னருடன் வந்த சராசந்தனையும்
குலையக்[2] கொளப்படையைக் கொல்வே னெனமொழிந்தான்
தன்னைத் தடுத்து தாமனு மேதுசொல்வான்
மன்னனே வாழ்ந்த மருமகன் பட்டமையால்
மாமன மெய்தி வந்தான் மசத்துக்கா யூரைவிட்டு
நாமன மெய்தி நடப்பதே நன்றென்றான்
அன்றியும் சேளீர் அவனோடே வந்தமன்னர்
வென்றி[3]யும் கொண்டல்லாது மீளா ரதுவன்றி
காலைய வண்ணனுக்குக் காலனு மஞ்சிநிற்பான்
மேலவ னுண்மை விளக்கமுறக் கேட்டருளீர்
அஞ்சிய பேர்புயத்தான் ஆதித்த னங்கிஷத்தில்
கஞ்சிக னென்பானொருவன் கற்றிபன் பன்னூனும்
பெற்று னொருநூறு பிள்ளையந்தப் பிள்ளையெல்லாம்
அற்று னென்றனறியிலே அந்தகன் கோடொளிக்க
காசிபனை நோக்கிக் கண்ணால் தவஞ்செய்தான்
ஆசில் முனியுமவன் முன்னெதிர் தோற்றிநின்று
அந்தகன் றன்னை லரசரா லாயுதத்தால்

1. ஆதிபுருஷன் – உலகிற்கு முன்னவனை கண்ணன். 2. குலைய – நிலைகுலைந்து தோற்றோட. 3. வென்றி – வெற்றி.

சந்தமுஞ் சாகாத சத்தி[1]யோடோர் மதலை
இந்தா முனக்கென் றியம்பினான் மாவிருட்சி
வேந்தனும் பெற்று விளங்க வளர்த்ததினால்
சாகா னவனும் சராசந்தனு மேலதாய்
போகா னென்றான்மாலும் போர்ச்சாத்தகி யுரைப்பான்
மாற்றும் படையரசர் வந்தக்கால் மாறெதிர்ந்து
ஆற்றுந் தனையும் அமர்பொருவா ரொருக்கால்
நாடுவிட்டுப் போவார்கள் நாள்தேட்டும் போவார்களோ
ஏடுபட்டதார் வேந்தர்க் கித்தனையே யென்றுசொல்லி
மாற்றார்[2] கிடந்து வனம்புகுந்து வாழுவதில்
போயத்தான் களத்தில் பொருபட்ட னல்லதென்று
ஊர்விட்டுப் போக உடன்படா தேயிருந்தான்
தார்பட்ட பொற்றடந்தோள் சாத்தகியைத் தான்திருத்தி
தோற்றன்று மாற்றான் தொடர்ந்துவரப் போம்போலே
ஏற்கவே போவ தெழிலென்று தான்மொழிந்தான்
நீர்க்கடல் வண்ணன் நெடுந்துடி[3] சாற்றுவித்து
ஊர்க்குடி யோடே யுடனெழுந்தா னம்மானை
மேட்டுக் குடிகளும் வேந்தரும் வெம்படையும்
வைத்த நிதிபலவு மைந்தரு மங்கையரும்
எல்லோரு போக இறைவன் குடியெழுந்து
மல்லாருந் தோளான்[4] வழிக் கொண்டாரம்மானை
காடு மலையும் கணவாயுந் தான்கடந்து
நீடுங் கழிபலவும் நீங்கி வழிநடந்து
அடர்ந்தநீர் குண்டவித ஆற்றுக் கருகாக
படர்ந்த கோமந்த பற்பதத்தில் விட்டிருந்தார்
வந்த குடிகளையும் மன்னரையு மங்குவைத்து
கந்தமலர்க் குடையான் காலைய வண்ணனையான்
கோலவளித்து மீள்வனெனக்[5] கோவிந்தன் போமளவில்
உலகில் கிடந்துசென்று உக்கிரசேனன் சொல்வான்

---

1. சாகாத சித்தி – சாகாவரம் பெற்று. 2. மாற்றார் – பகைவர். 3. நெடுந்துடி – நீண்ட பறையறைந்து. 4. மல்லாரும் தோளான் – மற்போர் செய்வதில் வல்ல தோளான். 5. மீள்வன் – திரும்பிவருவேன்,

யாவோரு மிங்கிருக்க யிப்போ தனியேபோய்
கோவேய வண்ணனை நீ கொல்லும்வகை சொல்லென்றான்
அன்னவன் கேட்க அவனை நாம் கொல்லும்வகை
மன்னவ கேளென்று மாயோ னெடுத்துரைப்பான்
வாள்மாய வெட்டசுரர் வானவர் மேல்தாக்கியநாள்
சோழர் குலத்துதித்த தோன்றல் குந்தனென்பான்
வானோருக் காக மயில்வா கன[1] னுடனே
சேனாபதி யாகத் தேவர்க ளென்றுகொண்டு
உற்று மிகநெடுநாள் ஊணுமுறக்க முந்தான்
அற்றுப் பொருது அசுரரை வெல்லலுமே
முண்டக வேந்தன் முசுகுந்தனை நோக்கி
வண்டாடுந் தாரான் வரங்கேட்டுக் கொள்ளென்றான்
அத்திரத் தோளா[2] னவனுக் கெடுத் துரைப்பான்
நித்திரை தன்னை நிகழ்ந்தே னியாநெடுநாள்
அந்நித்திரை கொண்டடியே னெழுவதல்லால்
இந்நித்திரையை இடையில் எழுப்பினவர்
வேதனே நான் பார்க்கில் விடாவரந்தாவென்றான்
தாதனு மந்தவரம் தந்தோ மெனவகன்றான்
குழுநாள் கமலவாய்க்[3] கூறவே முசுகுந்தன்
எழுநான்கு யோசனையா மிலஞ்சிய மாமலையில்
எண்டிசையு மெய்தாத ரெத்தின மண்டபத்தில்
கண்டுயில்வான் தன்னடிக்கே காலைய வண்ணனையான்
ஓர்வகையா லாக்கி ஒளிப்பேன் ஒளித்தபின்பு
ஆர்வமுட னானென்றவனை அடித் தெழுப்பிப்
பார்ப்பேன் விழித்தவனும் பட்டிடுவன் மற்றிவனும்
கொப்பிது நல்லதென்று கொற்றவனைத் தான்திருத்தி
சங்கு நிறத்தானைத்[4] தானைக்குக் காவல்வைத்து
அங்கினும்போந்து அணிமது ரையுட் புகுந்து

1. மயில்வாகனன் - மயிலைவாகனமாகக்கொண்ட முருகன்.
2. அத்திரத்தோளான் - அம்பறாத்தூணியுடைய தோளினன்.
3. கமலவாய் - தாமரை போன்ற வாய்.
4. சங்குநிறத்தான் - வெண்ணிறமுடைய பலதேவன்.

செச்சை புனைந்து திருமுடிதான் புனைந்து
கச்சை புனைந்து கதிர்வாள் மருங்கணிந்து
ஆனமணி பூண்டு அடைக்கா[1] யமுதருந்தி
தானவரு மன்றி தனியே யெழுந்தருளி
தேனூறு தண்டரளச்[2] செந்தாமரைக் கண்ணன்
வானுற வோங்கு மதிட்கோபுரத் தேறி
ஒன்றான மேருவி லுதித்த கருஞாயிறு[3] போல்
நின்றான் அழகாய் நெடிய மாலம்மானை
மாலையங்கே கண்ட வாறே ஒருதூதன்
காலையவண்ண னுக்குக் கட்டுரைத் தான்கேட்டு
சத்தம்பெரி தாகும் சீக்கிரத்தில் சென்றுகண்டு
எந்தம் பெரும்படையால் எங்கும் வளைவித்து
மதிநின்ற கோபுரத்தில் மாயனைக் கண்டழன்று[4]
எதிர்நின்று காலைய வண்ணனுமங் கேதுரைப்பான்
பொற்களிற்றைக் கொண்டதுவும் பூதனையைக் கொன்றதுவும்
ஆற்க வருகஞ்ச னசுரரைக் கொன்றதுவும்
எல்லாச் சமத்துமினித் தெரியு மென்றுரைத்தான்
வல்லாண்மை சொன்னவனை மாயோனும் பார்த்துரைப்பான்
நற்போர்க் கமைந்துநின்றால் மற்போர்க்கு மாற்றுதியோ
விற்போர்க் கமைந்து மீளுவோம் சொல்லென்றான்
என்ன மால்சொல்ல யியல்வண்ண னேதுசொல்வான்
உன்னைநான் சொல்ல உறுபாஷை சொல்லிவந்தேன்
மறகடித்தால் நாலுமற போர் பொரும்போது
குறங்கடித்தார்[5] தம்மைக் கொல்ல நீஞாயமல்ல
துணைத்தொரு பேரைத் துடைதட்ட யில்லையென்று
புனைத்தொரு வாயாய்ப் பொருவேனென மொழிந்தான்
அங்கவன் சொல்ல அரங்கேச னேதுசொல்வான்
இங்குநீ வந்ததுகேட் டெல்லோரும் பேர்ஒளித்தார்

1. அடைக்காய் – வெற்றிலைப்பாக்கு. 2. தண்டரளம் – குளிர்ந்த முத்து. 3. கருஞாயிறு – கரிய சூரியன். 4. அழன்று – வருந்தி. 5. குறங்கு – தொடை.

உற்றார்கள் போனது உணராமற் கண்துயின்றேன்
மற்றார் பிழைபட்டார் வளைப்புண்டேன் நானுமென்றான்
ஆண்டங்கு மற்போர்க்கு அவனும் பொருதியபின்
மீண்டுந் திருமால் விளம்ப லுற்றானம்மானை
பொற் சருத்தெல்லாம் பொதிந்திருப்ப னானாலும்
கற் கருத்தில்லை யென்பார் காலையா வண்ணனுக்கு
எட்டினா னோடுகிறே னென்னை நீயோடிவந்து
தொட்டியா யங்கே துடங்குவோம் போரென்றான்
கூடென்று மாயோனுங் கோபுரத்திலுங் குதித்தான்
ஓடென்றான் மற்றவனு மோடலுற்றா னம்மானை
கரியவன் முன்னோடக் காளையவன் பின்னோட
இருவரு மோடி யிளைத்தார் நெடுந்தூரம்
கைமே லகப்படும் பொற்காளைய வண்ணனைமால்
பொய்மான் போற்கொண்டு போயினா ரம்மானை
முன்மலை நீங்கி முசுகுந்தன் கண்துயிலும்
வன்மலை போய்ப் புகுந்தான் மற்றவன் கண்காண
ஓடி மலையில் ஒளித்தான் ஒளிநெடுமால்
தேடி யவனும் திரிந்தெங்கும் காணாமல்
விற்போரது மொழிந்து மெய்போல் பொய்பேசி[1]
விற்போர் குறித்துரைத்தாய் மற்றதுக்கு மொத்தபின்
பூட்டக்கம் பண்ணியேபோய்ப் பிழைக்கலா மென்று
ஓட்டத்துக் கோடி ஒளித்துநீ போகுவையாய்
உங்காரிய மெளிது உன்னுறவா யுள்ளவர்கள்
எங்கே யிருந்தாலு மிப்போதே சொல்லுகிறேன்
என்றங் குரைத்து வியவண்ணன் பின்னையும்
குன்றங் குவடும்[2] குளிர்சுனையும் சோலைகளும்
தேடினான் தேடிச் செழுமண்டபந் தன்னைக்
கூடினான் கண்டான் கையில் துயில்வானை
முன்னாலே கண்துயின்ற முசுகுந்த னென்பானை
பின்னாலே தான்தொடர்ந்த பேராளன் என்றன்றி

---

1. மெய்போல் பொய்பேசி – உண்மை போல் பொய்யுரை கூறி.
2. குவடு – சிறு குன்றுகள்.

ஒன்றி முடியை ஒருகையால் பற்றிஎற்றி
கன்றிக்[1] காந்திமிர்ந்து கண்சிவந்து பல்லிறுகி
குற்றிஞ னீரல் குலையினும் நெஞ்சத்தும்
ஒற்றினன் தானே டுறப்பாய்ந்தா னங்கமெங்கும்
தூங்கினவ னாவி துடியாய்ப் படிமோதி
நீங்கியும் நீங்காமல் நிற்பான் றனைநோக்கி
போதமிகு வினைய பூஷணனென்பா னுரைப்பான்
பேதையின் ராசாவே பின்முன்னறிந்து சொல்வாய்
அற்றநீ பின்துடரும் ஆயன்றொளித்தாக் கால்
சுற்ற னலனைகத் துயிலுமுசு குந்தனை நீ
கொல்லாதே யென்ன குணவினைய பூஷணனை
செல்லப் பிடித்துச் சினத்தினை லேதுசெய்தான்
மெய்யாக பொய்பேசி விடுவிக்க வந்தவனை
கையாகக் கொல்லவென்று காய்ந்து கொண்டானம்மானை
ஆண்டவனைக் கொன்று அவியாத கோபமுடன்
மீண்டுந் துயில்வானை மேன்மேலுறத் தகர்த்தான்
செயிர்த்த நெஞ்சம் திறக்கப் புடைத்தலைவன்
முத்துக் கணையால் முசுகுந்தன் கண்விழித்து
பார்த்தா னியல் வண்ணன் பட்டொழிந் தானம்மானை
ஆர்த்தவன்[2] தூளி யவனியெல்லா மம்மானை
நாமன் பொடாசரிக்கும் நக்கன்விழி தாக்கும்
காமன்போ லாகினன் காளையவ னம்மானை
எளிதாகக் காளைய வண்ணன்மிகப் பாடினே
ஒளித்தான் வெளிப்பட் டொளிமுறுவல்[3] தான்செய்து
அன்னவன் தானு மவனை யடிதொழுது
இன்னித்திரை கொண் டெழுகின்ற வேளையத்தே
நின்னைத் தெரிசித்தே னென்பேறு யாருடையார்
என்று துதித்து யான்துயிலப் போந்தபின்பு

---

1. கன்றி – கோபித்து. 2. ஆர்த்தவன் – ஆரவாரித்தவன்.
3. ஒளிமுறுவல் – ஒளியுற்ற நகைமுகம்.

சென்ற வுகமுஞ் செனித்தழிந்த பேர்களையும்
மூவர் முதலே மொழியென்ற மன்னனுடன்
தேவாசுராள் செருச் செய்த நன்றுளே
நீவரை மீதிங்கு நித்திரைக்குப் போனபின்பு
முன்னெடுங் கால முடிவேந்தர் போய்த்தொலைந்தார்
பின்னெடுங் காலம் பிரமா வரசுசெய்தான்
மேலிங் கருமறையோன் வேந்த ரிருக்கையிலே
ஆலிங்கன[1]மென்னுமவ்வுலகம் நீங்கியபின்
போதவன் றன்னைப் புரந்தரன் சங்கரித்தான்
வேதமும் முச்சுடரும் வேள்வியும் போமோவொளித்து
அவ்வுலக மெல்லா மந்தகாரம் படைப்பு
எவ்வுலக மெல்லா மிருள்மூடிக் கொண்டபின்பு
பாற்கடல் வனமாயப் பாராமல் பங்கயத்துள்[2]
மேற்கடவுள் தன்னை வெளிப்படுத்தி வைக்கலுமே
அந்தவிரு ளகன்று அச்சுதனு[3] மவ்வுருபோய்
முந்த மறையோனு முத்தியாய் வீற்றிருந்தான்
இதன்பின் கனகா திபவுகந்தான் தோன்ற
வதனினும் சித்தாவிற் றியாரிராக் கிஷர்கள்
காந்து யுத்தம்[4]செய்தார் கடந்தங் கவ்வுகமும்
சேந்ததின் பின்னிற் றிரேதாயுகம் தோன்ற
அவ்வுகந் தன்னில் அரக்கர் முகாந்திரமாய்
செவ்விய ராமனுய் தீர்த்தோ[5] மதன்பிறகு
தோன்றி நடக்கும் துபார நல்லுகத்தில்
என்றுன் னுடைய யியல்வண்ணன் முன்னிலையாய்
போந்தேன் நானென்று புருஷோத்தம னுரைக்க
வேந்தன் மகிழ்ந்து வீடுதா நீயெனவே
கண்ணனும் வாய்மலர்ந்து காலமுனக் கீதென்று

1. ஆலிங்கனம் – கட்டியணைத்தல். 2. பங்கயத்துள் – தாமரையுள். 3. அச்சுதன் – பெரியோனாகிய கண்ணன் 4. காந்து யுத்தம் – சினமிக்க போர். 5. தீர்த்தோம் – அழித்தோம்.

எண்ணரிய வைகுந்த மேற்றுவித் தாரம்மானை
மாளா வரத்தால் வருகாளை வண்ணனைத்தான்
தூளா விழும்வரத்தைத் தூதர்கள் சொல்கேட்டு
தீப்படு செங்கண் சராசந்தன் கோபமுற்று
மாயப் படையோடு மதுரையில் போய்ப்புகுந்து
வரிசை பெரிய மதுரையு மண்டலமும்[1]
அரிகேது வென்னும் அசுரனுக்குத் தான்கொடுத்து
கோடிற்ற மாலிருந்த கோமந்த மாமலையைத்
தேடிப்படை யெடுத்துச் சென்றான் சராசந்தன்
அங்கதன் முன்னறிந்து அம்மலையை விட்டகன்று
பொங்குங் கடல்வண்ணன் போயினன் காணம்மானை
கொள்ளவருங் கடல்போல் கோநந்தம் போய்ப்புகுந்து
எள்ளத் தனையு மிடமிடாதே தேடி
தான்கண் டிலாமை சராசந்த னேதுசொல்வான்
ஊன் கொண்டு ஒளித்தோடப் போவாரை
வன்பிடியாக வழிக்கட்டி நாடோறும்
பின் பிடித்தாலும் பிடிபடப் போறதில்லை
அஞ்சின ரோடுமவட மெல்லாம் பின்பிடித்து
வஞ்சனை செய்ய வழக்கல்ல வென்றுசொல்லி
தான் பெரிய கரிதேர்த் தானைக்[2] கால்சூழ
மீண்டு சராசந்தன் மேவினான் தன்பதியே[3]
அன்னவன் போனதற்பின் அங்கமலர்க் கண்ணனும்
தன்னவ ரோடே தாற்றுக் கடற்கரையில்
கூடாரஞ் செய்தபின்பு கொற்றக் கடல்நடுவே
வீடாரஞ் செய்ய விசுவகன் மனை[4] நினைந்தார்
கூறவத் தடக்கண் கரியோ னினைப்பளவில்
மேவிப் பணிந்தான் விசுவகன்மா அம்மானை
மற்றவனைப் பார்த்து மணிவண்ண னேதுசொல்வான்

1. மண்டலமும் - நாடும். 2. தானை - சேனை. 3. தன்பதி - தன் ஊர். 4. விசுவகன்மா - தேவ சிற்பி.

சுற்ற முடனே சுகமாய்க் குடியிருக்க
உற்றக டுவே உன்னுடைய வல்லமையால்
சிறந்த படைவீடு[1] செய்துதர வேணுமென்றார்
பாந்த ளணை[2]யாய் நின்பாரி பரிமடந்தை
நின்னால் கலாபித்து நெடுங்கடலில் போய்வீழ
அந்நா ளவளை அரிரா கவன்தானும்
அண்ட முகடன்றி ஆகாச முள்ளமட்டும்
சண்ட விராகமாய்த் தம்முட மாமருப்பில்
ஏந்திழை எழுந்தவிட மிவ்விட மாகையினால்
ஆந்த நீராழ மளவுபடா தமைய
கண்டு கமலக் கனக மயமாக
மிண்டிய தோர் சோவென்னும் பருப்பதத்தை
மண்டோ தரனென்னும் வன்பூதத்தைக் கொண்டு
அண்டி மலைபறித்து ஆழத்தைத் தூர்ப்பித்து
தண்டாமரையால் சமதல மாக்கு வித்தால்
உண்டாகும் நூற்றிரட்டி யோசனையின் விரிவும்
எத்தலம் புக்கிலு மித்தலம்போல் கிட்டாது
வித்தகனே யென்று விசுவகன்மா கைதொழுதான்
அறைந்த சொற்கேட்டு அரியும் பிரியமுற்று
செறிந்த சமுத்திரா தேவியை யங்கழைத்து
நின்மேல் துயில்வேன் நினைவிட்டுக் காசினியான்
தன்மேல் துயில்கொள்ளத் தக்கதோர் சாகரமே
என்சுற்றத் தாரும் யானும் குடியிருக்க
நின்சற்றம் வாங்கி நிலைதர வேணு மென்றான்
திரண்டார் கலிமாது[3] செல்வனைப் பார்த்துரைப்பான்
இரண்டாயிரம் வருஷம் யிங்குநீ வீற்றிருப்பாய்
பாரிற் றுயரகற்றிப் பாற்கடலில் நீநடந்தால்
ஊரிற்ற முடிமண்டி யுட்கடலிக் கொள்வேனென்று
ஒருநூற் றிருபத்து யோசனையுள் வாங்கி

---

1. படைவீடு - பாசறை. 2. பாந்தள் - நாகப்பாம்பு.
3. திரண்டார் கலிமாது - திரண்டொலிக்கும் கடல்மாது.

பொருநீர் வற்றிப் போனாள் புவிமடந்தை
அக்கணந் தன்னில் தனை விசுவகன்மன்
ஒக்கதில் திருத்தி ஊரெல்லைதான் வகுத்து
அஷ்ட திக்கு[1]மெத்திசையும் ஆறுசலமுங் கிணறும்
மட்டமற்ற சோலைகளும் வாவியு நந்தனமும்
தென்ன வனமும் செழுங்கமுகு வனமும்
அன்னிய பூங்காவனமு மங்கு வகுத்தருளி
அன்ன கிழியு மகழு மணிக்கிடங்கும்
வானகமுந் தோயு மணிமதிலுங் கோபுரமும்
மாடமு மாடரங்கும் மண்டபமும் கொண்டலணி
கூடமு மேடைகளும் கோலமிகு வாலயமும்
அந்தணர் சாலை அறச்சாலை நூற்சாலை
பந்தியி லாயம் பலவா யுதச்சாலை
தேர்க் கூட்டமுமியற்றிச் சித்திர கூடம்பலவும்
வேல் கூட்டம் வாள்கூட்டம் வில் கூட்டமுமமைத்து
மன்னர்க்கும் வன்னியர்க்கும் மண்டலிகர்க்கு மனை
சொர்ணத்தினாலும் சுடர் மணி யாலுமியற்றி
நாலு குலமான நற்குடிக்கும் வீதிசெய்து
மேலும் பலகுடிக்கு மிக்கோர்க்கும் வீதிசெய்து
தூயோன் திருமரபில் தோய்ந்த குழாந் தனக்கும்
ஆயர் தமக்கு மடைவடைவே வீதிசெய்து
மின்மா மணியாலும் வெண்மணி நிதியத்ததாலும்
பொன் மாளிகைகள் புருஷோத்தமற்[2] கியற்றி
கோமண் டபமும் கொலுவிருக்கு மண்டபமும்
வகை வகையாய்த் தானியற்றி
செற்றிய கோபுரத்துச் செம்மணி மேடையிலும்
சுற்றப் பதாகை[3] சுடர்வான் துகள் துடைப்ப
எரிய மணிக ளிரவுபக லாகுநட

---

1. அஷ்டதிக்கு - எட்டுத் திக்குகள். 2. புருஷோத்தமன் - கண்ணன். 3. பதாகை - கொடி.

தென்னிலங்கை முதாரும் தேவேந்திரன் பதியும்
மன்னு மளகைக்கோன்[1] அழபதியு மற்றுளதும்
இப்பதி கொவ்வா தெனவே வகுத்தருளி
கைப்பதி வேதியனைக் கண்டான் விசுவகன்மா
பொன்னுலகி லுள்ளவர்கள் புட்பமழை பொழிந்து
அன்னகண் பார்த்து அதிசயித்தங் கேதுசொல்வார்
முன்னிவன் செய்த முதுபதிகள் மற்றதெல்லாம்
இன்ன பதிக்கு யிணைபெரு தென்று சொல்லி
ஒல்லைக் கடலையுந் தூர்த்துச் செய்தமையால்
சொல்லலிதின் போ துவார பதியென்று
பேரிட்டமர ரெல்லாம் போந்தனர் காணம்மானை
சீரிட்ட மாதவரை தேவர்குரு வந்துகண்டு
சகலோக மென்னுந் தனிமுகித்தம் வந்துநின்று
புகலாங் குடியென்று போனன் விறல்சேர்ரிஷி
மெச்சி[2] மனமகிழ்ந்து வேண்டிய தெல்லாம்கொடுத்து
தச்சனை உபசரித்துத் தனபதியில் போகவிட்டு
உற்ற கிளைஞருடன் ஊருங் குடிபுகுந்த
கொற்ற மால்[3] தானும் குடிபுகுந்தா ரம்மானை
நந்தன் வசுதேவன் நம்பி[4] பலதேவன்
அந்த அசுரனணி யுக்கிர சேனன்
அல்லாத வாரும் அரிவங் கிஷத்தாரும்
எல்லாம் நிறைகுடியாய் ஏறினர் காணம்மானை
வானதிய வேண்டளவு வச்சிரவண் ணனனிப்பன்
இனம் மகற்றித் துவாரபதி நகரில்
இன்பமுடன் வாழ்ந் திருந்தனர்கா ணம்மானை
துய்ய சிரமத் துவாரபதி விளங்க
அய்யனினி[5] தாயமர்ந் திருக்கும் நாளையிலே
பொன்பிடித்த திண்டோள் புரவலனை முன்னுளில்

---

1. அளகைக்கோன் – அளகாபுரி அதிபனுன குபேரன். 2. மெச்சி – புகழ்ந்துரைத்து. 3. கொற்றமால் – வெற்றி பொருந்திய திருமால். 4. நம்பி – ஆடவர்களிற் சிறந்தோன். 5. அய்யன் – தலைவனுகிய கண்ணன்.

பின்பிடித்து மீண்ட பெரும்படை மன்னரெல்லாம்
சேர வழைத்துச் செராசந்த னேதுசொல்வான்
பார் வலுவுடைய பார்த்திபரே[1] கேட்டருளீர்
அன்று நமக்குடைந்து[2] ஆமதுரை நாடுவிட்டு
சென்று கிருட்டிணன்தான் தேசத்திருக்க வஞ்சி
கடலி லொளித்துக் கடலிலே மற்றுமொரு
திடலிலே வீடுகட்டிச் சென்றிருந்தா னென்றார்கள்
மற்றவன் போகாமல் மண்டி வளைந்துகொண்டு
கொற்றக் கிளையுடனே கொண்டிடுவோம் போதுமென்றார்
புகுந்த சிசுபாலர் போர்வேந்தர் தான்கேட்டு
பகர்ந்தவரை நோக்கி பகைத்தெற்ற னேது சொல்வான்
இங்கொளித்துப் போனான் இனியவனை நாம்வளைந்தால்
அங்கொளித்துப் போவானா ராலவனைப் பின்பிடிப்பார்
சேந்த விடமெல்லாம் சென்று கிருட்டிணனை
வேந்தரே தாக்கி வெருட்டி நீரோடாதே
மற்றவன் சற்றும் வழுவாமல் கைப்பற்றி
சுற்றமுடன் கொல்லுஞ் சூழ்ச்சிநான் சொல்லுகிறேன்
மின்னிய பைம்பூண்[3] விதர்ப்ப ராசன்பெற்ற
கன்னி யுருப்பிணிக்குக் கலியாணநாள் வரைந்து
விரையா மணவோலை[4] மிக்கெமக்கு விட்டென்றால்
வரையா தவர்க்கு மணவோலை போகவிட்டால்
கற்றீப[5] ரோடு கலந்திருக்கு மாசையினால்
மெத்த யிறுமாந்து விண்ணாந்து வந்திடுவன்
பொன்கொள்ளப் போற பிறகற் பலனுடனே
மண்கொள்ளாச் சேனையுடன் மற்றோரும் போய்ப்புகுந்து
நீடிய சேனையையும் (நெடிய பொருள்களையும்)
கூடவளைந்து கொண்டு கொல்லலா மென்றுசொன்னான்

---

1. பார்த்திபர் – மன்னர். 2. உடைந்து – தோற்றோடி. 3. பைம்பூண் – பசமையான ஆபரணங்கள். 4. மணவோலை – திருமண அறிவிப்புக் கடிதம். 5. கற்றிரீபர் – மன்னர்.

பார விசாரம் பகைதேற்றன் சொல்பளவில்
தீர விசாரித்துச்[1] செராசந்த னேதுசொல்வான்
செயிர்த்துப்[2] பொருமபோது தேர்வேந்தர் மாயவனும்
உயிர்த் தேதுற்று லொருவரும் கொல்லாதே
வன் கோபனந்த வசுதேவன் தன்மகனை
என் கோபந் தீர்ப்பான்கொல் லென்றுசொன்னான்
செப்பிய சொல்கேட்டுச் சிசுபால னேதுசொல்வான்
வைப்புடைய மன்னர் வழக்காட வாராதே
நலதே யுமக்குரைத்தேன் நானுஞ் சினமாற
பலதேவனைக் கொல்வே னென்பங்கென் றுரம்மானை
சிசுபாலன் சொல்லச் செத்திரித னேதுசொல்வான்
சசி[3] பொற் குடையுடையார் சத்திய சாத்தகிகள்
பங்கெனக் கென்ன பகைதேற்ற னேதுசொல்வான்
இங்கெனக் காருமெதிரே போர் பெற்றார்கள்
அப்புறம் போகாதவர் படையத் தனையும்
சுப்பிர தீபத்தால் துவைப்பே[4] னென்று சொல்லி
மின்னனையும் வேள்வெல்லே தற்பகோ னவ்வளவில்
என்ன நினைவெண்ணினீ ரென்றான் காணம்மானை
வில்லால் வலிய விதர்ப்பனை வற்புறுத்தி
எல்லாரும் தன்பதிகள் எய்தினர் காணம்மானை
வெற்றி பெரிய விதர்ப்பனு மவ்வளவில்
சற்று முரசறைந்து தூதரைத் தானழைத்து
மங்கை வதுவை[5] மணஞ்சொல்லி வாருமென்று
எங்கெங்கும் போகவிட்டு ஏற்ற மணவோலை
பொன்னாழி மாயனுக்குப் போகவிட்டா ரம்மானை
தூதரும் போக்கித் துவாரபதி யாளும்
மாதவனைப் போற்றி மணமுரைத்தா ரம்மானை
மணவார்த்தை கேட்டு மணிவண்ண னுள்மகிழ்ந்து

---

1. தீர விசாரித்து – மிகவும் விசாரித்து, ஆய்ந்து. 2. செயிர்த்து – கோபித்து. 3. சசி – சந்திரன். 4. துவைப்பேன் – அழிப்பேன். 5. வதுவை – திருமணம்.

குணவார்த்தை தூதுவர்க்குக் கூறிவிடுத்த பின்பு
உக்கிர சேனன் அக்கூரன் வசுதேவன்
தக்க பலதேவன் சத்திய சாத்தகிகள்
மற்றுளார் தங்களையும் மாயன ழைத்துவிட்டு
உற்ற மணவார்த்தை ஓதினர் காணம்மானை
பின்னு மவர்க்குப் பெரியோன் எடுத்துரைப்பான்
முன்னும் நமைப்பகைத்த மூரித்தேர்[1] மன்னரெலாம்
வேறிருந் தெண்ணி விதர்ப்பன்மகள் வதுவை
கூறிவர விடுத்தார் குத்திர் செய்வதன்றி
அங்குநாம் போகாதிருந்தா லஞ்சியிருந் தாளென்பார்
பொங்கி யாம்போகில் பொருகைக்குச் சம்மதிப்பார்[2]
மிக்கநற் கானவிளம்பி ............ மொழியுமெழ
உக்கிர சேன னுயர்மாலைப் பார்த்துரைப்பான்
மெய்யனே உன்னில் விசார[3] முடையோமோ
அய்யனே உன்மனதுக் கானதுசெய் யென்றுரைத்தான்
பாமிக வுடைய பாட்டன் மொழிகேட்டு
கேசவன் சொல்லான கிளர்ந்தியா மெல்லோரும்
பார் படையும் பரியும் கரித்தேரும்
சேரத் திரட்டிமிகச் சிக்கென்று போயிருந்தால்
அங்கவர் செய்கை அறிவோமென மொழிந்து
பொங்கிய சேனையுடன் போற்றுவரைத் தானீங்கி
கந்தமலர்த்[4] தொடையான்[5] கன்னசாலங் கடந்து
சிந்து விசைய மிடமாகச் சென்றருளி
வந்துவ காதேசம் வலமாய் வழிகொண்டு
குந்தி விசையங் குறுகிடச் சென்றருளி
போந்து விதற் புரத்துக் கருகாக
வாந்த மணச்செ றிந்தமா த்தவகையில்

---

1. மூரித்தேர் – ஆற்றல் மிக்க தேர்ப்படை. 2. பொருகைக்கு – போர் செய்வதற்கு. 3. விசாரம் – கவலை. 4. கந்த மலர் – மணமுடைய பூக்கள். 5. தொடையான் – மாலையையுடையவன்.

வீடாரங் கொண்டு மிகவேந்தர் தம்முடனே
ஏடாரு தார[1] னிருந்தார் காணம்மானை
அக்கணமே மரக்கரந்த ஊற்றுங் கருகே
மிக்க துவரையர்கோன் வீற்றிருந் தாரம்மானை
அங்கவ னன்றி அவனியில் மன்னவர்கள்
பொங்கு கடல்போலப் புடையெங்கும் வந்திருந்தார்
விந்தைபயில் தோளான் விதர்ப்பர்கோ னவ்வளவில்
வந்தவர்க் கெல்லாம் வகைவகையாய் வீடருளி
நற்போ னகமும் நறுஞ்சாந்தும் குங்குமமும்
கற்பூர வெள்ளிலையுங் கற்பித் திருப்பளவில்
மங்கை யுருப்பிணிக்கு மன்னவர்க ளெல்லோரும்
தங்கள காணிக்கைக் தான்கொடுத்துப் போனபின்பு
நங்கையைக காண்பான் நவமணி மாலை[2] யொன்றை
செங்கை தனிலேந்திச் சென்றான் திருநெடுமால்
ஆரத்தாற் காலுகளு மாசாரங் காலுகளும்
சேரப் பசுந்தட்டார் செய்த மணப்பந்தலிலே
எம்மானுந் துன்னி இராசாக்கள் நிற்பளவில்
செம்மாலைக் கையேந்தித் தேவர்கோன் போந்ததற்பின்
நல்லிருள் காட்டுமந்த நலங்குழல் சூழியத்தில்
மல்லிகை மாலை மதிபோ லொளிகாட்ட
வானுடைய வில்லை மடவாள் நுதல்[3] காட்ட
கூனுடைய வள்ளைக் கொடியைக் குழைகாட்ட
முயல்புக்க மாமதியின் மும்மடங்கா யிரண்டு
கயல்புக்க மாமதியின் கண்வதனஞ் சோதிவிட
செம்பவளச் செப்பும் செறிமுத்து மாவியையும்
அம்பவள வாயுமணிக் கையுந் தான்காட்ட
மட்டு வடத்துளப மாயோன் கைச்சங்குதனை
கட்டு வடநிறைந்த கனகற் றனங்காட்ட

1. ஏடாருதாரான் - இதழ்கள் விரிந்த மாலையையுடையவன்.
2. நவமணி மாலை - ஒன்பது மணிகளால் இழைக்கப்பட்ட மாலை.
3. நுதல் - நெற்றி.

மீன்பெற்றபின் கொடிவேள் வெற்றிச்சிலைக் கரும்பும்
தேன்பெற்ற பைங்குழையும் செம்புயங் காட்ட
பச்சைக் கரும்பைப் பழபூண்டப் பூண்மலைகள்
கச்சைத் துளைத்தெழுந்து காமனைக் கண்காட்ட
மாகத்[1] துப்பொன்று மணிமேகலை யதனுள்
மேகத்துத் தோன்றுகின்ற மின்னை இடைகாட்ட[2]
அம்பொற் படவரவை அல்குல் தடங்காட்ட
கம்பக் கரியின் கரத்தைக் கவான்காட்ட[3]
கண்டக் கண்ணுக்குக் கணைக்கால வரால்காட்ட
முண்டகப் பாக முடிவேள் முறைகாட்ட
கற்பகப் பூங்கொம்பெனவும் கார்மஞ்ஞை தானெனவும்
அற்ப நடைகற்ற அன்னப்பெடை யெனவும்
மாணிக்கப் பூணணிந்து மங்கைநல்லார் வாழ்த்தெடுப்ப
பூணிக்கு மன்னர் புகழலுற்ற காவணத்தே[4]
ஆவியழகு மிக ஆடகத்தாற் சோடிற்ற
ஓவியம் போல்வந்தா ளும்பர்காண் அம்மானை
வந்த மயிலை மணக்கோலம் கண்டுகந்து
தந்தை விதர்ப்பன் தடங்குறங்கில்[5] கொண்டிருந்தான்
மைமலை வார்கூந்தல்[6] வந்திக்க மாயவனும்
கைமாலை தன்னையவன் கைகொடுத்தா ரம்மானை
மால்கொடுத்தான் மாலை மடக்கொடியுந் தானிருகண்
வேல் கொடுத்தான் மாலுக்கு மெய்யுறவே யம்மானை
ஒருவர் துயர் கொண்டோரு வாழியாமல்
இருவர் துயரு மினியொத்த தம்மானை
நோக்கொக்க நோக்கிய நுண்ணிடையுந்[7] தன்மனையில்

1. மாகம் – ஆகாயம். 2. மின்னை இடைகாட்ட – மின்னலைப் போன்ற இடைவிளங்க. 3. கரியின் கரத்தைக் கவான்காட்ட – யானைத் துதிக்கைபோன்ற துடை. 4. காவணத்தே – திருமணக் கொட்டகை யிடத்தே. 5. தடங்குறங்கு – அகன்ற துடைப்பகுதி. 6. வார்கூந்தல் – நீண்ட கூந்தல். 7. நுண்ணிடை – நுண்ணிய இடையையுடைய பெண் (உருப்பிணி)

வாக்கொக்க மேவியபின் மாயவனு மேதுசெய்தான்
நெஞ்சமும் கண்ணும் அவள்பால் நிலைப்படுத்தி
செஞ்சொல் நெடுமால் திரும்பினன் காணம்மானை
கோளம் புலனடைந்த கொள்கைபோல் கொற்றவனும்
வேளம்பு பின்தொடர வீடாரம் போய்ச்சேர்ந்து
கஞ்சன் வலிகடந்தான் காமசரம் பட்டுருவி
பஞ்ச சயனம் பயின்று மெழுந்திருந்து
உறக்க மறந்து உணர்வுதனை மறந்து
மறக்க வரிதே மயிலே உனைநயந்து
மருப்பினையும் கொங்கை மடவாயென உரைத்து
உருப்பிணியே யென்று உரைமாருதே வுரைத்தும்
கண்டு விதர்ப்பர்கோன் கன்னிக்கு மாலாகி[1]
வண்டுவரை மன்னன் வருந்தினன் காணம்மானை
அன்னா ளிருக்க அவன்கையில் மாலைபெற்ற
மின்னாள் நிலைமை விளம்பக் கேளம்மானை
மாலுக்கு மாலாகி மால்கொடுத்த மாலையைத்தான்
மேலுக் கணியாய மிகுமுலையிற் சேர்த்தணைத்து
வெள்ளக் கமல மிகுத்துவரை மன்னனைத்தான்
உள்ளக் கமலத்[2] தொடுங்கக் குடியிருத்தி
துன்னிய காதற் றுணையாகச் சூழ்ந்துவர
கன்னிய ரங் கதுமெனப் போய்ப்புகுந்து
கைச்சங்கு சோரக் கலைசோர நாண்சோர
அச்சங் கிளைந்து அடிக்கடி வெய்துயிர்த்து
மென்பூ வணையில் விழுவா ளெழுந்திருப்பாள்
தன்பூங் குதவாய் தான்புலர முத்துதிர்ப்பாள்
செல்லுங் கருமுகிலே செங்கண்ணன் மேனியென்பள்
சொல்லுங் குழறித் துணுக்குத் துணுக்கென்பாள்
வன்கண்ணன் கொண்டுவந்த மாணிக்க மாலையுடன்
என்கண் கவரவென வாய் வெருவிடுவள்[3]

---

1. மாலாகி – மயக்க முண்டாகி. 2. உள்ளக் கமலம் – மனமாகிய தாமரை, 3, வாய்வெரு விடுவள் – வாய் வெருவிக் குழறுதல்.

அவ்வா றுரைத்து அயர்ந்து துவளும்
செவ்வாய் மயிலைச்[1] செவிலித்தாய் கண்டுருகி
தன்மகளைப் பார்த்துச் சலித்தங்கே யேதுசொல்வாள்
மன்மகளே நின்றன் மனத்துணிவைக் காணுதற்கு
வாருதிசூழ்[2] வையகத்துள் வாழ்வேந்தர் வந்திருக்க
பேரரசர் கோமான் பிறகற்பல னென்னும்
கோசலை நாடார்க்குக் கொடுக்கச் சமைந்திருந்த
ஏசலிலா மின்னுக் கிடைகூறுதோ வறியேன்
பூவைதனை மறந்தாள் பொன்னூசல்தான் மறந்தாள்
அங்கழைத்து வைத்து அவர்க்குச் சிறப்பளித்து
பொங்க மெழுகிப் புதுமுறத்தில் நெல்லுமிட்டு
நேச முரைத்தேன் நிறைமகனை யிப்போது
தேசியோ அய்யனோதை திண்டித்தோர் சொல்லென்றாள்
வாசக் குறத்தி வலக்கையால் நெல்பிடித்து
வீசி விதிர்விதிர்த்து மெய்நடுங்கி யேதுசொல்வாள்
அய்யனு மல்ல அணிதேசி தானுமல்ல
தையலே உன்மகட்குச் சந்திப்பு வேறுமில்லை
காயாம்பூ வண்ணன்[3] கடற்றுவரை நன்னுடன்
பேய்சாகக் கொங்கை பிடித்துண்ட பேராளன்
சூழ்ச்சியில் பட்டுத் துவக்குண்ட தல்லாது
தாழ்ச்சி[4] பிறிதில்லை தானென்று ரம்மானை
வாரா யடிகுறத்தி மதியாம லேதுரைத்தாய்
ஊராய் மடக்கி உரலோடே கட்டுண்டு
ஆயனடவி செறி[5] ஆய்ப்பாடியிற் பிறந்து
மாயனோ யென்மகளை மாலேற்று வானென்று
கோவிட் டடித்துக் குறத்திதனை துரத்தி
வேலுற்ற கண்ணாள் வேதியர்க்குத் தானமிட்டு
ஆயிற்று மடகிறங்கி யானையகன்ற தற்பின்

1. செவ்வாய் மயில் – சிவந்த வாயினையுடைய மயில்போன்ற சாயலாள். 2. வாருதி சூழ் – கடல் சூழ்ந்த. 3. காயாம்பூ வண்ணன் – காயாம்பூ நிறமுடைய நீலநிறக் கண்ணன் 4. தாழ்ச்சி – தாழ்வு நிலை. 5. அடவி செறி – காடுகள் சூழ்ந்த.

மாயிற் குயிர்ப்பாங்கி மனோரமை யெடுத்துரைப்பாள்
பொன்னே மரகதமே பூங்கமலப் பொற்கொடியே
மின்னே விளக்கே விதர்ப்பர்கோன் மெய்த்தவமே
வலியான மன்னருடன் மத்துநடை தானடந்து
கலியாண ஆரம்பங் கண்டு களியாமல்
வாளர வுண்ட மதி[1] போல் ஒளிமழுங்க
நீளர வல்குலாய் நின்மேனி வாடியதே
மறையொன்று நூல்போல மருங்குலா[2] யென்னுடனே
உரையென்றாள் தோழி உருப்பிணியங் கேதுசொல்வாள்
நாட்ட முரைக்கில் நளினவண்[3] ணாயென
வாட்ட முரைக்க மனோரமையே கேட்டருளாய்
முந்த வரசரெல்லாம் முன்னின்ற காலத்தே
எந்தை யழைக்க யானவன் முன்னிருந்தேன்
செய்யுங் கழலடியும் கண்ணும் கதிர்முகமும்
செய்ய மணிவாயுஞ்[4] செந்தாமரை காட்டி
தேசு பயிலும் திருமேனி கார்காட்டி
காசு பலவிதமாய் சொர்ணமயமாய்க் காட்டி
வந்த நெடுமால் மணிமாலை யொன்றெனக்கு
தந்த போதந்த விராமணி மாலை
பூசலம் தன்னையான் பொருவதுபோல் போகியமென்
நேச விழியினையும் நெஞ்சையும் விட்டகலான்
அன்னானை யன்றியென்னை யாரேனும் கைப்பிடித்தால்
என்னா ருயிர் வாழே னென்னே காணம்மானை
பாவையது வுரைக்க பாங்கியுமங் கேதுசொல்வாள்
கோவையிதழ்[5] மடவாய் கோசல நாடகன்று
மன்னெடும் பேராழி மாயவ னானாலும்
பொன்னொடு மாற்கீயப் பொருந்துவனோ[6] உன் தந்தை

---

1. வாளரவுண்ட மதி – ஒளிபொருந்திய அரவு தீண்டிய சந்திரன். 2. மருங்குல் – இடை. 3. நளின வண்ணன் – தாமரை நிறத்தான். 4. மணிவாய் – அழகிய வாய். 5. கோவையிதழ் – கொவ்வைக்கனி போன்ற இதழ். 6. பொருந்துவனோ – உடன்படுவானோ.

பொன்வல்ல ளுழலையாய் புண்ணியனே யுன்னுடனே
என்வல்லமை யாலே ஏகாந்தஞ் சேவிப்பேன்
தாத்திரைகள் சேருமந் துவரைப் பதிக்கோனை[1]
மாத்திரையில்[2] கூட்டுவிப்பேன் வஞ்சியே யஞ்சாதே
என்றவனைத் தேற்றி யெழில்சேர் மரகதத்தின்
குன்றனையான் கோயில் குறுகினன் காணம்மானை
கண்ணன் தலைவாசல் காக்கின்ற பேருடனே
வண்ண மினிய மனோன்மையு மேதுரைப்பாள்
உன்றாள்[3] வணங்க உருப்பிணியால் வந்தொருத்தி
நின்றாள் எனவுரையும் நீலவண்ணற் கென்றே
வாயிர லானவ் வார்த்தை மாயவர்க்குக்(கூற)
ஆயப் பொழுதில் அழைக்க அவள்போந்து
சுற்ற மலர்த்திரளைத் தூயோன் முன்னேசொரிந்து
பொற்றா மரைப்பாதம் போற்றிப் புகழ்ந்துநின்றாள்
காமாக் கினியில் கலங்கி வெதும்புகின்ற
கோமாற் கவ்வாயிழையைக் கூட்டுவிப்பாள் வந்துபுக
துளிபெற்ற[4] மென்(பயிர்)போலத் துய்யோன் முகந்தெளிந்து
அளி[5] பெற்ற கோதை யணைந்தவாறே தெனவே
திருப்பணிந்த தோளா திருமாலே யுன்னழகு
உருப்பிணி பேரழகுக் கொத்தமையால் உங்கள்தனை
கூட்டுறவு செய்யக் குறித்துவந்தேன் கூடலரை
வாட்டரவு வேல்களிற்றாய் வல்லையோ வென்றுரைத்தாள்
விற்கொடி நன்னுதலாய்[6] மிக்க விதர்ப்பனருள்
பொற்கொடி யோடென்னைப் புணர்வித்தா லுன்னையான்
மண்ணரச ரெல்லோரும் வந்துபணி கேட்க[7]
பெண்ணரசு செய்விப்பேன் பொன்னங்கே தப்பாது

---

1. துவரைப்பதிக்கோன் – துவரகாபுரியின் தலைவன். 2. மாத்திரையில் – ஒரு நொடிப் பொழுதில், 3. உன்றாள் - உன் திருவடி. 4. துளிபெற்ற – மழைத்துளி பெற்ற. 5. அளி - வண்டு. 6. நன்னுதலாய் - நல்ல நெற்றியையுடையாய், 7. பணிகேட்க - ஏவல் கேட்க.

எவ்வாறு கூட்டுவிப்பாய் என்றார் எழில்நெடுமால்
தண்டுளப மாலைத் தடந்தோளாய் நீயுமிந்த
ஒண்டொடியைச் சேர வுபாயஞ் சொல்கேளாய்
காதல் மணம்புணரும் கத்திரியர் மங்கையர்க்கு
மாதங்கி தாள்பணியு மற்றோர் விரதமுண்டு
விந்தையுடன் கோவில் வரக்கா லந்தனிலே
வந்து புகுவன் மணக்கோலந் தன்னுடனே
கொற்றவனே யங்கிருந்து கூடலாம் நீயவனை
உற்ற விசேஷமென வோதினர் காணம்மானை
அன்னா ருரைத்த அவனை முகந்திருத்தி
மின்னே யப்பாவை விழிவே லெறிந்தபுண்ணில்
ஆற்ற மருந்தந்த யாவர்க்கும் நீயுரைத்த
மாற்றமே[1] நல்ல மருந்தான தென்றுரைத்து
நீயென்னை உய்ய[2] நிலைதந்தா யென்றுசொல்லி
மாயனை நோக்கி மனோரமையு மேதுரைப்பாள்
நலமே குறையில்லை நாயகிக்கும் உன்றனுக்கும்
குலமே யுனக்கு (குறையில்லை) அம்மானை
மின்போலிடை மடவாய் மெய்சொல்லக் கேட்டருளாய்
என்போ லொருவன் எழிலாய்ப் பாடியிலே
கிருஷ்ணனென்று ஞங்கேட்கி லவனென் றென்னை
உள்ளறியார் உரையா ரிவ்வங்கி ஷத்தில்
வள்ளல் வசுதேவன் மைந்தனியான் சத்தியமே
இன்னவகை சொல்லி இளங்கொடியைப் பார்த்து
அன்ன தலத்தி லழைத்துக்கொடு வருவோன்
உத்தமனே நீயங் கொளித்திருந்து நீயவல்ல
குத்திர மாய்ந்தார் கொண்டுபோ வென்றுசொல்லி
அச்சுதரைப் போற்ற அங்கவரை விடைகொண்டு
நச்சு விழியாள்[3] நடந்தனள் காணம்மானை
மொழியற் றிருந்த முதல்வனை விட்டகன்று

---

1. மாற்றமே — சொல்லே. 2. உய்ய — பிழைக்க.
3 நச்சு விழியாள் — நச்சுத் தன்மையுடைய விழியினையுடையாள்,

வழிபார்த் திருந்த மடக்கொடி[1]க்குப் போயுரைப்பாள்
அஞ்சன மெய்யும்[2] அழகுமுறக் கண்டு
நெஞ்சு தரித்திருந்தாய் நீயே திடனுண்டாய்
புருகார் புயத்தார்க்குப் பூண்மார்பும் கண்டோர்க்கும்
அழகா ரனங்கனுக்கு[3] அய்யனிவ னென்னலுமாம்
பொன்னழகு காட்டும் புணர்முலையாய் பொற்பமைந்து
நின்னழகுக் கொற்றவனாய் நேர்பட்டா னென்றலுமே
நின்வருத்தம் கண்டவர்க்கு நின்னை மயல்விளைத்தான்
தன்வருத்தம் கண்டளவில் சற்றல்ல வென்றுரைத்தான்
ஈதெல்லாம் நன்றுகாண் யானவனைக் கூடும்வகை
போதெல்லாம் கோதாய் புகலென்றா ரம்மானை
மையல் மிகுந்துரைத்த மாதுக்கு மற்றவளும்
அய்ய னுரைத்த தடைவே விரித்துரைத்து
வாரணியுங் கொங்கைநல்லாய் மற்றுநான் போய்ப்பணியும்
நாரணி கோயிலிலே நம்பி யிருப்பனென்று
சேடி யுரைக்கத் தெளிந்திருந்தா ளம்மானை
தன்னைத் தந்தையும் தந்தை வசுதேவனையும்
உன்னு[4] தமையனையும் உற்றதம்பி மார்களையும்
மிக்க அசுரரையும் விட்டுணு வீரரையும்
ஒக்க வழைத்து வுடனிருத்தி யேதுசெய்வான்
மண்ணா லாலுள்ள மறுமன்னர் தான்கூட்டி
கண்ணாலம் வந்தவர்போற் காத்தெம்மே வந்திருந்தார்
மங்கை தனக்கு மணமிடக் கூடினர்போல்
இங்கெமைத் தாக்க விருந்தாரெனக் கேட்டேன்
மாட்டாங்கு வாராமல் மற்றிதற்குத் தாக்கவகை
கோட்டானை மன்னர் குறித்தோ மென்றுரைத்தார்
உம்பர் கோன்[5] சொல்ல உக்கிரசேன னுரைப்பான்
நம்பனே[6] மன்னவர்க்கு நாமமெளி தானோமோ

1. மடக்கொடி – இளமையான கொடிபோன்ற பெண்.
2. அஞ்சனமெய் – கருநிற மேனி. 3. அனங்கன் – மன்மதன்.
4. உன்னு – நினைவிற்குரிய. 5. உம்பர்கோன் – தேவர் தலைவன்.
6. நம்பன் – நம்முடையவன்.

அன்றெளிதாய்ப் போறோ மென்றஞ்சாதே வந்தடைந்தார்
இன்றெளிதாய்ப் போகாமல் யாமெல்லாஞ் சிக்கென்று
ஓர்முகமாய்த் தாக்கி உடைய பொருதழித்து
கார்முக வாணுதலைக்[1] கைக்கொண்டு போவோமென்றான்
என்றவன் சொல்ல எழில்வண்ண னுள்மகிழ்ந்து
சென்றின்று நாளந்த தெனைமணம் விலக்கி
மாவிரதமாக வொரு மாயத்தால் கைப்பற்றி
கோவிதர்ப்பன் புத்தரியைக் கொண்டுவந்து கூட்டுகிறேன்
நஞ்சேனையைத் திரட்டி நன்று யணிவகுத்து
செஞ்சொல் லரசரெல்லாஞ் சிக்கென்று நில்லுமென்று
சண்ட வலி[2]யுடைய சாத்தகி யானவனை
திண்டிறல் சேனைக்குச் சேனாபதி யாக்கி
பேய்த் துக்கத்திற்ற பெரியோனு மங்குநின்று
போய்த் துர்க்கைகோயில் புகுந்திருந்தா ரம்மானை
ஒண்கழற் கால்மாய னொளித்திருக்கும் வேளையத்தே
பெண்கொள்ளத் தான்வந்த பிறகற் பலந்தன்னை
ஒப்பித்து மெய்திருத்தி ஒண்கழுத்தில் மாலையிட்டு
வைப்பித்த காரவரை போர்வாரணத்[3]தின் மேலேற்றி
சங்கடப்பட கதிரற்றாரை முரசார்ப் பரிக்க
தொங்கலணி முற்றத் துகில்கொடிக ளாலிக்க
மகதையர்கோன் மாளுவர்கோன் வங்காள கோமகன்
பகதேற்றான் குந்தியர்கோன் பாஞ்சாலர் கைதைகோன்
காந்தாரர் காலிங்கர் காயபோதர் காசியர்கோன்
சேர்ந்த குருகுலத்தான் சேதியான் சிந்துபதி
அன்றியு முள்ள அரசர் அனைவோரும்
கன்றிய[4] சேனைகரி பரிதேர் தற்சூழ
ஓதக் கடல்[5]போ லுணர்வலம் போகையிலே

---

1. கார்முக வாணுதல் – வில்போன்ற ஒளிபொருந்திய நெற்றி. 2. சண்டவலி – மிகுதியான ஆற்றல். 3. போர் வாரணம் – போர் செய்யும் யானை. 4. கன்றிய – கோபித்த, 5. ஓதக்கடல் – நீர் நிரம்பிய கடல்,

காதல் விதர்ப்பனுடக் கன்னியை நீராட்டி
வாய்ந்த மடவார் மணக்கோலஞ் செய்தருளி
காந்தள் மலரனைய கைமுகத்திற் காப்புற்றுத்
தந்தரங்கத் தவரவர் தாதியர் தற்சூழ
சுந்தரி பாதந் தேர்விடுத்தா னம்மானை
தூற்றுரை பேசுந் துவாரபதி நாடன்
காற்றிருந்த கோவிலிலே கன்னி வந்தாளம்மானை
சுற்றிவந்த சேனையெல்லாஞ் சூழ்ந்து புறம்பேணிக்க
மற்று மனோன்மையுடன் மாதங்கி கோயில்புக்கான்
அந்நேரந் தன்னி லயனு[1] மமரர்களும்
முன்னே முகிழ்த்தமிட்டு மொய்விசும்பில் நின்றளவில்
மேவிய வேதன் விறல்பற்றியைப் பார்த்துரைப்பான்
தேவா சுரர் செருச்செய்த நாளையிலே
பட்ட அசுரரெல்லாம்[2] பாருலகில் போய்ப்பிறந்து
துட்டராய் வாழ்வாரைத் துஞ்சுவிக்கக்[3] காரணமாய்
தண்பூண் துளபமால் பிறந்து வாழ்ந்திருந்தான்
ஒண் பூமாதேவி உருப்பிணியாய்ப் பிறந்தாள்
வாரிதனில்[4] துயிலும் மகாவிஷ்ணு மூர்த்தி
நாரி[5] தனைக் கைப்பிடிக்க நல்முகித்தஞ் சொல்லென்ன
பொன்முகூர்த்தம் சொல்பளவில் பூதராய்ப் போய்ப்புகுந்து
பங்கய தேவியுடன் பத்தினிமா ரெல்லோரும்
மங்கையை நீராட்டி மணக்கோலஞ் செய்தார்கள்
செங்கண் நெடுமாலைத் தேவரெல்லா மெய்புவித்து
அங்கு சுடர்விரிக்க அயனே சங்கறுக்க
அத் துந்துமிகள் ஆர்க்கவே ஆர்ப்பரித்து
தந்தை தாயன்றியிலே தம்மிலே தான்கூட்டி
மின்னிய சககாக்கை வேந்தன் விகற்பனுடன்
கன்னி யுருப்பிணியைக் கைப்பிடித்தா ரம்மானை

1. அயன் - பிரமன். 2. பட்ட அசுரரெல்லாம் - இறந்துபட்ட அசுரரெல்லாம். 3. துஞ்சுவிக்க - கொல்விக்க. 4. வாரிதனில் - கடலில். 5. நாரி - பெண்.

மேவிய பூமகன்தன் மேற்பாரந் தீர்ப்பதற்கு
தேவியைச் செங்கண்மால் தீவேட்டா[1] னம்மானை
தேவர் தனக்குத் திருமால் விடைகொடுத்து
மாதுதனையும் மனோன் மையுந் தேற்றி
வாது செயலென்று மணம்வந்த மன்னவர்முன்
ஆகாசத் தேயெழுந்து யங்குநின்றார் கண்காண
வாகான தன்படையுள் வந்து புக்கா ரம்மானை
அங்கது கண்டு அவன்படைஞ ரார்ப்பரித்தார்
சங்கப் படாகமஞ்ச மாமுரசந் தான்முழங்க
விஷ்ணு வீரு விரைந்தாலித் தோடலுற்றான்
தட்டுறு தோவல மாகியு மவ்வளவில்
அங்கிவ ராளும் அரசரையும் சேனையையும்
எங்கும் நெருங்க இடைஇடையே தானிறுத்தி
ஆனை யணிக்குள்ள அகூரனைத் தானிறுத்தி
மானத் தேர்க்குள்ளே வசுதேவனை நிறுத்தி
சேனைப் பணிக்குள்ளே சிரீபாலனை நிறுத்தி
எந்தெந்தத் திக்கும் இராசாக்களை நிறுத்தி
பத்திர மென்கின்ற பராயூப மங்குற்று
கச்சை புனைபுயத்தில் தமனியக் காப்[2] பணிந்து
பூண்பபிற (வெல்லாம் பூரித்து) மெய்க்கணிந்து
நாணிற் சிலைகொளுவி[3] நற்கோதையும் புனைந்து
போர்க்கோ லம்பூண்டு புதுமலரித் தேரேறி
ஏற்கும் படைக்குலங்கள்[4] எத்தனையும் செய்வித்து
வீரக் கொடியாட வெண்சாமரை வீச
மூரிக் கடல்சேனை முன்னின்றார் சாத்தகிதான்
சிக்கென் றிவர்நிற்க சேயிழையாள் தன்னைமுன்னே
துக்கை தோள்விடுத்துச் சூழநின்றார் தாம்போகி
மண்ணுக்குள் மன்னர் மானமிட விண்ணார்ந்து

1. தீவேட்டான் - தீயின்முன் மணஞ் செய்தான். 2. தமனியக் காப்பு – பொன்னால் செய்த காப்பு. 3. சிலை கொளுவி – வில்லை வளைத்து. 4. படைக்கலங்கள் - படைக் கருவிகள்.

பெண்ணுக் கிருந்த பிறகற்பலன் றனக்கு
தன்மகள் வாற தடம்பார்த் திருக்கின்ற
மின்மகள் பைம்பூண் விதர்ப்பனுக்கு மேதுரைத்தார்
வாவுந் துவரையர்கோன் மாயமாய் வந்துபுக்கு
(தூவும் மலரும் துய்)நெருப்பு முண்டாக்கி
அந்தரி[1]க்கும்பிட் டணைவாளைக் கைப்பிடித்து
தந்தா ரதைக் கூட்டி னானென்று சொன்னார்
சொன்ன சொற்கேட்டு செவியில் சுருக்கென்ன
மன்னன் விதர்ப்பன் மணியுதட்டை மென்றுநின்று
போரேறு[2] போலப் பொருமரசர் தற்சூழ
தேரேறி வில்வளைத்துச் சென்றான் காணம்மானை
பண்டு நமக்குடைந்து பாதாளம் புக்கவர்கள்
தண்டிக் கருவித் தரித்தாரே தார்வேந்தர்
எல்லாருந் தேரேறி எல்லோரும் வில்வளைத்து
செல்லா நிறத்தான் மேற்சென்றனர் காணம்மானை
உருப்பிணிக்கு மூத்த உருப்பினன் கேட்டதனை
நெருப்பெழப் பொங்கி நினைப்பளவில் தேரேறி
வில்வளைத்து நாண்வலியாய் மேன்மேற் சரந்தொடுத்து
பலபடைஞ ரோடு பகைத்துப்போய்த் தாக்கினன்காண்
தக்க சராசந்தன் சசுபாலன் காமபோதன்
மிக்க வடவை[3]யென வேகமுடன் சொல்பளவில்
பேரிலச்சை யெய்தி பிறகற்பலன் தானும்
தேருடலம் சூழவொரு தேரேறி வில்வளைத்து
தாழ்ந்தவரைக் கொன்றுழக்கிக் காதலியை மீட்பனென
ஏந்த லப்[4]படையுடனே ஏகினன் காணம்மானை
மிக்குள்ள ராசர்களும் வேல்வடவை போற்சினந்து
எக்க வுடன்று (எதிர்நின் றாரம்மானை)

---

1. அந்தரி – துர்க்கை, பார்வதி. 2. போரேறு – போர் செய்யும் காளை. 3. வடவை – கொடிய வடவாமுகாக்கினி. 4. ஏந்தல் – பெருமையுடையோன்.

வெடுவெடென தேரோட்டி மிக்கெங்குஞ் சூழ்ந்துகொண்டு
சுடுகணை மாரி சொரிந்தனர் காணம்மானை
தூசு முனைகள் துலையாச் சுடுகணைகள்
வீசும் விதர்ப்பனுக்கு மேனபல தேவனுரைப்பான்
எனக்கு மொருபெண்தந்தேன் மாமனுட வாழாதே
இங்கே போர்வருமோ யென்றான் பலதேவன்
வெங்கோபம் போக்க விதர்ப்பனு மேதுரைப்பான்
பெய் வளையை[1] விட்டுப்பிழைத்துப் போமெனவே
கைவளையும் வில்லாய்க் கணையொழிந் தானம்மானை
இப்பா லவர்கள் எதிர்ந்து பொருகையிலே
அப்பா லழன்று அடர்ந்து பிறகற்பலந்தான்
சாத்தகியு மேற்றாக்கத் தலைப்பெய் திருவோரும்
ஆற்றவர மண்டலமர் பொருதா ரம்மானை
ஒருபாற் சராசந்தன் உள்ளகத் திறீபன்
திருமாலைத் தாக்கிச் செருச்செய்தா ரவ்வளவில்
மன்னர் கடற்படையும் வசுதேவன் தன்படையும்
துன்னவே தாக்கித் துணிந்துபெரும் போர்விளைத்தார்
காரோடு[2] கார்தாக்கி கலந்து பொருவதுபோல்
தேரோடு தேர்தாக்கித் திகைத்தது காணம்மானை
கிரியுங் கிரியுமாய்க் கிட்டிப் பொருதுவர்போல்
கரியுங் கரியுமாய்க் கைகலந்த தம்மானை
ஏவு மேவுமாய் யெதிர்பாய்ந் திடுவதுபோல்
மாவு மாவுமாய்[3] மயக்குற்ற தம்மானை
மேலாளும் மேலாளும் வில்லாளும் வில்லாளும்
காலாளுங் காலாளுங் கைகலந்த தம்மானை
இரண்டு படையும் இகலிப் பொருமளவில்
திரண்டு பிணக்குன்றாய்ச் சேர்ந்தன காணம்மானை
வெங்குதிரை யானை மிகப்பிணங்க ளங்கே

---

1. பெய்வளை – வளையணிந்த கையினையுடையாள். 2. காரோடுகார் – மேகத்தோடு மேகம். 3. மாவும் – குதிரை, யானை முதலிய படைகள்.

செங்குருதி வெள்ளத்தில் சென்றது காணம்மானை
தூளி[1] யும் சூரியனைத் தோன்றா வகைமறைக்க
காளியும் பேயும் கலித்தெழுந்த தம்மானை
மாக ருலகும்[2] வளையாழி மண்ணுலகும்
நாக ருலகும் நடுக்குற்ற தம்மானை
ஆங்கதனைக் கண்டு அரிகேச வன்றானும்
தாங்கரிய போர்வெல்ல சாத்தகியோ டேதுரைப்பார்
உருப்பன் சசுபாலன் உள்ளிட்ட மன்னரெல்லாம்
நெருப்பெனத் தாக்குதலால் நின்றதில்லை நம்படையும்
மிக்க சராசந்தன் வீமனன்றிச் சாகறியான்
சக்கரத் தாலன்றிச் சசுபாலன் சாகறியான்
பின்னை யவன்கையால் பிறகற்பலன் போகான்
மின்னை விட்டாலன்றி விதர்ப்பனும் போகறியான்
உற்ற மனோர்மை யுருப்பிணிபோல் தேசுடையாள்
மற்றவனை ஒப்பித்து மானத்தேர் மீதேற்றி
விட்டுணும் போலே விதர்ப்பன் மகளென்று
ஓட்டிலே மீண்டிடுவார் ஊர்புகலா நாமதுமுன்
எம்படையு மன்னவர்க்கு மவரடிப் படுத்தி
நம்படையைச் சாய்த்து நடந்துவரச் சொல்லுமென்று
மற்றவனை யேவி மனோன்மையைப் பார்த்துரைப்பான்
பொற்றொடிச் செவ்வாய் பூங்கொம்பே கேட்டருளாய்
மன்னன் விதர்ப்பன் மடந்தையே தானென்றும்
உன்னையே யெனு மொருத்தியையு மங்குவிட்டுப்
போனா ரொழியப் பொருந்தார்கள் மற்றரசர்
தானோர் மொழிமடவார் செய்யும்வகை செப்புமென்றார்
மாதவன் சொல்ல மனோரமை எடுத்துரைப்பாள்
நாதக் கடலுலகில்[3] நல்லுற்றா ரானவர்க்கு
தாழ்வுற்ற போது தரியாமல்[4] சார்ந்திருப்பார்
வாழ்வுற்ற போதையினு வாழ்வாரோ மாதவனே

---

1. தூளி – புழுதி. 2. மாகருலகும் – தேவருலகும். 3. நாதக் கடலுலகு – ஒலியுறு கடலால் சூழப்பட்ட உலகு. 4. தரியாமல் – உடன்படாமல்.

மின்னனவும் நின்றனவும் வேறுபா டெய்தாமல்
என்னளவே நிற்கி லிதுவே நலமென்றார்கள்
வற்றாக் கருணையுடன் மாதவனும் கேட்டுகந்து
உற்றார்க் கினியார்[1] உனைப்போலே யில்லையென்று
கற்பித்துத் தோழிதனைக் காட்சிபெற வொப்பித்து
புற்பகத் தேரேற்றிப் பொற்கலை[2] முக்காடுமிட்டு
ஆங்கு நிறுத்தி அணிவிதர்ப்பன் மங்கையொடும்
வாங்கு சிலைமாயன் வழிக்கொண்ட சேதிதனை
மைந்திரத் தோள் மாயவனும்வழிக் கொண்டாரம்மானை
சக்தியதன் சொல்பளவில் சாத்தகியு மற்றவரும்
தங்கள் படைமுறியத் தாமும்புறங் கொடுத்து
பொங்கு களம்கழியப் போயினார் காணம்மானை
அங்கவர்கள் பின்னே யடர்ந்து தொடர்ந்துவரும்
தங்க வரிதான சராசந்தன் சிசுபாலன்
முரிநெடுந் தேர்மேல் முட்டாக்கு முன்தாழ
பாரிற்குல மகள்போல் பரபரத்து நிற்பாளை
மன்னும் விதர்ப்பன் மகளென்று மன்னரெல்லாம்
கன்று களித்துக் கடற்படையை மீளவிட்டு
மல்கவே பின்பிற்று மாயன்மேல் போறவரை
செல்கைத் தவிர்த்துச் சிராசந்த னேதுசொல்வான்
சத்துப் போலாரைத் தான்தேடிச் செல்லுவதும்
ஒத்துப்போர் செய்தவர்க்கு ஒளித்தோடிப் போவதுபோல்
உளவறியா தார்க்கு உற்றார்போல் வந்திருந்துன்
களவாடல் செய்வதுவுங் கைவிடானா யென்றான்
மாறாகி[3] அஞ்சி மடக்கொடியை விட்டானாய்
போறான் பிழைத்தென்று போர்வேந்தர் மீளாராய்
விருது விட்டுப்போவதற்கு வேட்டுண்டோ வென்றுசொல்லி
திரியை மறுத்துச் செராசந்தனைத் தொழுது

1. உற்றார்க்கினியார் – நண்பர்களுக்கு இனியவர். 2. பொற்கலை – பொன்னாபரணம். 3. மாறாகி – பகையாகி.

பிரியமிக மிகுத்து பிறகற்பல னுரைப்பான்
கைப்பிடிக்கும் வேளையத்தே காதலியைக் கைகடக்க
மெய்பிடிக்கும் மானத்தால் விடத் துணிந்திருந்தேன்
வென்றிப் படைபொருது மெல்லியலை மீட்டளித்து
நன்றிக்குக் கைமாறு நான்செய்வ தேதெனவே
நின்றவர்க் கெல்லாம் நேரிழையாள் தானீன்ற
துன்று மணித்தேரை தோகையரால் ஊர்வித்து
பொருது விதர்ப்பன் போர்த்துக் கருகாக
வாயில் துவாரையில் வனஞ்சோலை யிலிருந்து
தாரொன்று தோளினர் தம்மில் விசாரமிட்டு
போரென்று மீண்ட புரிகுழலை யிப்போதே
நன்னதியில் நீராட்டி நற்கோலமு மியற்றி
முன்ன மறையின் முறைமையா லிவ்விடத்தே
ஆகுதி[1] யின் முன்னே அரியபிற கற்பலருக்கு
வாகுபிற வமைத்து மங்கிலியும் பூண்பித்து
இடிமுரச[2] மார்ப்ப இருவரையுந் தேரேற்றி
உடனரச ரெல்லாரு மூர்புகுத வேணுமென்று
கோதையைத் தேரிற்குக் கொண்டுவா வென்றவள்தன்
தாதை விதர்ப்பன்தனை விடுத்தா ரம்மானை
வெட்டெனச் சென்று விதர்ப்பனு மவ்வளவில்
தட்டென்று தேர்மேற் றலையிக்கு நின்றவனை
உற்றன்பினா லென்று உருப்பிணியே யென்றழைத்தான்
மாற்றமலாத மனோன்மையே யங்கு நின்றாள்
என்மகளல்லா ணியாதவள் மங்கை யென்று
தன்மகளைக் காணான் தளர்ந்தயர்ந்தா ரம்மானை
மன்னுங் கடத்துவரை மாயன்கைப் புகன்ற
மின்னுக்[3] கழுது விதர்ப்பன் தவிப்பதனை
கண்டொருவன் னோடியந்தக் காவலனுங் கேதுரைப்பான்

1. ஆகுதி - வேள்வி. 2. இடிமுரசம் — இடிபோன்ற முரச வாத்தியம். 3. மின்னுக்கு — மின்னலைப் போன்ற மடவாள்.

வண்டல தார்மன்னீர் ! மதித்துவரை மாயனுக்கு
மெய்மகளை ஈந்து புகழ்பெறுதி ரென்றுரைத்தான்
என்றசொற் கேட்டு யிலச்சைப் படாம்போத்து
சென்ற சராசந்தன் சிசுபால னுள்ளிட்டார்
எல்லார்க்கும் வெவ்வே றிடைஞ்சல் வழிதேடி
நல்லரக்க ரெல்லாம் நழுவினர் காணம்மானை
ஒருக்கால் நினைந்து உவந்து மணஞ்செய்வதற்கு
இருக்கால் நினைந்து யிருந்த பிறபலனும்
ஒருவே டகமன்றி உலகெல்லாம் பாராட்டி
இருவே டகம்பூண்டோ மெனவேகினன் காணம்மானை
வந்தித் தழுது விதர்ப்பனுந் தன்மனையில்
அந்திக்கு முன்னே அடங்கினான் காணம்மானை
எல்லோரும் போனபின்பு வென்று மனோன்மைதனை
நல்லதேரோடு நடத்திப் போயோர் மறையோன்
கண்டு கடத்துவரை மன்னவரைக் கூட்டிடவே
கண்டு பரிவுற்றுக்[1] காதலியைக் கைக்கொண்டு
வெற்றி முரசதிர வேந்தர்கள் தற்சூழ
கற்றை மணிக்கவரி[2] காரிகையார் கையசைப்ப
மங்கல பாணி[3] மடநல்லார் வாழ்த்தெடுப்ப
பொங்குகடத் துவரைப் புக்கினர்கா ணம்மானை
பொன்மா ளிகையிற் புகுந்து புருஷோத்தமனும்
மன்மாத ரோடுமகிழ்ந் திருந்தா ரம்மானை
தீவேட்ட மாயன் சிலநாள் கழித்தபின்பு
மாவேட்டை யாடி மனத்தே மிகநினைந்து
மன்னவரும் வன்னியரும் மாவலரும் காவலரும்
தன்னவரு மற்றுமுள்ள சதிரங்கமும்[4] சூழ
ஆரணியம் போய்ப்புகுத ஆரணியத் துள்ளவர்கள்

---

1. பரிவுற்று – அன்புற்று. 2. மணிக்கவரி – அழகிய சாமரம். 3. மங்கல பாணி – மங்கல வாழ்த்துப் பாடல். 4. சதிரங்கம் – நால்வகைப் படை.

வாரணைத் தும்சுற்றில்லை வளைத்து வேரொழுக்கி
காட்டில் மிருகம் கரடிபுலி கலைமான்
ஓட்டிப் பிறபோகா தோரிடத்தே யாகியபின்
அச்சுதனு மேனை அசுரரும் போய்ப்புகுந்து
(நச்சுக்) கணையாலும் வேலாலும் கோலாலும்
அவ்விட மெல்லாம் அடையப்பட வுழக்கி
செவ்விய மன்னர்க்குச் செலவிட்டுக் கொள்ளையிட்டு
பொங்கு நிழலில் பொழுதளவும் வீற்றிருந்து
கங்குல்[1] வருமுன் கடிநகரி யுள்புகுந்து
மண்டணி தாரனும் மன்னவனும் போனபின்பு
விட்டுணு வங்கிஷத்தில் மிக்கப்பிற சேனனென்பான்
காட்டிலொரு நிழலில் கண்துயின்று[2] கண்விழித்து
மீட்டு மிருளில் விரைந்து வருமளவில்
மற்றவன் தந்தை மந்திரசித்த னென்பான்
சுற்ற நெடுங்காலம் சூரியனை அர்ச்சிக்க
செங்கதிரோ னிந்த சிவந்தக மாமணியை
அங்கவன் பூண்டுவர அங்கவன் சோதிகண்டு
அத்திக மென்னு மருவரையில் வாழ்வதொரு
சத்தியுடைய தனிச்சிங்கம் பின் தொடர்ந்த
கூருகிரால்[3] மற்றவனைக் கொன்றே கும்பிச்செறிந்து
தாரியல் மாமணியைத் தான்பூண் டிருக்கையிலே
வச்சிர வண்ணன் பேணமதனப் பிரபைதனை
மெச்சுறவே தீவேட்டு மீளுகின்ற அப்புயனை
கண்டு வணங்கிக் கணசிங்கமாய் நிற்பளவில்
மண்டு மணியை மதனப்பிரபை கண்டு
பூவண்டு கண்ணினு னிம்மணியை நீர்வாங்கி
தாவென்னத் தன்கேள்வன் சாம்புவனைக் கைதொழவே
அம்மணியைத் தாவென் றவனுமிக நன்மைசொல்லி
செம்மணியைக் கேட்பளவில் சிங்கம் உருத்திடவே
மற்றதனைக் கொன்று மணியை மயில்களித்து

1. கங்குல் – இரவு. 2. கண்துயின்று – கண். உறக்கம் மேற்கொண்டு. 3. கூருகிரால் – கூரிய நகத்தால்.

வெற்றிக் கோலேற்றித்[1] தன்வெம்பதியே போய்ப்புகுந்தான்
ஆனமணிக்கா யடவியிற் சூழ்ந்துபிற சேனனைக்கொன்று
(கானமணி) நிழற்ற சிங்கந்தனைக் கொன்று
கனமணியைக் கொண்டு கரடியர்கோன் போயிருக்க
நன்மணியைப் போற்றுவார் நாட்டிலுள்ளோரேதுசொல்வார்
கற்ற மனது கறுப்பாக்கிக் காசினி[2]யில்
சுற்றம் நடந்துச் சுகமிருந்தார் மற்றுமுண்டோ
வேட்டைக்குத் தான்போன வேந்தரும் வெம்படையும்
வாட்டமற வந்தும் வாரான் பிரசேனன்
தந்தைக் காதித்தன் தந்தசிவ மணியதனை
எந்த வுலகினிலு மில்லாத மாமணியை
பூண்டு வரக்கண்டு போராழியான் விரும்பி
வேண்டியே கேட்கவிதியால் கொடா திருந்தான்
அம்மணிக்காக வல்லோ ஆர்வேட்டை போனதென்பர்
அன்னகரோ ரெங்கெங்கு மப்படியே சொல்பளவில்
மன்னும் பிறசேனன் வங்கிஷத்தோ ரெல்லோரும்
செங்கண் ணெடுமால் திருவடியின் மேற்பணிந்து
பொங்க வழுது புலம்ப லுற்றாரம்மானை
உள்ளபடி சொன்னாலு முடிக்கொள்ளா ரென்றறிந்து
வள்ளலுந் தேற்றி மனையில் விடுத்தவரை
அவ்விய நெஞ்சற்[3] கடாப்பழி பூண்பது போல்
செவ்விய நெஞ்சறியா வஞ்சனை சேர்ந்ததனை
நன்றுற்றார் தங்களையும் தக்கோரையு மழைத்து
முன்றுற்றார் தொழ சமமொழிந்தான் முயல்நெடுமால்
மது[4]வுற்ற பூவில் மதுக்காண வொட்டாத
சதுற்றிப் பிறைகண்ட தாழ்வது சூழ்ந்ததுவால்
கந்தனுக்கு முன்பிறந்த கற்பகத்தின் தன்சாபம்

---

1. வெற்றிக்கோல் – வெற்றி சூடி. 2. காசினி – உலகம்
3. அவ்விய நெஞ்சம் – அழுக்காறுகொண்ட உள்ளம். 4. மது – தேன்.

வந்தெனைச் சூழ்ந்தமையால் மானிடத்தை[1] விட்டிடுமோ
கோமகன் துஞ்சினதுங் கோளரிபன் துஞ்சினதும்
மாமணியை வன்கரடி வாங்கிப்போய் வாழ்வதுவும்
மன்குலத்து மாயன் மனதிலே கண்டருளி
நன்குலத் தாரெல்லார்க்கும் தான்சுற் றளுகவென்று
வாலவிதி னென்று மணவாங்கி மீள்வதர்க்கு
பாலவிழிச் செவ்வாயன் படையெழுந்தா லம்மானை
படைத் தலைவரொடும் பலபவிசு[2] தற்சூழ
மடைத்தலை வாளைபுகழ் வண்டுவரை விட்டகன்று
முன்வேட்டை சென்ற முதுகாட்டில் சென்றுகண்டு
பின்வேட்டை சிங்கம் பிளந்த பிறசேனனைத்தான்
சிங்கம் பிளந்தவகைச் சென்றவர்க் கெல்லாங்காட்டி
அங்கவன் றன்னை யடக்கி அவ்விடம்விட்டு
தாப்ப பரிதாருன சாலமே கானகன்று
அப்பு தேறமென்னும் மருவியின் மீதேறி
நீளுமலை யருவிநீள் சுரமுந்[3] தான் கடந்து
மாளுவ மென்னுமந்த மாலியாறுங் கடந்து
பாசாண்ட மென்கின்ற பாதாளத் தூடேபோய்
ஏரிலாப் பஞ்சகிரி யென்கின் றலைத்திறந்து
காத்தரசன் சீதக் கடலரசன் நீர்தெளிக்க
வேத்தரசர் எல்லோரும் ஈண்டித் திறையளக்கும்
தம்புரம் புகுந்து தாமு மவதரித்து
செம்புவன நெடுமால் சிங்கநாதஞ் செய்து
வான்[4] கேட்டயிர்க்க வருஞ்சிங்க நாதவொலி
தான்கேட்டெரி விழித்துச் சாமனொனு மேதுசொல்வான்
உற்ற பிரமாவுக்கு ஓங்கிய சந்ததியாய்
மற்று மெனைக் கனகமஞ்சரி பெற்றபிள்ளை
அய்யிரண்டு[5] சென்றதற்பின் ஆதித்தயன் பிறந்தான்

---

1. மானிடம் - மனிதகுலம். 2. பலபவிசு - பல சிறப்புக்கள்.
3. நீள் சுரம் - நீண்ட காடு. 4. வான் - விண்ணுலகத்தவர்.
5. அய்யிரண்டு - பத்து வயது.

மெய்யான தேவர்களும் மிக்கோரும் பின்பிறந்தார்
அன்றளவாக அநேக நாள் சென்றிடவும்
இன்றள வாகவு மிந்நகரில் வீற்றிருந்தேன்
கென்றி யேனிந்த கிளர்சங்க நாதவொலி
ஈசனு மாலயனும் என்மேல் கறுப்புமில்லை
வீசு நறுங்கமல வேதாவோ வென்தந்தை
போரின்று வேட்டுப் புகுந்தங்கு நின்றவனை
ஆரென்று நீர்சென் றறிந்துவா வென்பளவில்
மிக்கதிரு நெடுமால் வெண்சிலையை ஞங்கொழுவி
திக்கும் நடுங்கச் சிறுநாணொலி யெறிந்தான்
தரியாத கோபமுடன் சாம்புவனுக் கேட்டதனை
அரி நாணொலி போலான தென்பளவில்
பொங்கு முலகேழும் பொன்வரை[1] யும் நின்றதிர
சங்குதனை வாய்வைத்தான் தனிநெடுமா லம்மானை
பொங்கொலி வல்லசுரர் போர்தொலைத்த நாரணன்கை
சங்கொலி போலுமென்று சாமபளயிற் பளவும்
சந்திர காந்த னென்னும் தன்கரடி மன்னொருவன்
அந்தரத்தே[2] வந்து நின்று அச்சுதன்
தேன்கொண்ட பைந்துளபச் செல்வனையும் சேனையையும்
தான்கண்டு மீண்டுசென்று சாம்புவனுக் கேதுரைப்பான்
காணுயச் செங்கமலக் கண்ணனுக்குத் தான்துணையாய்
பாணுய மாண்டானுய் பலபொன் கலையுடுத்தி
தக்கபணி பூண்டு தாட்டிகத் தேரேறி
மிக்ககொடை யோங்க மேணஞ் சாமிரமிரட்ட
பொற்கொண்டு (சென்று) பொருவேந்தர் தற்சூழ
தொற்கொடி முன்னிற்கச் சேனை யணிவகுத்து
நின்ரு ஞெருவன் நெடுமால் நிற்பதுபோல்
என்ரு ளதுகேட்டு என்காச னேதுசொல்வான்
பன்ஞ ஞெம்நம்மைப் பணிகொள்ளும் பாற்கடல்வாழ்
அன்ஞயகனை யன்றல்லா தாரே னும்

1. பொன் வரை – இமயமால் வரை. 2. அந்தரம் – விண்ணகம்.

அந்தா யுதம்பிடித்து ஆங்கருடன் மேலேறி
வந்தாலு மென்னுடைய வாகுக்குப்[1] பற்றுவரோ
நானடா வென்னில் நமனு நடுங்காதோ
மானிடரோ விங்கெனக் குமச்சென வெகுண்டு
மானமுர சறைந்து வான்படையை முன்கூட்டி
தானும் பொற்கோலம் சமைந்தான் கறடியர்கோன்
ஆணித் தனவரையில் ஆதித்த னுற்றதுபோல்
மாணிக்கங் கூடம · குடமும்தான் புனைந்தான்
புனைந்து யண்டணி மாமலையைமாமேரு மூச்சுவர்போல்
ஒன்றரை யோசனைநீளோன் கவசந்தான் புனைந்து
மிக்க திருநுதலில் வீரபட்டந் தான்கட்டி
தக்க பணியால் தலையி லலங்கரித்து
துஞ்சுநாள் வந்தாக்கால் தோளெட் டுண்டாவையெனு
தஞ்ச வயனிட்ட சாபந் தலைக்கூட்டி
முட்டாமை வானம் முடிகிழியத் தளர்ந்து
அட்டர் புயம்பெற்ற அகலமெனுந் தேரேறி
தொங்கல் நிழற்றத் துணைக்கரம் காலசைப்ப
சங்கப் படகம் தலமதிர[2] முன்னதிர
சுற்றுக்கா செறியு மிராக்க தர்கள்
பெற்றுக் கரடி முசுவெள்ளம் பலசூழ
பாம்பு படமொதுங்க பார்வான பயங்கொளுவ
சாம்புவன் மாயன்மேல் தாக்கினன் காணம்மானை
மேருவைப் போலுயர்ந்து வெவ்வடவை போல்விழித்து
தேருக்கே வந்தவனை தேர்வேந்தன் பார்த்து
பண்டச்சங் கண்டறியா பார்த்திபர்கள் மற்றிதனை
கண்டச் சதுரகால் விட்டுடைந் தோடி
வில் குளறித் தோற்குளறி மிக்கவணிகுளறி
சொல்குளறிப் பின்னெதுங்கும் தூயோனைப் பார்த்துரைப்பார்
கார்வரை[3] போலுங் கரடியுருப் போலும்
தேர்வர வில்லைத் திசையெட்டும் போதாது

1. வாகுக்கு – தோள் வலிக்கு. 2. தலமதிர – உலகம் அதிர்ந்து ஒலிக்க. 3. கார்வரை – கரிய மலை,

கண்டறியோங் கேளும் கதையிலு மிப்பெருமை
உணர்த்தியும் பூந்துளப மாலே மதியிலையோ
சிங்கம் பிறசேனன் சிவந்தக மாமணியை
மங்கினதும் போதாமல் மற்றெமக்குங் காலனிதோ
எங்கென்று சொல்லி யிடைவாரை[1] யஞ்சலென்று
கன்றியன்று தோள்நெடுமால் கூறலுற்றா ரம்மானை
முன்தம்மேல் வந்து மூண்டவர் கொண்டடர்ந்த
என்னைநீருள் ளெறிந்து உருக் கொண்டஞ்சுவரோ
குணத்திற் கொடிய கடுங்கால்[2] போல்வந்தவனை
கணத்திற்[3] படவடிப்பேன் காணு மெனச்சொல்லி
தானும் பொற்கோலஞ் சமைத்துத் தனுவளைத்து
பானுந் தலைமயங்க வான்தேரின் மீதேறி
தன்படை யிலுள்ளதெல்லாம் சாம்புவான் தன்னுடைய
வன்படை மேலேவி வார்சிலையை நாணெறிந்து
தாக்கினன் சாம்புவனைத் தாமோ தரன்தானும்
நோக்கினல் சாம்புவனும் மாயவனைப் பார்த்துரைப்பான்
சந்திரருஞ் சூரியரும் தானவரும் வானவரும்
இந்திரரு மென்னகரில் எய்தப் பயப்படுவார்
தூயன் போலென்முன் துணிந்து போர்வழைத்து
நீயாருன் போரேது நின்னகரே தென்றுசொல்லாய்
கண்ணனுஞ் சொல்வான் கடத்துவரைக் கற்றீபன்
வண்ண மதியாயேல் வாசுதேவ னென்பேர்தான்
பேர்கேட் டிங்காவதென்ன பெண்பேசி வந்தோமோ
பேர்கேட்டு வந்தேன் போர்வல்லை யோயெனவே
உன்படையோ டுன்னை யொருகணத்திற் கொல்வனென்று
தன்படையுந் தானுமாய்த் தாக்கினன் காணம்மானை
கண்ணன் படையும் கரடியர்கோன் தன்படையும்
துண்ணென்று[4] தாக்கித் தொலைப்புற்ற பூசலிலே

---

1. இடைவாரை - அஞ்சுபவர்களை. 2. கடுங்கால் - கடிய சூறவளிக் காற்று. 3. கணத்தில் - நொடிப்பொழுதில். 4. துண்ணென்று - திடீரென்று.

வெங்களிற் றோடும் விழுந்தார் ஒருகோடி
துங்கப் பரியோடும் துஞ்சினர் கோடி
வெம்பரித் தேரோட்டிக் கோனும் சாம்புவனும்
தன்படையைக் கையமர்த்தித் தேக்கினர் காணம்மானை
ஆனெடுங் குன்றொக்கும் ஆடவர்கள் மெய்யிரண்டும்
வானிடு வில்லொக்கும் மற்றிவர்கள் வில்லிரண்டும்
வாடை பிடியொக்கும் மாசாங் காசாங்கள்
கோடை மழையொக்கும் கோத்தெய்த பலசரங்கள்
வாரியு மாக்களிறும் வான்முகடு மச்சமுற
சூரியனுந் தோன்றாது தூளிப்பெரும் படலம்
வருணன் படைக்கலமும் வாயுவின் வார்கணையும்
விருமன் கொடுசரமும்[1] விஷ்ணு வாத்திரமும்
செவ்வே தெரிந்தொருவர் சேனேரி வெய்திடுவார்
அவ்வவை தன்னை அவையா லறுத்திடுவார்
தண்டு முரசந் தனிவே லெரியீட்டி
கொண்டு நெருக்கிடுவார் கூத்துண் டார்ப்பரிப்பார்
ஓதிப் பொருது முகில்வண்ணன் தான்திரைப்ப
காதி[2] யடர்ந்து கரடியர்கோ னேதுசெய்தான்
தொண் டொன்று கைக்கொண்டு தேரினும் தான்குறித்து
வண் டொன்று பூந்துளபமாயன் மேலோட்டடந்து
மாகனத் தேர்பூண்ட வான்புரவி தான்கிளையும்
விகனையுந் தினமுற் படவடித்தா னம்மானை
சாரதியு மாவும் தடந்தேரும் கோப்பழிய[3]
பாரதிரப் பாய்ந்து பரந்தாம னேதுசெய்தான்
நறைபோ தலங்கள் நாணத்தால் மானமற்று
இறைபோ தில்கொல்வே னினியிவனை (என்றுசொல்லி)
மோதினன் வலிந்து முன்னின்ற சாம்புவனை
குத்தினன் மார்பில் குடைந்து குருதிபுக
ஓங்கலே போல்வா[4] னுயிர்நிலையை யுள்ளறிந்து

---

1. கொடுசரம் – கொடுமையான அம்பு. 2. காதி – அழித்து. 3. கோப்பழிய – அமைப்பு நிலை அழிய. 4. ஓங்கலே போல்வான் – மலைபோன்ற நிலையுடையான்.

கோங்கலர் தார்நெடுமால் குத்தினன் காணம்மானை
மால்குத்தா லாற்றாமல் மயங்கிப் பொறிகலங்கி
வேல்குத்த நாதமெய்யுந் தெளிந் துரைப்பான்
தெளிவிய ஞானத்தால் செங்கண்மா லென்றறிந்து
தொருவத் தெளிந்து தொழுது தீதற்றுரைப்பான்
கண்ணனே ஆரணனே காரணனே காயாம்பூ
வண்ணனே காரணனே மாதவனே கேட்டருளாய்
வானுருவு மீண்டி வளநீரு காந்தத்து
மீனுருவாய் நீதான் விளையாடும் நாளகத்தும்[1]
அன்னாளமரர் அமுத மெழக் கடையும்
மன்னன வாசுகியால் மந்தர மாமலையால்
சீர்பெற் றுயர்ந்த திருமுதுகிலே சுமந்த
கார்கட லுள் ளாமையாய்க் கண்துயின்றநாளகத்தும்
பாரார் புவிமடந்தை பாதாளத் துள்ளழுந்த
வாராக[2] ரூபமாய் மண்ணிடந்த அந்நாளும்
வரசிங்க மான வலிகே சரியாக
நரசிங்க மாய்நீ நலிந்துகொன்ற அந்நாளும்
பூவலிய மானைப் புணரும் புயத்தோனே
மாவலியைக் காவல்செய்ய மண்ணளந்த அந்நாளும்
செய்ய மகவாய் தசரதற்கு நீதோன்றி
தூய்ய இராவணற்காய் தோகை[3] யுடன் தான்போகி
நின்னிலங்கை கைக்கொண்டு நிருதர்குலம்[4] வேரறுத்து
தென்னிலங்கை சென்று சிறைமீட்டா யப்போது
சிற்றாளாய் மந்திரியாய் சேவகனாய் காவலுமாய்
உற்றாளாய் நின்றுனக்கு ஊழியங்கள் செய்திலனோ
மார்க்க வசுரர் வலிகெடுத்துப் பூபாரந்
தீர்க்க வசுதேவிக்குத் தோன்றினையே துங்கமணி
குப்பிற சேனைத் துணித்த சிங்கத்தைக்கொன்று

---

1. நாளகத்தும் – நாளிலும். 2. வராகம் – பன்றி. 3. தோகை – மயில்போன்ற சாயலுடைய சீதை. 4. நிருதர்குலம் – அரக்கர் இனம்.

சிவந்த கரத்தைப் பேணி வைத்தேன்
அவ்வாறு தொண்டுசெய்தே னென்றியு முன்போலினியான்
செவ்வாய் மணியே யுன்சீயத்[1] தாலே தொலேந்தேன்
ஆயிற்றவம் போகா ஐயனே நீயெனக்கு
சாயுச்சிய பதமே தாவென்று சாம்புவனும்
மின்முகில் சோதிபுனை மிக்க சிவந்தகமும்
தன்மகள் சாம்புபதி தன்னையுந் தான்கொடுத்து
நின்றவன் நின்னருமை நீகற்றுக் கொள்ளுமென்று
கோபர்த்த னெதிரே கோபுரம் வீழ்ந்தாற்போல்
சோகத்தால் வீழ்ந்தயர்ந்து துஞ்சினா ரம்மானை
ஆளா தெமையாளு மாதியாங் கேசவன்
தாழாமல் சாம்புவர்க்கு சாயுச்சிய பத[2]மளித்து
சங்கம் தரித்தானுஞ் சாம்புவன் தன்மகளை
அங்கர சாள அபிஷேகம் சூடியபின்
சாம்பூபதி தன்னை தனிநெடுமால் தேரேற்றி
வாம்பரியுந் தேரும் மதக்கரியுஞ் சூழ்ந்துவர
கவள மதக்களிற்றுக் கற்றீபர் சூழ்ந்துவர
தவளக் குடை[3] நிழற்ற சாமரைகள் வீசிவர
நீளுஞ் சரமும் நீர்நாடுந் தான்கடந்து
ஆளுந் துவரை யணைந்திருந்தா ரம்மானை
சவுத்திப் பிறைகண்ட தக்கார்களிக் கதையை
துதித்துப் புகழ்தொலேத் திடுங்கா ணம்மானை
பொழித்துவர்வா யஞ்சுகமும்[4] பூவையும் பாட்டியலும்
எழுந்துவரை நாடன் இருந்த கொலுவகத்தே
பேராளன் தானும் பிறசேனன் முன்பிறந்த
தாரார் தடம்புயத்து சதிரா சிற்றுவின்கை
தக்க சிவந்தகதை தான்கொடுக்க மற்றவனும்
மிக்கப் பிரியமுடன் வேந்தனைப் பார்த்துரைப்பான்

---

1. சீயம் - சிங்கம். 2. சாயுச்சியபதவி - வீடுபேறு. 3. தவளக்குடை - முத்து மாலைகள் நாற்றிய குடை. 4. துவர்வாய் அஞ்சுகம் - சிவந்த வாயினையுடைய கிளி.

தேசினு லெந்தை திவாகரன்பால் பெற்ற
யோசனை தூரம் ஒளிப்பிரபை[1] தோன்றுமது
நீத்தமிகுந் தடத்தில் நீணிதியம் பல்குவதும்
இம்மணி போம்வழிப் புக்கேம்பி பழிபூண்டு
செம்மணி மாலையை நீசெய்நன்றிக் கிப்போது
மெத்திய மாமணியும் மிக்கொடியான் பெற்ற
சத்திய பாவையைப் புரந்தரனீ கொள்ளென்றான்
அங்கவன் சொல்ல அரிராம னுள்மகிழ்ந்து
பொங்கு மணவோலை போகவிட்டு எத்திசையும்
நன்மணிப் பந்தலிட்டு நன்னகரி வீதியெங்கும
பொன்னரிய மாலைகளும் பூங்கமுகும் தானிரைத்து
நீரடி சிலிட்டு நின்றவுறவை உபசரித்து
நாளடிசி லுண்டு[2] நகரி வலஞ் செய்து
தக்கோர் சடங்கறுக்க சாற்றிய பாவைதன்னை
மிக்க திருமால் வேட்டான்[3] காணம்மானை
நன்மணி மாலையையும் நற்றுவரை வேந்தனுக்கு
தன்மகளையுங் கொடுத்து சற்றிரா சித்துவென்பான்
பொன்னகர் மாடம் புனைதுவரை தன்னைவிட்டு
தன்னகம் நோக்கியே தானடைந்தா னம்மானை
காற்றென்ன வேநடந்து காமபோச மென்கின்ற
ஆற்றங் கரையி லருகே வருவானை
கண்டு சதுவென்னுங் சுற்றிரீபன் தான்பிடித்து
கொண்டு கரமிறுகக் குத்தினான் மேன்மேலும்
நான் கொள்ளு மங்கையையும் நான்பூணும் பூணினையும்
வான்சிறையில் வைப்பனென மத்திகையால் குற்றிமிக
கான்சிறையில் கட்டிக் கடிநகரி போமளவில்
சால மனந்தளர்ந்து சற்றராசித்து வென்பான்

---

1. ஒளிப்பிரபை – ஒளிக்கற்றை. 2. நாளடிசில் உண்டு – புதுச்சோறு உண்டு (திருமண நாளிற்கு முன் நாள் ஆக்குவது) 3. வேட்டான் – திருமணம் ஏற்றான்.

கோலமதில் துவரைக் கொற்றவனுக் கோல[1]மென்றான்
மூத்த மடுவில் முதலை வாரணந்[2] தன்னைக்
காத்தவனே என்னையும் நீகாவா யெனவழைத்தான்
கற்றிரீபர்க் காற்றாமல் கார்கடற்குள் வீற்றிருக்கும்
சிற்றிடையளே வுன்னைத் தீர்ப்பான் சிறையென்று
மீண்டும் புடைப்ப மிகக்கலங்கி மிக்கவனும்
ஆண்டு முகுந்தற்[3] கபயம் அபயமென்றார்
தாமனைச் சொல்லத் தழலுறவே விழித்து
மாமனைக் காப்பதற்காய் மால்வந் தானம்மானை
தண்டாழி சங்கும் சதுர்ப்புயமுந் துழாயும்
கண்டான் சுதசுகனன் கன்றியெழுந் தானம்மானை
யான்கொள்ளும் பெண்ணு மெரிமணியுங் கொண்டவுனை
வான்கொள்ளு விப்பனென்று மாதவன்மேல் மோதினன்காண்
சத்தார் சித்தைச் சதசு பிடித்துவிட்டு
கற்றுவரை முப்பத் தாறாயிரக் காதமுண்டு
அங்குமுளா னெங்குமுளான் அன்னவனுக் காகவந்து
எங்குமுளா னெனவே ஏற்றினார் தேவரெல்லாம்
சந்தி சுத்தழமிலச் சதசவுந் தாமனுமாய்
வெந்திச்சு வெம்போர் விளைத்தனர் காணம்மானை
வாரிபயந்த வடிவான முகத்தோ னிடிய
பாரும் கடலும் பலவும் பயங்கொள
காரஞ்சு[4] மெய்யானுங் காய்ந்த சதசவுமாய்
போரஞ்சு நாளும்[5] பொருதனர் காணம்மானை
தீயவனைக் கொல்லத் திருச்சக்கரம் வாங்கும்
மாயவனை யப்போ வயச்சம பாயனுற்று
வம்புலாந் தாரான் வரலாறு கேட்டருளாய்
ஆம்பிரிச் சனென்னு மரசனுனக் கன்பாகி
சந்தாதி யென்னுந் தனியுகத்திலே நெடுநாள்

---

1. ஓலம் – அபயக்குரல். 2. வாரணம் – யானை. 3. முகுந்தன் – கண்ணன். 4. காரஞ்சு மெய்யான் – மேகம் நாணும் உடலுடைய கண்ணன். 5. அஞ்சு நாள் – ஐந்துநாட்கள் (போலியாய் வந்தது).

எந்தாய்[1] தவஞ்செய் திருக்கின்ற நாளையிலே
செய்யதிரு வேகாதசித் திருவோ ணத்தில்
துய்யதனு மாதத்தில் தோன்றுவ னென்று
பங்கயக்கண் மாயனுக்குப் பாயதம் பண்ணுவித்து
பொங்கு புனலாடப் போனவள் மீள்பளவில்
காவலனனேகம தன் காஞ்சன் புத்திரன் தான்
மேவிய பாயசத்தில் மிட்டுப் புசிப்பதனைக்
கண்ட பரீசன் கதிர்வாளால் காஞ்சனனை
மிண்டு தலையுருள வெட்டி யுருட்டலுமே
தன்மகன் துஞ்ச[2] அவன்தாய் முகிழசோதையென்பாள்
பொன் மனனேன்றாள் புருஷோத்தமர்க் கிறங்கி
பச்சைத் துழாய் மாயவர்க்குப் பாரித்த[3] பாயசத்தை
எச்சல் படுத்து மிவனையான் பெற்றமையால்
சேலொக் குங்கண்ணாள் திருமால்பதம் நினைந்து
மூலாக்கினி யெழுப்பி முண்டுள்ளே தீமூட்டி
ஒன்பது வாசல்களும் ஒக்கவே தான்கொளுவி
வன்புனலுஞ் சேற்று அவளும் மரித்தனள் காண்
வெட்டுண்டான் சென்னி விழுந்திடும் போதையினும்
எட்டெழுத்து[4] மோத உயிர்கொண் டிலங்கினன் காண்
மற்றவர் செய்கையெல்லா மகாவிஷ்ணு வறிந்து
உற்றவரை யெய்தி உயிருமவர்க் களித்து
ஆனவரங் கேளுமென அம்பரீச னுரைப்பான்
வானவரால் மாண்டால் மாளாத நல்வரமும்
எய்யாமல் வாழ்வரமு மாபேறுன்[5] னூடே
கையாலே மாய்ந்து கதிபெற நலவாகும்
தாவென்றான் நாரணனும் தந்தோ மெனவகன்றான்
ஏவென்ற தோளா யிவனவனை யோவென்றான்

---

1. எந்தாய் – என் தந்தை போல்வாய். 2. துஞ்ச – இறக்க.
3. பாரித்த – அமைத்த. 4. எட்டெழுத்து – அஷ்டாக்ஷர மந்திரம்.
5. மாபேறு – பெரிய சிறந்த பேறு.

அய்யனே மற்றிவன்தான் ஆயுதத்தால் சாகறியான்
கையினால் கொன்று கதியளிப்பா யென்றகன்றான்
சாம்பயன் சொல்கேட்டு தாமன் சதசுவினை
வேம்பா யுடனழன்று வெறுங்கையால் மேல்விழுந்து
சேந்து கரந்திமிர்ந்து திண்டா லூற்றலுமே
சோர்ந்து சதசுவுயிர் துஞ்சினன் காணம்மானை
மன்று சதசுவுடை மன்னுடலம் மண்கிடப்ப
தன்னுயிர் சாயுச்சிய மடைந்தது காணம்மானை
குத்தினா லாங்கவனைக் கொன்று கதிர்கொடுத்து
சத்திலாச் சிறுவனைத் தன்பதியில் போகவிட்டு
நீளு (முருவுடைய) நெடியமா லப்பொழுதே
ஆளுந் துவரை யணைந்தனன் காணம்மானை
வாய்ந்த குடிதழைக்க வான்சுற்றம் தான்தழைக்க
ஏந்த[1] லினிதா யிருக்கின்ற நாளையிலே
முன்முடி சூட்டு முனிவர்களுந் தேவர்களும்
பொன்முடி மாயனைப் புக்குப் புகழ்ந்துரைப்பார்
கஞ்ச னனைக் கருடனே யின்றுமுதல்
பஞ்சா யுதமும் பண்கொள்வா யென்றகன்றான்
முருடருரங் கிழிக்கும் மூரிப்பஞ்சா யுதமும்[2]
கருடனுமேவல் செய்யக் கண்ண னினிதிருந்தான்
மிக்கநாள் தன்னில் விதர்ப்பன் திருமடந்தை
மைக்கண் சிவப்பவன் முலைகள் கண்டுழப்ப
வேள்வி யுருத்தரிக்கு மிக்க முகிழ்த்தமிட
கேள்வி யுருப்பிணிதான் கெர்ப்பித்தா ளம்மானை
அமைந்து திங்கள்தனி லானசடங்கு செய்து
சீமந்தமுஞ் செய்து திங்கணிரம்பிய பின்
கன்னற் சிலையுங் கடிதே கணைஐந்தும்
வன்ன மகரக் கொடியும் வடவமுடன்

---

1 ஏந்தல் – பெரியோனாகிய கண்ணன். 2. பஞ்சாயுதம் – ஐந்து ஆயுதங்கள் (வில், வாள், தண்டு, ஆழி, சங்கு)

சொல்லும் பங்குனி தன்னில்சோதி நட்சத்திரத்தில்
இல்லும் பங்கேருகத்தாள்[1] ஈன்றாள் இரட்டையரை
உருவமதான வுருப்பிணி மாதே யம்மானை
இருவர் குமரர்களை யீன்றனள் கண்டுகந்து
வான்பெற்ற நோக்கினாள் வான்மீகனை யழைத்து
மதிரு மாமுனியே மற்றென் வயிற்றுதித்த
அதிரூப மான அனங்கனைப் போலிருவர்
ஆலச்சிலையு மலர் பூங்கணை ஐந்தும்
கோலமகரக் கொடியு முடன் பிறந்தார்
இங்குவரக் காரணந்தா னேதென்று கிடப்பளவில்
மங்கைதனை நோக்கி வான்மீகன் சொல்லலுற்றான்
மன்மைந்தர் போலன்றி வந்தவீரராய்ப் பிறந்தார்
நின்மைந்தர் தன்னை நிகழ்த்த நீகேட்கிறாய்
பார்கொற்ற செஞ்சொலாய் பாரில்வண்ண தென்றுகைமுன்
நாகத் தணைகிடந்த[2] நாராயண மூர்த்தி
உந்தியி னுள்ளே ஒருதா மரைப்பூவில்
வந்ததோ ரண்டம் வருஷம் நூறாயிரம்பின்
பேதிப்ப வாதி பெருமாள்[3] வெளிப்பட்டு
ஓது மறையும் உலகு பதினாலும்
தந்தபின் தானந்த சற்பிரமாக்கள் தன்னை
வந்தவதரித்த மகளி ரோ ரறுவர்
காசிபர்க்குப் புக்கிக் களிக்கின்ற நாளையிலே
பேசுமுனி யருளாற் பெற்றாள்காண் பிள்ளைகளை
அதிதி யென்பாள் பெற்றாளடைவே அசுரர்களை
திதி யென்பாள் பெற்றாள் தீயவசுரர்களை
அவ்விந்தை பெற்றாள் அடவே அசுரர்களை
நவ்வி விழிக்[4]கண் அரிவைநாகா நமனைப்பெற்றாள்

1. பங்கேருகத்தாள் - தாமரைபோல் அழகிய உருப்பிணி. 2. நாகத்தணைக் கிடந்த – பாம்பணையில் பள்ளி கொள்ளும். 3. ஆதிப் பெருமாள் – மூல காரணனாகிய திருமால். 4. நவ்வி விழி - மான்போன்ற விழி.

தனுப்பெற் றுகந்தெடுத்தாள் சத்தியாய் தானவரை
மனுப்பெற்றாள் நாலுவகை மானிடரை யம்மானை
மிக்கவர் பெற்றோரும் வேறுள்ளோர் பெற்றவரும்
தக்க வகையாய்ச் சமைந்து தழைத்திடுகாள்
நீண்ட வசுரர் நெடுநாள் தவசுபண்ணி
வேண்டும் வரங்கள் விருமனிடை[1] பெற்று
தானவரு மேனைத் தயித்தியருந் தான்கூடி
வானவரை யெல்லா மலைந்து தூற்றிடவே
ஆங்கவருக் காற்றா தமரரும் வானவரும்
பூங்கமல மீதுறையும் புராதனனைப்[2] போய்க்கண்டு
வேதாவே யாதி விரிஞ்சனே[3] மிக்கெனக்கு
தாதாவே கோவே சரணமெனப் பணிந்து
செற்றார்க[4] ளான தெயித்தியருந் தேவர்களும்
பற்றாலே யெம்முயிரைப் பாழாக்கி விட்டனன்காண்
வெந்தித் தசுரர்தம்மை வெறுப்பரென் றுரைத்து
வந்தித்த தேவருடன் மாமலரோ னுரைப்பான்
என்னா லியலுமோ யிங்கவரை யொறுக்க
துன்னாழி நெஞ்சுண்ட சோதிச் சுடர்வடிவன்
தந்த மகவாயோர் சந்ததி யுண்டாகில்
அந்த அசுரர் அறுப்புண்டா ரென்றுரைத்தார்
செங்கமலத் தெந்தையே செப்பென்றார் தேவரெல்லாம்
அவ்வா றுரைக்க அமரரே கேட்டருளீர்
செவ்வாய் மணிமுறுவல் செல்வி சிவன்மனைவி
தன்கேள்வனை நினைந்து தக்க நடத்துகின்ற
பொங்கோர் வேழப் புடைப்பித்து மாறாமல்
தக்கன் மகளான தன்னுடலு மழிந்து
மிக்க மலையரையன்[5] மின்னாக வீற்றிருந்தாள்
வேள்வி யழிப்பித்த மிக்கோனுந் தன்னுடைய

---

1. விருமனிடை - பிரமாவிடத்தே. 2. புராதனன் - பழமையான பிரமா. 3. விரிஞ்சன் - பிரமன். 4. செற்றார் - பகைவர். 5. மலையரையன் - மலையரசனாகிய பர்வதராசன்.

கேள்விப் பிரிந்ததனற் கேள்வியெல்லாம் கைவிட்டு
ஓவியம் போலே யொளியாய் வீற்றிருந்தார்
மேவியவருடைய மிக்க யோகங் குலைக்க
கன்னி மலைமகளைக் கைப்பிடித்தா லவர்க்கு
மன்னு குமாரவேள் வந்துதிப்பா ரென்றுரைப்பார்
அக்கினி மேனியான் கொண்ட அணியோகத்தை
புக்கினியார் குலைப்பார்ப் போதனே யென்றார்கள்
பூமனுந் தானுணர்ந்து புத்தேளிரை நோக்கி
காமனை யேவிக் கலைப்பேனென மொழிய
இந்திரரும் வானவரும் மற்றவரும் பிறரும்
சுந்திர மன்மதனைச் சூழ்ந்து பரிவுரைத்து
உன்னாலே யாகும் உலகு பதினாலும்
மன்னா பிழைப்பென்ன மன்மதனை வற்புறுத்தி
சித்தசனன் சம்மதித்துத் தென்றல்தேர் மேற்கொண்டு
சத்த மகாத்துவ (சிவத்திடம்) வம்பளக்க
கன்னல் சிலை[1]யைக் களிவண்டால் நாணேற்றி
வன்ன மலரஞ்சு வாளி[2]யுந் தான்தெரிந்து
கந்தமலர்ப் புயமு (கண்ணு) மிடந்துடிப்ப
எந்தை மோக மிருந்தவனம் புகுந்து
எம்மானி யோகத் தெதிர்நின்று யெய்யவஞ்சி
பெம்மானுக் கெத்தனையும் பின்னினுறச் சமைந்து
அந்நேரந் தன்னில் அவனருகே மலையரிவை
முன்னேவல் செய்யு முறைமையுந் தான்கண்டு
செம்பவள மேனி சிவன்மனது பேதிப்ப
அம்பை யுறக்கொத்து ஆடல் வெள்ளெய்யலுமே
வெய்ய பாணமஞ்சும் வேறுபட அவ்வளவில்
துய்ய நுதல்விழியார்[3] சுற்றெங்கு நோக்குதலும்
ஒன்றே யதுபின்னு மொன்றெய்ய ஓர்சரத்தை
கண்டுய்ய விண்ணுணிற் பூட்டிச் சமைக்கின்ற

---

1. கன்னல் சிலை – கரும்பு வில். 2. மலரஞ்சுவாளி – ஐந்து மலரம்புகள். 3. நுதல் விழியார் – நெற்றிக் கண்ணையுடைய சிவபிரான்.

வண்டார் கமலம் தனை நுதல் விழியால்
கண்டா ரப்போதே கனலாய் நிமலனுமே
ஐங்கணை யான் அனங்க னேட்டிய
அண்டாண்டமே குலுங்க வெழுந்த கொடுஞ்சரந்தான்
நெற்றிக்கண் நீக்க நிறையநிலை விழித்து
சுற்றுக்கணை வேளைச் சூழ்ந்து தொடர்ந்துநின்ற
வாசவனு[1] மங்கோர் வரிக்குயி லானபின்னர்
நேச மகளை நீங்கினன் வெற்பரசன்
சோதிநுதல் விழியிலறத் தோன்றும் கனநெருப்பு
ஆதி பிரமாவின் அர்ச்சினை யாலாறினர்காண்
காமா யுதத்தால் கலக்குண்டு காய்ந்தவனை
கோமா னியோகங் குலைந்தங்கு நின்றெழுந்தான்
தாப்பானுக் கெவ்வாறுந் தாரமா[2]வே னெனவே
வெற்பரையன் பாவை மிகுதவசு பண்ணலுற்றாள்
வன்புக் கிரங்காத வள்ளல் மலைமகள்தன்
அன்புக் கிரங்கி அவள்தவசை வந்துகண்டு
ஓர் பிரமச்சாரியா யுற்றுமையா யுரைப்பார்
கார் விரிவுமின்னே கருத்தேதென வுரைத்தேன்
முக்கட் பராபரனார்[3] முத்தியைத் தோய்வதற்கு
மிக்கதவ முயன்றேன் வேதியனே யென்றுரைத்தாள்
சர்ப்பமே பூண்டு தலையோட்டிலே யிரக்கும்
அற்பனை யாதரித்தாய் அன்னமே யென்றுரைத்தான்
தொந்தித்தி யில்லாத சோயை யான்கேட்க
நிந்தித்[4] துரையாதே நீங்காயென வெகுண்டாள்
அவ்வுறுதி கண்டு அரனுருவந் தான்காட்டி
செவ்வுருவ மேனியாள் தேவிதனை நோக்கி
வந்துநாங் கைப்பிடிப்போம் மாதே தவமொழியென்
றெந்தையக் கண்ணு ளிவளும் காத்திருந்தாள்

---

1. வாசவன் – இந்திரன். 2. தாரம் – மனைவி. 3. பராபரன் – சிவபெருமான். 4. நிந்தித்து – பழித்து.

கருமணிக் கண்டன் காதலியை வெப்பதர்க்கு
பெருமுனிவ ரேழ்வரையும் பெண்பேசிப் போய்விட்டார்
மாமுனிவன் சென்றவுடன் மலையோனகத் திருத்தி
ஆமுனிவ ரென் பாலணைந்தபடி யேதெனவே
கூற்றை[1] யுதைத் தார்க்குத்தன் கோதையைக் கேட்கவந்தோம்
ஏற்றம் பெரியோனே ஈவையோ வென்றுரைத்தான்
ஈசனுக் கென்று யான்பெற்ற கன்னியைநீர்
பேசிவரப் பெற்றேன் பெருமுனிவீ ரென்றுரைத்தான்
மன்னன் பொருந்த வதுவைக்கு நாளிட்டு
பின்னையரன் பாதத்தில் பேசினர் போய்முனிவர்
மங்கல ஈசன் மணவார்த்தை தான்கேட்டு
எங்கெங்கி லுள்ளவரும் ஏற்றவரு மீண்டி
பிஞ்சினி துண்ட பிறைசேரும் பிஞ்ஞகனை[2]
மஞ்சன மாட்டி[3] மணக்கோலம் செய்பளவில்
மெத்தினிய கற்புடைய வெற்பரையன் பாவைதனை
பத்தினியள் நீராட்டிப் பாங்கா யலங்கரித்து
கன்னிச் சடங்கறுத்துக் காப்புறுத்தி வைத்திருந்தார்
மன்னியரி பிரமன் வாசவன் மாமுனிவன்
அம்பொன் வரையே அரசாணிக் காலாக்கி
செம்பொன் தகடுகளால் செய்த மணப்பந்தலிலே
என்று முகிலு மெழுகடலுங் கோஷிப்ப
கண்ணுத லோடும் கைலாசம் போய்ப்புகுந்து
வேதன் சடங்கறுக்க விஷ்ணுவே பொன்கொடுக்க
காதல் மலைமகளைக் கண்ணுதலோன் கைப்பிடித்து
தேவி யுடனே திகழ்ந்திருந்த செவ்விகண்டு
மேவி யமரர்கோன் மெய்யொடுக்கி வாய்புதைத்து
பூவம்பா லெய்தி பொடியான மன்னவனை[4]
தாவம்பா லென்று தலத்திலுறப் பணிந்தான்

1. கூற்றை – இயமனை. 2. பிஞ்ஞகன் – பெரியோன். 3. மஞ்சனமாட்டி – நீராட்டி. 4. மன்னவன் – மன்மதன்.

பூண்ட வுமையும் புரந்தரனும்[1] மன்ருட
ஆண்ட அரனு மவற்காயருள் புரிந்து
கோலத் தீயாலே கொளுத்தி யவளுடலம்
தாபிக்க வென்ரு தந்தோ முயிரென்று
உருபியாம் வாறன்றி உம்பர்[2] விழிகளுக்கும்
அருபியா மாருமலனங்க னென்று பேராக்கி
நம்முனிவர் தம்மேலும் நம்மேலு மெய்தாலும்
உம்முனிவு தீரா துலவாயென வருளி
ஒண்பூமா தேவியுருப் பிணியாய்ப் பிரிந்து
மண்வன்னர்க்கு மாதேவி யாகிய நாள்
அன்னுள் வயிற்றி லணியிரண்டு பிள்ளைகளாய்
உன்னுயுதத் தோடு உதியாயென மொழிந்தான்
போதே கணையான் புதல்வராய் வந்துதித்த
மாதேயுன் மைந்தரவர் வாறிது வென்றேகூறி
வான்மீகன் சொல்ல மகிழ்ந்தங் குருப்பிணியும்
ஆன்மீன விழிமடவா ளம்முனியைப் போகவிட்டாள்
அமரர் பயந்தீர்க்கும் ஆழி முகுந்தனுக்கும்[3]
குமரர் பிறந்ததனுல் கொண்டாடல் செய்தருளி
பையாடா வல்குல் பைந்தொடியாள் மூவுலகும்
நெய்யாடல் செய்வித்து நீராடலுஞ் செய்வித்து
தேன்மருவுஞ் சொல்லாள் தினம்பத்துச் சென்றபின்பு
ஆனபிறத் தூய்மன் அனுர்த்திர னென்று
மைந்தர்க்குப் பேருமிட்டுப் மைந்த ரிருவரையும்
சந்தத் தனமுலையாள் தான்வளர்த்தா ளம்மானை
அந்நா ளழகாய் அவர்வளரு மெல்லைதனில்
முந்நாளி லேமெருதாய் மூற்றிய வல்லசுரர்
தந்தை மகவிழந்த சந்திரதர னென்பான்
அந்தரத்தே வந்து அணைந்த துய்மனைத்தான்
துன்றி யெடுத்து தொடுங்கடலில்[4] போக்கெறிந்து

1. புரந்தரன் – குபேரன். 2. உம்பர் – தேவர். 3. ஆழிமுகுந்தன்– கடலில் துயிலும் திருமால். 4. தொடுங்கடல் – தோண்டப்பட்ட கடல்.

நின்றவருங் காணமல் நீங்கினன் காணம்மானை
உற்றங் கவனை ஒருமீன் விழுங்கிடவே
மற்றந்த மீனை வலைகாரர் தான்பிடித்து
செம்புரம் புக்கும் செம்படவத் திருமனைவி
வம்பவிழ்ந்த[1] கூந்தல் மாயாபதிக் களித்தான்
அக்கணமே மீனை யறுத்தா ளதன்வயிற்றில்
மிக்கபிறத் தூயன் வெளிப்பட்டா னம்மானை
வீரச் சிலையும் வெளியம்பு வேள்வடிவும்[2]
காரொத்த மேனியாள் கண்டு மயலாகி
நீயா மதனி ரதிதேவி சவுந்தரியும்
மாயா பதியாக வந்து பிறந்தமையால்
பாலகன்மேல் விழுந்தாள் பாலகனு மவ்வுருப்போய்
வாலமதனய் மடந்தையைத் தான் புணர்ந்தான்
அங்கதுக்குத் தக்கதாய் ஆடவனய் தான்வளர்ந்து
பொங்கு புறந்தூய்மன் புணர்ந்திருந்தா னம்மானை
செம்ப னறியாமல் சேர்ந்திருந்த நாளையிலே
நம்பன் திருமகனை நாரதன் வந்துகண்டு
உற்றிவனை நோக்கி யுணர்ந்து நிகழ்ந்ததெல்லாம்
பொற்றுவரை மூதூரில்[3] போய்ப்புகுந்தா ரம்மானை
இன்பத் திருமகனை யெவ்வுலகுந் தான்தேடி
துன்புற் றிருக்கின்ற தூயோனைத் தான்தொழுது
நம்பிப் பிறந்தூய் மன்னயகனே சோர்வாடி
செம்பன் மனைவிதனைச் சந்திக்க வந்துகண்டேன்
மன்ன போதுவருட மங்கையரைச் சோர்வுசெய்து
நின்ன தரவானன் நின்மகனென்று சொன்னன்
போத மனம்மகிழ்ந்து நாரதனைப் போகவிட்டு
சத்திய சேனனுக்குச் சானித்தியங் கொடுத்து
மிக்க படைக்கலமும் மேல்வீடுஞ் சோடித்து

1. வம்பவிழ்ந்த – மணம் உடைய. 2. வேள்வடிவு – மன்மதவடிவு.
3. மூதூர் – பழமையான ஊர்.

*சிக்கென்று செம்பன்மேல் சென்றனர் காணம்மானை*
*சேனுறத் தேரோட்டிச் செம்புரம் புகுந்து*
*நாணுறவி லேற்றி நற்சிலையை நாணெறிந்தான்*
*பேய்க்கண் முலையுகந்த பேராளன் ஞாணொலியைத்*
*தீய்க்கண்[1] பொறிபரக்க செம்பனுந் தான்கேட்டு*
*தேவேந் திரனைத் திறைகொண்டு வீற்றிருப்பேன்*
*பூவேந்தர் தம்மைப் பொறுப்பனோ போருக்கு*
*பற்றாமல் சொல்லிப் பலவுஞ்சய முன்னே*
*வற்றாப் படைக்கலங்கள் வண்டேறிற் பூப்பரித்து*
*பொற்கோலங் கொண்டு போருடைஞர் தற்சூழ*
*கற்கோல வண்ணன்மேல் காய்ந்துசென்றா னம்மானை*
*சீர்நீர்மை மாயன்மேல் செம்ப னெதிர்நின்று*
*ஆர்நீயுன் போரேது அமரர்வந்தா ரென்றுரைத்தான்*
*என்னூர்து வரையான் வாசுதேவ னென்பேர்*
*உன்னூர் புகுந்தேன் றுனைக்கொன் றுன்தேவியைநான்*
*பெற்ற குமாரன் பிறத்தூய்மனுக் களிக்க*
*உற்ற விசேஷம் உரோசித்துச் செம்பனுந்தான்*
*கொண்ட[2] லிடித்ததென்ன கோடையிடித் தென்ன*
*தண்ட மிடுக்குடனே தாக்கினா னம்மானை*
*மிக்கிருவர் வில்லொலியும் மேற்கொண்ட தேரொலியும்*
*திக்கசங்க[3] ளெட்டும் செவிடுபட்ட தம்மானை*
*உற்றவர் போர்கண்டு உடன்போய் நாரதனும்*
*மற்றவன் மாமன் மதுவசன னேதுசொல்வான்*
*செல்வனே உன்மருகன் செம்பனைச் சூழ்ந்துகொண்டு*
*மல்கு கடத்துவரை வாசுதேவன் போருற்றான்*
*ஓடிஒரு நொடியில் உதவாயாய் மற்றவனால்*
*வீடுவன்[4] செம்பன் மிக்கவன் தானுரைத்தான்*
*மாமுனிவன் சொல்ல மதுவுங் கயிடனும்*

---

1. **தீக்கண்** - சினமுடைய கண். 2. கொண்டல் - மேகம்.
3. **திக்கசங்கள்** - திக்கு யானைகள். 4. வீடுவன் - இறந்துபடுவன்.

தீமுனிய நாட்டம் திசைகொளுவத் தான்பார்த்து
மின்படை சேமித்து மிக்கதேர் மேல்கொண்டு
வன்படை யோடும்வழிக் கொண்டா னம்மானை
சீற்றரிய காதே யித்தாயா தானவர்கள்
மேற்றிய மெய்ப்படைகள் மீண்டி[1] மிடைமிடைய
பாதாளத் துள்ள படையும் புடையொதுங்க
ஆதாளி தான்கண்டு அந்நாரத னுரைப்பான்
தேவரோ யென்றாலே செய்விக்கும் போரிதுகாண்
யாவரும் போதுமென இந்திரனு மேதுசொல்வான்
சதுப்புய[2] மால்வண்ணன் தன்தேர் நெளித்திடுமால்
என்னவுங் கேளா யாவருந்தான் கூட்டி
உன்னெடும் போர்கண்டு உகந்துநின்றா னம்மானை
வாயுவே யென்ன மதுவுங் கயிடவனும்
தீயுகப் போதும்வகை செங்கண் மாலுள்ளறிந்து
அங்கவர்கூடி யரும்போர் விளைப்பதன் முன்
இங்கிவனைக் கொல்வோ மெனவே வெகுண்டெழுந்து
அம்பனைத் தானு மனே காயுதத்தாலும்
செம்பனைத் தானெருக்கித் தொழித்தா ரம்மானை
தேரினும் தான்குதித்துச் சிங்கம்போல் வாரவனை
மேரினு நீண்ட மிக்கெருடன் தான்பிடித்து
முத்தலைத் தொட்டே செம்பொன் முடித்தலையை தான்சிதறி
அத்தலையை யம்மானை ஆடினன்கா ணம்மானை
தானை வளையத் தடங்கையில் வில்வளைய
மானத் தேர்மரக்கால் வளைய வளைந்துகொண்டு
காற்றா யடித்துங் காலாகி[3] மெய் நூர்ந்தும்
கூற்றாய்[4] யுடனருங் குலவரையால் விட்டெறிந்தும்
பாணங் களாலும் பலவாயு தத்தாலும்
சேணடாக் கோமானைத் தெழித்தொழித்தா ரம்மானை
மின்னாழி மெய்யோனை வேகத்தால் தொழிற்ற

1. மீண்டி - குழுமி. 2. சதுப்புயம் - நான்கு தோள்கள்.
3. காலாகி - காற்றாகி. 4. கூற்றாய் - இயமனாய்.

அன்னான் வலிகண் டறப்பயந்தா னம்மானை
சோதித் தேர்சாயச் சுளிந்து மதுசூதன்
நீதிப் போர்செயில் நெடுநாளுஞ் சாகறியான்
இற்றைக் குயிர்குடிப்பே னெனப் பஞ்சாயுதத்தின்
கொற்றத் தனிவாளால் கூறுசெய்தா னம்மானை
காவலன் தன்னால் கயிடவன் பட்டுவீழ
ஆவலுடனே அவன் படைஞர் ஓடிடவே
கண்டான் வெகுண்டான் கறங்கு[1]போர் தேரோட்டி
மண்டு பெருங்கடல்போல் வான்படை தான்வளைய
கொண்ட லனையானைக் கோலமதுவன் வளைந்து
கார்முகிழ அம்புமிழக் கணங்கள் கனலுமிழ
நேர்முகம் நின்று நெடியோனைப் பார்த்துரைப்பான்
நான்கண்ட போரில் நமன்[2]கண்ட தன்றியிலே
ஊன்கொண்டு வோங்கி ஒளித்தோட ஓட்டுவனோ
சின்னப்போர் செய்தழிந்த செம்பன் கயிடவன்போல்
என்னைப்போர் வெல்வதன்முன் யானுன்னைப் போர்வென்று
பாருங் குருதி பருகுகின்றேன் சிக்கென்று
வாரென்ன மாயன் மதுவனைப் பார்த்துரைப்பான்
தொடர்ந்தார் செருக்களத்தில்[3] சேர்வதனா லாவதென்ன
உடைந்தா ருயிருடனே உன்னுயிருங் கூட்டுகிறேன்
பூண்டு வலியில் போருநீயெனக் கரியோன்
மூண்டு மதுவுடனே மோதினன் காணம்மானை
அய்யனடா அசுரர் கோனு மடர்ந்து
வெய்ய கடும்போர் விளைத்தான் காணம்மானை
சூலத்தால் அம்பால் சுடர்மழு வாயுதத்தால்
பாலத்தா லம்பால் பலவாயு தத்தாலும்
வண்டுளப மாலை மதுத்தான் மறைந்திடவே
கண்டு கருடன் கனவரைபோ லோடிவந்து

---

1. கறங்கு – காற்றாடி. 2. நமன் – இயமன். 3. செருக்களம் – போர்க்களம்.

செம்பொன் வரைதான் சிறகிரண்டும் பெற்றதென
உம்பருல[1] கருதி ஓங்கியுற வளர்ந்து
கண்ணன் தனைத்தான் கனதொழில் மேற்கொண்டு
எண்ணு மதுவுக் கெதிர்நின்றா னம்மானை
கஞ்சா னனமும் கவுத்துவமும்[2] முன்னூலும்
பஞ்சா யுதமும் பருதி மணி[3] முடியும்
ஓதநீர் மெய்யும் உடுத்த பீதாம்பரமும்
போதநீள் கையில் புரிசங்குஞ் சக்கரமும்
வாஞ்ச கருடன் வானோர்கள் வாழ்த்தெடுப்ப
காஞ்சனக் குன்றில் கனவரை நின்றாற்போல
நட்டனை யாக நற்பாலர் தற்சூழ
விட்டுணு பாதம் வெளிப்பட்டு நின்றலுமே
மூர்த்தி வடிவை மூதுமதுவன் விழியாலே
பார்த்து நகைபுரிந்து பாகனுட னேதுசொல்வான்
மாலென்று லோபாதே வான்புள் ளென்றுட்காதே
காலென்று தேரைக் கடாவுவன் மேலென்று
அன்னா னவனுரைக்க அவன்சாரதி[4] யுரைப்பான்
முன்னா ளிரணியனு முன்னோனு முன்னம்போல்
பாலாழி யான்[5] கைப் பட்டதாய்க் கேட்டிருப்பேன்
மால்பாதம் வந்துதித்து வாழ்வதே நின்றென்றான்
வந்தவுரு வொழிந்து மற்றவுருக் கொள்ள
சிந்தை கலங்கினையோ தேர்ப்பாகா வென்றுரைத்தான்
மருடனைத் தீரேன் வலம தறியானோ
கருடன்மேல் தேரைக் கடாவென்று சொல்லலுமே
அன்று களத்தி லமத்தியனும் சாரதியும்
கண்டது சொல்கைக் கடனாத லாலுரைத்தேன்
குற்றம் பொறுத்திடென்று கோமதுவைக் கும்பிட்டு

1. உம்பருலகு – தேவருலகம். 2. கவுத்துவம் – மார்பில் அணியும் மதாணி. 3. பருதிமணி – சூரியன் போன்ற இரத்தினம். 4. சாரதி – தேரோட்டி. 5. பாலாழியான் – பாற்கடலிற்றுயிலும் பரமன்.

கற்றை மணித்தேர் கடாவினன்[1] காணம்மானை
தாக்கி யிருவோரும் தம்மில் சிரிப்போராய்
ஆக்குமஞ் செருவி லசுரர்க ளேதுசொல்வான்
எண்ணிறைந்த ரூபமாய் யெத்திசையும் தானேயாய்
மண்ணிறைந்து விண்ணிறைந்து மாருதமெல்லாம் நிறைந்து
கார்க்கடலை மொண்டு கனமுகில்களாய்ப் பொழிந்தும்
பார்க்க வரிதாயும் பருபதங்களா லெறிந்தும்
கானக மாயும் கடுங்காற்ருய்[2] சூழ்ந்தடித்தும்
வானெங்கு மண்டி வடவையாய் நின்றெரித்தும்
பாகமாய் நின்றும் பலவாயுதம் பணிந்தும்
ஏகமாய் முன்னின் றெதிரம்பு கொத்தெய்தும்
எட்டு ரத்தினந்தா னிராப்பகலாய் சூழ்ந்துகொண்டு
மட்டுற்ற பூசல்மது செய்யக் கண்டஞ்சி
சந்திரனும் சூரியனுந் தாரகையும்[3] தானகன்ருர்
இந்திரனுந் தேவர்களும் எல்லோரும் போயொளித்தார்
பேரா தசுரர்கோன் பின்னுமி யாதுசெய்தான்
நாராயணன் மேலும் நற்கருடன் சேட்டையிலும்
பல்லாயிரம் பகழி[4] பாய்ச்சிப் பரித்தேரில்
எல்லாருங் காண யெதிர்நின்றங் கார்ப்பரித்தான்
மற்றக் கொடியோன் வலிகண்டு மாலிவனை
இற்றைக் கொல்லோ மெயாய்என்றும் சாகானெனவே
அஞ்சா யுதத்தில் அதிய மாயுள்ளதனை
எஞ்சா வசுரர்க்கு எமனாய் வந்ததனை
சூரியன் சோதியின் சூழ்பிரபை[5] யுள்ளதனை
சீரிய தேவர் திடுக்கந் தடுப்பதனை
விட்டுணு சக்தி யெல்லாம் வீற்றிருக்கப்பட்டதனை
எட்டெழுத் தாலேயிடுங் காலச்சக்கரத்தை
சிந்தித் தழைத்துத் தியானித்து சீராமா

---

1. கடாவினன் – செலுத்தினன். 2. கடுங்காற்று – சூறாவளிக்காற்று. 3. தாரகை – நட்சத்திரம். 4. பகழி – அம்பு. 5. சூழ்பிரபை – சூழும் ஒளி.

வந்தித்து வாங்கி மதுவன்மேல் விட்டெறிந்தார்
செல்லுந் திசையனைத்தும் செந்தீ வுமிழ்ந்ததுவும்
வல்லசுரர் விட்டவடிப்படை யெல்லாந் துகைத்தும்
போய் மதுவன் மேலேபுகுந்துப் புகுந்தோடி
மாயன் வலக்கையில் வந்திருந்தா னம்மானை
நிலமெழுந்த மாமுகில்போல் நீண்ட வெயிறி[1] லங்க
மலைவிழுந்த தென்ன மதுவன் விழுந்தனன்காண்
அய்யன் விட்டபட்டம் ஆழியானலாற் புரண்டு
வெய்யவே பட்டு விழுந்தனன் காணம்மானை
பாடினார் பூத்தூவிப் பல்லாண்டு வான்மடவார்
ஆடினோர் வானோர் அறங்களு மாடினார்காண்
பருதியு மிந்து[2]வும் பயந்தீர்ந்து முன்னின்றார்
ஒருதி முனிவரெல்லாம் கைகொட்டி யார்ப்பரித்தார்
செங்குருதி வெள்ளந் திசையனைத்து மாறோட
மங்கிமலை போல் மதுப்பட்டு வீழ்தலுமே
வல்லசுரர் கேட்டோடி மாயாப் பதியுடனே
சொல்ல அவளும்மிகச் சோகமுற்றுக் கண்கலங்கி
வஞ்சனைச் செம்பொன் மதுகயி வடரெல்லாம்
துஞ்சின வாறுபிறத் தூய்மனுக்குச் சொல்லும்
அங்கவரைக் கொன்றலுமே அறபத்திற் போய்க்கொண்டு
சிங்கமென வருவேன் செல்வி கண்டீரென்று
சோதிக் கனகச்சுடர் முடிதான் புனைந்து
போதில் பணிபுனைந்து பொன்கச்சை தான்கட்டி
தூணி புறத்தணிந்து சோடு புறத்தணிந்து
நீளுங் கரமும் நெடுங்கொடியும் நின்றாட
கண்டார் விழிகளிக்க கன்னியர்[3] மாலேற
தண்டரளத் தாளத் தமனியத் தேரேறி
மேளம் பலசூழ வெண்சாமரை வீச

1. எயிறு - பல். 2. இந்து – சந்திரன். 3. கன்னியர் மாலேற - கன்னிப்பெண்டிர் காமமயக்கம் கொள்ள.

காளங் குறிக்கக் கனபடைகள் தற்சூழ
ஆலவந்த மேனி யரிமே லவனுடைய
செல்வன் பிறந்தூய்மன் சென்றனன் காணம்மானை
பேராள நின்ற பெருங்களத்தில் போய்ப்புகுந்து
சீராமன் றன்னைத் திரள்படையாற் சூழ்ந்துகொண்டு
செஞ்சியை யேற்றிச் சிறுநாணொலி யெறிந்து
அஞ்சு புலம்பும் அடைவே தெரிந்துகொண்டு
கண்ணன் தனையும் கருடனையும் பார்த்துரைப்பான்
எண்ணிய செம்பனுட னினிக்கொடா மதுவை
சாவுகவே கொண்ட சமத்து முழுதுடைய
சேவுகமு[1] மிப்போ தெரியுமென்று ஆர்ப்பரித்தான்
வந்த குமாரன் வலுவுந் திருவழகும்
சந்தமணிப் புயமும் தாட்டிகமுந் தான்கண்டு
நெஞ்சுருக வண்பூநிறைய மயிர் சிலிர்ப்ப
செஞ்சொ லியல்கேட்டுச் சேவிகளை ஏமலிப்ப
கொண்டல் வண்ணன் மேனிகுழைய[2] கருணைவிழி
புண்டரீக முத்தம் பொழியநின்றா ரம்மானை
மைந்தன் உறுதியையும் மாயன் கிருபையையும்
சிந்தையில் கொண்டு சிறுகருட னேதுசொல்வான்
இறைக்கப்பட்ட பூபோல எளிமையென்று நின்றுவிட்டோம்
முறைப்பட்டுப் போய்ப்பிழைப்போ[3] முன்னறிந் தோமாமாகில்
தோற்றார்கள் செய்யுந் தொழில்கள் யான்செய்திடுவேன்
வேற்றானை மன்னா விடுவையோ வென்றுரைத்தான்
புல்லர்கள் சொல்ல புதல்வனு மேதுசொல்வான்
வெள்ளெயிறு தோன்ற விழுந்தார் பழியும்மை
வாங்காமல் போகவிடேன் வாரும் போர்வெல்ல
பாங்கார் கருடன் பாலகனைப் பார்த்துரைப்பான்
பவ்வத் திரப்பலமும் படைத்தொழிலு முனைப்போல்
எவ்வுலகுங் கண்டறியோம் தந்தைதாய்மற்றோ ரெமக்கறியச்

---

1. சேவுகம் – ஏவற்றொழில். 2. குழைய – தமுதமுக்க.
3. பிழைப்போம் – உய்ந்துவிடுவோம்.

சொன்னாப் போரலா மெனக்குமானற் சொல்லலுற்றான்
சந்தார் தடஞ்[1]சூழ் தண்துவரை நாடாளும்
செந்தா மரைக்கண் ஸ்ரீவாசு தேவனுக்கு
மேன்மை பெரிய விதர்ப்பராசன் பயின்ற
பேதை யுருப்பிணிதான் பெற்றபிறத் தூய்மனியான்
செயிர்க்கொண்டு வந்தனும்மை திண்களத்தில் கொன்றிடுவன்
உயிர்கொண்டு போவதற்கு ஒட்டே[2]னென மொழிந்தான்
ஏறாட்டம்[3] பேசி எதிர்நின்ற ஏந்தல்தனை
மாறாப் பெருங்கணையை மாதவன் பார்த்துகந்து
செய்ய பவளவாய்ச் செல்வனே உன்னுடைய
அய்யனைக் கண்டா லறிவையோ யென்றுரைத்தான்
தானா யறிவேன் தன்தந்தைதாய் விட்டகன்று
ஆனாலு மென்தந்தைக் கடையாளங் கேட்டிருப்பேன்
ஆதி திருமேனி அஞ்சனக் கண்ணைக்கும்
சோதி வதனம் துணையடிக் கண்ணிணைகள்
செங்கமல மொக்கும் திருப்புயமும் நான்குமுண்டு
சங்கந் திகிரி தனிலானவையு முண்டு
பீதாம்பரமு[4] முண்டு பேராயிரங்க ளுண்டு
சீதாம்புயமான திருமறு மார்பு முண்டு
பொன்மேற் பூண்மார்பிற் பூந்துழாய் மாலையுண்டு
அன்பர்க்கு மூர்த்தியருள் கிருபை தானுமுண்டு
என்றா னிவர்வடிவை எல்லாமெய் யென்றுகொண்டு
நின்றா னெடியோன் நிகழ்த்தினார் தன்னெதிரே
வாக்கினால் சொன்ன வடிவும் வையகமும்
நோக்கினா னோக்கி நுகர்ந்து களிகூர்ந்து
எந்தா யுதத்தை யெறிந்தா னெதிர்நின்று
பயந்தா னெதிர்போய்ப் படிந்தான் பதமலரில்[5]
பங்கயத் தாளில் படிந்து பணிந்துகிடந்த

---

1. தடம் – வாவிகள். 2. ஒட்டேன் – சம்மதிக்கமாட்டேன். 3. ஏறாட்டம் – எதிர்ப்பு வார்த்தைகள். 4. பீதாம்பரம் – பட்டாடை. 5. பதமலர் – திருவடித் தாமரை.

துங்க மகனை[1]யெடுத்துக் கண் துடைத்து
தஞ்சமுற வணைத்துத் தாமரைப்பூக் கண்ணிணை[2]யால்
மஞ்சனமாட்டி மணிவாயை மோர்ந்து கொண்டு
தாமனு மாமகனும் சந்தோஷ மாவதனை
ஆமுனையில் நின்றுகண்ட அசுரர்கண் டோடிவந்து
மாயாபதிக் குரைக்க மற்றவரு முள்மகிழ்ந்து
தீயார் மணியும் திரவியமுங் கொண்டுசென்று
ஆளும் அரிமுன் னடியுறை[3]யாகச் சொரிந்து
தாளிற் பணிந்து தலையிறைஞ்சி நிற்பளவில்
அண்ண லசுரர்களை அஞ்ச[4]லென்று காத்தருளி
திண்ணிய செம்பனுடைத் தேவி சுராஷனையும்
மாண்ட கருடன் மகன்தேவ கோவனையும்
நீண்ட முடிசூடி நிற்கவென்றாங்கு வைத்து
காயாமலர் மேனிக் கண்ணன் கவின்பெறவே
மாயாபதி தனையும் மைந்தனையுந் தேரேற்றி
கத்திரீபர் சூழக் கடவு போயொழிய
சித்திரமா மடவார் திக்கெங்கும் வாழ்த்தெடுப்ப
தொங்கல்[5] நிழற்றத் துணைக்கவரி[6] காலசைப்ப
பொங்கும் திடத்துவரை புக்கனர் காணம்மானை
பொன்னனைய மேனிப் புதல்வன் பிறத்தூய்மன்
தன்னைமார் தன்னையும் தக்கோரையும் தொழுது
தூயார் மனமகிழ சுந்திரற் பொற்கோவில்தனில்
மாயா பதியுடனே வாழ்ந்திருந்தா னம்மானை
ஆளு மதிசூதற் கன்றாக னென்றும்
கோள னொருசண்டை கொண்டுவந்தா னம்மானை
வேர்க்க வெடாயோட மெய்நடுங்கி யோடிவந்து
கார்க்கடல் மேனியனைக் கைதொழுதங் கேதுசொல்வான்

---

1. துங்கமகனை - பெருமையுடைய மகனை. 2. கண்ணிணை - இரு கண்கள். 3. அடியுறை - பாதகாணிக்கை. 4. அஞ்சல் - அஞ்சாதே. 5. தொங்கல் - மலர்மாலைகள். 6. துணைக்கவரி - இரட்டைச் சாமரங்கள்.

உன்காரியங்கள் உறுதியாய்க் கேட்டாக் கால்
என்கால் தரியா திறைவனே கேட்டருளாய்
நாரப் பிறவான் எனநின்ற நல்லுகத்தில்
பார்த்த வண்டப் பத்திரனென்பா னொருவன்
வேள்வி புனைய மாவேந்தன் பதம்வேண்டி
நீள்புனலில் மூழ்கினேன் நீளத்தவசு பண்ணி
அவ்வாறு தன்னை யமரர்கோ[1] னுள்ளறிந்து
செவ்வாய் முறுவல் தசரதர் மைந்தரை
தானேவிப் போன தவமழிக்கப் போகவிட்டான்
மானேறு கண்ணாள்[2] வடுவரு சிவந்து கண்டு
எண்ணி யிரண்டாயிரத் திருநூற் றொருமாயம்
பண்ணுறப் பாடப்பதறி முனி யெழுந்திருந்து
கூடு தவத்தைக் குலைத்தாய் மண்ணுலகில்
பீடுடைய பெண்ணாய்ப் பிறப்பாயெனச் சபித்தான்
அஞ்சி அரம்பையர்கள் அம்முனிவை ஆசரித்து
செஞ்சொலா யுன்சாபம் தீரும்வாறென் னென்றார்
பச்சைமால் மண்ணுலகில் பார்த்திபனாய்ப் பிறந்தால்
இச்சையால் நீரவனுக் கெல்லோரும் பாரியளாய்[3]
வீம்பாக[4] வாழ்ந்து விளங்குமப் பாற்கடலில்
ஆம்போது நீரும் அரம்பையாய் வாருமென்று
பூகா யுலகில் நான்புனிதப் பிறவாளனுக்கு
மாகப் பிறவையென்று மடந்தைக்குப் பிள்ளைகளாம்
கன்னியரை யெல்லாம் கடுநாகன் கொண்டுவந்து
முன்னி மணஞ்செய்ய முநித்தமிட்டு வைத்திருந்தான்
அங்கதன் கொள்வதன் முன்னனனைக் கொன்றழக்கி
பொங்கு மணஞ்செய்யநீ போர்க்குப் புறப்படென்றான்
நற்காரிய முரைத்தாய் நாரதனே யென்றுகந்து
நிற்கவொரு வரந்தான்நீ கேட்டுக்கொள் ளென்றான்

---

1. அமரர்கோன் — தேவர் தலைவனாகிய இந்திரன்.
2. மானேறு கண்ணாள் — மான்போன்ற மருளும் கண்ணினையுடையாள்.
3. பாரியள் — மனைவி. 4. வீம்பாக — வீண் தருக்குடன்.

என்னேர மென்னுமியான் வந்தால் காண்பனவும்
அன்னேரஞ் சொன்ன தனுவிடமும் போதுமென்ருன்
நன்றென்ற போதில் நாரதனைப் போகவிட்டு
குன்ருென்றுந் தோள்நெடுமால் கூடுமங்கன் சேனையென்ருன்
ஆனைகுதிரை அணிதேர் படைத் தலைவர்
சேனையுஞ் சூழத்திரியப் படை யெடுத்தான்
நாடும் நகரும் நதியும் பலகடந்து
காடும் சுரமும்[1] கனவரையுந் தான்கடந்து
வேயற்ருபம் நின்ருத விளங்குந் திருநெடுமால்
போயற்ருன் காமபுரம் புகுந்தா னம்மானை
பண்ணுறத்தேர்ப் பகடு[2] பாய்புரவி காலாட்கள்
மண்ணுற மிண்டி மறுபோ லார்ப்பரிக்க
வாக்கினு லாயன் வலுபோர் நாகன்வந்து
தாக்கினுல் மன்னர் தளராமல் வற்புறுத்தி
மானுவளைக் கிடந்தான் வான்கரடி வேந்தனுக்கு
சேனுபதிப் பட்டம் சேர்த்தன னம்மானை
ஆனைபரித் தேர்காலா ளத்தனையுங் கைவகுத்து
மன்னு படையை மகாசக்கிர வளையம்
என்னு மியூப மெழிலாய் வகுத்தருளி
வாகாய் வளைந்து மாரும்பொற் றேரோடி
யூகா கிரகத்தி லுற்றுநின்ரு ரம்மானை
காரொத்த மேனிக் கருணைகரன் தானும்
வீரக் கழல்புனைந்து வீருகக் கச்சைகட்டி
சீரா வுடைவாள் திருவரையில்[3] சேர்த்தருளி
காரானை மெய்யில் கவசமுந் தான்புனைந்து
மூரிக் கருங்கோதை முன்கைக்குத் தான்கட்டி
அம்பருத் தூணி அழகாய்ப் புறந்தூக்கி
வம்பரு[4] செந்தா மரைக்கண் சிவப்பேற

---

1. சுரம் – பாலைவனப்பகுதி. 2. தேர்ப்பகடு – தேரில் பூட்டிய குதிரை. 3. திருவரையில் – அழகிய இடையில். 4. வம்பரு – மணம் நீங்காத.

பாகாத தேரொன்றேத்திப் பாகனையும் வற்புறுத்தி
மூரிச் சிலையை முதிரவே நாணெறிந்து
தங்கக் குடையோங்கச் சாமரைகள் காலசைப்ப
எங்கு முழங்க இடிபோல் முரசதிர
சோதிக் கருடத் துவசம் விசும்ப[1]ளப்ப
நீதிக் கருணைமால் நின்றான் காணம்மானை
ஓர கந்தருவனை சித்திரப் படகன்
ஆர வந்தசேனையையும் அய்யனையும் கண்டுகந்து
நண்ணித் தொழுது நாகனுட னேதுசொல்வார்
மண்ணிற் சிறந்த மனிதர் புடைசூழ
உக்கிர சேனன் வசுதேவன் மற்றுமுள்ளோர்
மிக்க சிலர்கள் வெடுவெடென வந்துநின்றார்
உன்னைக் கருதி உயுத்தத்துக் கென்றுசொன்னார்
என்னக் கறுக்க லுற்[2]றெழுந்த நாகனைத்தான்
செவ்வியுற வணங்கி தேவபோசன னுரைப்பான்
செவ்விய பேர்க்குமிக விச்சை யாயிருந்தேன்
தளர்வின்றிக் கொல்லுகின்றேன் தானீ விடையெனவே
கிளர்மந்திரப் பதியாங் கின்னரனேது சொல்வான்
உன்னையு மொட்டேன் ஒருத்தனே போய்ப்பொருவேன்
என்னை யவன் மேலேவென்று நிற்பளவில்
ஆதிய நாதனப விஞ்சுக மாத்தியனும்
நீதி சாலன்றான் நின்றவனைப் பார்த்துரைப்பான்
தானவர்க்கும் தேவர்க்கும் தானரசாய் வாழுகிறோம்
மானகரி புக்கான் வலுவெளிமை தானறிந்து
வல்லியனாகி வசமாக்கி யேவுவதும்
புல்லிய[3]னாகிப் பொருவதுவே நன்றென்றான்
நன்று சொன்னனே நானே எரிவிழித்து[4]

---

1. விசும்பு – ஆகாயம். 2. கறுக்கலுற்ற – சினங்கொண்ட. 3. புல்லியன் – எளியன், அற்பன். 4. எரிவிழித்து – சினத்தால் கண் தீப்போல் சிவக்க விழித்து.

என்று மென்னாண்மைக் கெதிரியு முண்டாச்சோ
மூவுலகி லுள்ளவரும் மும்மூர்த்திகள் தானும்
ஏவலொக்கு மெஞ்சாமல் செய் திலரோ
என்னைப் பயஞ்சொல்லி யென்கண் ணெதிரேநின்று
உன்னைக் கொல்வேனென் றுடைவாளாற் கூறுசெய்தான்
உன்னிய போதிலொரு தூதனோடி வந்து
முன்னித் தொழுது மொழிவான் நாகனுடன்
நீயாளு மூவுலகில் நீயறியும் பேருமல்ல
காயாமலர் நிறத்தோன் கஞ்சமலர்[1] கண்ணிணையோன்
ஆர்க்கும் படையொடல்லா குறித்து நின்றான்
போர்க்குச் சமைந்து[2] புறப்படென மொழிந்தான்
தூதுவன் சொல்லத் துணைத்தோள் நாகனுந்தான்
போதுக நஞ்சேனை போருக் கணித்தெனவே
வேழக் குழாமு மிகுதுரக முந்தேரும்
மூழக் கடலெனவே மூண்டுற்ற தம்மானை
கின்னரர் கின்னருடர் கந்தருவர் அறுவர்
மின்னிறு வெள்ளெயிற்றோ வித்தியாக் காரியக்கா
எண்ணற்ற சேனை யிமைப்பளவில் தான்கூட்டி
நண்ணிக் கடல்போல நடந்தது காணம்மானை
அரக்க ரொருபால் அசுரர்கள் தானொருபால்
மிரக்க நெருங்கி வெளிப்பட்டங் கத்துணிவா
கண்டு கடல்படையைக் கைவகுத்தா னம்மானை
தன்னிக ரில்லாத் துரகங்கள்[3] காலாட்கள்
நின்று நெருங்கி நிபுடமாய் கைவகுத்து
விற்றானை சூழ மிகுகாலச் சக்கரமாம்
வற்றாத யூபம்[4] வகுத்தனன் காணம்மானை
வானந் தலைகுலைய மாசேனையை வகுத்து
தானும் போலாக் கொஞ்சமைந்தனன் காணம்மானை

1. கஞ்சமலர் – தாமரை மலர். 2. சமைந்து - உடன்பட்டு. 3. துரகங்கள் – குதிரைகள். 4. வற்றாதயூபம் – குறையாத போர்முறை அமைப்புகள்.

சன்னவீரம் புனைந்து மின்கச்சை தான்கட்டி
சாரப் புகழுடை வாள்தானு மருங்கணைந்து
வீரமணி மார்பில் மேய்ச்சோடு தான்புனைந்து
சாரமுதுகில் சாந் தூணியுந் தூக்கி
பொங்குஞ் சரமணையான் பூண்டு பொலிவுபெற
செங்குஞ்சி மேல்நிமிரத் தீக்கண் பொறியுதர
காலாக்கினி[1] பொங்கிக் கார்போலேத் தேரேறி
நீலப் பதாகை[2] நெறிவா னுறவாட
வடவரையும் நின்றதிர வல்வில்லை நாணெறிந்து
தடவரைபோல் தேரோட்டித் தாக்கினன் காணம்மானை
தாக்கு மதிர்ச்சியினல் சண்டன் வெகுண்டொளித்தான்
ஏக்கம் பிடித் துயிரும் போயொளித்தார்
எட்டுவரையு மெழுகடலு முட்கினன் காண்
வெட்டமரர் கண்கள் அரண்டு வெருண்டிடவே
நாகன் படையும் நற்பாலன் தன்படையும்
உரகன்[3] படம் நெளிக்க வுற்றனன் காணம்மானை
காய்களிறும் காய்களிறுங் கலந்த தம்மானை
பாய்பரியும் பாய்பரியும் பாய்ந்துழன்ற தம்மானை
தேரினமுந் தேரினமுஞ் சேர்ந்தெழுந்த தம்மானை
ஆர்முரசு மார்முரசு மார்த்தெழுந்த தம்மானை
கார்முகமுங்[4] கார்முகமுங் கால்வளைந்த தம்மானை
வார்கணையும் வார்கணையும் மழையொத்த தம்மானை
மேலாட்கள் எதிரற்று மிகப்பட்ட தம்மானை
காலாட்கள் நேரெதிர்த்துக் களர்பட்ட தம்மானை
எரிப்பிணங்கு சரந்துணிப்ப யிணைமருப்புத் துணிந்துவிழும்
கரிப்பிணங்கள் கடக்கவிழுங் கடலொத்த தம்மானை
கொழுங்குருதி வெள்ளத்தின் குரகதத்தின் பிணம்மிதக்கும்

1. காலாக்கினி – யுகாந்த காலத் தீப்பிழம்பு. 2. நீலப்பதாகை – நீலவண்ணக் கொடி. 3. உரகன் – ஆதிசேடன். 4. கார்முகம் – வில்படை.

ஒழுங்கு பெருக்காறு துணி லோடமொத்த தம்மானை
தூணிவெண் பரிசையுடன் அற்றுத் துணிந்தகைகள்
பணிமதியைத் தீண்டுகரு பாம்பொத்த தம்மானை
இறத்தரித்த சிரங்கரங்க ளிழந்துருண்டு கிடந்தவுடன்
உறத்தரித்த மாறதூண்ண மொத்தது காணம்மானை
எங்கெங்கும் பிணக்குவையாய் இருபடையும் பொருதவிய
அங்கங்கறு குறைகள் ஆடினர் காணம்மானை
சோரிக் கடலில்[1] துழந்து கொடிகழுகு
சேர விதையஞ் சிவந்தது காணம்மானை
சேனைப் போருதவிய ஸ்ரீ நாசனுந் தான்
மானின் றதை மானிடவர் மடங்கத் துறந்தாற்போல்
பங்கள மான படைமன்னர் கொண்டோடி
பெங்கள நீஞ்ச வேருடினு னம்மானை
தன்படை மன்னர் சரிந்தோ டகன்றுழன்று
மின் படை நேமியான்[2] வெட்டென்னத் தேரோட்டி
என்ற களத்தி லெதிர்ப்பார்க ளன்றியிலே
தோன்றினன் நாகனுடன் தோள் கொண்டாரம்மானை
மன்னினை னுடன் மாயன் போரினைக் கண்டு
அன்னரதன் சென்று அயனுக் கெடுத்துரைப்பான்
ஏராணமும் யாமும் பிழைப்ப தற்காய்
நாராயணன் போய் நாகனுட னண்பு கொண்டான்
ஓதநீர் வண்ணர்க் குதவி விடுவாயெனவே
சீதாக மற்றோன் தேவர்கோனை யழைத்து
நம்மை யுடை யவநாகன் வதை செய்கிறான்
செம்மைப் படையுடனே செல்நீ படையுதவி
சென்று படையுதவிச் செல்வார் போல்பாவித்து
எத்தனைக்குப் பற்றுவோம் யாம் நாகனொடு போர்
இத்தனைக்குக் கேடிட்டா னின்னரத னென்று

---

1. சோரிக்கடலில் - குருதிக் கடலில். 2. நேமியான் – ஆணைச் சக்கரமுடையவன்.

உன்னைக் கேட்பாருமில்லை உனக்கொன்று மாவதில்லை
என்னுக்குப் பாவி யெல்லார்க்குங் கேடினேய்
நம்போரு மீள்டளவும் நாரதனைக் காருமென்று
தேம்பி மிகப் போருக்குச் செல்வதுபோல் பாவித்து
கைக் களிற்றை மேல்கொண்டு காய்படையோர் முகிலில்[1]
புக்கொளித்து நின்றான் புரந்தர னம்மானை
அங்கே யவர்நிற்க ஆழியான் தன்னுடனே
பொங்கி நாகன் பொறுத்துக் கேளம்மானை
பொருப்பாக வீழ்ந்து புல்லாகத் தான்சொரிந்து
நெருப்பாக நேரெதிர்ந்து நீடிருளாய்ச் சூழ்ந்துகொண்டு
காற்றாய்ச் சுழற்றடித்தும் காண்டற் கரிதாயும்
கூற்றா[2] யுழன்று கொடும்போர் செயக்கண்டும்
பூந்தார்கள் காணப் புயல்வண்ணன் தன்படையால்
சேந்தார்கள் நாகன் சேனையெல்லாம் கொண்டனர்காண்
விச்சாதர ரசுரர் விஞ்சையர் கந்தருவர்
எச்சாவிற் சேனையெல்லா மிடமழிந்த தம்மானை
வாளிழந்த தோளு மருப்பிழந்த மாக்களிறும்
தாளிழந்த வாம்பரி[3]யும் தண்டிழந்த திண்டேரும்
மாண்ட பெருங்குருதி வாரியில் சேர்ந்ததல்லால்
நீண்ட பொருகளத்தில் நின்றதில்லை யம்மானை
நலச் சேனை சாகனாகன் வெகுண் டெழுந்து
பலதேவன் மார்கிழிய பாணத்தால் எய்தோடி
சாம்பவனை யுட்கலக்கி சாத்தகியை யெய்தழித்து
ஒப்ப வகூரனையும் யுக்கிரனையும் துரத்தி
எப்படையுங் கொன்று எதிர்ப்பார் யாருமின்றி
மப்படித்து வாய்ஞறு வாழ்நாகன் றன்னுடனே
நாமோ தரங்க நாகத் துயிர் கொள்ளும்
தாமோ தரன் மீண்டு தாக்கினன் காணம்மானை
ஈண் டிரண்டு வெங்கூற் றெனவே மிகச்சமரில்

---

1. முகில் – மேகம். 2. கூற்றாய் – இயமனாய். 8, வாம்பரி – தாவும் குதிரை.

பூண்டிரண்டு பேரும் பொருதனர் காணம்மானை
நாடிப்போர் செய்ய நாகனுமேது செய்தான்
தேடித்தெரி கணை[1]யாய் சிக்கென்று கோத்து
ஏகின்றன மேலிரண்டும் பாய்பரித் தேரிரண்டும்
ஆங்கரி யோனுகத் திலீரிரண்டும்
எய்தாற் கண்டு எழில்வண்ணனும் பொரும்போர்
செய்தார் பரித்துச் சினந்து சருவாயுதத்தால்
சிங்க மொான் றென்ன செல்கூற் றிரண்டென்ன
பொங்கி யங்கிரண்டும் புகுந்து பொறுத்தேன்
கொள்ளி வட்டமிட்டதுபோல் கூற்றுக் கோனுவகையே
தள்ளி வடடமிட்டுத் தராதலத்து[2] மந்தரத்தும்
விஞ்சைப் பெரும்போர் விளைக்கின்ற வெல்லையிலே
பஞ்சரங்க வண்ணர்தான் பார்ப்பான் விடைகொடுத்தான்
விண்ணர்க்குக் கண்ணனது வெவ்வழலில் தோன்றினது
என்றக் கரிய யிராவணனைக் கொன்றுழக்கி
உறுமாதிரங் களிலும் ஊழித்தீ யொப்புளது
விறுமாத்திர மவன்மேல் வீழ்ந்த தில்லையம்மானை
தொட்ட வயனம் தோன்ற வரக்கண்டு
விட்டுணு அஸ்திரத்தை விட்டனன் காணம்மானை
நாராயணமும் நாகன்மேல் செல்லாமல்
சோர்வார் கண்டு துளபமால் தான்வெகுண்டு
ஈசனும் பாவிவனை கொல்வோ மெனவே
பாசுபத அத்திரத்தை[3] பற்றித் தொடுத்திடவே
எங்கும் புகையாய் எரிகான் றெழவோடி
அங்கவனைத் தையா தகன்றதுவே யம்மானை
பாணுத்திரமும் பழுதாகா மற்றிவன் தான்
ஊனல் படானென் றுரவோன் திகைப்பளவில்
தேரினுட் பாய்ந்து செல்கையினலே நாகன்

---

1. தெரிகணை – ஆய்ந்த அம்புகள். 2. தராதலம் – மண்ணுலகாகிய இடம், 3. பாசுபத அஸ்திரம் – ஆற்றல் மிக்க சிவனது அம்பு,

போரென்று வந்தவரைப் போகப்புடைத் தொதுக்கி
என்றும் படைத்தலைவர் யாவரையு மீடுசெய்து
கண்ண னொழியக் களங்கழியவே முழக்கி
செங்கண்மால் பாகனையும் தேர்ப்பூண்ட மாக்களையும்
அங்கை[1]யால் தாக்கி அறைந்துகொண் டங்கார்ப்பரித்தான்
வண்டொப் பரியும் வலவனும் கோப்பழிய
கண்டே கரியோன் கருடனை யுன்னிடவே
மாமேருக்குப் போற்று வந்ததென வோடிவந்து
தாமோதரன் தன்னை தனபுத்தியர் தாங்கிநின்றான்
தண்டுந் தனிவாளும் சக்கரமும் வான்சங்கும்
மிண்டும் புயனன்கும் மார்புங் கவித்துவமும்
தேனே நீர் நெய்யும் உடுத்திய தாம்பரமும்
ஆதி யுருப மனைத்துங் கலங்காரன்
மிக்க கொண்ட லோங்க வெண்கவரி காலசைப்ப
தக்க கருடன் தடந்தோளில் நின்றலுமே
விட்டுணுவு மங்கே வெளிப்படக் கண்டலுமே
கெட்டுடைந்து பொன்கிளர் வேந்த ரெல்லோரும்
நாற்றிசையு மண்டி நாயகனைச் சூழ்ந்துகொண்டு
எத்திசையு மெய்த நடந்தனர் காணம்மானை
கருட னொருபால் மோத காற்கரடி தான்பெற்ற
முருடனொருபால் மோதி முட்டியுத்தம் செய்கையிலே
நெய்க் குடந்தன்னை நிறையெறும்பு மொய்த்தாற்போல்
மிக்குள்ள சேனைமன்னர் மெய்காந்த[2] முட்டிடவே
நின்று னரக்கனுக்கு நேர்ந்தது கேளம்மானை
அன்னனை மூன்று நூறாயிரத்தின் சத்தியுடன்
நூறேசனை வளர்ந்து நூறேசனை தழைத்து
வீறே டொருவசுரன் மிக்ககன பாஷையதாய்
எட்டாய் வளர்ந்து யிமைப்பளவி லோடிவந்து

---

1. அங்கை - அழகிய உள்ளங்கை, 2. மெய்காந்த - உடல் வருந்துமாறு.

தொட்டா னரசனுக்குத் தோள்கொடுத்தா னம்மானை
வீசிவளர்ந்து மிக்க கனபஷி யென்பான்
கேசவ னேறுங் கருடனைப் பார்த்துரைப்பான்
என்மிடுக்குக் காண்பா யேவிப் பொருதென்மார்பகத்தே
உன் மிடுக்[1]காலே உறுதியாய்க் குத்தெனவே
மெய்ச்சோடு நீங்கிமிகு மார்பைக் காட்டிநின்றான்
கைச்சோரக் குத்தினன் காய்ந்த கருடனுந்தான்
எங்கருடன் கையே மிகவுளுக்கிற் றல்லாது
அங்கவன் றன்மார்பம் அறிந்த தில்லையம்மானை
ஈதெல்லாங் கண்டு இமையோர் பயந்துரைப்பார்
நாதன் பறவையிலும் நான்மடங்குண் டிப்பறவை
ஏதாகப் போகுதென்று யேங்கியவர் நிற்பளவில்
சூதான வான்புள்ளின் தோன்றிநின்ற நாகனுக்கு
மாளுநாள் நூற்றெட்டு வான்புய முண்டாவையென்று
ஆளு மானிட்ட அச்சாபங் கைகூட்டி
சந்தப்பனைப் புயங்கள் தானொரு நூற்றெட்டுண்டாய்
அந்தக் கரங்கள்தோறு மாயுதமும் தான்பிடித்து
புள்ளினுக்கு வேந்தும் புயல்வண்ணன் தான்காப்ப
தள்ளுரைக்காக வந்து தாக்கினன் காணம்மானை
கூற்றன் போலச்சீறிக் கொடியென நெருக்கிடவே
சீற்ற மிகுத்துத் திருமாலு மேதுசெய்தான்
காலனுக்குங் கூற்றாய்[2] கடுங்காலச் சக்கரத்தை
நன்று தானில்லாத நாகனைச் சேனையுடன்
கொண்டு வாவென்று குறித்தெறிந்தா னம்மானை
உச்சத் தெழுந்து யுலகெல்லாந் தீப்பரப்பி
அச்சக் கரந்தான் அவன்படையைக் கொல்லலுமே
கண்டு நாகன் கனமார்பி லேற்றிடவே
அண்ட நினையா தகலநின்ற தம்மானை
கொன்றன்றி மீளாத கொற்றத் தனிமேனி

---

1. மிடுக்கு – ஆண்மை, வீரம். 2. காலனுக்கும் கூற்றாய் – இயமனுக்கும் இயமனாய்.

அன்றவனைக் கொல்ல அரிதாக நின்றலுமே
அயர்ந்தார் நெடுமாலு மாலோப மாமனையில்
வந்தா னகத்தியனு மாமுனிவ னம்மானை
கும்பமுனி[1] வந்து கோவிந்தனுக் குரைப்பான்
நம்பனே கேளாய் நாகன் வரலாறு
(நாள் மலர்க்)கமல நாராயண மூர்த்தி
தேவி திருமடந்தை சீதேவியால் வெகுண்டு
அச்சுதனோ டடியே ஆழ்கடலில் போய்விழுந்து
எச்ச நெடுநாளிட ருற்றல்தான் கண்டு
வாகாய் மணிவண்ணன் மக்களைத் தானெடுப்பான்
ஆகாச மெவ்வளவுண் டவ்வளவு மெய்யுருவாய்
அண்ட[2] ருருகு மடிக்குளம்பி னுள்ளடங்க
சண்ட வராக[3]மாய்த் தாழ்கடலில் கோலோச்சி
சேணிப் பிறைக்கொழுந்திற் சேரும் சிறுமருப்போல்
நீணுற்ற கோட்டில் நிலமகளைக் கொண்டெழுந்து
அத்திவலை தன்னுடனே ஆதிவராகன் புணர
புத்திரனைப் பெற்றாள் புவிமடந்தை யம்மானை
மேற்சுற்ற மில்லாத வேட்கையிற் றோன்றுதலால்
நாச் சிற்றவனை நாகன்என்று பேருமிட்டு
பூங்குழல் மீதிருந்த பொன்னரிய மாலைதன்னை
வாங்கினான் நாகன் மணிமுடியிற் றான்சூடி
தீயார் களாலும் திரிமூர்த்தி களாலும்
மாயன் முடியில் மணிமாலை யுள்ளளவும்
இம்மாலை தன்னை யான்வாங்கி லல்லாது
மைமேனி மாலாலும் வாங்கொணா தென்றுசொன்னாள்
உம்பன் மனைவியுய மதலையர் கையிலும்
அம்பொன் னரிமாலை[4] யவன்முடியி லாகையிலும்
கூற்றுங் கொளவஞ்சும் கொல்லாது சக்கரமும்

---

1. கும்பமுனி – அகத்திய முனிவன். 2. அண்டர் – தேவர். 3. சண்டவராகம் – பெரிய உருவினையுடைய பன்றி. 4. அரிமாலை – பொன்னால் செய்யப்பட்ட பொன்னரிமாலை.

சாற்று மல்லுநாகன் சாம்வாறு கேட்டருளாய்
உன்னு செகமான முருப்பிணியு மாகையினுல்
அன்னவனை யிங்கே அருங்கருடன் கொண்டுவந்தால்
வாங்கலு மாம்நாகன் மாமுடியில் மாலைதனை
பாங்குற வாடிப் பரிந்துமால் நிற்பதனை
கண்டு கருடன் கணப்பொழுதிலே ஓடி
மண்டு துவரைபுக்கும் மங்கை யுருப்பிணியை
தோள் கொண்டுவந்து துலையாப் பெருங்களிற்றால்
நாள் கொண்டுநின்ற நாகன்னெதிர் சென்று
மன்னுரத்தில்[1] மோதி மணிமுடியைத் தான்பற்றி
தன்னுரத்தால் மாலைதனை தான்பறித்தா ரம்மானை
மன்னரி தான வலியும் பெருவரமும்
பொன்னரிய மாலையுடன் போயினன் காணம்மானை
அம்மாலை வாங்குவித்த அன்னையும் புள்ளரசு
மம்மாலை யுற்றார் நாகனை யவ்வளவில்
மிக்கிரு கூருக மேருவைப்போற் சக்கரந்தான்
தைக்கவே சென்று சிற்றான்வந்தா னம்மானை
நாடற் கரிய நாகன்கருமலை போல்
வீடிக்[2] களத்தில் விழுந்தனன் காணம்மானை
மாய்ந்து நாகன் விழுதலுமே வான்கருடன்
பாய்ந்து பெருங்கனக பக்ஷியைப் போய்ப்பிடித்து
மற்றெம்மை மாலையினுல் வந்திடு மிக்கதனை
உற்ற மிடுக்கா யுரைத்தாயே யென்றுசொல்லி
மெய்க்குற்ற வாய்வழியே வெங்குருதி யாரோட
கைக்குத்தாய்க் கொண்டு களப்படுத்தா னம்மானை
என்றுங் குருட னிருகண்ணும் பெற்றாற்போல்
அன்றுங் களிமையோ ராடினர் காணம்மானை
ஆர்த்தா ரருந்தவத்தோர் ஆரணமு[3] மார்த்தனர்காண்
பூத்தான் விசும்போர் பொழிந்தனர் காண்அம்மானை
வீச்சுற்ற யாதவரும் விட்டுணுவர் வீரர்களும்

1. உரம் - மார்பு. 2. வீடி - அழிந்து. 3. ஆரணம் - மறைகள்.

கோச்சுற்றத் தாரும் குணலைக் கூத்தாடினன்காண்
பாரோர் களிப்பளவில் பங்கயக் கண்பணிப்ப
நாரா யணனும் நாகனுக் காயிரங்கி
சங்கை கருடனையும் சக்கரத்தையு முனிந்து
மங்கை யுருப்பிணிக்கு மாமுனிவன் சொன்னதெல்லாம்
கண்டுளிப்ப நின்று கரியோ னுரைக்கலுமே
ஒண்டொடியுந் தன்மகனென் றுள்ளறிந்து சோபமுற்று
கண்ணருவி யோடக் கனமுலைகளா றோட
அண்ணல் திருமுன்னலறி விழுந் தயர்ந்தாள்
தொல்லை விதிவழியோ சூழ்ச்சியோ சூழ்ந்ததுகாண்
நல்ல மகனே நாகனே யென்றலறி
சென்றதிறல் வேந்தர் தேற்றவும் தேறாமல்
வந்த மகனுடனே மாள்வாரைப் போலயர்ந்தாள்
எண்ணிற வேதா இருவரையும் வந்தெடுத்து
கண்ணு முகமும் கமண்டல நீரால்துடைத்து
முன்னாள் வராகமா மூர்த்தியே நீயழித்து
அன்னாள் நாக மமைத்த நாளின்றளவே
உன்னிவனை வந்தடைய உன்னால் சேதிபெற்றேன்
வாழ்வை யினிநாகன் மைந்தனுக்கே நல்கென்றான்
மிக்கவரைத் தேற்றி விடைகொண்டான் வேதா[1]வும்
துக்கம் தவிர்ந்துஆடி அசுரரை அஞ்சலென்று
சாம்பன் தனையழைத்துத் தாழாதே போய்நாகன்
ஸ்ரீவராகன் தன்னை யழைத்துவா வென்பளவில்
ஓடி யவனுக்கு உற்ற துரைத்திடவே
வாடி வருந்தும் வராகநாதன் தெளிந்து
வந்தந்த வெல்லையிலே வான்நிதிய முன்குவித்து
தன்தந்தை தந்தையுடைத் தாளிலை வீழ்ந்தழுதான்
நெஞ்சங் குழைந்து நின்றமலர்க் கண்ணீர்சொரிய
வஞ்சி யுருப்பிணியு மாயனுமாய் மற்றவனை
அங்கையால் வாரி யடுத்தடுத்துந் தான்தழுவி

1. வேதா – பிரமன்.

தங்கள் விதனந் தவழ்ந்தனர் காணம்மானை
சாலப் புகழ்ந்து தடமலர்க் கண்ணீர்சோர
மாலைப் பணிந்து வராகனுதை னுரைப்பான்
மூளமரில் எந்தை[1] யுடன் முன்னிலையாய் மூர்த்திதரும்
மன்னர் திரளும் வராகநாதன் திரளும்
அன்னரகன் தன்னை அலங்கார மாயெடுத்து
நற்றலந் தன்னிலாறுங் களபக் கட்டையிட்டு
உற்ற மகனுலுரிமை யெல்லாஞ் செய்வித்து
வல்லெரி மூட்டி வரிசையுட னடுக்கி
பல்லரச ரோடும் படைவந்தார் தம்மோடும்
போய்முழுகி மூண்டு புயல்வண்ண னேதுசெய்தான்
தீமுழுதும் செவ்வேல் திறல்நாகன் செல்வமெல்லாம்
மாயன் மகிழ்ந்துவராக நாகற் களித்து
தூய மணிமகுடம் சூட்டினர் காணம்மானை
பொங்கு முருப்பிணியும் பொன்னகரி மாலைதனை
அங்கையில் வாங்கி அவனை முகநோக்கி
தேவர்க்கு மந்தணர்க்குஞ் சேர்ந்தோர்க்கும் நல்லவனாய்
மேவர்க்கு வல்லவனாய் மிக்கிருப்பாய் என்றுசொல்லி
கையி லிருந்த கனமாலை தன்னையவன்
தூயமணி முடியில் சூட்டினன் காணம்மானை
சீதரன் முன்குவித்த செம்மணி மாநிதியம்
ஆதரவாக அவனுக் கேயீந் தருளி
அண்டரைப்[2] பெற்ற அதிருந் திருக்கரத்தில்
குண்டலந் தன்னை கொணர்ந்துதான் வைத்தருளி
வாரமுற் சார்பவராக நாகன் தனைத்தான்
பேரரசர் சேனையுடன் போகவிடை கொடுத்து
மைக்கண்ணி மாரை மணிபரு பதத்தோடு
கைக்கொண்டு போகக் கருடன் தனைஏவி
பொங்குகின்ற சேனை புடைசூழத் தேவியோடும்
அங்கினும் போந்தா னணிநெடுமா லம்மானை

---

1. எந்தை – என் தந்தை. 2. அண்டரை – தேவர்களை.

வாய்ந்த புகழ்சேரும் மந்தாகினி தன்னில்
வேந்தருடன் நெடுமால் வீற்றிருந்த வேளையத்தே
வந்து விறுசோதி மாயோனைக் கைதொழுது
இந்த முகித்தத்தில் இனிக் கன்னிமார்களைநீ
மெத்தென வன்றியிலே வேட்பாயென[1] மொழிந்தான்
நித்தனை வற்புறுத்தி நீங்கினன் காணம்மானை
இட்டா ராசாணி யிருபது யோசனையும்
வட்டார மெல்லா மணப்பந்த லம்மானை
கண்ணன் வதுவைக் கலியாணம் காணுதற்கு
மண்ணுலகும் விண்ணுலகும் வந்தது காணம்மானை
மற்றந்தக் கன்னியரை மாமுனிவர் பத்தினிமார்
சேர்த்து மணக்கோலஞ் செய்தனர் காணம்மானை
நாரதனை வந்துகண்டு நாரதனு மேதுசொல்வான்
தூயவனே போனவன்முன் சொன்னதொரு முகூர்த்தம்
எழுந்துமறைவது காணின்று கண்ணுடி யின்மேல்
உழுந்துருளும் போதெனவே உத்தமனே அவ்வளவில்
எண்ணிரண் டாயிரத் திருநூற் றொருபதின்மர்
கண்ணனே யெப்படிநீ கைப்பிடிக்கப் போறவகை
அண்டினரைக்[2] கைப்பிடித்து அண்டாத கன்னியரை
தண்டி[3] யெனக்கே தருவாயெனத் தொழுதான்
புன்முறுவல் செய்து புருஷோத்தம னுரைப்பான்
நன்முனி தானுன நாரதனே கேட்டருளாய்
ஒன்றி யான்போய் உடனிருந்த பெண்களன்றி
நின்ற பெண்களத்தனையும் நீயே கொள்ளென்று சொன்னார்
அன்னேரந் தன்னில் அருந்தவத்தோர் வந்தீண்டி
தன்னே ரிலாதான் தனைக்கோலஞ் செய்தருளி
ஓவியப் பந்தலிலே ஓமாக்கினி[4] யெதிரே

---

1. வேட்பாய் – திருமணங் கொள்வாய். 2. அண்டினரை – தன்னைச் சார்ந்தோரை. 3. தண்டி – தண்டனை கொடுக்க என. 4. ஓமாக்கினி – வேள்வியில் அமைந்த தீ.

பூவும் பொரியும் பொலிவுற் ருரம்மானை
அங்கங்கு தோறும் அரசாணிக் காலருகே
மங்கையரை வைத்தான் மதிசூத னவ்வளவில்
உற்றங் கொருவர்க் கொருவனுய்க் கைப்பிடித்தார்
மற்றுஞ் சிலபேர் மணவாளக் கோலமுடன்
கொள்ளப் பெண்ணணி குறுகில் மறுகில்நின்ற
கன்ளத்தை நாரதனும் கண்டு கவலை யெய்தி
என் கொள்ளும் மாயவனை யேற்றி யினிதிறைஞ்சி
பெண் கொள்ளு[1] மாசையற்றுப் பெயர்ந்தனர் காணம்மானை
தண்ணூர் பிளகத் தனிநெடுமா லவ்வளவில்
கண்ணுலம் வந்தவர்க்குக் காட்சி செய்து போகவிட்டு
பார்மன்னர் சூழப் படைகள் புடைசூழ
வாரன் முலையாரை வானத்தேர் மீதேற்றி
சேற்று வரையுஞ் சிறுகானும் போயகன்று
போற்று வரை மூதூர் புகுந்தனர் காணம்மானை
அங்கவர்க் கெல்லா மடைவடைவே கோயில்செய்து
மங்கையருந் தாமும் மகிழ்ந்திருந்தா ரம்மானை
செவ்வாய் மடவாரும் செங்கமலக் கண்ணூரும்
இவ்வாறு இன்புற்றிருக் கின்ற வேளையிலே
துவாரப் பதியாளும் துய்யவன்[2] தேவியரில்
சவுபாக் கியமுடைய சத்திய பாவைதன்னை
நாயகன் காணுமல் நாரதன் வந்து கண்டு
தூய கருமங்கள் சொல்வான் போலேது செல்வான்
தண்டுளப மாயன் தலைப் பிராட்டிகளாம்
பெண்டுகளில் வீறுடைய பேராட்டி கேட்டருளாய்
அண்டாத வாழ்வும் அணியும் பெருஞ்சிறையும்
உண்டா யிருந்து மொருகுறைச்ச லுண்டுனக்கு
வாவிச் செயகண்ணுய் வந்துன் கணவனுக்கு

1. பெண்கொள்ளும் – பெண்ணைத் திருமணம் ஏற்கும்.
2. துய்யவன் – தூயோனுகிய கண்ணன்.

ஏவிச் செய்தேயிருக்கும் இந்திரன்தேவி யென்பாள்
கற்பகக் காவும் கனபாரி சாதகமும்
பூட்டும் பணி[1]யும் புனையும் பலகலை[2]யும்
நீட்டும்படி யேத்தும் நித்தம் புனைந்திருந்தாள்
மற்றவர்க் காகாமல் மாயவனை மன்றாடி
உற்ற தருவை உனக்காக்கிக் கொள்ளென்று
மாதவன் தேவி தன்னை வற்புறுத்தி வாசவர்க்கு
போதவினை யடைத்துப் போயினான் நாரதனும்
தற்கோயில் நின்னு சத்திய பாவையுடன்
பொற் கோயில் சேர்ந்தான் புயல்வண்ண னம்மானை
வாடி முகங்கறுகி மன்னன் பெருந்தேவி
ஊடி யகல உரையாடாதே யிருந்தாள்
மாதின் நினைவறிய மாயவன் மேல்விழுந்து
ஏது நினைவு யென மொழிந்தா ரம்மானை
பாதந்தனை முகில் பாவை வசமாக்கி
காந்தள் மலர் முகிழ்த்து கற்பகக்கா வேணுமென்றாள்
ஆன மனைவிக் கருங்கற்பக மளிக்க
தேனை யொழியத் திருமால் தனியேபோய்
பொற்றாள் சமைந்து பொன்னுலகத்தே புகுந்து
ஆர்க்குந் திருச்சங்கை ஆர்ப்பரித்தா னம்மானை
திக்கசங்கள் எட்டுந் திசையெட்டு நின்றதிர
மிக்க சங்கை யூதினார்விண்டுவும் அம்மானை
கைச் சங்கை வாயில் வைத்து கண்ணன் தொனிப்பளவில்
அச்சங் கிளர அமரர்கோ னேது செய்தான்
நன்னே ரறியாத நாகன்தனைப் போலே
என்னேயி யானும் எளியனாய் விட்டானோ
புன்மைச் சினத் தெழுந்து பொன்னுலகில் வந்தவனை
என் வச்சிரத்துக் கிரையிடுவே னென்றுசொல்லி
சந்திர சூரியரைத் தன்படையை முன்னேவி
இந்திரனும் போர்க்கோல மெய்தினன் காணம்மானை

1. மணி - அணிகலன். 2. கலை - ஆடை, அணி.

தள்ளித் தெரிந்து சருவாயுதம் சுமத்தி
வெள்ளிக் குன்றொப்பான் வெங்கயத்தில் மேல்கொண்டு
அண்டங்க ளுண்டான்[1] மேல்ஆய்ப்பாடியிற் சென்று
தெண்டங் கொடுத்துத் திரும்பினதுந் தான்கண்டு
ஏவர் கோனை[2] எழில்துவரை யான்மேலே
தேவர்கோன் இந்திரனுஞ் சென்றான் காணம்மானை
அங்கவன் போர்முன் னவன்விடுத்த சேனையெல்லாம்
செங்கண் நெடுமால் திருவடியில் தெண்டனிட்டு
அரவிட் டணைபாய வரி சேனை தானுக
வரவிட்ட இந்திரன்மேல் வந்தனர் காணம்மானை
அன்னேரந் தன்னில் அசோதை மகன் பணியால்[3]
முன்னே கருடன் முகிளித்தோடு மெடுத்து
இந்திரனைப் பற்றி யெறிந்தான் எறிதலுமே
அந்திரத்திலே யேகி அயனுலகிலே விழுந்தான்
பொங்கு கரியோடும் புரண்டு கிடப்பவனை
செங்கமல வேதாவுங் கண்டு திரிப்பெய்தி
கைமானுந் தானும் கடத்துவரை நாடாளும்
எம்மானை நிந்தித் திதுபட்டானென் றறிந்து
அயிரா பதத்தினுக்கு மாயிரங் கண்ணனுக்கும்
உயிராக மீண்டு உணர்வு கொடுத்தருளி
சென்றுன் பதியிற் ஸ்ரீவாசு தேவனுடன்
துன்று பதந் தொழுது தோத்திரஞ் செய்யென்றுவிட்டான்
வேதனைப் போற்றி விடைகொண்டு விண்ணவர்கோன்
தாதணி[4] பைந்துளபத் தாமனை வந்து கண்டு
பன்மலர் தூற்றிப் பலமுகமாய்த் தெண்டனிட்டு
புன்மையான் செய்கை பொறுமென்று போற்றிநின்றான்
ஆயிரம் பேரு மடைவே துதித்து நின்ற

---

1. அண்டங்களுண்டான் - உலகேழையும் உண்ட கண்ணன். 2. ஏவர்கோனை - யாவர்க்குந் தலைவனை. 3. பணியால் - ஏவலால், கட்டளையால். 4. தாதணி - மகரந்தம் மிகுந்த.

ஆயிரங் கண்ணற்[1]கபயந் தரத் தான் கொடுத்து
கண்காண வைத்து கண்ணுதலைத் தீர்த்தருளி
வண்ணன் மேல்வந்து வச்சிரத்துக் கேதுசெய்தான்
வாங்கிக் கருடனுடன் வன்சிறகி லோரிறகை
ஈங்கித்தன் வச்சிரத்துக் கீயென்று தான்கொடுத்து
மன்னன் படையான வானவரையுங் கூட்டி
அன்னவரைப் பெற்ற அத்தியைப் போய்க்கண்டு
அண்டரைப் போவென் றருநாகன் கொண்டியங்கும்
குண்டலத்தை யன்னாள் குழைகளிற்றான் சாத்தி
அத்தேவ ருக்கு மடித்திக்கு நன்குரைத்து
புத்தேளிரை நிறுத்திப் பூங்காவி லுடன்புகுந்து
காண்டி கரியகன பாரி சாதகமும்
வேண்டிச்சு நல்ல வியன்கற்பகத் தருவும்[2]
ஆரிடமு மில்லா தருந்தருக்கன் றனையும்
வேருடன் கீண்டு மிகு கருடனேந்திவர
சேர்ந்து தருமாலும் தேவலோகங் கடந்து
போந்து துவரைப் புகுந்தான் காணம்மானை
அற்புதமாங் கற்பகமும் மா பரிசாதகமும்
கற்படைய சத்திகைக்குக் காட்டிக் கொடுத்தருளி
தாம கருடன் தனக்கு விடைகொடுத்து
மாமன்னர் சூழ மகிழ்ந் திருந்தா ரம்மானை
வாலி மானில மதிட்துவரை நன்னுடன்
தேவி மாரோடுந் திகழ்ந்திருந்தா னம்மானை
சென்றேக மீதுவரைச் செல்வ னிருக்கையிலே
வானவா வாற்றின் வண்மை கேளம்மானை
அன்று னசுரர் மரபினிற் றான்தோன்றி
பன்று னுலகு பதினுலுங் காத்தருளி
பூவி லயனும் புரந்தரனும் சேவைசெய்து

1. ஆயிரம் கண்ணன் – இந்திரன். 2. வியன் கற்பகத் தருவும் – பெரிய கற்பக மரம்.

மாவிலி யென்னும் வலுபோருந் தானுடைத்தாய்
மாதான சீலனை[1] வாழ நமக்கு மன்னவன்முன்
சூதாலக் குறளுரு வாய்[2] தோன்றி நின்ற மாயவனும்
முன்பாய் நின்றேன் காலால்மூவடி மண்தாவெனவே
அன்பாய் பொருந்திய வன் திறத்தம் பண்ணியபின்
சிந்துருவாய் மண்பிறந்த செங்கண் மாலவ்வளவில்
அந்தரமே யோங்கு மடவுகே ளம்மானை
சேந்திருந்த பேர்கள் சிமிட்டி விழிப்பளவில்[3]
வாளந் திருந்த வோங்கி வந்தனன் காணம்மானை
வள்ளல் பிறவடிக்கும் மாறில்லை யானலும்
உள்ளட்டி மேன்மை தானுற்றட்டி நீகேளாய்
நீடுங் கடலும் நிலமும் நெடுவரையும்
மூடும் கவிசினை போல்மூடினன் காணேர்பாதம்
சாத்தும் பரிவட்டந் தானெட்டு திக்கினையும்
காத்து நெருங்கக் கனமுண்டோ வம்மானை
தென்மான துளபத் திருமால் பஞ்சேனையுள்ள
மின்மாலை யிட்டுங் விரிவுண்டே யம்மானை
அருக்கின்ற சென வெளியி லாயிரந் திண்டோளும்
நெருக்குண்ட தல்லால் நிமிர்ந்ததில்லை யம்மானை
உலகு பதினலு முட்பட அப்பாலும்
செலவூத வீரர் திருக்கரத்திற் குண்டலங்கள்
பார்க்கிணன் தேவர்க்கு பானுவுஞ் சந்திரனும்
நீர்க்குள்ளே தோன்றும் நிழலுற்ற தம்மானை
ஆகாச மெவ்வளவுக் கவ்வளவுக் கப்புறமும்
ஏகா நிறைந்த தெழில்மவுலி யம்மானை
மாக முகட்டில்[4] வடவையிரண் டுற்றதென்ன
கோகனகக் கண்கள் கொழுந்து விட்ட தம்மானை
ஓர்பதத்துப் பாரடங்க வோர்பதத்துள் வானடங்க

1. மாதான சீலனை - பெரிய அரச் செ[illegible]னை. 2. குறளுருவாய் - சிறிய வடிவாய் 3. சிமிட்டி விழிப்பளவில் - கண்ணிமைப் போதில். 4. மாகமுகடு - விண்முகடு.

ஆர்பதத்து மேற்பட்ட கமர்ந்து நின்றனன்காண்
தேன்மூடு தாமரையோன் தெண்ணீர்க் கமண்டலத்தால்
வான்மூடு பொற்பதத்தை மஞ்சன மாட்டினன்காண்
மாவடி வான[1] மாவிட்டுணு மூர்த்தி
மூவடி மண்ணளந்த முதல்வனைப் பார்த்துரைப்பான்
ஈரடியே கண்டதெனக் கிசைந்த மூவடியில்
ஓரடி தாவென் றுறவே பிடித்தருளி
சேய்க்குந் தவமாலைச் சிறையறையிற் போட்டுவைக்க
வைகுந்தம் பெற்றிருந் தோன்மா வலிதன்புதல்வன்
நல்லசுரரை நடுக் கங்கள் செய்தருளும்
வல்லசுரர் வங்கிஷத்தோன் வாணேசுர னென்பான்
கருவரையக் குன்றனையக் காட்சிதனை யுடையோன்
கண்ணுத லோனும்[2] கணபதியும் காய்கதிர்வேல்
அண்ண லறுமுகனு மந்திரியு மக்கினியும்
தென்சேவு ராகத் தானே அரசாக
வன்சேரும் வாணன் வாறமர்ந்த நாளையிலே
திருந்த வெழுதவொண்ணுச் செங்கமலச் செல்வியென்பான்
பெருந்தகமை வாணனுக் கோர்பெண் பிறந்ததம்மானை
கண்ணுதற் கென்றே கருதிவளர்த் தான்காண்
கன்னியும் பக்குவியாய்க் கன்னிமாடத் திருந்தாள்
அன்ன பருவமவ ளன்னை தானறிந்து
வாணனை நோக்கி வதனபிரபை யென்னசொல்வாள்
பூணநற் பெண்ணை புரந்தரற்கு நாங்கொடுத்தால்
ஆரமே பாம்பா மணிவது வெண்ணீரும்
தாரமே[3] வெற்பரையன் தன்மகளும் புக்கினளாம்
ஒருதார முன்னும் உழையையும்நாங் கொடுத்தால்
இருதார மாகாதோ யெங்கோவே யென்றுரைத்தான்
என்மகளைக் கொண்டாக் காலீச னரையன்
வன்மகளா மங்கை வழிபோக வஞ்சானே

---

1. மாவடிவான – பெரிய உருவான. 2. கண்ணுதலோன் – நெற்றிக்கண்ணினையுடைய சிவபெருமான். 3. தாரம் – மனைவி.

பாம்பணிகள் போட்டு பலபணிகள் பூணேனே
சாம்பல் புனையாமல் சவாதுவகை பூசேனே
மானேறி வாகனமும் மற்றகேச மாக்கேனே
ஓடன்றி பொற்கலத்தில்[1] உண்டிருக்க நல்கேனே
என்றா னசுரர்கோன் ஏந்திழையுந் தான்பொருந்தி
நன்றாகு தென்னவதை நாடியொரு பெண்பூதம்
அத்தனையுங் கேட்டுப்போ யம்மையுமை யோடுரைக்க
சித்தந்தளர்ந் துமையுஞ் சீற்றத்தா லேதுரைப்பாள்
கண்டு மருண்டிடுவன் காவாலி கண்ணுதலோன்
கங்கையைக் கொள்ளாமற் காத்தாரொருவ ருண்டோ
இங்கிவளைக் கொல்லா திடர்செய் வோமென்பளவில்
தன்னைப் பயந்தவர்கள் சங்கரற்குத் தான்கொடுப்ப
உன்னிப் பதனை யுழையு முறக்கேட்டு
செய்யும் புறத்தோழி சித்திர லேகையுடன்
தையல் மனவிசைவு சாற்றலுற்றா ளம்மானை
வண்ணந் தடுக்கை மலையுஞ் சடையார்க்கு
என்னைக் கொடுக்க இசைந்தார்கள் எம்மவர்கள்
ஊன்பகரி நெஞ்சா முடையும் புலித்தோலாம்
பூண்பதுவும்[2] பாம்பாம் பொருப்பா மிருப்பதுவும்
துஞ்சின மூனும் சுகதுக்க மற்றிலையாம்
நெஞ்சில் கறுப்பு நெடுநாளும் நீங்காதாம்
மின்பாதி மேனி விடப்பிடித்துக் கொண்டாளாம்
தன்பாதி மேனி தலையிற் சலமகளாம்[3]
ஆகையா லென்னை யவர்க்குக் கொடுப்பார்களாய்
சாகை யல்லாது சஞ்சரிக்கப் போறதில்லை
நற்புருஷன் தானாகை நாளிருந்து வாழ்வாரும்
சற்புருஷனைத் தேடி தானீயென மொழிந்து
ஆங்கவளைப் போக்கி யணியாரிழை யுழையும்

---

1. பொற்கலம் – பொன்னாலாகிய உண்கலம். 2. பூண்பதுவும் – அணிவதுவும். 3. சலமகள் – கங்கை.

தூங்கு மஞ்சந்தன்னில் துயின்றனள் காணம்மானை
சங்கரற்கு வாணன் தருமடந்தை பூதால்
அங்கோ ருற்றகாக அமையென் றுழைவிடுப்ப
கச்சு முலையாள் கனவிலே யோர்பூதம்
அச்சுதன் பெற்ற அனுருத் திரனாக
பொங்கு மனையிற் புகுந்தங்கு நெக்குருக
மங்கையைப் புல்கி[1] வசமாக்கி மாலாக்கி
கையென்று நீங்கிக் கனவென் றறியாமல்
மெய்யென் றதையும் விழித்தனள் காணம்மானை
வாடினாள்வாடி வருந்தினா ளவ்வளவில்
நீளா வோலை நெடுந்துடி[2] ஆர்த்தது காண்
சாளரவாய் தோறும் தன்சோதி முன்பரப்ப
சோமனும்[3] வந்தான் சுரும்பால் கரும்பேற்றி
காமனும் வந்துகணை தொடுத்தா ரம்மானை
எவ்வீரர் போலுமன்றி யேந்திழையார்க் கெத்தினையும்
அவ்வீரர் நூறு இரவாயானது காண்
வயலில் புள்ளலம்ப வன்காவில் வண்டலம்ப
கோவிலிற் சங்கலம்பக்[4] கோதையர்கள் பாட்டலம்ப
கார்விழுந்து வீழ்ந்ததென்னக் கண்டாற் கரிதான
வேர்விழுந்த கங்குல் விடிந்தது காணம்மானை
நனவிலே கண்டதல்ல நற்போரூர் கேட்டதல்ல
கனவிலே கண்டணைந்த காதலனுக் காதரவாய்
வாணன் மடந்தை வருந்தும்வருத்த மெல்லாம்
காண வருவான்போல் காய்கதிரோன் தானுதித்தான்
தான்தனியே நின்றுழையுந் தள்ளாடும் வேளையத்தே
சேந்தங் கவன்பால் சித்திரத்திலேகை யென்பாள்
கொங்கை பசப்பக் குலவிய கண்பசப்ப
மங்கையுழை யிருந்தவாறு கண்டங்கென் சொல்வாள்

---

1. புல்கி - அணைத்து. 2. நெடுந்துடி — நீண்ட முரசம். 3. சோமன் - சந்திரன். 4. அலம்ப — ஒலிக்க.

வஞ்சியே[1] யஞ்சுகமே வண்ணக் குயில்மயிலே
கொஞ்சிய கிஞ்சுகவாய் கோதையே கோகிலமே[2]
நஞ்சுண்ட கெண்டையென நாகமுண்ட திங்களென
மஞ்சுண்ட பூங்குழலாய் வாடிமிக விருந்தாய்
மின்வந்த வேதக்கண் விளங்கும் விழியுழையே
என்வந்து சூழ்ந்ததென யிவளுந் தாமேதுசொல்வாள்
ஏந்திழையே கேளாய் இராவென்ன வகத்தே
காந்தள் மதனோ கதிர்வே லுடையவனோ
கண்ணனோ ஈசனோ கஞ்சத்தானோ கதிர்வாள்
அண்ணலோ மானிடனோ ஆரோ ஒருகுமரன்
சந்த மணிந்து சருவாங்க பூஷணனாய்
வந்ததெனைப் புல்கி மனத்தையுஞ் சூறைகொண்டு
இங்கென்னை மாலாக்கி எய்தாமலே மாற்றி
நீங்கியும் நீங்காமல் என்னெஞ் சகத்துஒளித்து
கண்ணிலே நிற்கிறான் கைக்கு மகப்படிலான்
நன் னுதலாய் நீயவனை நாடித் தருவாயால்
என்னுயிரைத் தந்தாய் யென்றழுவியே தொழலும்
சின்னமணி மருங்கு[3] சித்திரத்தி லேசொல்வாள்
வினாக்கொண்டு பார்க்கில் விளங்கியே நமக்குள்
கனாக் கண்டு மாலான கன்னியரைக் கண்டறியோம்
ஆனாலும் உன்பா லவனையே கூறுகிறேன்
மானார் விழியாள் வருந்தாதே யென்றுசொல்லி
சித்திர கங்கை திரிந்து பதினாலுலகும்
மெத்திய பொற்படத்தில்[4] மிக்க வடிவினரை
காமனை யிந்திரனைக் கந்தனைக் காசினியில்
மாமன்னர் மைந்தர்களை வண்மை பெறவெழுதி
வன்னித்த பேரை வகைவகை யாம்படியே
கன்னிக்குக் கொண்டுவந்து காட்டினள் காணம்மானை
நல்லாளும் பார்த்தனை நங்கேள்வ னிங்கிவர்கள்

---

1. வஞ்சியே - வஞ்சிக்கொடி போன்றவனே. 2. கோகிலம் - குயில். 3. மருங்குல் - இடை. 4. பொற்படம் - பொன்னாலாகிய சித்திரப்படாம்.

எல்லாரும் குளிவ னில்லை யென்று
வெம்பித் தவித்து மெலிகின்ற மெல்லியர்க்கு
அம்புயச் செங்கண் ணுருத்திர னிருந்த
வன்னமாய் பொறப்படத்தை வாகாகக் காட்டலுமே
என்னமால் செய்தா னிவனென்றே ஏமலித்து[1]
கொங்கை பாயவன குணங்கள் வளக்கிடென்பள்
அங்கையால் வாரி அணைப்பா ளழிந்திடுவள்
சித்திரத்து வீரனுடன் செல்வி செருக்கையிலே
உத்திர ................. மைவிட்ட தோர்பூதம்
பிச்சை பிராமணியாய் பேதையைக் கண்டேதுசொல்வான்
இச்சித்து நீர்விரும்பும் ஏந்தல் வலியவன்காண்
துன்னா ரழுந்தும்[2] துவார பதியாளும்
பொன்னாழி மாயன் புதல்வன் காண் பொற்கொடியே
எவ்வுலகில் மங்கையர் வந்தேவல் செய்யவீற்றிருக்கும்
நவ்வியுருப்பிணி தன்நம்பிதா னென்றுரைத்தார்
அன்னது சொன்ன அருதிப் பிராமணியை
துன்னத் தழுவித் துடியிடையு மேதுசொல்வாள்
மொண்டு தருவேன் முழுநிதியம் நீயவனைக்
கொண்டு வரிலென்று கூட்டினாள் மொழியையும்
சென்று பிராமணியும் சித்திரத்தி லேகையுமாய்
அன்று துவரை யணைந்தலர் காணம்மானை
வாங்கார் வில்லார் நுதலார் மங்கையர் சென்றருளி
பூங்கா வனத்[3]தில் புகுந்து துயில்கின்ற
நம்பிதனை யெடுத்து நங்கொருவர் காணமல்
அம்புவியில்[4] போகாம லாகாசத்தே போந்து
வாணன் மயில் மாடத்தில் வைத்திவனை
காண யிருவரையுங் கைப்பிடிக்கப் பண்ணுவித்து
நீங்கினா ரங்கவர்கள் நேரிழையுங் காதலனும்

1. ஏமலித்து – வருந்தி. 2. துன்னாரழுந்தும் – பகைவர் வருந்தும். 3. பூங்காவனம் - பூக்கள் நிறைந்த சோலை, 4. அம்புவியில் – அழகிய உலகில்,

பாங்கினல் புல்கிப் பலகாலும் தான்புணர்ந்து
மன்மதன் வேதம் வழுவாமலே தழுவி
நன்மை பெறவே நயந்திருந்தா ரம்மானை
அன்று னிலங்கை (அழிவுதான்) வந்ததுபோல்
மன்னன வாணனுக்கு வந்தது காணம்மானை
வீணு தனமணிவன தெல்லா முள்ளயிது
வாணர்க் குவந்து வாணனைக் கண்டருளி
பார்க்கப் பயந்துமிகப் பாய்ந்துகண்ணீர் மிசைந்து
ஏக்கம் பிடித்து இராச்சியமா யேதுசொல்வாள்
மானுடை வேலைத் துவரையிற் புக்கிருந்து
மானிடன் வல்லிடையா லங்கிஷத்தோர் வைப்புமகன்
உன்பெண் ணுமையுடனே[1] உற்றிருந்தா னுன்னுடைய
அன்பே யறிந்துரைத்தேன் ஆனதுசெய் யென்றுரைத்தான்
ஈண்டங்கே வாணன் எழுந்தங்கே போமளவில்
ஆண்டங் கமைவிடுத்த அற்புத முள்ளறிந்து
மெய்ய னுருத்திரனை வேறேயொழித்து வைத்து
பொய்ய னுருத்திரனைப் புகுந்திருந்தா ரம்மானை
சென்றங்கே வாணன் சினத்திலே மற்றவனை
கொன்றங்கே நின்று குலமகளைக் காணமல்
சித்திரையைப் பார்த்திவன்தான் சேர்ந்தபடி சொல்லாமல்
முத்துதிர் வாட்கண் முகங்கறுகி யேதுசொல்வான்
நற்கணவர் கோயிலிலே நன்மகன் போயெதிர்ந்தார்
என்மகனிங்கு வந்தணையான் கேட்டீ ரென்றழுதாள்
ஓராந்த கொண்டேன் உன்கணவனுக்கு நானிதுகாண்
காராய் குழலாய்க்[2] கலங்காதே என்றுசொல்லி
வாணன் மனைபுகுந்தான் மற்றந்த நாரதனும்
வீணனும் போய்த்துவரை மேவினன் காணம்மானை
மெய்யெல்லா மல்லாற் கவியோடே ஓடிவந்து

1. உமையுடனே – பார்வதி தேவியுடன். 2. காராய் குழலாய் – மேகம்போன்ற கூந்தலினையுடையாய்.

அய்யனை வந்தித் தழுதுதொழு துரைப்பான்
முன்னாள் மதயானை மூலமெனு மோலமிட[1]
அன்னாளி லானைதனை[2] அஞ்சலெனக் காத்தவனே
அன்னாணீ பெற்ற அனுருத்திர நம்பி
வாணாசுரன் தன்மகளைப் புணர்ந்திருக்க
காணா வெகுண்டு[3] கழிவிழித்தான் காணனென்று
அங்கும் வினையடைந்து அங்கிலும் போந்துமுனி
இங்கும் கலக்கமிட் டிளகினன் காணம்மானை
தீயசொற் கேட்டு செவிகள் சுருக்கென்று
மாயன் படையோடும் வாணன்மேற் செல்லவென்று
மற்றும் பலதேவன் வீறுக் கிரசேனன்
சத்திய காத்தகிகள் சாம்பன் சிறித்துவமன்
உற்ற தேவ னுடனே வசுதேனை
மற்றும் பலதிக்கில் மன்னவரையுங் கூட்டி
மாதுரங்கம் வேழ மணித்தேர் மகாசேனை
சாதிரங்கம் சூழ்ந்த சன்னியத் தேரேறி
தாடும் தரும நதியும் பலகடந்து
காடும் மலையும் கழியும் பலகடந்து
தீயவரும் சுரமும் சென்றந்தச் சேனையுடன்
போயவனும் வாணன் புரம்புகுந்தா ரம்மானை
அறைகழற்[4] காலன் அனுருத்திரன் முன்னிலையாய்
இறையவனும் வாணவதைக் கெய்தினன் காணம்மானை
கார்முகில் மாமேனிக் கரியமால் சேனையொடும்
ஆர்மாமுகில் வேட்டு அறைகூவி வந்தவனை
கண்டோடி வந்து கனபிருக லாஷனென்பான்
வண்டோ விடுந்தாமன் வண்ணனுட னேதுசொல்வான்
செம்பன் துவரை ஸ்ரீவாசுதேவ னென்பான்

---

1. மூலமெனுமோலமிட – ஆதிமூலமேயென்று அவலக்குரல் எழுப்ப. 2. ஆனைதனை – யானையென்னும் கசேந்திரனை. 3. காணாவெகுண்டு – கண்டு சீற்றங்கொண்டு. 4. அறைகழல் – ஒலிக்கின்ற வீரக்கழல்.

தும்படை யோடுமஞ்ச மாவெட்டுவந்து நின்றான்
நிந்தித் தொருபவிஞ்சை நீவிடுப்பா யென்றுசொல்லி
வந்திருந்த தானவனை வாணனு மேதுசொல்வான்
மூவுலகு மென்காவலம் மூர்த்திகளு மெனக்கு
சேவுகர்கள்[1] தேவரெல்லாம் சிற்றாளாய் ஏவல்செய்வார்
என்மேல் வரத்தக்க னெவனடா வென்றவனை
மென்மேற் புடைப்பித்து[2] வீற்றிருந்தா னம்மானை
பூணன் புயநெடுமால் புள்ளரசை யங்கழைத்து
வாணன் பாற்றூதேகி வாவென்று போகவிட்டான்
செம்ம லவனுவப்பச் சிறகருடன் தான்சென்று
அம்மசிம தள்ளி அணிகோபுர மிடித்து
சேணிலம்[3] சென்று மணிச் சிங்கத் திருந்த
வாணனைக் கண்டு சிலவார்த்தை சொன்னானம்மானை
மன்னும் புகழ்சேரும் மரபில்செல்வ வாரணனே
ஆயிரங் கையும் அணிமுடிமேல் கூப்பி செங்கண்மால் தூதனியான்
நீயிருந்து கேளாய் நினக்குறுதி சொல்லுகிறேன்
அண்ண லுருத்திர னற்றதே யுண்டானால்
எண்ணி லுனக்கு மிறுதிநாளின்று கண்டாய்
தேவருந் தானவருந் திக்கெங் கிலுள்ளோரும்
ஏவலியற் றுவது[4] மின்றே யிழந்தனை காண்
வாளாயுதமு வணியு மணி முடியும்
தோளா யுதமும்துணியும் நாள் வந்தது காண்
தும்பிக்[5] குதவுஞ் சுடராழி யானளித்த
தம்பிக்குத் தீங்கில்லையா யென்றுன் மகளோடும்
கொண்டு போயெங்கோன் குரைகழற்கீ தாழுவையாய்
நீடுதான்வாழ வுனக்கினி யென்றுள்ளளவு மென்றுரைத்தான்
வானபுள் ளரசுரைக்க வாணனெரி விழித்து

1. சேவுகர்கள் – பணியாட்கள். 2. புடைப்பித்து – தண்டித்து. 3. சேணிலம் – தூரமாகிய இடம். 4. ஏவலியற்றுவது – பணி செய்வது. 5. தும்பி – யானை, கசேந்திரன்.

கோழை மனிதரின் கோட்டோடா வென்றுசொல்லி
வலிந்து மிகவுரைத்த வான்புள்ளுப் போகாமல்
நலிந்து பிடியுமென நல்லவுண ரோடிவந்து
ஓரிரண்டு தோளும் உறுகஉறப் பற்றிநின்ற
ஈரிரண்டு தோளினையும் எத்திக்கும் பிச்செறிந்து
வான்வழியே வந்து மதிசூதனைத்[1] தொழுது
தான் வழுவா துள்ளதனைச் சாற்றினன் காணம்மானை
தூதன் மொழியத் துவார பதியாளும்
நாகனுந் தன் சேனை நால்வரையு மங்கழைத்து
வாணன் வலியு மவர் முடியில் வாலாறும்
காண வுரைத்துக் கடிப்படையைக்[2] காப்பதற்கு
தானு தரவாய்த் தமையன் சிசுபாலனையும்
சேனாபதிப் பட்டஞ் சேர்த்தனள் காணம்மானை
சேனைக்கதி பனும் தன்சேனை திரட்டியலும்
ஆனைக்கடலும் அசுவப் பெரும் படை[3] யும்
சேற்றுப் பாடி நிறுத்தித் தேர்களிடை நிறுத்தி
சுற்றுங் கட்கு சுடர்வாளணி நிறுத்தி
நல்லணி தன்னை நடுவணையிலே நிறுத்தி
சத்திய சாத்தகியைத் தானோர்பால் நிறுத்தி
முன்னாட்டந் தன்னில் முதல்வனாய் மன்னின்று
சாய் படை தாங்குதற்குச் சாம்பனை வற்புறுத்தி
பாய் பரியுந் தேரும் பரியும் படைசூழ
சக்கிர சத்தி பென்னும் சண்டயூபம் வகுத்து
மிக்கபறை யொலிக்க மிகுவளைக ளார்ப்பரிக்க[4]
பாரத் தேரேறிப் பதாகை விசும்பளக்க
வீரச் சிலையை மிகுநாணொலி யெறிந்து
பொரு மன்னர் கூற்றென்ன போர்ச்சிங்கம் வேறென்ன
நிருபன்[5] பலதேவன் நின்றான் காணம்மானை

1. மதிசூதன் – நாராயணன். 2. கடிப்படையை – காவலையுடைய படையினை. 3. அசுவப்பெரும்படை – குதிரைப் படை. 4. வளைகள் ஆர்ப்பரிக்க – சங்குகள் ஒலிக்க. 5. நிருபன் – மன்னன்.

மாயன் படைத்து மணிவாணேசுரன் கேட்டு
ஆய அசுரேசன் அஞ்சனைப் பார்த் துரைப்பான்
அக்கினி தன்னை அணிந்த மனிதர்தன்னை
தெக்கினிற் சென்று சுடச்சொல்லப் போகென்றான்
அன்னானு மோடி அழலோனுக் கந்தமொழி
சொன்னான்பின் துணிந் தெழுந் தானம்மானை
கார்போலு மேனிக் கருணா கரனுடனே
போர் பொர வங்கே புறப்பட்டா ரம்மானை
பரவும் பரிகரியும் பரிச்சுவமாய் வாய்வு
வொரு பகையு மானத் தேதானாகி
கால வறுதிக் கடுங்காற் றேர்ச் சாரதியாய்
கோல மறைநான்கும்[1] கூடும் பல பவிஞ்சாய்
மேத்துப் பணியணிந்து வெண்சாமர மிரட்ட[2]
பத்து வகையாய் பதினாயிர முகமாய்
மார்மட்டும் வான்மட்டும் பத்திக்கோ முத்துவிட்டு
நேர் பட்ட தெல்லாம் நெருப் பாறாக்கி
மண்டி அகவனைய வந்தெங் குங்கலந்து
தண்டிச் சடசடென தாக்கினன் காணம்மானை
அண்டரிய மன்னருடன் ஆருயிர் வரையும்
அற்பத்தில் நீறாக்கி அங்கங் கெழுந்துகொண்டு
கற்பத்து நீர்ப்போற் கலந்தது காணம்மானை
போய்த் தீத்தாக்க புயல்வண்ணன் சேனையெல்லாம்
ஓதக் கடல்போ லுடைந்தது வேயம்மானை
சேனைத் தலைவன் ஸ்ரீபல தேவனுடன்
ஏனை பலரும் இரிந்தோடி யேதுசொல்வார்
எல்லா மறிந்திருந்து யெம்பெருமா னங்கியுடன்
பொல்லா மதிநினைந்து போர்செய்யச் சம்மதித்தாய்
தூரத்தே நின்றாக்கால் சூழ்ந்து புகை கொல்லும்

1. கோல மறைநான்கும் - அழகிய நான்கு வேதங்களும்.
2. இரட்ட - வீச.

சேரச் சிறுத்துநின்றால் தீக்கொழுந்து தீருக்கும்
பாயும் பரிகரிதேர் பக்கத்துஞ் செல்லாது

ஆயுதம் விட்டா லடையக் கரியாக்கும்
வான வதைக்கென்றே வந்தோ மச்சோவதை
காண வகையொழியக் காணோம் பிழைக்கவகை
அங்கிக்[1] கிரையா யனைவோரு மாண்டாலும்
எங்கோனைக் கொண்டு எழுந்தருளாய் நீயுமென்றார்

ஒத்த தறியா துழன்று[2] பலதேவன்
நாற்றிக்குச் சங்குதனை நாஞ்சிற் படையோடும்[3]
காயெரி போலகனன்று கடுந்தே ரோட்டி
பேயெரி போலேபுகை பாய்ந்த தம்மானை
சத்திய சாத்தகிகள் தானொரு பால்தாக்க

ஒத்த வசுதேவன் உக்கிரசேனன் தாக்க
கன்னிறல் தண்டுகொண்டு சாம்புவன் தான்தாக்க
மன்னு கருடன்வந்து வன்சிறகா லவிக்க
மாயன் பதத்தை மனதிலுற நினைந்து
ஆயன் படைமனுக்கி ரண்டிப்போர் செய்யலுமே

ஆதியான் தன்னருளா லங்கியுடன் பொருதார்
தாழுங் கயிற்றில்நின்ற தாமரையைப் போல்நின்றார்
செற்றிப்[4] போர்கண்டு தீக்கடவுள் தான்முனிந்து
பற்றிப் புகைந்து பரிகரித்தேருள்ள தெல்லாம்
வன்னிக் கொழுந்தில் மடியப் பொடியாகி

உன்னித்துத் தாக்க உடைந்தது காணம்மானை
எங்குந் தரியாமல் யெவ்விடத்தும் நில்லாமல்
சங்கங் கையேந்தினான் தன்னருகே போய்த்தரித்து
வேந்தனே வாணனுக்கு வெற்றி கொடுத்தருளி
சேர்ந்துவர நம்முளே செல்வோமே யாமாகில்

---

1. அங்கி – நெருப்பு. 2. உழன்று – வருந்தி. 3. நாஞ்சிற் படை – கலப்பையாகிய ஆயுதம். 4. செற்றி – பகைத்து.

பொங்கிக் கடல்போலப் புடைநின்ற சேனையெல்லாம்
அங்கிக் கரையாய்[1] அழிவதறுதி யென்றார்
மிக்க வடவரையாய் வேலைதனைப் பிடித்தும்
ஒக்க வுயிர்க ளுதிரத்தி னாலேயும்
வேதத்தை யெல்லாம் விளக்கும் விளக்காயும்
ஆதித்தற் கெல்லா மருஞ்சோதி தானாயும்
ஆகுதியில்[2] நின்றும் அமரர் தொழுதேத்தும்
வாகுள மாருதத்தை வாகனமாப் படைத்தும்
நாம்பட்ட தல்லால் நமக்குறுதி யாவதல்லால்
மேம்பட்ட வங்கிதனை வென்ற தேதுவாச்சு
என்று பலரு மிறைவனைக் கைதொழவே
பொன்றி களடை புருஷோத்தமன் வெகுண்டு
விருப்புற்று நீங்களெல்லா மிக்கபோர் செய்திடவே
நெருப்புத் தனக்கு நெருப்பாய் நெருக்குகிறேன்
கண்டிடு மென்றே கனலவன்மேற் றேரோட்டி
முண்டகத்தான்[3] கோமானு மோதினன் காணம்மானை
மோகத் தீமேலே வாயுதீத் திறத்தை
சோதித் திராமல் தொடுத்தான் தொடுக்கலுமே
பேருசப் பெருங் காற்றாய்க் கைவளைஞ்சும்
காரு மலையுங் கடலு மலைகுலைய
முத்துங் கடையுகத்தில் மோதுந் தீயுடனே
சுத்தி வளைந்தடித்துக் சூறாவளியாய் கொள்ளும்
நடுங்கக் கொடுங்கனல் நவலோக மெங்கிலும்
மூளுஞ் சிறுமைகெட முற்றும் பெருங்கனலாய்
அய்யப் படுவார் அருந்துணை பெற்றவர்போல்
வெய்ய வடவையிலு மீறியெதிர் வந்ததுகாண்
சோர்வில்லா தங்கித்[4] தொடர்ந்து வரக்கண்டு

---

1. அங்கிக் கரையாய் – தீயால் அழியும் உமி. 2. ஆகுதியில் – வேள்வியில். 3. முண்டகத்தான் – தாமரைமலரில் தோன்றிய பிரமன். 4. அங்கி – நெருப்பு.

வார்விலுறு கொத்து வாரணத்தை மால்தொடுத்தான்
மிண்டி யிருள் பரந்து மின்னியுரு மெறிந்து[1]
கொண்ட லநேகக் கொடுந்தூளி கொள்வதுபோல்
ஆனைத் துதிக்கையிலளி கொண் டெழுந்ததுபோல்
சோனைக்[2] கனல்மேல் சொரிந்தது காணம்மானை
பெய்யுஞ் சலமெல்லாம் பேரோமத்தை யுருக்கும்
நெய்யென்ன வுண்டு நிறைந்தங் கெரிதலுமே
மன்றுவார் தண்டுளப மாலும் வருங்கனலை
வென்றுவார் வென்று விறுமாத்திரந் தொடுத்தான்
கோகனகத்துக் கொற்ற வரியு மெரியும்
ஏகவுரு[3] வென்ப தென்றி விறுமாத்திரமும்
நல்ல கவிதை நடந்தும் பெரும்புலி
புல்லார்ச் சென்று பொருளுற்று மீண்டாப்போல்
தக்க கனலோனைச் சாதிக்க மாட்டாமல்
மிக்க விருமாத்திரமு மீண்டது காணம்மானை
ஆறாத சீற்றமுடன் அக்கினிதேவன் முனிந்து
நூறாயிர முகமாய் நூறாயிரம் வடிவாய்
மண்றின்றான் கோபமுற வானின் றுராகுவிப்பார்
முன்னின்ற மாயவனை மூட்டினன் காணம்மானை
மாமேரு[4] பேர்ந்தாற்போல் வான்கருட னவ்வளவில்
ஆமோத நீர் மொண்டவித்தா னவிப்பளவில்
அறப் பின்னிட்டா னழலோனு[5] மவ்வளவில்
வெற்பன்ன திண்டோளான் விறல்நெடுமாலு முனிந்து
சக்கரத்தைக் கொண்டு தாவித்துப் பூடவித்து
அக்கி மேலேவ அமர்ந்தபடி கண்டு
ஆதரவாகி அமர் காண வந்துநின்ற
வேத வியாசன் விலக்கி யெடுத்துரைப்பான்
வேதத் துக்காதியாய் விண்ணோர்க்கு நாயகமாய்

1. உருமெறிந்து -- இடியிடித்து. 2. சோனை - மழைத்துளி.
3. ஏகவுரு - ஓரேவடிவம். 4. மாமேரு - பெரிய மேருமலை, இமயமலை.
5. அழலோன் - அக்கினிதேவன்.

ஆதிக் கடவுளாம் அக்கினி தன்மேலே
கோனன்றி மீளாதக் கூராழியை யேவி
நன்றென்று மாலே நல்லறத்தைக் கொல்லாதே
அங்கியைக் கொல்லு மவுணனுக்குச் சொல்லவுங்கேள்
இங்கிய லாயன் யியமன் பெருந்தேவி
துன்னிய பைம்பூண் சுவாகை யெனுனாமம்
மின்னை விரும்பி விழுங்கிக் கொண்டேதிரிவன்
அன்னா னொருநாளவனையுந் தானுழிந்து
முன்னாள் பூசையது தான் முடிக் கலுமே
பொங்கிய காலனாய் பொய்யுருவாய்த் தான்கொண்டு
அங்கிவா வென் றண்டியவள் மேல்விழவே
தன்னவ னென்றெண்ணி தையலுந் தானுணர்ந்தாள்
பின் கேள்வ ன[1]ல்லா மற்பெற்றதாய் தானறிந்தாள்
வெயிற் றுயிற் றேங்கி விரல்நெரிக்கு முன்னனைமுன்
எய்திய போது இயமனைக் கண்டஞ்சி
வெந்திற லங்கிதனை விழுங்கியே வீற்றிருந்தான்
அங்கதனை முன்போ லவனை விழுங்கியபின்
செம்முனி வோரும் தேவரும் வேதியரும்
ஓமக்குழிய துக்கு உண்ணெருப்புக் காணாமல்
அங்கியிறந் தானதையே முறையோ வென்று
பங்கயத் தோர்[2]க்குப் பலரும் போய்ச்சொல்லலுமே
என்னா வியலுமே இக்காரியத் திருந்த
பொன்னாழி யான்பக்கல் போதுமெனப் போயுரைத்தார்
செங்கண் நெடியோன் சிறுமுறுவல் கொண்டருளி
அங்கி யொளித்திருந்த அல்லல்தனை யறிந்து
காலன் தனை நினைந்தாள் காலனும்வந்தப்போதே
மாலின் மலர்ப்பாதம் வந்தித்தருகில் நின்றான்
கண்ணன் புடைநின்ற[3] காலனைப் பார்த்துரைப்பான்

1. கேள்வன் – கணவன். 2. பங்கயத்தோன் – பிரமன்.
3. புடைநின்ற – பக்கத்தில் நின்ற.

நன்றியுன் தேவி நாடியங் காரகன்றார்
நின்வேட மாகியந்த நேரிழையைத் தொய்யலுமே
பொன்வேட மன்னன் புணர்ந்த பின்னுள்ளறிந்து
பன்னடர் கஞ்சியுதா சனனைத்தான் விழுங்கி
மண்ணிடையே நீயும் விழுங்கி யிருந்தனைகாண்
ஆங்கவனைக் காணிநீ யவளைக்காவ லென்று
பாங்குபிறக் கால்விழுந்து பாத்தந்த கண்ணனையும்
உன்னிய (வாறு)யுனக் கிவன்தான் வேண்டாதான்
வன்னிக் கேதாரமா வளைத்தா ரெனஎண்ணி
தன்மனு மங்கிக்குத் தாரமாய்த் தான்கொடுத்தான்
பின்மன்னு மாயோனும் பேரெரியைத் தான்பற்றி
துற்றதே தேனுஞ் சுவாகாயென வுரைத்து
உற்ற வலக்கை யாலுகுத்த தாலுண்பதன்றி
ஏது முரைய திடக்கை தாவுண்டனையால்
பேதம் பெருக்கி பெலங்கெடுவை யென்றுரைத்தான்
அச்சாப[1] முன்னிடக் கையால் நீயுகுத்தால்
அச்சமுற வுண்டுஅவின தெளியனாய் நிற்பன்
வாணா சுரனை வதைசெய்ய வங்கிக்கு
நாணா மலர்ச் சேனையொடும் நண்ணுவாயென்றுரைத்து
அம்முனிவன் போனான் அசோதைத் திருமகனும்
செம்முறுவல் செய்த சிறுதொழிலுங் கைவிட்டு
ஏற்று (இரந்த) கையாலே யுகுத்தான்
சீற்றந் தெளிந்து சிரித்துண் டானக்கினியும்
உண்டவுடனே உரங்கெட் டு[2]ணர் வழிந்து
மண்டுமெரி யகன்று வாங்கிநின்ற தம்மானை
அங்கியைப் போர்வென்ற அடுபடை தற்சூழ
செங்கண் ணெடுமாலும் சென்றனன் காணம்மானை
வண்ண னெடுந்திரள் வாணனைக் கைதொழுது
நல்லெரியைப் போர்வென்று நாடறிய சேனையுடன்

1. அச்சாபம் - அவ்வில்லை. 2. உரங்கெட்டு - ஆற்றல் அழிந்து.

வல்லெரியைப் போல வருகின்றான் மாயனென்றான்
அன்னவ ரோடே அசனனேது சொல்வான்
இன்னபடி யெல்லா மிப்பொழுதே நீயோடி
கூறி யிமைப் பளவிற்[1] கோமன்னர் சேனையுடன்
ஆறுமுகனை யணைந்து போர் சொல்லுமென்றார்
ஆலால மென்ன அசுரர் சிலரோடி
வேலா யுதற்கு[2] விளம்பினர் காணம்மானை
காவாலி[3] பெற்றெடுத்த கந்தவேளுங் கேட்டு
பூபாலர் தம்முடனே பொரப் பேர்ச்சம் மதித்து
தானைக் கடல் போதச் சாதச் சாத்தகி முன்போக
ஆனைத் திருமுகத்து ஐங்கரன் முன்போக
பொரு தேவர் சேனைப் புடையெங்குந் தான்போக
விரு த(ரின்) துவசம் விசும்பளப்ப
காரும் மாலிருங் கடலும் வருவதுபோல்
தேரு மாரியுந்திற கரிபரியும் முன்போக
போந்து பெரும்படையைப் பூபாலன் சேனையுடன்
சேந்து பொரவே சிலைவிடுத்தா[4] னம்மானை
கந்தன் படைவாரதனைக் கண்டு பலதேவன்
தந்தன் படையைச் சமன் முன்றணியாக்கி
போந்த பரிகரிதேர் போர்ப்புரவி காலாட்கள்
வேந்தருட னிறுத்தி விற்பிர வாளமென்னும்
யூபம் வகுத்து உகந்த கதிபோல
சாபமுற வளைத்துத் தாக்கினர் காணம்மானை
சகமன்னர் தன்படையும் தேவர் பெரும்படையும்
புகமன்னர் மாளப் பொருதனர் காணம்மானை
காதிற் பெரும் போதில் கந்தன் படையிலுள்ளோர்
பாதத் தினாலும் பலவாயுதத் தாலும்
சிந்தி வருதேவர் திருமால் பெரும்படையை

1. இமைப்பளவில் – ஒருநொடிப் பொழுதில். 2. வேலாயுதற்கு – வேலாயுதமுடைய முருகன். 3. காவாலி – கபாலிகராகிய சிவபிரான். 4. சிலைவிடுத்தான் – வில்லை வளைத்து அம்பெய்தினன்.

நிந்தித்துக் கொல்ல நிலைப்பட்ட தம்மானை
தன்படை சாயத் தரியாப் பலதேவன்
வன்படை யாக வலுதேவர் சேனையெல்லாம்
வெற்றிக் கனவயலுன் வெங்குருதி நீர்பாய்ச்சி
பற்றிக் கரிபரியள் பாரவுடல் சேருக
விண்கலக்க மெய்த விசாகன் படைநடுங்க
ஒண்கலப்பை யாலே உழுதனன் காணம்மானை
சங்குவண்ணன்[1] செல்லச் சரிந்தது தேவர்படை
பொங்கி யிமன்பெற்ற புயதேவ காலனென்பான்
ஊழித்தீ போல வுடன்று சாந்துதித்து
ஆதித் தேரோடி அரசர்படை நடுங்க
அத்தி[2]யும் தேரும் அடலவையுந் துவைத்து
மெத்திய போர் செய்திடாவிட்டது மன்னர்படை
தங்கள் படைசரிய[3] சாம்பவான் தானுமங்கே
செங்கையி னலோர் சிகரத்தைத் தான்பிடுங்கி
ஒத்தை அடைப்ப உரத்திற் புடைபட்டு
அத்திறத்தே காலன் அயர்ந்தா னதுகண்டு
காரி மாகாசத்தான் காய்களிற்றை மேல்கொண்டு
சீரிய சேனையுடன் செயிர்த்துச் சினமிகுத்து
துண்ணென் றுடையத் துரத்தியங்கே யுள்புகுந்து
கண்ணன் படையைக் கலக்கினன் காணம்மானை
தன்படை சாயத் தரியாப்[4] பலதேவன்
முன்படாங் தையுடனே முட்டியுத்தம் செய்தருளி
அய்யன் சிலபகழி[5] அங்ஙன் மேலெய்தார்தான்
மெய்யினுஞ் சாத்தாவை வேழமுடன் பிடித்து
பற்றிப்பெரிய பதினறு யோசனை போய்
வெற்றிக் களிற்றேடும் வீழ்ந்தனன் காணம்மானை
மாசாத்தன் சாயஅவன் மாதர் மகாகோடி

1. சங்குவண்ணன் - பலதேவன். 2. அத்தி – யானை. 3. படைசரிய – படைபுறங்காட்ட. 4. தரியா – மனந்தரிக்காத 5. சில பகழி – சில அம்புகள்.

பேசாப் பலமிதத்தி பேரிலனடி தானெய்தி
உற்ற கலையு முடையுமங்களைத் தெரிந்து
வெற்றரை யோடு மிகுபோர் செயக்கண்டு
பாற்ற கைகூசிப் படை புரண்டுநிற்பளவில்
காலக் கடல்வண்ணன் கலதியைத் தான்பார்த்து
சீர்ப்புற மன்றித் திருவலியா லின்றுமுதல்
ஊர்ப்புறம்பாக உரையென்று சாபமிட்டு
போக்கினன் மற்றவளும் போயஞ்சிப் போயொளிந்தாள்
வாக்கினு ரென்னை வருவிக்கி னேசுரந்தான்
சண்ட வுருவாய்ச்[1] சருவாங்க பூஷணனாய்
கண்ட விழிகள் கதிபெறத் தான்தோண்டி
பேருப் பெற்ற பெருச்சாளி மேலேற்றி
போர் வரை[2] யென்னப் பொருகளத்தில் புக்கதென்ன
அஞ்சு கரங்களிலு மாயுதங் கைப்பிடித்து
விஞ்சிய கொம்பொன்றால் வெம்படையைச் சிந்தித்து
ஏன்ற களத்தி லெதிர்நிற்பா ரன்றியிலே
காண் டறுத்துக் கணபதிதான் நிற்பளவில்
மாயவனுந் தன்னுடைய வான்படையோ டேதுசொன்னர்
ஆய பலகனியும் அப்பமுடன் பாலும்
கண்டு[3] கரும்பு கடலை பொரியத்தனையும்
கொண்டு படைத்துக்குவித்து நில்லு மென்றுரைத்தார்
தங்கோ னுரைத்த தெல்லாம் சாலவே கொண்டுவந்து
அங்கே மிகக் குவித்து ஆனைமுகனைத்[4] தொழுதார்
மெய்ப்போர் தவிர்ந்து விநயகனு முள்மகிழ்ந்து
இப்போரில் மன்னரில் யார்வென்றெண்ணுர் தோடற்றேன்
அப்பம் பழங்கனிகள் ஆனபிற நேர்ந்ததென்று
தொப்பைத் திருவயிற்றி லூதித் திருந்தாரம்மானை

---

1. சண்ட உருவாய் – பெரிய உருவாய். 2. போர்வரை – பொருகின்ற மலைபோல. 3. கண்டு – கற்கண்டு. 4. ஆனைமுகனை – யானை முகமுடைய விநாயகர்.

பின்னுங் குமரன் பெரும்பூத மப்பேயும்
மன்னர் படைமேல் வரவிட்டா ரம்மானை
ஆங்கது மன்றி யடர்ந்துபோர் செய்யலுமே
ஓங்கிய சேனை யுடைந்தது[1] காணம்மானை
பார்மன்னர் சாய பலபதத்தின் வெகுண்டு
போர்மன்று மெய்ப்படையும் பூதப் பெரும்படையும்
மார் நடுங்கி வசங்கேட் டுடைந்தோட
மூண்டுங் கலப்பையால் மோதினன் காணம்மானை
அவ்வுரை தன்னை அறுமுகத்தோன் தான்கேட்டு
வெவ்விய சீற்றம் மிகவாய் மிகுந்தெழுந்து
சிற்கோல மேனியெல்லாம் சேமப்பணி யணிந்து
பொற்கோலங் கொண்டுபுகர் வாள்மருங் கணைந்து
பூணிபிறந் தணிந்து போர்வில்லை நாணேற்றி
சேணி வெளியடங்கத் தேவர் புடைசூழ
கொற்றத் திருமேனி குங்குமத்தின் சோதிவிட
கற்றைக் கவரிக் கவின்போலக் காலசைப்ப
மாமலை யொத்த மத்தகத்தின்[2] மேல்கொண்டு
தாமன் பெரும்படை மேல்தாக்கினன் காணம்மானை
மன்னர் படையு மயில்வாகனன்[3] படையும்
துன்னும் பெரும்போர் துடங்கினர் காணம்மானை
தண்டு முசலமசக்காம செஞ்சாக த்தாள்
கண்டையங் கோந்தங் கணையும் வாள்கையும்
ஒவ்வொருவர் விட்டெறிய ஒவ்வொருவர் பட்டுவிழ[4]
அவ்விய மன்னர்போருஞ் சரங்க ளுண்டாட
எங்கு மாகாச மெரிந்தது காணம்மானை
கன்னிப் பெருப்போரில் கார்த்திகேயன் முனிந்து
வென்றிச்செருக் களிற்றை வேந்தர்படை குலுக்கி
உற்ற பரியும் வாவும் உயர்தேரும்

---

1. உடைந்தது - புறமுதுகிட்டுத் தோற்றோடியது. 2. மத்தகத்தின் - யானையின். 3. மயில்வாகனன் - மயிலை வாகனமாகவுடைய முருகன். 4. பட்டுவிழ - இறந்துபட்டுக் கீழேவிழ.

துற்ற படையும் துலையத்து வைப்புற்று
சத்திய சாத்தகியும் சாம்புவனு முரக்கிரனும்
எத்திசையில் பேரும் எறிந்தோடவே தூற்றி
ஏற்றுப் பொருதவரை எங்குமெடுத் தெறிந்து
மாற்றும் படையை மறுக்கஞ்செயக் கண்டு
அய்யன் பலதேவன் அஞ்சலெனக் கையமர்த்தி
தையலுமை செய்யத் தான்தடுத்தா னம்மானை
அக்குமர னேய அசோகத்தைத் தன்னுடைய
மிக்க கணையால் விரைவினறுத் தருளி
செவ்வேள் தெரிந்தே தெய்வக் கொடுங்கணைகள்
அவ்வவை யெல்லா மவையாலறுத் தொழிந்தான்
(மிக்க) சரத்[1] தாலு மெங்குமெரிந்தது காண்
ஒருவாச தத்தை ஒருவாரறுத் திடவே
இருவாசத் தாலு மெங்குமெரிந்தது காண்
பன்னிரு தோளான் பலதேவன் தன்மேலே
தன்னுடை ஆனைதனைத் தூண்டினன் தூண்டலுமே
கைக் கலப்பையாலே களிறுதனைத் தடுத்தான்
மிக்க படைத்தெழினி விட்டுணுவுங் கேட்டருளி
பாலன்ன மேனிப் பலதேவனைத் தடுத்து
வேலா யுதனோடு மிக்கயானே பொருது
சூட்சியால் வெல்வ தல்லாற் றேருனவனென்று
ஆட்சியாய் மன்னருடை ஆனபடையுங் கூட
நேமிப் (படை[2] யானை) நெய்ய நாணறிந்து
பூமித் தலைபணிப்ப பொற்றேர் தனிலேறி
துண்ணென்று சென்று துவசம்[3] விசும்பளப்ப
அண்ண னுக்காக அறுமுகன் மேற்றுக்கினன்காண்
பூபதி மாயோனைப் புத்தேளிர் சூழ்ந்துபோர்
தாபத[4] ரெல்லோரும் சண்முகனோ டேபொருதார்
மாலோன் பொருதழிக்க வானோர் மடித்துடைந்து

1. சரம் – அம்பு. 2. நேமிப்படை – சக்கராயுதம், 3. துவசம் – கொடி. 4. தாபதர் – முனிவர்,

வேலோன் பொருதழிக்க மேதினியோர் வீழ்ந்தடைந்தார்
கங்கைத் திருமகனுங் கஞ்சமலர்க் கண்ணனுமாய்
தங்களிலே சென்று தலைப்பெய்தா ரம்மானை
காமன்றன் மைத்துனனும் காயாமலர் மேனி
தாமனு மெய்த சலசாலந் தன்னாலே
அண்டர்கள் வேந்து அலைகடலேழுங் கொதித்து
எண்டிசை வெற்பு மெரிந்ததுகா ணம்மானை
போர் வேட்கையாகப் பொரும்போரில் போய்க்குமரன்
(கூர் ஆயுதமாம் சீர்) வேலதனைத் திருத்தி
செவ்வேலு மப்போது செங்கண் மாலெறிந்தான்
அவ்வேலு மாயன் அருநிறத்தில்[1] பாயாமல்
செல்லும் புரவியையும் தேரையும் பாகனையும்
வில்லையும் தேடிற்று மீண்டது காணம்மானை
பாய்ந்து கரியோன் பதாதியாம் பொற்பதத்தால்
சேந்து மதகளிற்றை செயிற்றனன் காணம்மானை
ஆனைபடக் கண்ட அறுமுகத்தோனும் வெகுண்டு
வானையுற வளர்ந்த மாமயில் மேலேறி
ஆகங் கதிர்விரிப்ப ஆறிருதோ ளிலங்க
ஆகு குழையில் அணிகுண்டல மிலங்க
நீலமலைக் குழுவில் நெருங்கின சூரியன்போல்
கோலந் திகழ்ந்திலங்கக் கோழிக்கொடி[2] யிலங்க
பன்னிரு கைக்கும் பலவாயுதம் பிடித்து
மின்னுரு வேலை விளங்கக் கறைதுடைத்து
மாதுமை மைந்தன் மயில்மேல் நின்றிலங்க
சீதரன் றானும் செறிகருடன் மேலேறி
பாதாம் புயமும் படர்ந்த திருமார்பும்
ஓதநீர் மெய்யும் உடுத்த பீதாம்பரமும்[3]
தண்டுளபத் தாரும் தருணமணி முடியும்

1. அருநிறத்தில் – அரிய மார்பில். 2. கோழிக் கொடி – முருகனது கோழிக்கொடி. 3. பீதாம்பரம் – பட்டாடை.

புண்டரீகக் கண்ணனும் பொழிந்து திகழ்ந்திலங்க
பங்கயச் செங்கையிற் பஞ்சாயுதம் பிடித்து
துங்கமணிச் சங்கைத்துண் ணென்றுதான் தொனித்து[1]
மீளிய பொன்மலைமேல் நின்றகரு ஞாயிறுபோல்
வாளின் முனைதிருத்தி வான்கருடன் மீதுநின்றான்
இவ்வகை நின்று இருவோரு மென்றுகொண்டு
கவ்வை யுடனே கலந்து பொருதனர்காண்
வானிடு வில்போன்ற வன்சிலையைக் கால்வளைத்து
கோனுடை வில்பகழி[2] கோத்தங்கே யார்த்தலுமே
எட்டுத் திசையுமிடருற் றிருந்தனர் காண்
அட்ட கேசமு மாண்டனன் காணவ்விடத்தில்
காற்று மியங்காது காய்கதிருங் காயாது
கூற்று மணுக் குலைந்தகன்ற தம்மானை
வானகத்தும் விண்ணகத்தும் மற்றெட்டுத் திக்கற்றும்
கானகத்தில் சூழ்ந்த கடலின் புடைய[3]கத்தும்
அங்கங்கே நின்றார்கள் அங்கங்கே காண்பதற்கு
எங்கெங்குந் தாங்களாய் இயன்றுபோர் செய்தார்காண்
வெற்றி மயிலும் விளங்கிய புள்ளரசும்[4]
ஒற்ற வலமிடமென் றோய்ந்திலார் வானோரும்
சமர் முகத்தில் சரிபோர் பொரக்கண்டு
குமரனை இப்பொழுதே கொல்லுவோ மென்றெண்ணி
செங்கண் நெடுமால் திருச்சக்கரம் வாங்க
அங்கண் முனிவன் அகத்திய னோடிவந்து
கண்ணன் தனைத்தொழுது கந்தவேள் தன்மேலே
எண்ணிறந்த சக்கரத்தை ஏவாமற்றான் தடுத்து
உன்தங்கை யானஉமைசிறு வன்உன் மருகன்
கந்தன் கடவுளோர் காவல கார்த்திகேயன்
பொங்கசுரர் கூற்றம்புராந் தகன்தன் குமரன்

---

1. தொனித்து – ஒலியெழச் செய்து. 2. வில் பகழி – வில்லும், அம்பும். 3. கடலின்புடை – கடலின் பக்கத்தே. 4. புள்ளரசு – பறவைகட்கரசனாகிய கருடன்.

இங்கிவனை வாதித் தெமையிகலஞ்[1] செய்யாதே
கொற்றத் திருமாலே கோவே எளிதாக
மற்றவனை வெல்லும் வகைசொல்லக் கேட்டருளாய்
கண்முகம் நெற்றிக் கடவுள் மணிப்புதல்வன்
சண்முகன் முன்னாள் சரவணத்தில் தான்தோன்றி
தந்தை கயிலைதனை நோக்கிப் போகலுமே
கந்தன் வலியைக் கமலத்தோன்[2] கண்டருளி
ஓர்மந்திரம் விதித்தான் னுற்றந்த மந்திரத்தை
ஆர்மந்திரித் தாலுமப்போது சித்திரம் போல்
நிற்பன் குமரவேள் நீங்காமல் வெற்றிகொண்டு
வெற்பன்ன தோளாய் விதியிதுவே யென்றுரைத்தான்
மாமந்திரந் தன்னை மாயனுக் குச்சரித்து
பூமைந்தன் தந்தைமுனி போயினன் காணம்மானை
மாயோன் சேதவொழிந்து மற்றந்த மந்திரத்தை
சேயோன்[3] முன்னின்று சேவித்தான் சேவித்தலுமே
சேந்தா னுணர்வழிந்து சித்திரம்போல் நிற்றலுமே
வேந்தர் புடைசூழ வெற்றி முரசதிர
தாக்கும் பெரும்போரைச் சண்முகனை வென்றவன்றான்
காக்கிணன் வாசல் கடந்து சென்றாரம்மானை
துங்க நெடுமாலும் சூழ்ந்து திசையனைத்தும்
சிங்க நாதத்தாலே செவிப்படுத்தி நின்றான்
பொங்கோத வண்ணன் பொருதபடிக் கண்டுநின்றான்
அங்கோடி வாணர்க் கறிவித்தா ரம்மானை
அக்கினியைப் போர்வென்று அறுமுகனையும் பொருது
மெக்கினிய மேனியாள் வாராளெனக் கேட்டு
வாண னுரைப்பான் மயிலூர்தி சேவகங்கள்
காணிலு மிவ்வளவோ கண்டதென வுரைத்து
வந்த மனிதர் மடியப் பொருவதர்க்கு
சுந்தரிக்குச் சொல்லுமென்று தூதன்றனை விடுத்தான்

---

1. இகலம் – மாறுபாடு. 2. கமலத்தோன் – தாமரையில் தோன்றிய பிரமன். 3. சேயோன் – முருகன்.

அன்னார் கடிந்தோடி யந்தரி[1] தன்னுடனே
சொன்னார்கள் போருக்குத் துர்க்கையுஞ் சம்மதித்து
பொன்னுடை யாடை பொருந்தப் புனைந்தருளி
மின்னிடை வீக்கிவியன் கலங்கள்[2] தானணிந்து
தண்டு முசலம்சாசங்கு சக்கரம் வாள்
மிண்டு திருச்சூலம் வேலுமுறப் பிடித்து
வம்பருக் கூந்தல் முடித்துமவுலி வைத்து
அம்பருத் தூணி யழகாய்ப்புறத் தணிந்து
கொங்கைக்குக் கச்சணிந்து கோதைமுன் கைக்கணிந்து
சிங்கப்பெருந் துவசஞ்சென்ற மதில்நின் றோங்க
போருக் கமைந்தும் பொருகரியின் மேலேறி
சீருற் றிரண்டு செழுங்கவரி காலசைப்ப
எட்டுக் கரத்து மெழிலாபரண மணிந்து
மட்டுத் தெரியும் வடவை[3] போல் கண்விழித்து
பாந்துடன் ரூர்க்கும் பரிகரிதேர் மன்னர்படை
சாந்துடைந் தோடும்வகை தாக்கினன் காணம்மானை
விந்தைவந்து தாக்கலுமே வேந்தர்படை யத்தனையும்
சிந்தை யஞ்சிநெஞ்சந்திடுக் கெண்ணறப் பயந்து
கன்னித் திருவுருவைக் கண்டுமிகக் கலங்கி
துன்னி யுடைந்தோடிச் சூதனன் பின்னொதுங்கி
அம்மாய வனும்அடைக் கலம்புக் கேவிழுந்தார்
எம்மானு மஞ்சலஞ்ச லென்றவரைக் கையமர்த்தி
தென்புள் ளுறையுஞ் செழுந்துங்கச் சீதரனும்
வன்புள் ளினுடைய வாகுவின்[4] மேலேறி
மூதண் டண்ட முகமே செவிடுபட
கோதண்ட மென்னுங் கொடுஞ்சிலையை நாணெறிந்து
ஆமோதம் போல்வந்த சுரேசுரி மேலே
தாமோதர னுந்தலைப் பெய்தா ரம்மானை

---

1. அந்தரி – பார்வதி தேவி. 2. வியன் கலங்கள் – சிறந்த அணிகள். 3. வடவை – வடவாமுகாக்கினி 4. வாகுவின் – தோளின்.

போர்வந்த மாயவனைப் போர்மகளும் பார்த்துரைப்பாள்
நாம்வந்த சேனைதனில் நல்லாட்கள் தன்னலத்தால்
பாகவனை வேலவனைப் பற்றாமல் வென்றுவந்த
சேவுகங் களிப்போ தேயும் திருமாலே
என்று ளதுகேட்டு யிறைபவனு மேதுசொல்வான்
நின்றே யென்முன்னே நீயென்று ரம்மானை
என்னத் திரியாதிவளும் எரி விழித்து[1]
துன்னச் சரமாரி தூவினள் காணம்மானை
ஏறும் பெருங்கணையை எத்திசையுந் தான்விட்டு
வீறும் பெருஞ் சமரினை விளைத்தலுமே
செங்கண் சிவக்கத் திருமால் வெகுண்டெழுந்து
அங்கவ ளெய்த அடுசரங்க ளத்தனையும்
தன்சரத்தால் மாற்றி சயமகள் தன்னுடல்மேல்
செஞ்சரம் மாரி செலுத்தினன் காணம்மானை
ஒன்றொருவ ரெய்ப வுடனொருவர் தான்மாற்றி
துன்று பெரும்போர் தொடங்கினர் காணம்மானை
ஏதித் திருமாலு மிந்திரையுந் தங்களிலே
சீதத்தீயை விட்டெரியச் செய்யுஞ்செரு முனையில்
எவ்வாறியங்கி மாலெவ் வாயும் விடினும்
அவ்வாறிதைத் தவளு மவ்வாயுதம் விடுவள்
தொன்மைப் பகவதி[2]யும் சூழ்ந்து கருடனுடன்
வன்மத்தி லுணர மணிச்சூல மொன்றெறிந்து
சேந்திய மார்பத் திருமால் திருமார்பில்
ஏந்திய விரல்கொண் டெரிசரங்க ளெய்தார்கள்
செந்திருவின் கேள்வனுக்காய் சென்று படைத்தலைவர்
சுந்தரியைச் சூழ்ந்து சொரிந்தார் சரமாரி
தேம்பாது நின்று திரிபுரை[3]யுங் கண்சிவந்து
சாம்புவனை ஈடழித்து சாத்தகியை யுடல்கலக்கி

---

1. எரிவிழித்து - தீப்போல் சிவக்க விழித்து. 2. பகவதி - பார்வதி, உமையம்மை. 3. திரிபுரை - உமாதேவி.

ஓங்கி வாசுதேவன் உக்கிரனையுந் துரத்தி
தேங்கு கடல்படையைத் திக்கெங்கும் சிந்துவித்து
அடருற்றசேனை அடித்த பெருங் கரத்தில்
திடரிற் குவித்த சிறுபூளை யினதுகாண
சேனைதனைத் துரத்திச் சீராமனை யடைந்து
வானந் தலைப்பணிப்ப வன்போர்தனை விளைத்தாள்
செம்பொற் றிருமாலைச் சேர்ந்து பொருவாள்மேல்
பைம்பொற் றேரோட்டிப் பலதேவன் வந்தடர்ந்தான்
ஆண்டகை முன்னே யவனை மிகப்பெய்தழித்து
பூண்ட கவசம் பொடியாகப் போக்குவித்து
மீண்டுந் திருமால்மேல் வெம்போர் பலவிளைத்தான்
வன்போர் துடங்க மணிவண்ணன்[1] கண்சிவந்து
தன்போர்வி லேவுஞ் சாற்றார் சயமகள்தான்
சிங்கக் கொடியும் சிலையும் நிலைப்படுத்தி
துங்கக் கலைமேல் சுடுகணையோ றாரெய்தி
வெய்ய கடுங்கணைகள் மேலுஞ் சிலவெய்தி
அய்ய னெதிர்நின்ற அந்தரியைப் பார்த்துநின்றான்
போன பழியஞ்சிப் பிடித்து நின்றேனல்லாது
வீண் பழியிலுன்னை விடேனோ வெனக்கேட்க
சோமோதைய முகத்துத் துர்க்கையு மேதுசொல்வாள்
அபா மதுள்ளபடி அப்படியே தப்பாது
புக்கிற தாடகையும் பூதனையு முன்னுடைய
கைக்கெளிய ரானாமேல கண்டார் பழியுமில்லை
உன்னாற் குலையுண்ணார் ஒண்டொடியும் வந்தெரித்தாள்
அன்னாநீ யென்பழிக்கு அஞ்சுவை காண்பென்றுரைத்தான்
மண்ணடுங்க[2] விண்ணடுங்க மன்னரும் வான்படையும்
உண்ணடுங்க அம்பா னுலகெல்லா மூடுவித்தாள்
ஓர்கை சிலைகுளிக்க[3] ஓர்கை வளைஉதைக்க
ஓர்கை மலைபறிக்க ஓர்கை வளைமிதிக்க

---

1. மணிவண்ணன் - கண்ணன். 2. மண்ணடுங்க – மன்னவர் அஞ்ச. 3. சிலைகுனிக்க – வில்லை வலைக்க.

ஓர்கை கதிர்வாள் ஒளிபிறத்தான் சுழற்ற
ஓர்கை மணிச்சங் கொலிக்க வுலகதிர
சத்திகஞ் சங்கரர்க்குந் தராதலங்களும் நடுங்க
எத்திக்கும் நின்று இகல்பொருதா[1] ளம்மானை
போர் வானமாகப் போர்கண்டு பொன்னெடுமால்
கூர்வாளா லின்றிவளைக் கொல்வோ மெனப்புகன்று
அஞ்சா யுதத்தில் ( அருஞ்சமத் திற்கேற்ற )
மிஞ்சாயல் வாளை விதித்தான் விதித்தலுமே
துண்ணென வந்து துருவாச மாவிருஷி
கண்ணனைப் போற்றிக் கதிர்வாள் தனைவிலக்கி
செவ் வியல்மேனித் திருமாலென் றறிந்த
வல்லியல் துர்க்கை வரலாறு கேட்டருளாய்
முந்நீர்[2] மிகவா மூவுலகு மண்டியநாள்
அந்நீர் நிலைநிறுத்த ஆதிபரா பரனும்
தோன்றுவித்தோர் சந்திரனைத் துர்க்கையென்று பேராக்கி
மூன்று முதற்த முதல்வியா யேதுசெய்தாள்
ஆளுங் கடலை அன்றுபடக் குடித்து
ஏழு கடலா யியற்றின ளிங்கிவள் தான்
ஆதி முதல் காணஅறவும் வலியவன் காண்
இவ்வாளிவன் மேல்எரியப் போறாய் கணடாய்
மெய்வாய் பகவதியை வெல்லும்வகை கேளாய்
ஆதிசதா சிவன் றானன்றிட்ட தோர்சாபம்
சாதிமணி நிறமாஞ் சரசி பென்றோர்ருபம்
அவ்வுருவைக் கண்டளவி லயர்ந்து நிற்பனவ்வளவில்
இவ்விவள் வாசல் கடந்தேகலா மென்றுரைத்து
சோரா முனிவன் துருவாசன் னேகியபின்
சீராமன் தானுந் திட்டித்தங் கவ்வுருவை
கந்தப் பகவதி கண்காண நிற்கலுமே

---

1. இகல்பொருதாள் - பகைவரோடு போர் செய்தாள்.
2. முந்நீர் - கடல். (ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர் ஆகிய முந்நீர் கொண்டது.

விந்தை[1]யுங் கண்டு வெருண்டடங்[2]ககல நின்றார்
செவ்வாய் மணிவண்ணன் சேனைக் கடலுடனே
அவ்வாசலையுங் கண்டு சென்று னம்மானை
வார் முரசார்ப்ப வளையார்க்கப்[3] போகின்ற
கார்முக மெய்யானைக் கண்டார் சிலரோடி

மந்தரம் போல் நின்ற வாணனைக் கைதொழுது
அந்தரியைப் போவென்றவள் வாசலுங் கடந்து
மேன்மேல் முரசதிர வெங்கூற்றும்[4] போல் கொதித்து
உன்மேலே போகின்ற உற்றது செய்யென்றுரைத்தார்
வண்டாடும் பூந்தொங்கல்[5] வாணனு மேதுசொல்வான்

பெண்டாட்டி போர்வெல்லப்பெற்ற திங்கே யாச்சு
அத்தன் பரமனரன் சங்கரன மலன்
நித்த நிமலன் நித்தம் செயு நாளில்
ஓராயிரங் காற்றால் ஓராயிர முகமாய்
சீரார் குடமுழவு சேவித்தேன் காற்கிசைய

ஆங்கது கண்டு அரனென்மேல் அன்பாகி
ஓங்கு செருவுக் கோரிருவர் தந்திருப்பன்
தீச்செல்ல முப்புரைத்த சேற்றிட்ட சேவுகர்க்கு
போய்ச் சொல்லு தானே போந்தழிப்பா ரென்றுரைத்தான்
அன்னோன் விடுப்ப அவனுங் கயிலையிற் போய்

பன்னுகம் பூணும் பாம்பினையடி பணிந்து
வாசவனே கொன்றை மவுலியாய்[6] வாணனுக்கு
ஈசனே தேவரீ ரீய்ந்த பெருஞ் சாபத்தால்
ஓர் மனத்துள் பாய் உறைவிருமை வாணன்
போர் மணித் தேரோடும் போய்ச் சொன்ன
னென்றுரைத்தான்

---

1. விந்தை - வியப்பு. 2. வெருண்டு - அஞ்சி 3. வளையார்க்க - சங்கு ஒலிக்க. 4. வெங்கூற்று - கொடிய இயமன். 5. பூந்தொங்கல் - பூக்களால் நிறைந்த மாலைகள். 6. கொன்றைமவுலியாய் - கொன்றை மாலை அணிந்தவனே.

அங்கவன் தானுரைக்க ஆமென் றதற்கிசைந்து
சங்கரரும் போர்க்குச் சம்மதிக்கத் தான்கண்டு
பொய்ச்செறிந்த நெஞ்சிற் புகுந்தறியாப் புண்ணியனை
வச்சிர வண்ணன் மலர்த்தாளுறப் பணிந்து
தேன்பொருத கொன்றை சிவநேயச் சேனையொடு
யான்பொருவே னென்று இறையை[1] விடைகொண்டு
பொன் மணிபூண்டு புனைகவசந் தானுமிட்டு
தன்படை தற்சூழ தமனியத் தேரேறி[2]
பக்கத்தில் சங்கனேதிப் பறபந்தி தான்சூழ
மிக்க சிலையேந்தி வெண்சாமரை யிரட்ட
ஆர்பாவ மீண்ட அழகேசுரன் தானும்
பாற்பாவு மாயன் படையுடனே தாக்கினன்காண்
தீரன் பலதேவன் சேனைமுன் தோன்றிநின்று
ஆரென்று கேட்டான் அழகேசுரன் றன்னை
மேலாந்த போதார்க்கும் விண்ணோர்க்குங் கண்ணனையாள்
காலாந்தக னுமையாள் காதலன் தனைக்கண்டாள்
அண்டர் புரத்தை[3] அனலாகவே நகைத்தோன்
பண்டாரச் சங்கரற்கும் பழவடியேன் காணென்றான்
சொன்ன மொழிகேட்டுச் சொல்வான் பலதேவன்
பன்னகமே பூண்பதுவும் பற்பமே பூசுவதும்
உண்பதுவு மோடே[4] உடையும் புலித்தோலே
பண்பனுக்கு நீநல்ல பண்டாரி காணென்றும்
மானச் சிலையால் வச்சிர வண்ணனுடை
சேனைப் பெருங்கடலைத் திக்கெங்கும் அச்சுறுத்தி
நீண்ட படைமுகத்தில் நின்று பலதேவன்
ஆண்டகைப்[5] போர்கண்டு அழகேசுரன் முனிந்து
சங்கு நிறத்தான் தனுவுந் தடந்தேரும்
துங்கக் கொடியும் துணியச் சரந்தொடுத்து

---

1. இறையை - தலைவனை. 2. தமனியத்தேர் - பொற்றேர். 3. அண்டர்புரம் - தேவருலகம். 4. உண்பதுவுமோடே - இரந்து உண்பது தலையோட்டால். 5. ஆண்டகை - பெருமைக்குரியோன்.

கன்றிக் கடல்படையைக் கட்டழித்துச் சொல்லலுமே
வென்றிப் பலதேவன் மீண்டும்வந் தென்றுகொண்டு
எத்தனையும் போகவெடுத் தெறிந்தா னம்மானை
கண்டார் வெருண்டோடிக் கண்ணுதலோ னுடனே
உண்டான சோதி உரைத்தா னுரைக்கலுமே
ஈசன் வெகுண்டு இமைப்பளவில்[1] சொல்லுமென்று
ஆசு வணிகளுடன் அட்ட வசுக்களையும்
பன்னிரு சூரியரும் பதினொ ருருத்திரரும்
கின்னரர்க் கிம்புருவர் கெந்துருவர் காத்துருவர்
மற்றுள்ள தேவரையும் வான்படைதன் னோடுபோய்
கொற்றவர் சேனையையுங் கோமன்னர் தங்களையும்
பாரப்போர் செய்து[2] படவடித்து வாருமென்று
சேரத்திரட்டி மிகச் செல்லென்று ரம்மானை
சங்கர னேவ சகலரும் தான்வெகுண்டு
செங்கண் நெடுமால்தன் சேனைமேல் மோதினன்காண்
கண்ட படைதான் கடல்போ லுடைந்தோட
அண்ணன் பலதேவன் அஞ்சலஞ்ச லென்றுகொண்டு
வெம்போர் விளைத்தான் மிகுசாம்பனும் பொருதான்
தன்போர் கதித்தடர்ந்தார் சத்திய சாத்தகிகள்
மற்று முள்ளபேரும் மதிசூதன் வாழ்வென்று
வெற்றிக் கடும்போர் விளைத்தார் காணம்மானை
வன்னிற்ற தண்டுளப மாயன் கடற்சேனை
உன்னிற்றுத் தாக்க உடைந்தது தேவர்படை
பட்டுப் படாத படையோடுந் தேவர்படை
எட்டுத் திசையு மியங்கினர் காணம்மானை
தேவர்படை யடைந்த சேதியெல்லாம் கண்டொருவன்
தாபமுட னோடிச் சாற்றினன் சங்கரற்கு[3]
நக்கனுங் கேட்டு நலிந்தவன் சேனையெல்லாம்
இக்கணந் தன்னிலினிக் கொல்ல வேணுமென்று

1. இமைப்பளவில் - கணப்பொழுதில். 2. பாரப்போர் செய்து - பெரும்போர் விளைத்து. 3. சங்கரற்கு - சிவபெருமானுக்கு.

பேய்ப் படையைக்கூட்டிப் பெருக்கவே வற்புறுத்தி
போய்ப் படையைப் பன்னுமென்று விட்டாரம்மானை
வள்ளுகிர்ப் பேயும்[1] வலியபசாசு களும்
நள்ளிருள் பெய்வதுபோல் நாலுதிக்கும் கைவளைத்து
விண்ணுற வேங்கிமிக் கொள்ளிகைப் பிடித்து
கண்ணன் பெரும்படைமேற் காதினன்[2] காணம்மானை
பலபத்திரன் படையும் பரமேசுரன் படையும்
அலகைப் படையும் மாபொருத தம்மானை
தாமனு முக்கிரனுஞ் சாம்புவனுஞ் சாத்தகியும்
மாமன்னர் தாமும் வசுதேவனு மடர்ந்து
பஞ்சாங்க வண்ணன் படையுமயன் படையும்
செஞ்சரங்களும் பூவும் தெண்டாயுதமும் செவ்வேலும்
கவ்வைப் பெறநூக்கி[3] கடல்வண்ணன் சேனையுடன்
ஒவ்வொரு வராகப் போயோடத் தொடர்ந்தார்கள்
பற்றாமல் வந்த பசாசுப் பெரும்படையை
சுற்றெல்லா மோடத் தொடர்ந்தனர் காணம்மானை
மட்டறவந்து வளர்ந்த பெரும்பேய்ப் படைதான்
தட்டழியக் கண்டு சமுத்திரசாத னென்பான்
ஓட்டி யுரைக்க உமைப்பாகன்[4] கேட்டருளி
தேடி ஒறுக்குஞ் சிந்தித்தா னம்மானை
ஊனே நெருப்புருவாய் போரிட்டுன் சுரத்தை
தானேதான் திட்டித்துச் சற்றியு மேற்றுவித்து
காற்றுக்குக் காற்றாய் கனலுக்குக் கருங்கனலாய்
கூற்றுக்குக் கூற்றாய் கொடியோர்கற் கொடிதாய்
கற்றிரீபர் சேனையெல்லாம் காய்ந்து பொடிபடுத்தி
சித்திரம் போல்வாவென்று செல்லவிட்டா ரம்மானை

---

1. வள்ளுகிர்ப்பேய் - நீண்ட நகங்களையுடைய பேய்கள்.
2. காதினன் – மோதிப் போரிட்டான். 3. நூக்கி – அழித்து.
4. உமைப்பாகன் – உமையொரு பாகனாகிய சிவபெருமான்.

கோபமே மெய்யாக கொடுமையே வல்லுயிர்ப்பாய்[1]
தாபமே தீமையாய் தறுகண்மையே நினைவாய்
விண்ணைப் புகைப்படுத்தி மேலுலகைத் தீப்படுத்தி
மண்ணைப் பொடிபடுத்தி வந்தது காணம்மானை
மிண்டி யெரிந்துவரும் வெற்புதனைக் கண்டு
கொண்டல் வண்ணன் சேனைக்[2] குலைந்தோடிப் போனதுகாண்
தப்பிப் படைய தலத்தாமன் படைத்தலைவர்
வெற்பைத் தடுத்து மிகப்பொருதா ரம்மானை
எல்லார் போல எதிரேவருஞ் சுரத்தை
செல்[3]லாரு மேனித் திருமாலுங் கண்டருளி
அவமதி யாதே அவரையெல்லாம் போர்விலக்கி
சிவமயமாம் வெற்பதனை தீர்க்கும்படி நினைந்து
சீதச் சுரத்தை திருமாலுந் திட்டித்து
ஆதி சுரத்தை அவியென்று யேவலுமே
எங்கும்பரந்து எழிலி[4]யாய் தண்ணளிவாய்
பொங்கு கடற்கும் புவிக்குங் குளிர்பரப்பி
சென்றது சீதசுரஞ் சென்றது கண்டெதிரே
நின்றது வானில் நிறைந்துட்டின சுரந்தான்
ஈசன் விடுத்து யெரிசுரத்தை யாரென்று
கேசவன் விட்டசரங் கேட்டது கேட்டலுமே
ஆமெனப் பரமனடி வேற்பானிங்கு வந்தேன்
தாமன் பெரும்படையைச் சங்கலிக்க வென்றுசொல்லி
நின்று குளிர்சுரத்தை நித்தன் விடுசுரந்தான்
இன்று நீயாரென் றியம்பா யெனவினவ
பூங்கமல வாவிசூழ் போற்றுவரை நாடாளும்
ஆங்கமலக் கண்ணனடி யேற்பனிங்கு வந்தேன்
பொங்கரவம்[5] பூண்டு புகர்க்குன்றம் மீதிருக்கும்

1. வல்லுயிர்ப்பாய் - கொடிய பெருமூச்சால். 2. கொண்டல் வண்ணன் சேனை – கண்ணனது படைகள். 3. செல் – மேகம், 4. எழிலி – மேகம், 5. பொங்கரவம் – சீற்றமிக்க பாம்பு.

சங்கரன் சேனை தன்னை சங்கரித்தா னென்று
ஒருவெற் புரைக்கவொரு வெற்புத்தான் வெகுண்டு
இரு வெற்புமாக யிகலிப்[1] பொருததுகாண்
ஒன்று நெருப்பெழுப்பி ஒன்றுமழை யெழுப்பும்
ஒன்று பொடியெழுப்பி ஒன்றதைச் சேறுசெய்யும்
ஒன்றுயர் வான்முகி லொன்றதின் மேலுமுறும்
ஒன்றஞ் செழுத்துரைக்கி லொன்றெட் டெழுத்துரைக்கும்
இவ்வாறென்று மிகலிப் பெரும் போரில்
மைவாழுங் கண்டன் வகுத்த கடுஞ்சுரத்தை
கீழ்ப்பட்டுடைந் தோடும் கிருஷ்ணன் விட்டசுரம்
மேற்பட் டிருந்ததனை வென்றது காணம்மானை
சுரந் தோற்றது கண்டுதுண்ணென்று சென்றொருவன்
புரந்தோற்ற வெண்ணகையோன் பொன்னடியிற் சொல்லுமே
நீரை முடித்தாடும் நிமலனு[2]மங் கவர்மேல்
ஆரை விடுத்தாலு மாவதில்லை யென்றுசொல்லி
தீய்ப்படு செங்கண் சிவந்து திரியம்பகன்தான்
போய்ப்படு போர்சம்மதித்து பொற்கோலந்தான் சமைந்தான்
வீசுகடல் கடைந்து வேலவாய் யாவாலே
வாசமலர்ச் சடையை வாகாயிருந்து கட்டி
துண்டப் பிறையுஞ் சுரநதி[3]யும் தான்கூட்டி
மண்டிக் குழையில் மணிக்குண்டலம் புனைந்து
துய்ய திருவரை[4]யிற் சுற்றிய கச்சினுள்ளே
வெய்யப் புலியிதனை மேன்மைபெறச் சாத்தி
கங்கணமும் காப்பும் கடற்றும முங்கலனும்
அங்கவை யெல்லா மாவலமைத் தருளி
அன்பர் விரும்பு மணியுத் திளங்கிஷத்தான்
இன்பக் கவசம் இயல்பாகவே புனைந்து

---

1. இகலி – மாறுபட்டு. 2. நிமலன் – மலம் அற்ற பெரியோன் (சிவன்) 3. சுரநதி – தேவ ஆறாகிய கங்கை. 4. திருவரை – அழகிய இடை.

பவளப் பொருப்பில் படிந்தமணி மலர்போல்
திவலத் திருநீற்றைச் செம்மேனியிற் புனைந்து
சங்கை யிருவர் தலைமாலை தான்புனைந்து
செங்கை மழுவும் திரிசூலமும் புனைந்து
வானோர் மலர்தூவ வல்லிடையை மேற்கொண்டு
ஏனோரும் போற்ற ரிஷபக் கொடியோங்கி
சிற்றரொரு பாலத் திறலியக்கர் தானொருபால்
இந்திரர் தேவரிருஷிகள் தானொரு பால்
சந்திர சூரியர்கள் தாரகைகள் தானொருபால்
சேமமுறப் புகுந்து திக்கெங்கும் சூழ்ந்துவர
சாமரைகள் வீசத் தவளக்குடை[1] நிழற்ற
என்னாகப் போகுதென்று எவ்வுலகு முள்நடுங்க
பின்னாக மென்னும் பெருவில்லு நாணெறிந்து
சென்றான் அரனுந் திருமால் பெரும்படைதான்
துன்று மலர்சொரிந்து தோத்திரம் செய்தேதொழுது
அம்பேரானு[2] மரியும் பொரு மளவும்
நம்போர் தவிருமென்று நாலுதிக்கும் நிற்பளவில்
மட்டுறு தண்டுளப மாயனு மவ்வளவில்
விட்டுணு ரூபம் வெளிப்பட்டு மேன்மையுடன்
சூரியர் தோற்றமென சோபமுடி புனைந்து
சீரிய பூணணிந்து செம்மணி மாலையிட்டு
கச்சை மருங்கில் கதிர்வாள் வலத்தணிந்து
பச்சைத் துழாய் புனைந்து பஞ்சாயுதம்பிடித்து
பொன்மலை போற்றுயர்ந்த புள்ளரசின்[3] மேலேறி
மின்வலி சக்கரத்தை மிக்ககறை துடைத்து
சாந்திருக்கும் பாற்று தடஞ்சிலையை நாணெறிந்து
அரன் திருக்கண் முன்னே அடர்ந்து சென்றானம்மானை
வான்பவளக் குன்றும்[4] மரகத மாமலையும்

---

1. தவளக்குடை – மணிகள் பதித்த வெண்கொற்றக் குடை.
2. அம்பேரான் – சிவன். 3. புள்ளரசு – பறவைகட்கரசனாகிய கருடன்.
4. பவளக் குன்று – பவளமலை.

தான்பொருத காட்சி போல் தாக்கினாரம்மானை
மிக்க பருவதத்தை வீழ்பனி மூடுகைபோல்
நக்கன் விடுசரத்தால் நாரணனை மூடுதலும்
பாற்கரன்[1] கண்ட பனிப்போலவையகல
காற்கடல் வண்ணன் கடிந்தான் காணம்மானை
செங்கனலீசன்[2] விடிலச்சென் மழையை மால்விடுவன்
சங்கரன் குன்றேறி யிறத்தாமனவரை யெறிவன்
அலம் பரமன்விடில் மதமால் விடுவன்
சூலம் விமலன் விடிலச்சுடராழி மால்விடுவன்
கப்பாண மாநக்கன் விடில்கைவேல் விடுங்கரியோன்
முக்கல மாதிவிடில் மூல முகிண்டுவிடும்
எந்தெந்த ஆயுதங்கள் ஈசன் செலுத்தகினும்
அந்தந்த ஆயுதங் கொண்டாய றுத்திடுவன்
இருவரு மிப்போர் இகலிப் பொருதமையால்
கருதரியா வானங் கனலெழுந்த தம்மானை
ஈசனும் மாலும் இகலிப் பொருகின்ற
ஓசைப் பதினாலுல கெல்லாம் பெற்றதுகாண்
அரியு மயனும்[3] அமரே பொரும்போது
பெரிய உலகும் பிழைப்புண்டோ அம்மானை
ஊழி யிறுதியென வுண்ணடுங்கிற் றெவ்வுலகும்
ஆழி[4] யலை மறைந்து அந்தகனும் கண்புதைத்தான்
மாத ருலகும் வளையாழிப் பேருலகும்
நாமருலகும் நடுநடுங்கி உள்ளு மிழ்ந்தார்
வெம் போர்துழனி[5] தன்னைவேதனுங் கேட்டோடிவந்து
அம்போருகக் கண்ணரியை அடி தொழுது
ஆதித் தனியுருவாம் அம்மூர்த்தி தன்னோடே
வாதித் தமராட மாலே மதியிலையோ
ஈசனும் நீதானும் மேக வுருவல்லாது

---

1. பாற்கரன் – சூரியன். 2. ஈசன் – சிவபெருமான்.
3. அரியுமயனும் – திருமாலும், பிரமனும். 4. ஆழி – கடல்.
5, துழனி – பெரும் ஒலி.

பேசி யிருவோரும் பேதமை வேறில்லைகாண்
உம்மில் பொருதாருமை விலக்கு வாருண்டோ
தம்மில் தெளிநீ தறுக்கிப் போர்செய்யாதே
சொல்லும் பொருளும் சுருதியுமாஞ் சோதிதனை
வெல்லு முபாயம் விளம்புகிறேன் கேட்டருளாய்
நீட்டிய பெருக்கத்தே நீள்வானிற் றேவர்களை
தாட்டிய வல்லசுரன் சாகாபோச னென்பான்
வாதிக்கச் சொல்லலுமே வானோர்க ளெல்லோரும்
ஆதிக் கடவுளுக்கு அபயம் புகுந்தார்கள்[1]
அய்யனும் வானோர்க் கபயம் கொடுத்தருளி
துய்ய பசுவடிவாய்ச் சூழ்ந்திங்கே நில்லுமென்றார்
வாமனு மாயவனும் மாகயிலை வாடத்தில்
பரமன் பணியாற் பசுவாகி நிற்றலுமே
வேகம் மிகவாகி விண்ணோரை விடுவிக்க
சாகா போசனுந் தானுமொரு பசுவாய்
நின்றதங் குள்ளறிந்து நிமலன் தன்னுடைய
வென்றிகொள் மூவிலைவேல்[2] விட்டான் விடுதலுமே
எப்பசுவுங் கொல்லாம லீயுற வல்லசுரன்
அப்பசுவைக் கொன்று அன்பால் வருதலுமே
பட்டசுரர் வீழப் பசுவான தேவரெல்லாம்
இட்ட முதவா யீசனைப் போய்த்தொழுது
எம்மைப் பசுவாக்கி எம்பகையைத் தீர்த்ததனால்
உம்மைப் பசுபதி[3] யென் றோது முலகிலுள்ளோர்
தானவர்கள் செய்யும் தவங்கண்டு தானவர்க்கு
ஆனவரங் கொடுக்கி லாதியே வேறன்றி
என்னிடத்தே யுண்டு யான்தக்க கேளென்று
துன்னிய மாயனுக்குச் சொல்லி யுபதேசித்து
செம்மை மலரோனுஞ் சென்றான் திருமாலும்
அம்மந்திர மபிமந்திரத்தானை வெற்றி கொள்

1. அபயம் புகுதல் – சரணடைதல். 2. மூவிலைவேல் – முத்தலைச் சூலம், 3. பசுபதி – பசுக்கட்குத் தலைவன் (காரணக்குறி)

ளென்று வியன் மோக அத்திரத்தை
பற்றியான் மேல் படர்ந்தெய்தா னம்மானை
அவ்வாத் திரத்தால் அரனுஞ் செருவழிந்து
இவ்வா றியங்கா திருந்தனன் காணம்மானை
மாலெய்த பாண மயக்க மயக்குண்டு
நீலமிடற் றண்ணல்[1] நின்றனன் காணம்மானை
ஈசனசந்து நிற்க ஈசன்றன் காசினல்
வாசல் கடந்துசென்றான் மாதவனு மம்மானை
மண்டு கடல்போலே மாசேனை சூழ்ந்துவர
கொண்டல் நிறத்தானும் கூற்றம்போல் சீற்றமுற்று
கைச்சங்கை வாயில்வைக்க காசினி[2]யு மேழுலகும்
அச்சங் குடிகொண் டயர்ந்தது காணம்மானை
வான் சங்கொலி கேட்டு(வலிமை யுறு)வான்படையும்
தான் சங்கொலி கேட்டுத்தளர்ந்தது காணம்மானை
வாசத் திரள்புயத்து வாணனைப் பார்த்துரைப்பான்
ஈசனுந் தோற்றானினி நமக்குப் போரினிமேல்
ஆசையெனு மாலுக் கறப்புகலோ மென்றுரைத்தான்
அணிவரச வாணன் அமத்தியனைத் தான்முனிந்து
மணிவாசல் காப்பவரோ மன்னர் படைவெல்வார்
சென்று பரன்றானேகி னாபோதிற் சென்றுழக்கி
வென்று வாவென் றெனவே வெகுண்டெழுந்தான்
வந்தவள் அமையந்த நல்லதே காலனென்பான்
தந்தைதனைத் தடுத்துதான் பணிந்தங் கேதுரைப்பான்
அங்கி அறுமுகத்தோன் அந்தரி சங்கரனும்
எங்குள்ள தேவர்களு மேவல்செய்ய வீற்றிருக்கும்
எந்தா யுனக்கு யிங்கிவ ரோனக்காச்சு
வந்த மனிதர்களை வான்படை தன்னுடனே
அற்பத்தில்[3] கொன்றுஅரை நொடியில் மீளுகிறேன்

---

1. நீலமிடற்றண்ணல் – நீலநிறக் கழுத்தினையுடைய சிவபிரான்
2. காசினி – மண்ணுலகம். 3. அற்பத்தில் – எளிமையில்.

வெற்பொத்த தோளாய் விடைதா வெனவுரைத்தான்
அன்றவன் சொல்ல அசுரர்கோன் உள்மகிழ்ந்து
வென்றென்ன வென்று விடைகொடுத்தா ரம்மானை
தார்வேட்ட போர்தடந்தோள்[1] தந்தைவிடை கொடுப்ப
போர்வேட்ட சிங்கம் பொற்றடந்தோள் மேற்கொண்டு
ஆனை பரிதேர் ஆட்படைஞர்[2] தற்சூழ
சேனை அடிவகுத்துச் சென்றனன் காணம்மானை
கடற்படை போகுவதைக் கண்டு பலதேவன்
அடைப்படையைக் கைவகுத்து ஆர்ப்பரவஞ் செய்துநின்றான்
தலைத்தூசி தன்னில்நின்ற சாம்புவன் தன்மேலே
மலைத் தேரசைவாணன் மகன்படையும் மன்னர்பெரும்படையும்
பாணன் திசைமறையப் பாய்ந்தெழுந்தா ரம்மானை
வென்றிப் படையிரண்டும் மேன்மேல் கறுப்பாக[3]
கன்றிப் பொருது களத்தவிந்தா ரம்மானை
பெருங்குதிரை யானைப்பிண மெல்லாந் தான்மிதந்து
மருங்கதிரப் பேரணு மண்டினர் காணம்மானை
கூறுங் கழுகும் கொடியுங் குழாநரியும்
யாறும் பசாசும் பசிகேட்ட தம்மானை
சத்திய சாத்தகியும் சாம்பனு முக்கிரனும்
எத்திசையும் நின்று இகலிஎதிர் பாய்ந்து
சேரப்படை பிடிக்கத் தேவகாலன் றனது
பாரப்படைத் தலைவர்[4] பட்டனர் காணம்மானை
மாயன் விடுத்த மயேசுர அத்திரத்தால்
தீயசுரர் சேனையெல்லாம் செத்தது காணம்மானை
சேரப் படவேதான் தேவகாலன் கொதித்து
பாரப் படையைப் பணைத்தண்டால்[5] பார்புரட்டி
செற்றிப் பொருதவரை திக்கெங்குஞ் சிந்தடித்து

---

1. தடந்தோள் – விசாலமான, அகன்றதோள். 2. ஆட்படைஞர் – ஆளாகிய படைவீரர் (காலாட்படை). 3. கறுப்பாக – சினங்கொண்டு. 4. பாரப்படைத் தலைவர் – பெரிய படைத் தளபதி. 5. பணைத் தண்டால் – பருத்த தண்டாயுதத்தால்.

பற்றிப் பொருதான் பலதேவன் தன்மேலே
வெளிப் பொருப்பில் மிகமுருக்குப் பூத்தாற்போல்
தெள்ளிய மேனி சிவந்து பலதேவன்
என்றில் வெகுளில் எழில்தேவ காலனைத்தான்
மன்றிலுடல் கிடக்க வானிலுயிர் நடக்க
பாஞ்சில் படியில் பலகுருதி யாறோட
நாஞ்சில் படை[1]யால் நலிந்து கொன்றாரம்மானை
ஆண்டவன் வீழ அவன்படை யத்தனையும்
மூண்டங் கிருஷ்ணனை மூடிப் பொருதலும்
கையப் படையாலே கலந்து பலதேவன்
அப்படையுங் கொன்றுஅலை கடலில் போகெறிந்தான்
மைந்தன் மடிந்ததுவும் வான்படை கெட்டதுவும்
உய்ந்தார் சிலரோடி ஓதினார் வாணனுக்கு
சென்றார் சொல்கேட்டு செவியில் சுருக்கென்ன
நின்றாரை யெல்லாம் நெருப்பெழத்தான் பார்த்து
பாரு மதிரப் படவரவு[2] முன்னுளைய
வீரச் சிங்கரசன் தன்னுவிதான் குதித்து
தற்கோல மேனியெல்லாந் தக்கஅணி அணிந்து
பொற்கோலங் கண்டு புகர்வாள்[3] மருங்கணைந்து
மால்வரையி னேங்கும் வயிரப்பணைக் கைகள்
போல நிறையும்வெற்றிப் பொருதடக்கை யாயிரத்தும்
தக்க படைக்கலங்கள் தாழ்வத் தான்பிடித்து
நக்கன் புரமெரிக்க நாட்செய்ததே போல
பாரத் தேரேறி பலபடையு முன்னேவி
வீரத் துவசம் விசும்புற நின்றாட
ஊழி யிறுதி ஒலிக்கின்ற பேரிடிபோல்
ஆழி பயங் கொண்டலைய முழவதிர
சேணாட[4] திரச் செக மதிர வெற்பதிர

---

1. நாஞ்சில் படை – கலப்பையாகிய கருவி, 2. படவரவு – படத்தினையுடைய ஆதிசேடன். 3. புகர்வாள் – புள்ளியையுடைய குருதிக் கறைபட்ட வாள், 4. சேணாடு – தூரத்தேயுள்ள நாடுகள்.

வாணாசுரன் போர்க்கு வந்தனர் காணம்மானை
சிங்கம் வரக்கண்ட சிந்துரத்தின்[1] கூட்டம்போல்
அங்கரசர் சேனை அரண்டபடி கண்டு
தேன்படு தண்டுளபச் சீராமனுந் தானும்
வான்படை தன்னை மருளாமல்[2] கையமர்த்தி
மெய்க்காக வசமிட்டு மேல்க்கொண்டு வாகனமும்
கைக்காயுதம் பிடித்துக் காணுற்று நில்லுமென்று
அப்படைக் காகத் தண்ணனைத் தான்பணிந்து
மல்லார் புயநெடுமால் மகாவிஷ் ணுருவம்
எல்லாம் வெளிப்படுத்தி ஏக வுருவாகி[3]
பொன் மேரிரண்டும் பொருசிறகு பெற்றதென்ன
மென் மேலவந்த மிக்கெருடன் மேலேறி
கயச் செங்கைகளில் பஞ்சாயுதம் பிடித்து
சங்கை மிகமுழங்கித் தாக்கினன் வாணனுடன்
மாயன் தனைப்பார்த்து வாணாசுர னுரைப்பான்
நீயே யெனச்சாற்றி நினையாம லுட்புகுந்தாய்
வெய்ய வமர்தேடி வீடினை[4]யிப் போது
உய்ய வகைதேடி ஓடிப்பிழை யெனவே
அன்னானைப் பார்த்து அரங்கேசவ னுரைப்பான்
முன்னா யிருவோரும் மூண்ட பெருங்களத்தே
காய்கொண்ட பலவிடையார் கைகொண்டு சொல்வதல்லால்
வாய்கொண் டுரையார்கள் வல்லியோ ரென்றுரைத்தான்
அய்ய னுரைக்க அசுரர் மிக முனிந்து
வெய்ய கடுங்கணைகள் வீசினன் காணம்மானை
தாமனுந் தன்னுடைய சாரங்கம்[5] கையணைய
தீமனுஞ் செஞ்சரங்கள் சிந்தினன் காணம்மானை
காணுங் கடல்முழக்குங் கண்ணன் தடக்கைவில்
வாணன் கைவில்லும் மழை முழங்கு[6]மம்மானை

1. சிந்துரம் – யானை. 2. மருளாமல் – அஞ்சாமல். 3. ஏகவுருவாகி – ஒரே உருவாகத் தோன்றி. 4. வீடினை – அழிந்தாய். 5. சாரங்கம் – வில்லாயுதம். 6. மழை முழங்கும் – இடி முழக்கம் செய்யும்.

பொருவறச் சரத்தை ஒருவர் சரத்தா லறுக்க
இருவர் சரத்தாலு மெத்திசையும் வந்ததுகாண்
வாணன் கையாயிரமும் வன்போர் செயக் கண்டு
காணுங் கையாயிரமு மக்கண்ணனுக்குங் கூட்டி
அக்கைக்கு முண்டான ஆயுதங்க ளத்தனையும்
இக்கைக்கு முண்டாக்கி யென்றனன் காணம்மானை
மாயனும் வாணனுந் தான் வானகனுங் குதித்து
கைக்குத்தில் கைகுத்தும் காலேற்றில் கால்தடுத்தும்
மெய்க்கொக்க மெய்வளர்ந்தும்[1] வெற்புகழ்விட்டெறிந்தும்
வட்டத்தில் வட்டமிட்டும் மற்போரில் மற்பொருதும்
எட்டுத் திக்குந் திரிந்து யிங்கேனிலங்கநின்றும்
விண்ணுறில் விண்ணில்நின்றும் வேலை[2]யைச் சேறுசெய்தும்
மண்ணுறில் மண்ணினின்றும் மாய்கைக்கு மாய்கை[3] செய்தும்
காதியுங் கைகலந்தும் கைவிட்டு நீங்கிநின்று
ஆதியிடந் திரியில் அசுரன் வலந்திரிந்தும்
அரியிரண் டுற்றதென அமரரு மச்சமுற
எரியிரண் டென்ன முன்னின் றிருவோருமே பொருதால்
அலைகட்டு வேலையென்ன அன்னார் படையிரண்டும்
மலைகட்டி விட்டதென்ன வானமரர் கண்டுநின்றார்
சரிபோர் செயக்கண்டு தாமோதரன் முனிந்து
எரிபோல் விழித்து எதிர்ப்பார் செகுத்துநின்றும்[4]
இங்கின் றவனை யினிக் கொல்ல வேணுமென்று
செங்கையிற் சங்கை சிறபாரஞ் சென்னியற்றே
ஓங்கி யவன் மேலே ஓச்சினான் ஓச்சலுமே
ஆங்கது சென்று அசுரர்கோனை யடர்ந்து
மேகத்தி லோடுகின்ற வெள்ளிநிலாப் போலே
ஆகத்துக்[5] குள்ளோடி அடர்ந்து நுழைந்திடலும்

---

1. மெய் வளர்தல் – உடலைப் பெரிதாக ஆக்குதல். 2. வேலை – கடல். 3. மாய்கை – சூழ்ச்சி. 4. செகுத்து நின்று – கொன்று நின்று. 5. ஆகம் – மார்பு.

சற்று மசங்காமல் சாலப் போர் செய்திடவே
சொற்ற நெடுமாலும் கோட்டம் பெரிதாகி
மாலாயுதம் சிலவான சக்கர மொழிய
காலாயுதமும் நடத்தினன் காணம்மானை
தண்டுந் தனிவாளும் சங்கும் சுடுசரமும்
மிண்டி நெருங்கிடவும் வென்போர் செயக்கண்டு
தருச் சக்கரந் தன்னிற் சந்தமும் வீற்றிருக்கும்
திருச் சக்கரந் தன்னையும் செல்லப் பணித்தலுமே
ஆங்கதுவு மோடி அசுரர் விடும் படையை
தாங்காத முற்றதனைத் தாண்டிப் போர் செய்ததுகாண்
பஞ்சாயுதத்தைப் பணிந்து பணி யணியான்
செஞ்சாபம்[1] கால்வளைய தீய்க்கண் சிந்தினன்காண்
வருகின்ற சக்கரமும் மண்டி வளைந்து கொண்டு
பொருகின்ற வாணன் புயமலையை யொவ்வொன்றாய்
மாகத் தெழுந்த மலைக்கு வடு[2] வீழ்வது போல்
வேகித் தறுத்து விழவிட்டது காணம்மானை
அற்ற கரத்தை யறுத கரத்தா லசுரன்
பற்றி யரிமேல்பட வெறிந்தா ரம்மானை
எங்கோ தனை யெழு ஞாயிறு[3] போன்ற
வெங்கடையத்தால் விலக் கினன் காணம்மானை
அவ்வாறு கண்டு அசுரேசனு முனிந்து
கைவார் சிலையைக்[4] கடிதாகக் கால்வளைத்து
தெய்வக் கொடுங்கணைகள் சிந்தின னவ்வசுரன்
அவ்வவை தன்னை யவற்றா லறுத்தனன்காண்
போர் மன்னற்றன் பிறக்கின்ற வேளையத்தே
பார் மரத்தின் பணர்வெட்டிச் சாய்ப்பதுபோல்
தோள் வளையோடும் சுடுகனகப் பூணோடு
நீள்புய வாணன் நிறைபுயத்தை யீந்ததுகாண்

---

1. செஞ்சாபம் – செம்மையான வில். 2. வடு – களங்கம். 3. எழுஞாயிறு – கீழ்த்திசையில் தோன்றும் சூரியன். 4. கைவார் சிலையை – கையிலுள்ள நீண்ட வில்லை.

செற்றிப்[1]போர் செய்யுஞ் சிலகையை சிலகைகள்
பற்றிய ஆயுதத் தொடிற்றுப் பார்த்ததுகாண்
பூண்டவர் போர்செய்ய போர்காண வந்தவர்கள்
ஆண்ட தோரீசன் அயனோ டருள்புரிந்து
நண்புற்ற வாணனுக்கு நாமவாசல் காத்ததுவும்
பண்புற்ற வனேவ பாரப்போர் செய்ததுவும்
சேரஅவன் பேரிற் சிநேகத்தினா லல்லவோ
நாரணன் பால்போய் நமக்காக வாணனுடன்
மெய்யு முயிரும் மிகுதலையு மோரிரண்டும்
கையும் (பிறவுறுப்புங்) கற்பித்து வாவெனவே
மாற்றப் பசுபதி[2]யை வந்தித் தயனுரைப்பான்
சீற்றம் பெரிதவன்பால் செல்லப் பயப்படுவேன்
சேணாற்றரி பாரிலிரு வோருஞ் சொல்லிலுமை
காணிற் சிறந்தணிவன் காரியமுங் கைகூடும்
ஏற்றா னரனு மிழற்றின மேலேறி
சென்றா னயனோடுஞ்[3] செங்கண் மாலவ்வளவில்
இவணைய மானெகிழ்ந்து எருத்தின்மேல் பொருதுகின்ற
சிவனை யெதிர்கொள்ளச் செல்லுந் திருமாலை
பங்கயத் தாதி[4] பணிந்தான் பதமலரில்
சங்கரனு மாலுந் தழுவினார் தங்களிலே
நீண்டானும்[5] நிமலனும் நிற்கின்ற வேளையத்தே
ஆண்டான் வரவை அறிவித்தா னந்தகனும்
அத்தனையும் கேட்டு அரங்கேச னேதுரைப்பான்
இத்தனையும் வாராதே ஏற்கவே ஆள்விடுத்தால்
முற்றா முதல்வன் மொழிப்படி யரனையும்
பெற்றா னெனவே பிரசாதஞ் செய்பளவில்
கண்ணுற்ற வாணன் கரங்கள் தொளாயிரத்தில்

---

1. செற்றி — சினங்கொண்டு. 2. பசுபதி — சிவபெருமான். 3. அயனோடும் — பிரமனோடும். 4. பங்கயத் தாதி — தாமரையில் தோன்றிய முதல்வனாகிய பிரமன். 5. நீண்டானும், நிமலனும் — திருமாலும், சிவனும்.

தொண்ணூற் றெட்டுந்தான் துணிந்தது காணம்மானை
அம்மட்டில் மாயவனு மாயுதங்களை யழைத்து
சொம்மிட்டு வைத்துறையில் தோணி நின்றாரம்மானை
கஞ்சானனுங் கருவேல் பிறந் தாதவிழ்ந்து
பஞ்சா யுதத்தைப் பணிவிலக்கி நிற்பளவில்
அடக்கைத் திரளழிந்த அசுரனு மவ்வளவில்
தடக்கை[1] யிரண்டுந் தலையுந் தன்னுருயிரும்
சேதப் படாதே சிவனரு ளுண்டாகி
போதக் கணைபோய் புயல்வண்ணனைப் புகழ்ந்து
அச்சுதன் மைந்தன் அனுருத்திரன் தனையும்
கச்சிளங் கொங்கையணி கன்னியுமை தனையும்
செம்மணி முத்தின் திரளும் திரவியமும்
அம்மணியு மாயற் கடியுறையாக் கொடுத்து[2]
ஓராதே உன்னோடு யுத்தம் செய்தேனதைநீ
போராழி மாலே பொறுத்தருள வேணுமென்று
பாதந் தொழுது பலவிதமாகத் துதித்தார்
மாதவனும் பால் வண்ணனைப்[3] பார்த்துரைப்பான்
அல்லா திறத்தானை ஆயிரங்கை யுண்டானை
எல்லா மிடுக்க மிரண்டு கைக்குமுண்டாகி
துன்று மிருப்புத் துலையாத செல்வமுடன்
என்று மிருப்பாய் எனவே வரங்கொடுத்து
ஆங்கமல மேனி யமலனு மச்சுதனும்
பூங்குழல் வாணனைத் தான்போக விட்டாரம்மானை
அன்று னடந்தபின் ஆனமுனிவோர் சூழ
முன்னாய் முதல்தானாய் மூவுருவாய்[4] நின்றருளும்
பங்கயனு மாலும் பரமேசுரன் தானும்
தங்களிலே பேசிச் சகலமு முள்ளுணர்ந்தான்
கண்ணனு மவ்வளவில் கண்ணுதலோனைத் துதித்து

1. தடக்கை - அகன்ற கை. 2. அடியுறையாக் கொடுத்து - பாதகாணிக்கையாகக் கொடுத்து. 3. பால் வண்ணனை - பலராமனை. 4. மூவுருவாய் - அயன், அரன், அரி என்ற மூன்று உருவம்.

எண்ணு கயிலைக் கெழுந்தருள் கெனப்பணிந்து
பூங்கமல வேதாவும் போகவிடை கொடுத்து
வாங்கு கடற்படையும் மன்னருந் தற்சூழ
உத்தருத் திரனும் உழையு முடனாகக்
கற்றை மணிக்கவரி கன்னியர்கள் காலசைப்ப[1]
பைம்பொற்றேர் மேலேறிப் பல்லியங்களார்ப்[2] பெடுப்ப
செம்பொற் றிருமாலும் சென்றனன் காணம்மானை
சுற்று வரையும் சுரமும் பலகடந்து
பொற்றுவரை மூதூர் புகுந்திருந்தா ரம்மானை
வாணனுயித்தம் மகிழ்வுற்றுக் கேட்க வல்லார்
நீணிதியும்[3] சந்ததியும் நிச்சயம் உண்டாகி
மண்ணு மிகுத் தலத்தில் வந்தித்து வாழ்ந்திருந்து
எண்ணுஞ் சிவலோகம்[4] ஏற்றிடுவா ரம்மானை
வடிப்படை மாயோனும் வாணனுயுத்தந் தனக்கு
படைத்துணை வந்த பலநாட் டரசர்களை
அன்பாகப் பூரித்தவர்[5] பதிக்கே போகவிட்டு
இன்பாய்ச் செருக்கி இருந்தனன் காணம்மானை
நன்மை நிகழ நடக்கின்ற நாளையிலே
வன்மை பவுண்டரிக வாசுதேவ னென்பான்
மிண்டுத விசுடைய விசுவா மித்திரன் மகனை
கண்டு பிடித்திறுகக் கைக்குற்றந் தன்னைமிக
உன்தாதை செய்த தவமொன்றன்றி யென்றனக்கு
தந்தந்த மாமுனியால் தாரை யெனக்கிட்டுவித்தால்
நன்று படைத்திரளை நானுன்னை யல்லாது
கொன்றுவிடுவே னென்று கோபித்துப் போகவிட்டான்
மற்றைமுனி மகனும் வாதைப் பட்டோடிவந்து
தன்தந்தையைக் கண்டு தாளிற் பணிந்தழுது

1. காலசைப்ப – காற்றுண்டாக. 2. பல்லியங்கள் – பலவகை இசைக் கருவிகள். 3. நீணிதி – நீண்ட பெரிய செல்வம். 4. சிவலோகம் – சிவபதம். 5. பூரித்து – உபசரித்து அளித்தல்.

சீறிப்[1] பவுண்டரிகன் செய்த தெல்லாம் செப்பிடவே
வீறுமுனிவன் விசுவா மித்திரனு மேதுசொல்வான்
வாராப் பவுண்டரிக வாசுதேவன் வரவு
கேளாய் மகனே கிரேத யுகந்தனிலே
எல்லையிற் காட்சி யிரணிய னென்பானொருவன்
வல்லசுரர் வங்கிஷத் தோன் மாயவரமுடையோன்
தேவா சுரர்கள்[2] தினந் தோறு மேவல் செய்ய
மூவுலகுக்கும்[3] முதல்வனாய் வீற்றிருந்தான்
அன்னானுக் காற்றாது அயனு மமரர்களும்
முன்னானைக் காத்த முதல்வனுக் கொல்லென்றார்
பஞ்சாயுதனும் பிரிந்தங் கவர் களுக்காய்
நஞ்சா மிரணியனை நரசிங்கமாய் வதைத்தான்
மற்றவன் பெற்ற மகன் பிரகலாதன் தனக்கு
கொற்றத் திருமால் குதித்து வரங்கொடுத்து
உன்னா லமர் பொருது ஒருவனாய்ச் சாகாமல்
என்னால் தொலைந்து எழில்முத்தி பெற்றிருக்கும்
என்று வரமீந்து யெழில் சங்கு சக்கரமும்
அன்னவனுக் கீந்து அரிகேசவனும் போனான்
அன்னான் மாயோன் அய்ய[4] னிட்ட சாபத்தால்
மன்னர் குலத்துதித்து வான்புள்ளு வாகனமாய்
ஆழியுஞ் சங்குமுடனை ந்தாயுதம் பிடித்து
வாழும் பவுண்டரீக வாசுதேவ னெனவே
தன் பேருரைக்கத் தவசத்தியும் வலியுன்
அன்பேது மில்லை அவனுடைப்பேர் வேண்டா
தேவாகி நின்ற சிறி வாசு தேவனாய்
சாகா னொருவா சாகான் பிணையொன்று
மாமுனி தன்னுடைய மைந்தனுக்குச் சொல்வதனை
தீய முனியான சீறி நாரதன் கேட்டு

---

1. சீறி – முனிந்து 2. தேவாசுரர் – தேவர்களும், அசுரர்களும், 3. மூவுலகுக்கும் – சுவர்க்கம், மத்திமம், பாதளம் என்னும் மூன்றுலகங்கள், 4. அய்யன் – தலைவன் (திருமால்)

மண்டு புகழ்த் துவரை வாழ் வசுதேவனைத்தான்
கொண் டிவனையுங் கெடுக்க கொல்லுவிக்க வேணுமென்று
சிந்தையி லன்றி தெரிந்து சிவுக்காக
வந்து பவுண்டரிக வாசு தேவர்க் குரைப்பான்
மன்னு வுனைத்தான் வெளவுவான் போலொருவன்
உன்னுயுதம் பிடித்து ஓர்புள்ளின் மேலேறி
உட்காதே[1] தானுமொரு வாசுதேவ னென
வெட்காதே பேரிட்டு விண்ணு திருப்பானை
கண்டு தெரியாமல் காவலனே உன் பக்கல்
மண்டு விடாயோடே வந்தேனென மொழிந்தான்
கேட்டு முனிமொழியைக் கேட்ட பவுண்டரீகன்
வேட்டு விளைவளர்க்கும் வெம்முனியைப் பார்த்துரைப்பான்
பற்ருர்கள்[2] செய்யும் பரிபவங்கள்[3] கண்டாக்கால்
உற்ருரு முன்போ லுடன்பாரி யாரென்று
நன்றிபல வுரைத்து நாரதனைப் போகவிட்டு
வென்றி யரசரோ மிக்க படை யோடும்
மேவா அசுரர் விறற்சேனை முன்பணிந்து
தேவாகிய தேவர்கோ னுட னுரைப்பான்
உன்னைப் பணிந்திருந்தே னுற்றசுரர் கோமானே
என்னைப் பழித் தொருவன் என்போலிருந்தானும்
அங்கவன் சாதல் அவன்கையிற்ருன் சாதல்
இங்கிவை யல்லா தியானங் கிருப்பதில்லை
வாளசுரர்க் கெல்லா மறைபுகுந்தேன் வாருமென
நீளசுர ரெல்லாரும் நின்றவனைப் பார்த்துரைப்பார்
விற்ருனை மன்னு வெகுட்சியால்[4] நீயவனை
சற்ருக வென்றி தனியே போய்ச் சாகாதே
எங்குலத்தை யெல்லா மிடர்செய்தான் மற்றவன்தான்
அங்கவனைச் சூழ்ந்து அனைவோரு மாய்ப்பொருது
கொல்லிட வேணுமென்று கூடி யொருமையிட்டு[5]

1. உட்காது – பயப்படாது. 2. பற்ருர்கள் – பகைவர்கள். 3. பரிபவங்கள் – தீமைகள். 4. வெகுட்சியால் – சீற்றத்தால். 5. ஒருமையிட்டு – ஒன்ருகச் சேர்ந்து.

வல்லசுரர் சேனை மதித் தெழுந்த தம்மானை
சேனையுங் கைவகுத்துச் சென்றது காணம்மானை
அரசர் படையும் அசுரர் படையும்
திரைசேர் பெருங்கடல் போல் சென்றது காணம்மானை
பாரப் பவுண்டரீகன் பஞ்சாயுதம் பிடித்து
வீரத் துவசம்[1] வீசும் பளக்கச் சென்றனர்காண்
மாலை யணி புயத்து மலையப் போர்வேண்டி
வேலை யொரு புறமாய் விட்டிருந்தா னம்மானை
மிக்கோர்க்குச் (சார்பாய் வீற்றிருந்த) நாரதனும்
தொக் கோடி வந்து துவார பதி புகுந்து
முகுந்தனைப் போற்றி முனையப் பவுண்டரீகன்
புகுந்து விசேஷம் புகல லுற்றானம்மானை
உன்கைக் கொரு ஞாலுக் கொற்ற வுமை பெற்ற
தன்கையினா லர்ச்சித் தானும் பஞ்சாயுதனாய்
வான் பக்ஷி யொன்றேறி வாசுதேவ னெனவே
தான்பெற்ற பேராகிச் சங்குவளையும் பிடித்து
மன்னர் படையோடும் வல்லசுரர் சேனையொடும்
துன்ன நெருங்கி[2] தொடர்ந்துன்னை போர் வேட்டு
பவுண்டரீகத் தேசத்திற் பார்த்திபனா மற்றொருவன்
தவண்ட முரசதிரச் சாகாபோகத் திருந்தான்
உன்னடியேன் கண்டதனை உன்புக்கலோடி வந்தேன்
பொன்னடி யாயப் புகுந்தனன் காணம்மானை
சீராய சொல்லாற் செரிந்தபரி வுகைத்து
நாராயணனு மந்த நாரதனைப் போகவிட்டு
பாரப் படையும் படைத்தலைவர் தங்களையும்
சேரத் திரட்டிச் சிகரம்போல் தேரேறி
சத்திய சேனனுக்குச் சானித்தியம்[3] கொடுத்து
மெத்தப் பலதேவன் மிக்கோருடன்போத

---

1. வீரத்துவசம் – வெற்றியை நிலைநாட்டும் வீரக்கொடி. 2. துன்ன நெருங்கி – மிகுதியாக நெருங்கி. 3. சானித்தியம் – உயர்நிலை,

புட் கொடி[1] யாடப் பொருகரி மாத்தேர் சூழ
உட்கிடனுக ருலகந் தலை பணிப்ப
கார்வேட்ட மெய்யன் கனல்போல் கண்விழித்து
போர்வேட்ட கோளரி[2] போல் பொருதனன் காணம்மானை
கண்ணன் படைவரவு கண்டு பவுண்டரிகன்
துண்ணென்ன தன்னுடைய துணைச்சேனை[3] கைவகுத்து
பானுமதி[4] யும் பரந்து போருண் டதுபோல்
தானும் (விரைந்து) தாக்கினன் காணம்மானை
பரமன் படையும் பவுண்டரீகன் மாப்படையும்
சாவா நிலையாய்ப்பாறி தாக்கின்ற போர்க்களத்தே.
வேற்றலைய செருமலையப் பொருமலை யுற்றிடும்போல்
மிகுதல முட்கிட மதகரிகள் தலையிட்டதம்மானை
நகுபடை நடுவுட் கடல்திரை யேற்றுவதென்னுமிக
இகலிப் பொருகவெனப் பரி எதிர்த்ததம்மானை
அலை வற்றிட சுழல்மாருத மிடைபட்டனதெனவெல்லும்
சிலை பற்றிய மாதேர்கள் செலுத்ததம்மானை
தணி வற்றிடு விடியொத்தது சமானெனவீரர்கள்
அணி பற்றிய பரிசைத்திரள்[5] அடிபட்டதம்மானை
முனைவிற்கொடு சிலர்விட்டிட வெழவுச்சியி லெதிர்முட்டிட
கனை மெத்தவு மனவிட்டதுக் கனற்றையம்மானை
கொடியற்றன குடையற்றன குருகற்றன இடிபோலதிர
துடியற்றன மிடறற்றன தொடையற்றன தம்மானை
கதையற்றன சிலையற்றன கடகற்றன கனவராகனை
குதை யற்றன பேர்குகைப்படைக்குல மற்றதம்மானை
தலையற்றனர் குலையற்றனர் சரணற்றனர்[6] கனநீள்புய
மலையற்றனர் செருவிற்புலர் வசமற்ற தம்மானை
கரிபட்டன இரததிரள் கலைபட்டன கடிதாகிய

1. புட்கொடி – பறவையாகிய கருடக்கொடி அசைய. 2. கோளரி – பிற உயிர் கொள்ளும் சிங்கம். 3. துணைச்சேனை – பின்படை (உதவிப் படை) 4. பானுமதி – சூரிய சந்திரர். 5. பரிசைத்திரள் – கேடயக் கூட்டம். 6. சரணற்றனர் – பாதங்கள் இற்று வீழ்ந்தனர்.

பரிபட்டன செருவுற்றவர் பலர்பட்டன ரம்மானை
இருவர்க்கமு மிகலிப் போர்யிடிபட்டிடு முடல்வெற்புகள்
பொருகப் பொழி குருதிக்கட் புரளூற்றதம்மானை
வலியிப் பிணமலை மேற்றிட மகிழ்வுற்றனுவலியார்களை
நலியத் திசைதோறு மலகைகள்[1] நடமிட்டதம்மானை
துளவப்புயல் (பெரியோன்) தொடர்போர் வமராடினும்
அலிவற்றிட வசுரப்படை அடிபட்டன தம்மானை
பொன்படாத் தானை புனையும் புயல்வண்ணன்
தன்படைக் காற்றுமல் சாய்ந்த தசுரர்படை
முன்னின்ற சேனை முகஞ்செய்ய வாறுகண்டு
ஒண்ணின்ற போரணியும் வீரர்கள் தங்களையும்
சேரத் திரட்டி செறிந்த பவுண்டரீகன்
மூரிக் கடல்[2] போல மூரினன் காணம்மானை
வல்லசுரர் சேனை வளைந்து பொரக்கண்டு
செல்லனையான் சேனை திகைத்தது காணம்மானை
ஓங்க[3] லென வேயுரத் தேரிலுங் குதித்து
மொய்த் தெண்டிசை யனைத்தும் மூடுபடைக்கடலை
கைத்தண்டு கொண்டு கலக்கினன் காணம்மானை
ஆனையுந் தேரு மடர்பரியும் காலாளும்
சேனையுந் தண்டாற் சிதைத்துக் குழம்பாக்கி
எங்கும் வெருட்டி எதிர்ப்பாரு மன்றியிலே
சிங்கம் போலெங்குந் திரிந்தனன் காணம்மானை
பாரப் படையழிவைப்[4] பார்த்துப் பவுண்டரீகன்
வீரச் சிலையை மிகவெடி நாணெறிந்து
துடையிற் சுடுகணையாற் சூழ்ந்து புயல்வண்ணன்
படையைத் துரத்திப் படைத்தலைவரைச் சிதறி
தேக்கும் புகழ்சேரச் சிறுவாசு தேவனுடன்
தாக்கியவனுடனே தான்சில வார்த்தை சொல்வான்

---

1. அலகைகள் – பேய்கள். 2. மூரிக்கடல் – ஒலிக்கின்ற பெரிய கடல். 3. ஓங்கல் – மலை. 4. பாரப் படையழிவை – மிகுதியாகப் படைகள் அழிவதனை.

இத்தனை நாட்கள் என்னைப் பழித்திருந்தாய்
அத்தனைக் கப்போ தகப்பட்டா னென்னலுமே
மாயோ னெடுத்துரைப்பான் வாசுதேவா வுனது
ஆயா மிடுக்கை யறியா தங்கழித்தேன்
இப்போர் தவிர்ந்து யான்தோற்றுப் போகின்றேன்
மெய்ப்போருடையாய் விடுவையோ யென்றுரைத்தான்
ஓதுமொழி கேட்டு உரைப்பான் பவுண்டரீகன்
ஓதலனய் யென்னிடையுற்றிவ் வார்த்தை சொல்லாதே
மோதச்செருக் களத்தில் முன்னின்று சொன்னவுன்னை
காயப் படாதே களத்தில் கடுங்கணை[1] யால்
வீயப்படுத்தாதே[2] விட்டகன்று யென்று சொல்லி
திலகம்புய கண்ணிறைவன் மேலென்று கொண்டு
அலகம்பால் மூடவெய்து ஆர்ப்பரித்தா ரம்மானை
தேனுந்து தண்டுளபச் செல்வனுந் தீபக்கணையால்
வானுந் திசையும் மறந்தனன் காணம்மானை
முட்காங் கொந்தம் முசலம் முசும்பிண்டி
கட்பணம் நேமிகளை கதிர்வேல் கையம்பு
ஒன்றொருவர் விட்டகணை ஒன்றொருவர் தான்தடுப்ப
சென்றதிசை யனைத்துந் தீப்பாய்ந்த தம்மானை
அப்போ தரியை அகூரனடி வணங்கி
இப்போ திவனை எதிர்ப்பையாய் நாட்டாதே
சக்கரத்தை விட்டுத் தடாயா யெனுமளவில்
உக்கிரத்[3]தால் மாயோனு மொக்குமெனச் சம்மதித்து
பஞ்சாயுதத்தைப் பணியேவிப் பார்த்து நின்றார்
அஞ்சாயுதமும் அசுரர் படை யனைத்தும்
கொன்று தரிசறுத்துக் கோமன்னரைத் துணித்து
சென்று பவுண்டரீகன் சேனைப்படை யத்தனையும்
மாயத்துப் பவுண்டரீகன் வா வசுதேவன்றனையும்

---

1. கடுங்கணை – கொடிய அம்பு. 2. வீயப்படுத்தாது – கொல்லாது.
3. உக்கிரம் – சீற்றம்.

வியத் தலைதுணித்து மீண்டது காணம்மானை
அன்னனந் தலையை அறுத்தந்த சக்கரமும்
தன்னயகன் பதத்[1]தில் தான்வணங்கி நின்றதுகாண்
மன்னிடங் கொள்ளாமல் வந்து படையத்தனையும்
விண்ணிடை யேற்றுவித்து விரைமுடி சூடி
மந்திரத்தோள் மாயன் மணித்தேரை மேற்கொண்டு
கற்றிரீபர் சூழ கடற்படை தற்சூழ
பைம்பொன் முரசதிர பல்லாண் டிசைமுழங்க
செம்பொன் மதிள் துவரை சேர்ந்திருந்தானம்மானை
மின்னு சுடராழி வேந்தன் தமரோடும்
என்னிலமும் போற்ற யிருக்கின்ற நாளையிலே
போர்வேந்தர் வங்கிஷத்தில் போதப் பொலிவுடைய
தார்வேந்தன் சந்திர சக்கிரவாண னென்பான்
மாதவத்தாற் பெற்ற மகளரிவை சுந்தரியை
காதை வதுவை மணங்[2]காசி ராசற்களிக்க
பொங்கு மணவோலை போர்வேந்தர் பக்கலுக்கு[3]
எங்கு விடுப்பளவி லெய்தியவ னேவி
காளாபதி யுரைப்பாள் காவலனே யிவ்வோலை
ஆளுந் துவரைக் கசத்துவிட வேண்டாம்
செந்தாமரைக் கண் சிறுவாசு தேவனென்பான்
வந்தால் விதர்ப்பன் மனம்போலக் கலகம்வரும்
என்ன அவனு மிதுவே கருமமென்றான்
அன்னதை யெல்லா மறிந்தந்த நாரதனும்
தனித்திருந்தாள் வந்திறைஞ்சி நட்பார் புடைசூழ
இனிதிருந்தார் மாயவரை யேற்றி எடுத்துரைப்பான்
தாமனே சந்திர சக்கிர வாணனுட
மாமகள் பூமகளில் வாகுடையாள் தன்னையந்த
காசியிராசனுக்குக் கல்யாணம் செய்வது வாய்
பேசினன் கேட்டதனைப் பிந்தாமலோடி வந்தேன்

---

1. பதம் – திருவடி. 2. வதுவை மணம் – திருமணம் (ஒருபொருட் பன்மொழி) 3. பக்கலுக்கு – பக்கத்திற்கு.

செழுந்துளபப் பூணனே திட்டொன்றாச் சிந்துரத்தால்
எழுந்தருள் நீகடுக[1] வென்றனன் காணம்மானை
நன்பாரளந்தானும்[2] நாரத மாமுனி மேல்
அன்பா யிவ்வார்த்தை அறிந்துவந்து சொன்னவுன்னை
பூசிப்பே னென்றுவைத்துப் பூசித்துப் போகவிட்டு
தூசிப்படைக்குத் துடிசாற்று[3] மென்று சொன்னார்
வள்ளலுரைப் பளவில் மன்னவரும் வாள்படையும்
கொள்ளவருங் கடல்போல் கூடினன் காணம்மானை
செங்கண் நெடுமாலுந் தேரேறிச் சேனையுடன்
தொங்கல் நிழற்ற துடிகளிடி முழங்க
பூழிச் சுடர்மறைக்க போர்வாணன் தனைக்கண்டு
வாழுங் கபோதக மாமுனிவன் வந்துரைப்பான்
ஆசிலா மேனி யுருமைக் கொள்ளவரும்
காசிபிராசன் தோற்றம் கண்ணனே கேட்டருளாய்
சீதக்கடல் கடைந்து தெள்ளமுத முண்பதுவாய்
ஆதியமர ரோடும் அப்போது தான்கூடி
மந்தரமே மத்தாக வாசுகியே தாம்பாக[4]
சந்திரனே தூணாக தாழியு மாழ்கடலும்
சீராமராயன் திருமகள் தன் கேள்வன்
பேராமை யாகிப் பெருங்கடலி லுட்கிடப்ப[5]
மாலின் முதுகில் மணிமந்திரஞ் சூழல்
காலம் பலவாய்க் கடைந்தார் கடைதலுமே
கோலால மாகிக் கொழுங்கனலாய் மெய்தார்த்து
ஆலால நஞ்சம் அலைகடலில் தோன்றிடவே
துண்ணென்று நீங்கிச் சுரரு மசுரர்களும்
கண்ணுதல் வாழும் கயிலைக்கே சென்றடைந்தார்
அஞ்சலி யென்று அரனு மவர்களுக்காய்
ஆண்டங் கிருதினமு மாதி[6] விடை கொடுப்ப

---

1. கடுக – விரைந்து. 2. பாரளந்தான் – உலகை மூவடியால் அளந்த திருமால். 3. துடிசாற்றும் – பறை அறிவியுங்கள். 4. தாம்பாக – கயிறாக. 5. உட்கிடப்ப – கடலின் உள்ளே ஆமையாய் கிடக்க. 6. ஆதி – உலக முதல்வனாகிய நாரணன்.

மீண்டுங் கடைய விரையவரு மவ்வளவில்
ஓருரு மையால் ஓங்கல்[1] சுமக்கயிலே
பேருருவ மொன்றாகிப் பேராயிரத் தானும்
வாகோடுற நிமிர்ந்து வன்கைகள் ஆயிரத்தால்
கோகோவெனக் கடலைக் கோலிக் கடைதலுமே
அஞ்சாமல் வந்தங் கசுரரும் தேவர்களும்
பஞ்சாயுதனைப் பலமுகமாய்த் தான் துதித்து
கைக்கொக்கப் பற்றி கரியமால் தன்னுடனே
ஒக்கக் கடைந்தா ரொரு சத்துவமாக
பாரிய வாலப் பருமலை[2] யுட் கலக்க
வாரிகோ வென்று வயவாய் விடற்றலுமே
மெத்திய வானத்து வென்றார்கை போல
வெத்திசை யுற்ற மெறிந்தனன் காணம்மானை
கொற்றப் படாத கொம்பள வான்கொடியும்
செற்றக்கரை யெங்கும் சேர்ந்தது காணம்மானை
ஆமையும் அலவனும் மற்றுள் ளதுவும்
மாமணிச் சிப்பிகளு மண்டினன் காணம்மானை
வரையிற் பெரிதான மடையிற்[3] குலங்களெல்லாம்
திரையிற் பலகரையிற் சேர்ந்தது காணம்மானை
மாலமுது லெக்குன்ற மலையிடமர்ந்தான் சூழல்
கால்முறை ஓச்சிக் கடைகின்ற காலையிலே
கேட்டை விளைக்க கேதுற்ற வாகினியாய்
சேட்டை வெளிப்பட்டாள் தின்றவ்ரைச் செல்வையிலே
பேரா திருபுறமும் பின்னுங் கடையளவில்
சீரார் திருமறுவல் சீதநிலா[4] வரும்பி
மாதேவர் கைமுகிப்பம் சேற்ற மேனியுடன்
சீதேவி வந்துதித்து செங்கண்மால் மார்புறைந்தாள்
பின்னுங் கடைந்தார் பெருகப் பெருங்கடலில்

---

1. ஓங்கல் - மலை. 2. பருமலை - பெரிய மலை. 3. மடையிற் குலங்கள் - நித்திலக் குலங்கள். 4. சீதநிலா - குளிர்ந்த நிலவு.

மன்னு மணியும் மரகத வான்மணி[1]யும்
ஆவுங் கலனு மயிராபதக் களிறும்[2]
காவும் பலகோடி கன்னியரும் தோணினர்காண்
மீண்டா தரித்து விறுவிறெனதான் கடைந்தான்
ஆண்டாயிரஞ் சென்ற தவ்வளவில் கடலில்
வானவர்க்கு முப்பிறுதி வான்மருந் தானுகி
ஏனை யசுரரா யவர்க்கு மிருவினையாய்
தோயாத் துகிலு சுடர்க்கலனும் புனைந்து
சாயாமற் செவ்வேச முற்றிர மூலத்திருந்து
தெள்ளமுத மன்னர் சிலர்சூழத் தேசுடனே
ஒள்ளமுத கும்பம் உதித்தது காணம்மானை
உன்னி யமுதம் உதிக்க உடனுதித்த
கன்னியா ளொருத்தி காசியென்னும் பேருடையாள்
கோளறு காட்சி[3] குலையாது நீயுள்ள
மாளுவ ராசன் மனைவியாய் வீற்றிருந்தாள்
பன்னுளவள் வயிற்றில் அதிபலத்தோடும் பிறந்த
மின்னுர்சுடர் வல்லி மலரங்கன் மற்றிவன்பேர்
தேவரும் தானவரும் திண்புவியி லுள்ளோரும்
ஆவருங் கொல்லா அழியாவர முடையோன்
மூன்றுகமுத் துடையோன் மூவிரண்டு தோளுடையோன்
கொள்ள மலைபோல கொடியகண் ணுறுடையோன்
வெள்ளி மலைபோல மேவிய மெய்யுடையோன்
சக்கிரவாணன் மகள் தன்னை மணம்புணர
உக்கிரமாக வுடையறு படை யெடுத்தான்
மற்றவனு லுன்னை வலுசெய்ய வேணுமென்று
கொற்றவர் களெல்லாம் கூடிப் பறைந்திருந்தார்
கார்முகத்து மாலே காசினியிராசன் றன்னை

1. வான்மணி – சிறந்த விலைமதிப்புடைய மணிகள்
2. அயிராபதக் களிறு – இந்திரனது அயிராபதம் என்னும் யானை.
3. கோளறு காட்சி – குற்றமற்ற அறிவு

போர்முற்றும் வெல்ல போர்வேந்தர் மாட்டார்கள்
அஞ்சனமே பாயநீ அன்னான் வடிவுகொண்டு
வஞ்சனையாய் கொன்று மணஞ்செய்யாய் மானை[1] யென்று
சாற்றிய நிலையைத் தாமனை வற்புறுத்தி
போற்றி விடைகொண்டு போனான் கபோதகரும்
அந்நேரந் தன்னில் அணிவிதர்ப்ப ...மன்னன்
முன்னே தோற்றிட்ட முதுவேந்தர்[2] தாங்கூட்டி
அலைகாற்றுவர அரசாளு மாயனை என்று
கொலைகாசி ராசனால் கொல்லுவிக்க வேணுமென்று
சக்கிரவாணன் தன் தொலையா எழுதி
புக்கவரச ரெல்லாம் பொய்யோலையை[3] விடுத்தான்
ஓலை விடுத்த வுடனே அனைவோரும்
பாரில் மணிக்காசி மன்னனை வந்துகண்டு
காரியம் சொல்வதுபோல் காசி யிராசனுடனே
சீரியார் போலச் சிராசந்தன் ஏதுரைப்பான்
நிறை கற்பறியாத நீலவண்ணன் சூழ்ச்சியினால்
பிறகற்பலன் கொள்ளும் பெய்வளையைக் கொண்டதுபோல்
நீயேறனையாய் நிதிய வெட்குங் கன்னிதனை
மாயோன் விலக்குதற்காய் வாரானெனக் கேட்டேன்
தென்படாதே யென்று சிராசந்தன் வற்புறுத்தக்
கன்படாத் தீயுமிழ்த்தக் காசியிராசனு ரைப்பான்
ஏழைகாளுங் களைப்போலி யானு மெளியேனோ
வாழை வனத்துற்ற மற்றகேசம் போலே
களவாடு மாயனை[4] நான் கண்ணெதிரே கண்டலுமே
பிளவாடி நாற்றிசையும் பிச்செறிந்து போடுகிறேன்
வீசிய போர்க்களத்தில் வேந்தரே யென்னெதிரே
வாசுதேவன் தான் வருவானாய் பொல்லாதோ

---

1. மானை – மான் போன்றவளை (உவமையாகுபெயர்) 2. முதுவேந்தர் – பழைய மன்னர்கள். 3. பொய்யோலை – பொய்யாகச் செய்தி எழுதிய கடிதம். 4. களவாடு மாயன் – வஞ்சகக் கண்ணன்.

நேசத்தால் கரும நேர்ந்துபோர்க் காணுமென்று
பாசத்தா ரானவர்க்கும் பாரிடத்திற் பார்த்திபர்க்கும்[1]
தக்கவா ரோசரித்து தானும் பணிபுனைந்து
மிக்க படைசூழ வீறுந்துடி யதிர
தூயசக்கிர வாளந் தொடர்ந்த படையோடும்
போயசக்கிர வாளம் புறம்புகுந்தா ரம்மானை
அந்நகரந் தன்னி லரசர் விடுந்தூதன்
மின்னே கடற்றுவரை வேந்தனை வந்துகண்டு
வஞ்ச மணவோலை வாசவன்[2] கை கொடுத்து
அஞ்சலி செய்து[3] அருகுநின்று ரம்மானை
வந்தோலை வாசகமும் வாய்மாற்றமுங் கேட்டு
கொந்தலிடுந் தோள்குலுங்க நகைத் தருளி
தம்மை மதித்திருக்கு மஞ்சமமந்தவ னுகையினல்
எம்மை மதித்து எழுதாரோ வோலையென்று
சீதரன் தானும் திருவுளத்தே யறிந்து
தூதரை நல்வார்த்தை சொல்லி விடுத்தருளி
சுந்தர மான துவாரபதி நீங்கி
தந்தரஞ் சூழத் தமனியத் தேரேறி
கூறுமெழு கடலுங்[4] கூடி நடந்தது போல்
ஆறுமலையு மருஞ்சுரமுந் தான் கடந்து
அக்கிர வாளத் தரசர்கோ தானும்
சக்கிர வாளபுரஞ் சார்ந்தனர் காணம்மானை
மாறுற்ற மன்னர்[5] மணம் வந்த ஊர்தனிலே
வீறுற்ற மாதவனும் விட்டிருந்தா னம்மானை
கான்வந்து சேரக் கடற்றுவரை நன்னுடன்
தான்வந்த சேதிதனைச் சக்கிரவாணன் கேட்டு
நாமா யழைத்ததில்லை நம்பால் மணம்வருவார்
தாமா யழைத்தனரோ தாமனே யென்றலுமே

---

1. பார்த்திபர்க்கும் - மன்னர்களுக்கும். 2. வாசவன் - இந்திரன். 3. அஞ்சலி செய்து - வணக்கஞ்செய்து. 4. எழுகடல் - ஏழாகிய கடல். 5. மாறுற்ற மன்னர் - பகைகொண்ட மன்னர்.

மன்னுறு கேள்வி மதிமந்திரிகள் தனில்
புன்டுறுவற்ற னென்பான் போர்வேந்தனுக் குரைப்பான்
சும்மா யிராதே துவாரபதி யாளும்
அம்மாயன் மாய்கை அளவிடப் போகாது
வீசிய சேனையுடன் விஷ்ணுவா வந்தசேதி
காசியிரா சனுக்குங் கத்திரீபர் தங்களுக்கும்
சொல்லி வருவதர்க்குத் தூதர்தமை ஏவி
வல்லிய சேனையுடன்[1] மற்றோர் வருமளவும்
தாக்கக் கரியோன் சரிவி மேலிட்டாலும்
காக்கைக்கு நம்படையைக் கைவகுத்து நில்லுமென்றார்
அன்ன வகையே அடற்படையை கைவகுத்து
மன்னர் தமக்கு மிவ்வாறுரைக்கப் போகவிட்டார்
மிண்டிய தூதர்[2] விரைவில் விரைந்து சென்று
கண்டு கரங்கூப்பி காசிராசர்க் குரைப்பான்
நாங்க ளழைத்ததில்லை நந்தகோபன் மகனை
நீங்க ளழைப்பதுவென் நீள்வேந்தே யென்றலுமே
கன்றி விழிசிவந்து காசியர்கோன் தோள்புடைத்து
ஒன்றிச் செருவுக் கொருப்படும்[3] வாறுகண்டு
தக்க சராசந்தன் தானை சிசுபாலன்
மிக்க வருந்தாமல் விளம்புவார் தூதருடன்
என்னவனுக் கெல்லா மிராசா வெமக்கிறைவன்
மண்ணுலகிலா மெய்க்கு மாயரில் மற்றொருவன்
வைப்புற்ற மன்னவரே வலைபுகுதா வன்னரிபோல்
தப்பித் திரிந்தான் சமத்தாக விண்ணெடுநாள்
போய்ப்போர் பொருது புறஞ்சாசுபோய்ப் பிழைத்தான்
இப்போது வந்தான் எமுறதினம் படியலவோ
சற்றினிற் சேனை மன்னர்தம்மையும் கொன்றுழக்கி
வெற்றி கொள்ளாமல் விடுவானோ காசிமன்னன்

1. வல்லிய சேனையுடன் - பேராற்றல் மிக்க படையுடன்.
2. மிண்டிய தூதர் - கூடிய தூதர்கள். 3. ஒருப்படும் - உடன்படும்.

என்றவனை யாளாக்கி ஏந்தலைப்[1] பார்த்துரைப்பான்
அன்று விதர்ப்பன் அரிவையே போகாமல்
வேத்த தொழிலோர் விதித்த முகித்தத்தில்
கோத்தந்த வாளான் குலப்பெண்ணை கொண்டதற்பின்
சுற்றிப் பெண்கொள்ள வந்தசோரனைக் கொன்றுழக்கி
வெற்றிப்பெண் கொள்ள விரைய வருவாயென்று
கற்பித்தோ ரெல்லாம் காசியர்கோனைப் பணிந்து
வெற்புற்ற தோளார் மிகைத்தெழுந்தா ரம்மானை
மாற்றாரை[2] வென்று மணஞ்செய்யவே யிருந்தேன்
வேற்றானை மன்னரேநீர் விளம்பிய சொல்மீறேன்நான்
நறைப்போ தலங்கணீர் நன்னுதலை[3] தீவேட்ட
இறைப்போதில்[4] வாரேன் என்றேவினர் வேந்தர்தனை
மாமன் பெரும்படையும் மன்னர்படை யொடும்போய்
தாமன் படையுடனே தாக்கவியுந் தூதரோ
போற்றிய தூதர் புயல்போலே ஓடிவந்து
சாற்றிய சேனைச் சக்கிரவாணன் தானும்
வேள்வி[5]க்கு வந்த மிகுபடையும் தன்னுடைய
தாழ்விலா வான்படையும் தான்விடுத்தா னம்மானை
ஒலிகட லேழும் ஓர்முகமாய்ச் செல்வதுபோல்
வலியபடை யிரண்டும் வந்ததுகா ணம்மானை
ஆனைமிடைய ஆடற்பரிகள் தான் மிடைய
சேனைமிடைய சிகரம்போல் தேர் மிடைய
(தானை வளையதகு) பொறியால் முன்வளைய
மிக்க கிரியும் நெரிய வரும்படையை
தக்த வரையால் சிசுபாலன் சம்மதித்து
மிக்க வரசரையும் வேல்வேந்தர் தங்களையும்
மற்றக் கரிப்பரியும் வான்றேரு முன்னிறுத்தி

1. ஏந்தலை – ஆடவரிற் சிறந்தோன் (கண்ணன்) 2. மாற்றாரை – பகைவர்களை. 3. நன்னுதல் – நல்ல நெற்றியையுடையவர். 4. இறைப்போதில் – சிறு போதில் (உடனே). 5. வேள்வி – யாகம் செய்தல்.

உற்ற பறவை யென்னும்யூபம் வகுத்தருளி
மானத் தேரேறி[1] வருஞ்சிலையை நாணெறிந்து
தானை முகத்தில் சமைந்துநின்றா ரம்மானை
மன்னர் படைத்தேர் அணிவாசுதேவன் கேட்டு
தன்னவராய் வந்த சகலரையுந் தானழைத்து
தம்படை யோடுநின்ற தார்வேந்தர் தட்டழிய[2]
ஆலமுலையை[3] யருந்து மருளாளன்
கோல மவன்வடிவாய் கொண்டான் காணம்மானை
கந்தர மூன்றாய் கனகமுடி[4] மூன்றாய்
சுந்தரத் தோளுஞ்[5] சுடர்விழியு மூவிரண்டாய்
காணிற்றி (நின்ற) கதிர்வா னிலாவரும்ப
பானிறமாகி பலரு மயிற் பண்ணி
பன்பணி மாமணியின் பத்திக் கதிர்வீச
வன்பணி பூண்டுவகை மாலையும் புனைந்து
கண்டவர் கைகுவிப்பக் காசியர் கோனும்படியே
அண்டர் பெருமா னணைந்தனன் காணம்மானை
சந்திர சக்கிரந் தன்மகளை நீராட்டி
செந்திரு வென்னச் செழுமணிப் பூண்பூட்டி
கன்னி விரதங் கழற்றிக்கைக் காப்புறுத்தி
அன்னிச் சுடர்விரித்த மாமணப் பந்தலிலே
வேதத்தோர்[6] செய்த மிகுவேள்வி யாகுதிமுன்
கோதற்ற சொல்லானைக் கொண்டுவந்தா ரம்மானை
அவ்வேளை யத்தே அணிகாசி ராசனென்பான்
செவ்வே ளெ[7] னவே செழுமணிப் பூணணிந்து
வாசி புனைந்து மணவாளக் கோலமுடன்
தேசியக் காவணத்தே[8] சென்றான் காணம்மானை
பின்வந் தவனும் பெருமணக் காவணத்தே

---

1. மானத்தேர் - பெருமையுடைய தேர்ப்படை. 2. தட்டழிய - பெருமையழிய. 3. ஆலமுலையை - நச்சுத் தன்மையுடைய பூதகி என்னும் பேய் முலையினை. 4. கனகமுடி - பொன்முடி. 5. சுந்தரத்தோள் - அழகிய தோள். 6. வேதத்தோர் - நான்மறையாளர். 7. செவ்வேள் - முருகப்பிரான். 8. தேசியக் காவணம் - திருமணப் பந்தல்.

முன்வந் தவனும் முகத்தைமுகம் பார்த்துநின்றான்
மங்கை யொருத்தி வதுவை[1] மணவாளன்
இங்கிருவ ரானவகை யெவ்வகையோ யென்றயிர்த்து
மன்னர் தங்களையும் மாப்பிள்ளைத் தோழரையும்
தன்னவரையும் பார்த்துச் சக்கிரவாள னுரைப்பான்
ஒருகாசி யிராச னுள்ளென்று கேட்டிருப்போம்
இருகாசி ராசனாய் இப்போது வந்துநின்றான்
பொய்யுருவ மெய்யுருவம் போகுதில்லைக் கூத்தனுக்கு
மெய்யுருவைத் தந்து விளம்பீரென மொழிந்தான்
அன்னாரும் பார்த்து அடையாளமுங் குரலும்
என்னாளும் போலே இருவரும் நின்றமையால்
கூற்றறுக்கப் போகுதில்லைக் கோவென்ன வுரைத்தான்
தாமனுஞ் சந்திரசக்கிர வாளரைப் பார்த்துரைப்பான்
மாமன்னர் சேனையுடன் வந்தேன் மணஞ்செய்ய
போய்க்காசி ராசனுந்தான் போனான் புறவழியே
மெய்க் காசிராச னியான்மின்னை[2] வருளாயெனவே
கன்றிக் கனல்விழித்துக் காசியிராச னுரைப்பான்
வென்றிக் கதிர்முடியீர் மெய்பொய் யறிவீரால்
இந்தப் பேர்காண யானும் வந்தானும்
முந்தப் பொருமையுடன் மூன்று செருமத்தால்
துஞ்சினவன்[3] போவான் தொடர்ந்தவனைப் போர்வென்று
மிஞ்சினவன் செய்வன் விவாகமென மொழிந்தான்
பொற்கோல னேக்கியபின் பொற்கோலமும் புனைந்து
தற்கோல வெள்ளிச் சயிலம்[4] போற் சோதிவிட
மூன்றிரு கைக்கு முனையாயுதம் பிடித்து
தோன்றிரு மூன்று சுடர்விழி தீச்சொரிய
காற்றிற் கடிய கடும்புரவித் தேரேறிச்
சீற்றத்தீ பொங்கச் சிறுநாணொலி யெறிந்தான்

---

1. வதுவை – திருமணம். 2. மின்னை – மின்னல் போன்ற திருமண நாயகியை. 3. துஞ்சினவன் – இறந்தவன். 4. வெள்ளிச் சயிலம் – வெள்ளிமலை.

மெய்க்காசி ரசன் வெடுவெடென நிற்கலுமே
பொய்க் காசியர்கோனும் பொற்கோலங் கொண்டலுமே
ஆறு காற்றுகடை யாயுதம் பிடித்து
சீறியெதிர் விழித்துதிக் கென்று தேரேறி
வாசிற் றேரேறி மகரந்தனை வற்புறுத்தி
காசியர் கோன்நின்ற களத்திலே சென்றூன்றி
ருத்திர ரூபமாய்க் கொண்டங்கே நின்றவனை
சித்திரம்போற் கொன்றிடுவன் தேர்வேந்தே பாருமென்று
என்றுன் தனுவை இமைப்போதில் நாணெறிந்து
வின்றும் விசும்பும் வெடிபடத்[1] தேரேறி
நோக்கினுள் மற்றவனும் நோக்கி யெதிர்மலைய
தாக்கினுல் தண்டிவந்து தாக்கினர் காணம்மானை
கைவளைய நாண்வளையக் கால்வளைய வில்வளைய
மெய்வளைய வாளி[2] மிகப் பொழிந்தா ரம்மானை
ஒன்றொருவர் விட்டசரம் ஒன்றொருவர் மேனிதனில்
சென்றுருவ அங்கஞ் சிவந்தது காணம்மானை
ஏத்துற்ற காசி யிறைவனெவ னெனவே
பார்த்து நின்றூர்மன்னர் பரிந்திலர் காணம்மானை
சுத்த வடிவான சுடுகணை மாரியினுல்
மெத்த விசும்பை வெளியுடைத் தாரம்மானை
ஆயர் வடிவான அய்யனு மவ்விசும்பை
வெய்ய கணையால் வெளிகண்ட தம்மானை
மின்னிழல் சேர்பூசை விழிகளே தானோக்கில்
தன்னிழற் றூனெக்கும் தண்மை யொத்த தம்மானை
மந்திரத்தேர் பூண்ட மாக்களடிக்[3] கடிக்கே
பந்துகிளம்புவ போற் பாய்ந்தது காணம்மானை
வேற்றூனை மன்னவர்கள் மேல்கொண்ட தேரிரண்டும்
காற்றூடி வட்டம்போல் கால்கிளந்த தம்மானை

---

1. வெடிபட – பேரொலி யெழுப்ப. 2. வாளி – அம்புகள்.
3. தேர்பூண்ட மாக்கள் – தேரில் பூட்டப்பட்ட குதிரைகள்.

செவ்விரு தேர்மன்னர் செருத்திரையைப் பார்த்துநின்றார்
கவ்விரு தேர் கொடிதோய தோன்றிற்ற தம்மானை
வெந்திறலார்[1] பற்றிநின்ற வில்லிரண்டே யானாலும்
உந்து கணைகளு காந்தமே யம்மானை
பொய்யுருப் பற்றன புகுந்தோரிடந் திரியில்
மெய்யுருப் பற்றன் மிகுதேரிடந் திரியும்
காற் றுருண்ட தென்னக் கனலா மனல் வீச
கூற்றுருண்ட தென்னக் கொடும்போர் விளைக்கையிலே
குபேரத்திர மொருவன் கோர்த்தையங் காத்திடவே
குபேரத்திர மவனுங் கோத்தெய்து மாற்றிடுவன்
வருணாத் திரத்தினை மற்றொருவன் மாற்றிடுவன்
எவ்வத் திரமும்[2] ஏதொருவ ரெய்திடவே
அவ்வத் திரத்தை யவனு மறுத்திடுவன்
சங்க நாதத்தாலும் தார்வேந்த[3] ருதுகின்ற
சிங்க நாதத்தாலும் தேவர் செவிடுபட்டார்
ஒருவர் கொடித்தேரை ஒருவரறுத் தொழித்ததும்
ஒருவர் கைவில்லை ஒருவனொடித்த துவும்
இருவருந் தம்மில் எரிவிழித் தங்கேது செய்தார்
வேலொருகை வாளொருகை வெய்யசூல மொருகை
பற்றி மலைந்து[4] பலபோர் விளைக்கையிலே
வெற்றி மிலைந்து[5] மிருகாசி ராசனென்பான்
சித்திரத்தில் நோக்கித் திருமால் ரேகமெல்லாம்
அத் திரமாகி அருளினன் காணம்மானை
செவ்வாய் மணிவண்ணன் சீற்றத்தீ விட்டெரிய
இவ்வாயுதத் தாலிவன் சாகானென வறிந்து
சக்கரத் தாழ்வாரைத் தன்கண்ணை லேவிடவே
புக்கெரி மாத்திரையிற் பொங்கெரிபோற் சூழ்ந்துகொண்டு

1. வெந்திறலார் – கொடிய ஆற்றல் மிக்க வீரர்கள். 2. அத்திரம் – அம்பு. 3. தார்வேந்தர் – மாலையணிந்த மன்னர்கள். 4. மலைந்து – போரிட்டு. 5. மிலைந்து – சூடி.

காசி யிராசன் கதிர்முடி மூன்றினையும்
விசியறுத் தெரிந்து மீண்டது காணம்மானை
பொய்க்காசி ராசனைப் பொன்னெடுமால் பொன்றுவிக்க [1]
மெய்க்காசி ராசன்தான் வீடினன் காணம்மானை
பொன்றினவன் [2] பொய்யனென்று பொற்காசி மன்னுறவோர்
வென்றவன் மெய்யனென்று மேன்மை யுரைத்துநிற்ப
ஆரு மதிக்க வமர்வென்ற அங்கணனும்
தேரு மிறங்கிச் செருக்கோலமுந் தவழ்ந்து
மற்கோல வேல்புயத்தான் மஞ்சன நீராட்டி
நற்கோலமுங் கொண்டு நறுஞ் சாந்தமும்பூசி
மன்னரு மற்றுள்ள மங்கையரும் வாழ்த்தெடுப்ப
பொன்னரும் பந்தலிலே போய்ப்புகுந்தா ரம்மானை
ஆதிப் பெருங்கருடன் அப்போதே ஓடிவந்து
காதிக் களப்பட்ட காசிராசன் தலையை
பற்றி யெடுத்துப் பறந்துசென்று பாங்காக
வெற்றிப் படைபிடிக்கும் வேந்தர்க்கும் வன்னியர்க்கும்
அங்கங்கே அரசரே அங்கு வந்து
பக்கங் கொள்ளாதே பறந்தே சிலைபிடித்தார்
மணக்கோலஞ் செய்துநீர் வைத்துவந்த மாப்பிள்ளையை
பிணக்கோலஞ் செய்யவல்ல பேராளன் [3] கையாலே
கொலைக்கண்டும் வல்லுடலம் கூறுகக் கண்டுந்
தலைக்கண்டு மின்னஞ் சவங்கலப் போரேபொருதீர்
நிறை கற்பறியாத நீரெல்லா முன்னொருநாள்
பிறகற்பலன் கொள்ளும் பெண்ணைப் பறிகொடுத்து
கண்ணாலம் வந்தவர்போல் காசிமன்னைக் கொல்லுவித்து
மண்ணாளு மன்னரெல்லாம் மாறா வடுச் [4] சுமந்தீர்
உன்பிரான் காசியர் கோனுற்ற மணப்பேருருவன்

---

1. பொன்றுவிக்க – அழிக்க. 2. பொன்றினவன் – அழிந்தவன் (வினையாலணையும் பெயர்) 3. பேராளன் – பெருமையுடையவன். 4. மாறுவடு – நீங்காத களங்கம்.

(என்)பிரான் தீவேட்டினிய மணஞ் செய்கிறான்
தீவேட்டு மாயன் திரும்பி வருமாகில்
பேய்வேட்டருந்தி விப்பன் பித்தரே உம்முடலை
அய்யன் வருமுன் னனைவோரும் போர்தவிர்ந்து
உய்யவகை[1] தேடி ஓடிப்பிழையு மென்று
அந்தத் தலையை யவர்முன்னே தானெறிந்து
வந்து கருடன் மணக்காவணம் புகுந்தார்
ஏசிய வான்கருடன் ஏத்துந் தலைதனையும்
காசியர்கோன் பட்டதுவுங் கண்டு சராசந்தன்
வாடிமுகங் கறுகி மன்னரே நாம்பலருங்
கூடிய வகீர்த்தி கொண்டதினிப் போதுமென்று
வந்தனும் போக வழிவேறே தேடுமென்று
தந்தம் பதினோக்கிச் சரிந்தனர் காணம்மானை
முன்படையார் சேனை முறியச் சிறுபாலனும்
தன்படையைக் கையமர்த்தித் தானின்றா னம்மானை
மாமாதவனும் மணக்கா வணம் புகுந்து
பூமாதவர் வளர்த்த பொற்றீ வலம்வந்து
மங்கல மார்ப்ப[2] மணிமுரசு நின்றார்ப்ப
பொங்கலம் போதப் பொழிந்திமையோ ரரசுசெய்ய
மாதர்க் கணியாய் வரு மதனசுந்தரியை
காதல் துணைவிதனைக் கைப்பிடித்தா ரம்மானை
மன்னனையார் சேஷையிட மங்கையர்கள் வாழ்த்தெடுப்ப
மின்னனையாள் தன்னுடனே வீற்றிருக்கும் வேளையத்தே
வெண்மையுங் காசியர்கோன் வேடமுந் தான்தவிர்ந்து
வண்மை யுடைய மரகத மாமலைபோல்[3]
செந்தா மரைக்கண் சிறிவாசுதேவ னுந்தான்
இந்துநுத லாரோ[4] டிருந்தனன் காணம்மானை
மாமன்னர் தாமும் மணம்வந்தா ரும்பிறரும்

---

1. உய்யவகை – பிழைக்கும் வழி. 2. மங்கலமார்ப்ப – மங்கல முரசம் ஒலிக்க. 3. மரகத மாமலைபோல – நீலநிற மலைபோல. 4. இந்துநுதலார் – சந்திரனைப் போன்ற நெற்றியினையுடையார்.

தாமனைப் போற்றி தவம்பணிந்தா ரம்மானை
பஞ்சொத்த கஞ்சப் பதமதன சுந்தரியை
செஞ்சொற் பெருமான் செருவென்று தீவேட்டு
காதலியுந் தானும் கனகமணித் தேரேறி
பூபாலர்[1] சூழ்ந்துவர புத்தேளிர்[2] பூப்பொழிய
கற்றைக் கவரி கயற்கண்ணார் காலசைப்ப
கொற்றக் குடையோங்கிவரக் கோதையர் பல்லாண்டிசைப்ப
ஆலவட்டம் வீச அடுங்கோலியல் சேவிக்க
வேலை வட்டமான விடிபோல் துடியதிர
ஆனையும் தேரும் அடப்பரியும் மேற்கொண்டு
தானையும் போகத் தமரோர் புடைபோக
சீராழி சுற்றுஞ் சிறிபத் துவரையிலே
பேராழி யானும் புகுந்தனன் காணம்மானை
அறத்துக் குயிராய் அனைத்துயிர்க்கு மாதவனாய்
மறத்துக்கு வன்கூற்றாய் மாதவர்க்கு வேதாவாய்
உம்பர்க் கரசர் உலகடங்க வீற்றிருந்தார்
செம்பொற் றிருக்கோயில் சேர்ந்திருந்தா ரம்மானை
திருவாழி யாழ்வானும்[3] சிறி கருடாழ்வானும்
கருவாழி நிற்குங் கழல்போற்றி ஏவல்செய்ய
அய்ய மகற்றி அரும்பொருளின்ப முடன்
வைய மளப்பான் மகிழ்ந்திருந்தா னம்மானை
ஆதியாங் கேசன் அச்சுதன் பச்சைவண்ணன்
சோதிக் கவுத்துவத்தின்[4] தோகையணி மார்பன்
தென்னரங்கன் செல்வன் சீதரன் சீராமன்
பொன்னரங்கில் மாணிக்கப் பொற்பேழையில்[5] துயிலும்
புண்டரிகக் கண்ணன் புருஷோத்தமன் போற்றும்
தொண்டரிலை யவர்தமக்குத் தூதன் மதிசூதன்

1. பூபாலர் – பூமியை ஆளும் மன்னர்கள். 2. புத்தேளிர் – தேவர்கள். 3. திருவாழி யாழ்வான் – சக்கரத்தாழ்வான். 4. கவுத்துவம் – மார்பிலணியும் அணி. 5. பொற்பேழை – பொன்னாலாகிய பெட்டி.

மையாழி வண்ணன் வரதன் மலர்க்கமலன்
செய்யாளவள் கணவன் திருவவதாரங்கள் தனில்
கிளர்ந்த வவதாரமாங் கிருஷ்ண வதாரத்தை
உகந்தொரு பத்தியினு லோர்ந்துணர்ந் துரைப்பார்
அம்மானை தன்னை யறிந்திருப்பா ரன்பினுடன்
எம்மாதந் தன்னி லிருபொழுதுங் கேட்டிருப்பார்
சத்தக் கடலுலகில் தாமோதர னருளால்
அத்தமும் புத்திரரும் ஆயுளு முண்டாகி
சீராளராகிச் சிறந்துமிக வாழ்ந்து பின்னும்
பேராளன் வைகுந்தம் பெற்றிருப்பா ரம்மானை
அம்மானதி சூழ் அரங்கத்தில் கண்வளரும்
அம்மான் திருவிளையாட் டயர்ந்துரைத்த தம்மானை
கற்றுரைப் பார்க்கும் கருத்தறிந்து கேட்பார்க்கும்
பெற்றிருப் பார் வைகுந்தப் பேறு[1]

“அரனன் பகத்தோனக் காயன் செயநல்
வரமன்னு மாலைதனில் வந்தோன் – பிரமன்
திருவரங்கத் தாதிக்குச் செய்தகதை கேட்பார்க்கு
திருவரங்கத் தார்வைகுந்[2] தான்”

(கஞ்சனம்மானை முற்றும்.)

---

1. வைகுந்தப்பேறு – வீடுபேறு. 2. தார்வைகும் – அரங்கனது அணிமாலை கிட்டும்.

# பிழை திருத்தம்

| எண் | பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 3 | 49 | திருவேங்கிடம் | திருவேங்கடம் |
| 2 | 3 | 61 | திருதுளப | திருத்துளப |
| 3 | 5 | 97 | வரங்கஎென்ப | வரங்கேஎென்ப |
| 4 | 5 | 100 | வரங்கஎெனவே | வரங்கேஎெனவே |
| 5 | 5 | 120 | வைத்தானயோ ததியிற்குள் | வைத்தானயோத்தி யிற்குள் |
| 6 | 11 | 281 | முரறைந்து சயாதவரையும் | முரசறைந்து யாதவரையும் |
| 7 | 14 | 349 | பணிற்று | பணிந்து |
| 8 | 18 | 470 | முகிழ்த்தும் | முகிழ்த்தம் |
| 9 | 19 | 497 | உண்டுமிந்த | உண்டுமிழ்ந்த |
| 10 | 19 | 517 | பெற்றி | பெற்று |
| 11 | 21 | 569 | மகன் | மகள் |
| 12 | 22 | 595 | புர்கனர் | புக்கனர் |
| 13 | 23 | 630 | பொள்னகரி | பொன்னகரி |
| 14 | 30 | 813 | வானுலே | வாணுளே |
| 15 | 31 | 831 | யுதித்தபின்பு | வுதித்தபின்பு |
| 16 | 38 | 1053 | கோதுரைப்பார் | கேதுரைப்பார் |
| 17 | 44 | 1204 | விர்த்தகனு | வித்தகனு |
| 18 | 49 | 1359 | ஆய்ப்பாடி | ஆய்ப்பாடி |
| 19 | 51 | 1400 | திளைப்பித்து | திளைப்பித்து |
| 20 | 56 | 1545 | பொறுயென்ன | பொறுவென்ன |
| 21 | 61 | 1692 | இடைய்நரல்லாங் | இடையரெல்லாங் |
| 22 | 64 | 1771 | கெட்டொழிந்தபய் | கெட்டொழிந்தாய் |
| 23 | 67 | 1850 | போதுங்கின்ற | போதுகின்ற |
| 24 | 67 | 1857 | ஆயர்பெரும்ான் | ஆயர்பெருமான் |
| 25 | 71 | 1975 | மங்லக | மங்கல |
| 26 | 74 | 2055 | துள்ளியெதிபாய | துள்ளியெதிர்பாய |
| 27 | 80 | 2209 | னுள்புதல்வன் | னுன்புதல்வன் |
| 28 | 80 | 2224 | தாராய | தாராய் |
| 29 | 94 | 2610 | யிம்பொழுது | யிப்பொழுது |
| 30 | 96 | 2664 | தோணிந்து | தாரணிந்து |

| எண் | பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 31 | 96 | 2676 | நாணொவி | நாணொலி |
| 32 | 100 | 2786 | என்றுகோல் | ஏன்றுகோல் |
| 33 | 114 | 3174 | மஞ்சேனோனுனக்கு | மஞ்சேனானுனக்கு |
| 34 | 119 | 3305 | எல்லோருபோக | எல்லோரும்போக |
| 35 | 127 | 3516 | மெத்திகையும் | மெத்திசையும் |
| 36 | 128 | 3550 | போ | பேர் |
| 37 | 128 | 3551 | போந்தனர் | பேர்ந்தனர் |
| 38 | 131 | 3640 | சொல்லான | சொல்லான் |
| 39 | 137 | 3792 | என்றவனை | என்றவளை |
| 40 | 138 | 3821 | நீயவனை | நீயவளை |
| 41 | 163 | 4540 | வேழப்புடைப்பித்து | வேழம்புடைப்பித்து |
| 42 | 166 | 4601 | வெப்பதர்க்கு | வேட்பதர்க்கு |
| 43 | 171 | 4761 | சேர்வதனால் | சோர்வதனால் |
| 44 | 189 | 5273 | மார்த்தனர் | மார்த்தன |
| 45 | 194 | 5399 | நின்னு | நின்று |
| 46 | 196 | 5472 | கேனம்மானை | கேளம்மானை |
| 47 | 211 | 5873 | தானுழிந்து | தானுமிழ்ந்து |
| 48 | 217 | 6054 | றேருனவனென்று | றேரூனவனென்று |
| 49 | 229 | 6890 | சங்கலிக்க | சங்கரிக்க |
| 50 | 240 | 6687 | சிறந்தணிவன் | சினந்தணிவன் |
| 51 | 256 | 7148 | தக்தவரையால் | தக்கவகையால் |
| 52 | 260 | 7232 | உந்துகணைகளு | உந்துகணைகளும் |
| 53 | 262 | 7285 | அருந்திவிப்பன் | அருந்துவிப்பன் |